பாபாசாகேப்

# டாக்டர் அம்பேத்கர்

நூல் தொகுப்பு :

தொகுதி 17




டாக்டர் பாபாசாகேப்

# அம்பேத்கர் :

## பேச்சும் எழுத்தும்

நூல் தொகுப்பு :

## தொகுதி 17



## டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர்

தோற்றம்: ஏப்ரல் 14, 1891 பரிநிர்வாணம்: டிசம்பர் 6, 1956

''இந்துக்கள் உண்மையில் தீண்டப்படாதவர்களின் நோக்கங்களையும் நலன்களையும் எதிர்க்கின்றனர்; தீண்டப்படாதோர் மத்தியில் செயல்பட்டுவரும் ஜீவசக்திகளிடம் அவர்கள் அனுதாபம் காட்டுவதில்லை; ஆர்வ விருப்பங்களையும் அவர்கள் கணக்கிலெடுத்துக் கொள்வதில்லை; அவர்களுடைய அபிலாஷைகளுக்கு எதிராக இருக்கின்றனர்; அவர்கள் தீண்டப்படாதவர்களுக்கு நிச்சயமாக நியாயம் வழங்கமாட்டார்கள்; அவர்களிடம் பல வகைகளிலும் பாரபட்சமுடன் நடந்து கொள்வார்கள்; சமயத்தின் ஆதாரபலம் அவர்களுக்கு இருப்பதால் தீண்டப்படாதவர்களிடம் மிகவும் மனிதாபிமானமற்ற முறையில் நடந்துகொள்ள அவர்கள் சிறிதும் தயங்கவோ மயங்கவோ மாட்டார்கள்; அதற்காக வெட்கித் தலைகுனியவும் மாட்டார்கள். இந்துப் பெரும்பான்மையினரின் கொடுங்கோன்மைக்கு எதிராக அரசியல் சட்டத்திலேயே தீண்டப்படாதவர்களின் அரசியல் உரிமைகள் உத்தரவாதம் செய்யப்படுவதுதான் இத்தகைய மக்களிடமிருந்து அவர்களைக் காப்பாற்றுவதற்கான வழியாகும். தீண்டப்படாதவர்கள் கோரும் இந்தப் பாதுகாப்பை மிகையான கோரிக்கை என்று எவரேனும் கூற முடியுமா?''

*- டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்*

*- 'சாதியும் அரசியலமைப்புச் சட்டமும்'*

This Volume XVII in Tamil forms the Second part of the English Edition Volume 9 - II Part : **Dr. Babasaheb Ambedkar - Writings and Speeches - published by the Education Department, Government of Maharashtra, 1990.**

*முதற் பதிவு : 1999*

*உரிமைப் பதிவு*

***விலை : ரூ. 25/-***

***நூலகப் பதிப்பு: ரூ. 85/-***

***வெளியீட்டாளர் :***

*டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன்*
*நல அமைச்சகம்,*
*இந்திய அரசு,*
*25, அசோகா சாலை,*
*புதுடில்லி.*

***விற்பனை நிலையம்:***

*நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட்.,*
*41 B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,*
*அம்பத்தூர், சென்னை - 98.*

---

*அச்சிட்டோர்:*

பாவை பிரிண்டர்ஸ் (பி) லிமிடெட்.,
*142, ஜானி ஜான் கான் ரோடு,*
*ராயப்பேட்டை, சென்னை - 600 014.*
*தொலைபேசி: 8532441, 8532973.*

# ஆலோசனைக்குழு

திருமதி மேனகா காந்தி
நலத்துறை இராஜாங்க அமைச்சர்
(தனிப்பொறுப்பு)
இந்திய அரசு

திரு. தர்மசிங் மௌர்ய
செயற்குழு உறுப்பினர்
டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன்

திரு. டி.கே. மணவாளன்,
செயலாளர், நல அமைச்சகம்

திரு. ஏ.கே. சௌத்ரி,
இணைச் செயலாளர், நல அமைச்சகம்
மற்றும் உறுப்பினர் - செயலாளர்
டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன்

நிர்வாகப் பதிப்பாளர் (தமிழ்) :
டாக்டர் எஸ். பெருமாள், எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.,

ஆங்கில நூல் தொகுப்பாளர் :

**திரு. வஸந்த் மூன்**
மும்பை

தமிழ் நூல் பதிப்பாளர் :

***டாக்டர் எஸ். பெருமாள்***

மொழிபெயர்ப்பாளர்:

***திரு. ரா. ரங்கசாமி (மாஜினி)***

ஒப்புநோக்கியோர் :

***திரு. அ. பிச்சையா, (அசரீரி)***

பிழைதிருத்த உதவி:

***திரு. அ. குப்புசாமி, பி.எஸ்.ஸி.,***

# அணிந்துரை

இந்திய நாட்டைப் பிரிட்டிஷார் ஆண்டு வந்த காலத்தில் நாட்டில் நிலவிய சமூக வன்கொடுமைகள், பொருளாதார நிலை ஆகியவையும், அரசியல் பிரச்சினைகளின் முரண்பாடுகளும் பாரத் ரத்னா டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் அவர்களின் கவனத்தைக் கவர்ந்தன. அவற்றை ஆழ்ந்து அறிந்து கொள்வதிலும், அவற்றை மக்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதிலும் அதற்கு மேலாக உலக மக்களின் பார்வைக்கு வைப்பதிலும் அவர் தளராத ஆர்வம் காட்டினார். இந்தப் பின்னணியில் டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கர் எழுதிய , 'திருவாளர் காந்தியும் தீண்டப்படாதோரின் விடுதலையும்' என்னும் நூல் 1942-ல் கனடா நாட்டு கியூபெக், மாண்ட் டிராம்ப்பிலாண்டில் நடந்த பசிபிக் நல்லுறவு கழகத்தின் இந்தியப் பிரிவில் படித்த கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்டதாகும். இந்த நூல் 1943-ல் வெளியிடப்பட்டது.

இதே நூலை மகாராஷ்டிர மாநில அரசு, டாக்டர் அம்பேத்கர் நூல் தொகுப்பு வரிசையில் 9-வது தொகுதியின் இரண்டாவது பாகமாக வெளியிட்டது. இந்த நூல் சிந்தனையாளர்களுக்குப் பேருவகையும், பயனும் தரவல்ல முக்கியமானதும், சுவையானதுமான தகவல்களைக் கொண்டுள்ளது.

இந்த நூலின் தமிழாக்கம், தமிழ் வாசகர்களுக்குப் பயனுள்ளதாகவும், பரவலாக வரவேற்கத்தக்கதாகவும் இருக்குமெனநம்புகின்றேன்.

நல்வாழ்த்துக்கள்!

மேனகா காந்தி
(திருமதி மேனகா காந்தி)
நலத்துறை இராஜாங்க அமைச்சர்
(தனிப் பொறுப்பு), இந்திய அரசு

புதுடில்லி

# வாழ்த்துரை

பாரத ரத்னா டாக்டர் பாபாசாகேப் பி.ஆர். அம்பேத்கர், இந்திய நாட்டின் புகழார்ந்த தவப்புதல்வர்களில் ஒருவராகவும், நம் தாய்நாட்டின் உண்மையான தேசபக்தராகவும் விளங்கிய வர். அதோடு, சட்டவல்லுநராக, சிந்தனையாளராக, நூலாசிரிய ராக, தீவிர சீர்திருத்தவாதியாக, அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவராக, ஆற்றல் மிக்க பேச்சாளராகப் பலதுறைகளில் வல்லுநராக விளங்கியவர். ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமை களைப் பேணிக்காப்பதற்குத் தம் வாழ்நாள் முழுவதும் அயராது போராடியவர். நமது சமுதாயத்தில் நலிந்த பிரிவினராக உள்ள மக்களின் முன்னேற்றத்திற்கு இடையறாது பணியாற்றுவோருக்கு அவருடைய வாழ்வும், தொண்டும் ஊக்கத்தையும் எழுச்சியை யும் தருவதாகும். இவை அனைத்திற்கும் மேலாக, இந்திய நாட்டின் ஒற்றுமைக்கும், சுதந்திரம், சமத்துவம், சகோதரத் துவம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த சமுதாயம் உருவாவதற்கும் உரத்த குரலெழுப்பிய சிறப்புக்குரியவர்.

நூல்களைப் படிப்பதில் டாக்டர் அம்பேத்கர் பேரார்வம் கொண்டவர், அதனை வாழ்வின் முன்னேற்றத்திற்கும் கல்வி வளர்ச்சிக்கும் பெரும் சாதனமாகக் கருதியவர். பகவான் புத்தர், கார்ல் மார்க்ஸ், கபீர், மகாத்மா பூலே முதலிய பெரியவர்களின் சிந்தனைகளின் தாக்கத்தை அவருடைய நூல்களில் காணலாம்.

இந்திய அரசு வெளியிட்டு வரும் டாக்டர் அம்பேத்கர் அவர் களின் நூல் தொகுதிகள் தமிழக மக்களுக்கும் நம் நாட்டிலுள்ள நலிந்த மக்களின் முன்னேற்றத்திற்கும் தமது ஆற்றலையும், அரிய நேரத்தையும் அர்ப்பணித்துப் பாடுபட்டு வரும் சமூகப் பணியாளர்களுக்கும் பெரும் மகிழ்ச்சியையும் எழுச்சியையும் அளிக்கும் என நம்புகின்றேன்.

(ஒ-ம்.)

**டாக்டர் எம்.எஸ். அகமது**

இணைச் செயலாளர் /

உறுப்பினர் செயலாளர்,

டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன்,

சமூகநீதி மற்றும் அதிகாரமளிப்புத்துறை,

இந்திய அரசு,

புதுடில்லி

# தமிழ் நூல் பதிப்பாசிரியர் உரை

மகாராஷ்டிர மாநில அரசு ஆங்கிலத்தில் வெளியிட்டு வரும் டாக்டர் பாபாசாகேப் பி.ஆர். அம்பேத்கர் அவர்களின் நூல் தொகுப்பு வரிசையில் ஒன்பதாவது தொகுதி, தமிழில் இரு பகுதிகளாக வெளியிடப்படுகின்றது. தமிழில் முதல் பகுதி பதினாறாவது தொகுதியாகவும், இரண்டாம் பகுதி பதினேழா வது தொகுதியாகவும் அமைந்துள்ளது.

1942 ஆம் ஆண்டில் கனடா நாட்டு கியூபெக் மாண்ட்டி ராம்ப் லாண்டில் நடந்த பசிபிக் உறவுகள் கழகத்தின் மாநாட்டில் அளித்த ஆய்வுக் கட்டுரையே இந்த நூலாக அமைந்துள்ளது. ஏகாதிபத்தியம், நிறவெறி, இன வேற்றுமை ஆகியவற்றின் பெயரால் மனிதர் கொடுமைபடுத்தப்படுவது போன்ற பிரச் சினையே இந்தியாவில் தீண்டாதாருக்கு எதிரான பிரச்சினை என்பது இந்த நூலில் விளக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள தீண்டப்படாதவர்களின் பிரச்சினையின் தன்மையையும், அதைத் தீர்ப்பதற்குத் தீண்டப்படாதோர் தெரிவித்துள்ள பரிகாரங்களையும் எடுத்துக் கூறும் இந்த நூல் பல வகைகளில் முக்கியத்துவம் வாய்ந்த ஆவணமாக விளங்குகின்றது.

ஆங்கில மொழியில் சிறந்த சிந்தனைக் களஞ்சியமாக விளங்கும் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் நூல்களை மக்க ளுக்குப் பயன்படும் வகையில் தமிழிலும் ஏனைய இந்திய மொழிகளிலும் வெளியிடும் மகத்தான பணியை மேற்கொண் டுள்ள இந்திய அரசின் நலத்துறையும், டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷனும் பாராட்டுதலுக்கு உரியவை. இந்த நூல்களை மொழிபெயர்க்கும் பணியைப் பலர் மேற்கொள்வதால் மொழி நடையிலும், சொல்லாட்சியிலும் வேறுபாடு ஏற்படுவது தவிர்க்க இயலாததாகியுள்ளது. இந்தக் குறைகளைத் தமிழ் மக்கள் பொறுத்துக் கொள்வார்கள் என நம்புகின்றோம்.

இந்த அரிய பணியில் ஈடுபட்டுள்ள மொழிபெயர்ப்பாளர் கள், ஒப்புநோக்குவோர் ஆகிய யாவரும் நன்றிக்குரியவர்கள். முந்தைய தொகுதிகளைப் போலவே இந்தத் தொகுதியையும் மக்கள் வரவேற்று ஏற்பார்கள் என நம்புகின்றோம்.

**எஸ். பெருமாள்**
*தமிழ்நூல் பதிப்பாசிரியர்.*

# திரு. காந்தியும் தீண்டப்படாதோரின் விடுதலையும்

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் எம்.ஏ.,
பி.எச்.டி.,டி.எஸ்ஸி., பாரிஸ்டர், உறுப்பினர்,
கவர்னர்-ஜெனரலின் நிர்வாக சபை.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| முன்னுரை | | 3 |
| இயல் 1 | தீண்டப்படாதோரின் மொத்த மக்கட் தொகை | 7 |
| இயல் 2 | தீண்டப்படாதோரின் முக்கியத்துவம் | 9 |
| இயல் 3 | தீண்டப்படாதோரின் அரசியல் கோரிக்கைகள் | 13 |
| இயல் 4 | இந்துக்களின் எதிர்ப்பு | 17 |
| இயல் 5 | கூட்டுத் தொகுதிகளும், தனித் தொகுதிகளும் | 25 |
| இயல் 6 | ஆட்சித்துறை | 29 |
| இயல் 7 | அரசுப் பணித் துறைகள் | 33 |
| இயல் 8 | தனிக் குடியேற்றங்கள் | 37 |
| இயல் 9 | சாதியும் அரசியலமைப்புச் சட்டமும் | 43 |
| இயல் 10 | இந்துக்களுக்கும் அவர்களுடைய நண்பர்களுக்கும் சில கேள்விகள் | 49 |
| இயல் 11 | பின் இணைப்பு சம்பந்தமான ஒரு குறிப்பு | 61 |

# முன்னுரை

இந்தியாவில் தீண்டப்படோதோர் பிரச்சினை குறித்து ஆய்வுக்கட்டுரை ஒன்று எழுதும்படி பசிபிக் உறவுகள் கழகத்தின் இந்தியப் பிரிவின் தலைவர் என்னைக் கேட்டுக்கொண்டார். கனடாவில் கியூபெக் மாண்ட் டிராம்ப்லாண்டில் 1942 டிசம்பரில் நடைபெறவிருந்த மாநாட்டில் இக்கட்டுரையைச் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். அவ்வாறே சென்ற வருடம் ஆகஸ்டில் இந்தக் கட்டுரையை எழுதினேன். மாநாட்டு நடவடிக்கைகளின் குறிப்பில் இக்கட்டுரை பிரசுரிக்கப்பட்டது. இத்தகைய ஓர் ஆய்வுக் கட்டுரையை நான் எழுதியிருக்கிறேன் என்பது தெரிந்ததும், தங்களது இப்பிரச்சினையில் ஆர்வம் கொண்ட தீண்டப்படாதவர்களின் தலைவர்களும் பல அமெரிக்கர்களும் இக்கட்டுரையை ஒரு தனிப் பிரசுரமாக வெளியிட வேண்டும் என்றும், பொதுமக்களுக்கு அது கிடைக்கப்பெறச் செய்யவேண்டும் என்றும் என்னை வலியுறுத்தி வந்தனர். இந்தக் கோரிக்கையை மறுதலிக்க என்னால் இயலவில்லை. ஆனால் அதேசமயம், மாநாட்டு நடவடிக்கைகள் முழுதும் பிரசுரமாகும்வரை இந்த ஆய்வுக் கட்டுரையை தனிநூலாக வெளியிடுவது முறையல்ல என்பதை உணர்ந்தேன். மாநாட்டு நடவடிக்கைகள் முழுவதும் பிரசுரிக்கப்பட்டுவிட்டன என்றும், நான் விரும்பினால் எனது ஆய்வுக் கட்டுரையைத் தனிப் பிரசுரமாக வெளியிடுவதில் தங்களுக்கு ஆட்சேபம் ஏதும் இல்லை என்றும் பசிபிக் உறவுகள் மாநாட்டுச் செயலாளர் இப்போது தெரிவித்துள்ளார். இந்த ஆய்வுக்கட்டுரை எழுதப்பட்டு பத்துமாதக் காலத்தாமதத்திற்குப் பிறகு அது வெளியிடப்படுகிறது என்பதை இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

ஒரு சில சொல் மாற்றங்கள் தவிர, மாநாட்டில் சமர்ப்பித்தபடியே கட்டுரை வெளியிடப்பட்டது. கட்டுரையே இதனை வெளிப்படுத்தும். எனினும் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் இங்கு கூறவிரும்புகிறேன். மாநாடு தீர்வுகாணவேண்டிய பிரச்சினைகள் மூன்று உள்ளன என்று மனிதகுலத்தில் சிந்திக்கத் தெரிந்த பகுதியினர் பொதுவாக நம்புகின்றனர். அந்த மூன்று பிரச்சினைகள்

வருமாறு: 1. ஏகாதிபத்தியம், 2. நிறவெறி 3. செமிட்டிக் எதிர்ப்பு மற்றும் படைக்கலப்பெருக்கம். ஒரு தேசம் இன்னொரு தேசத்தைக் குரோதமாகக் கொடுமைப்படுத்துவதற்கும், மனிதன் மனிதனிடம் நெஞ்சீர மற்று, ஈவு இரக்கமற்று நடந்துகொள்வதற்கும் இவையே நச்சு ஊற்றுக்கண் என்பதில் எத்தகைய ஐயமும் இருக்கமுடியாது. இந்தப் படுபயங்கர யுத்த சாம்பலிலிருந்து ஒரு புதிய, நல்லதோர் உலகம் தோன்றவேண்டுமானால் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவது அவசியம் என்பதிலும் எள்ளளவும் ஐயம் இருப்பதற்கில்லை. இதுவரை நடைபெற்று வந்தது போன்று, தீண்டப்படாதோர் பிரச்சினை மறக்கப்பட்டுவிடுமோ என்று அஞ்சுகிறேன். அவ்வாறு மறக்கப்படுமானால் உண்மையில் அது ஒரு பேரிடராகவே, பேரிடியாகவே இருக்கும். யூதர்கள் அனுபவித்துவரும் கொடுமைகள் பற்றி எவ்வளவோ கூறப்படுகின்றன; அந்த அளவுக்கு வெளி உலகம் அறிந்திருக்கவில்லை என்றாலும் தீண்டப்படாதவர்கள் அனுபவித்து வரும் துன்பதுயரங்கள், இன்னல் இடுக்கண்கள், வேதனைகள் அவலங்கள் இவற்றுக்கு எந்தவகையிலும் குறைந்தவை அல்ல. யூதர்களுக்கு எதிராக நாஜிகள் கையாண்ட இரத்தக்களறியான ஒடுக்க முறைகளுடன் ஒப்பிடும்போது தீண்டப்படாதோருக்கு எதிராக இந்துக்கள் கைக்கொண்டு வரும் ஒடுக்குமுறை ஆயுதங்கள், அடக்குமுறைக்கணைகள் எவ்விதத்திலும் சளைத்ததல்ல. யூதர்களுக்கு எதிராக நாஜிகள் கடைப்பிடித்த செமிட்டிக்- எதிர்ப்பு தீண்டப்படாதோருக்கு எதிராக இந்துக்கள் பின்பற்றிவரும் சனாதனீயம் சித்தாந்த அளவிலும் சரி, கோர விளைவுகளை ஏற்படுத்துவதிலும் சரி எவ்வகையிலும் வித்தியாசமானதன்று.

ஒடுக்கப்பட்ட மக்கள் தங்களைப் பிணித்திருக்கும் அடிமைத் தளைகளை நொறுக்கியெறிந்து விமோசனம் அடைவதற்கு உதவுவது போன்று தீண்டப்படாதோரும் தங்களது அடிமைச் சங்கிலிகளை உடைத்தெறிந்து விடுதலை பெறுவதற்கு உதவ உலகம் கடமைப்பட்டிருக்கிறது. இந்தியாவிலுள்ள தீண்டப்படாதோரின் பிரச்சினையுடன் ஒப்பிடும்போது அடிமைகள், நீக்ரோக்கள், யூதர்கள் பிரச்சினை அத்தனை பெரிய பிரச்சினை அல்ல என்றுதான் சொல்லவேண்டும். எனவேதான் இந்த ஆய்வுக்கட்டுரையை எழுதும்படி நான் கேட்டுக்கொள்ளப்பட்டபோது, இந்த பிரச்சினையை உல

கின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்கு நல்லதொரு வாய்ப்பாகக் கருதி இப்பணியை ஏற்றுக் கொண்டேன். இந்தக் கட்டுரையின் பிரசுரம் சமாதான மாநாடு இப்பிரச்சினையைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு அதற்கு ஓர் தீர்வு காண முன்வருவதற்கும், அதே போன்று இக் கொடுமைக்கு உலக நீதிமன்றத்தில் இந்துக்கள் பதிலளிக்க வேண்டியிருக்கும் என்பதற்கும் ஓர் எச்சரிக்கையாக இருக்கும் என்று நம்புகிறேன்.

**பி. ஆர். அம்பேத்கர்**

*22, பிரிதிவிராஜ் சாலை,*
*புதுதில்லி,*
*1 செப்டம்பர் 1943.*

# இயல் I

# தீண்டப்படாதோரின் மொத்த மக்கட்தொகை

இந்தியாவில் பத்தாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் குடிமதிப்பு புள்ளிவிவரக் கணக்கெடுப்பு ஒரு சமயம் மிகவும் எளிதானதாகவும், சுவாராசியமற்றதாகவுமே இருந்தது. இது விஷயத்தில் யாரும், அவ்வளவாக அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால் இன்று நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. இப்போது குடிமதிப்புக் கணக்கு, அதாவது சென்சஸ் என்பது எல்லோருக்குமே முதல் தர அக்கறைக்குரிய விஷயமாகிவிட்டது. இந்தியாவில் அரசியல்வாதிகள் மட்டுமன்றி, பொதுமக்களும் குடிமதிப்புக் கணக்கெடுப்பை மிக முக்கியப் பிரச்சினையாகக் கருதத் தொடங்கியுள்ளனர். ஏனென்றால் தற்சமயம் இந்தியாவில் அரசியல் என்பது எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டதாகி விட்டது. மக்கட்தொகை எண்ணிக்கை பலம்தான் ஒரு சமூகத்தினர் இன்னொரு சமூகத்தினர் மீது அரசியல் ஆதாயங்கள் பெறத்துணைபுரிகிறது. இது உலகில் வேறெங்கும் நடைபெறாத ஒன்றாகும். இதன் விளைவு என்ன? மக்கட்தொகை எண்ணிக்கையைக் கொண்டு அரசியல் ஆதாயங்கள் பெறும் பொருட்டு இந்தியாவில் மக்கட் தொகைக் கணக்கெடுப்பில் சூழ்ச்சியும் ஏமாற்றுவித்தையும் பொய்யும் புனைசுருட்டும் ஆட்டம் போடத்தொடங்கியுள்ளன; இவ்வாறு குடிமதிப்புக் கணக்கில் மோசடி செய்வதில் இந்துக்களும், முஸ்லீம்களும், சீக்கியர்களும் தத்தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர். ஆனால் அதேசமயம் தீண்டப்படாதவர்களும் கிறித்தவர்களும் இந்த விஷயத்தில் தங்களுக்குரிய குறைந்தபட்ச நியாயத்தைக் கூடப் பெறமுடியவில்லை. குடிமதிப்புக் கணக்கெடுப்புப்பணியை நடத்தும் நிர்வாக அமைப்பில் அவர்களுக்கு எத்தகைய பங்கும் இல்லாததே இதற்குக் காரணம். மாறாக, பத்தாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் குடிமதிப்புக் கணக்கெடுப்பு ஒவ்வொன்றிலும் தீண்டப்படாதோரின் நலன்கள் இந்துக்கள், முஸ்லீம்கள், சீக்கியர்களால் பலியிடப்பட்டு வந்திருக்கின்றன. கடந்த 1940 ஆம் வருட சென்ஸஸில் இவ்வாறு நடைபெற்றதை இங்கு முக்கியமாகக்

குறிப்பிடவேண்டும். பஞ்சாபின் சில பகுதிகளைச் சேர்ந்த தீண்டப் படாதவர்கள் மீது சீக்கியர்கள் திட்டமிட்டமுறையில் கொடிய அடக்கு முறையையும் ஒடுக்குமுறையையும் ஏவிவிட்டனர். இந்தத் தீண்டப்படாத மக்கள் சீக்கியர்ளல்லாதபோதிலும், கணக்கெடுப் பின் போது தங்களைச் சீக்கியர்கள் எனக் கூறவேண்டுமென்று அவர்கள் கடுமையாக நிர்ப்பந்திக்கப்பட்டனர். இதன் விளைவாக சென்சஸில் தீண்டப்படாதவர்களின் எண்ணிக்கை குறைந்து, சீக்கியர் களின் எண்ணிக்கை அதிகரித்தது. இந்துக்கள் வேறொரு வகையான உபாயத்தைக் கையாண்டனர். குடிமதிப்புக் கணக்கெடுப்பின் போது யாரும் சாதியை வெளியிடக்கூடாது என்று அவர்கள் வலி யுறுத்தினர். குறிப்பாக தீண்டப்படாதோருக்கு இந்த கோரிக்கை விடுக்கப்பட்டது. சாதிப்பெயர்தான் அவர்கள் தீண்டப்படாதவர் கள் என்று உலகுக்குப் பிரகடனம் செய்கிறது; எனவே அவர்கள் தங்கள் சாதிப்பெயரை வெளியிடாமல் தாங்கள் இந்துக்கள் என்று மட்டும் கூறினால், ஏனைய இந்துக்கள் போன்றே அவர்கள் கருதப் படுவார்கள்; அவர்கள் உண்மையில் தீண்டப்படாதவர்கள் என்று எவரும் தெரிந்து கொள்ள மாட்டார்கள். இதுவே இந்துக்களின் வாதம். தீண்டப்படாதவர்கள் இந்தச் சூழ்ச்சிக்கு இரையானார்கள். குடிமதிப்பு கணக்கெடுப்பின்போது தங்களைத் தீண்டப்படாதவர் கள் என்று கூறுவதில்லை என்றும், இந்துக்கள் என்று மட்டுமே கூறுவதென்றும் முடிவு செய்தார்கள். இதன் விபரீத விளைவைச் சொல்ல வேண்டியதில்லை. கணக்கெடுப்பில் எந்த அளவுக்கு மோசடி செய்யப்பட்டது என்பதைக் கூறுவது கடினம். எனினும் இந்த மோசடி பெருமளவுக்கு நடைபெற்றிருக்கும் என்பதில் ஐய மில்லை. இதனால் தீண்டப்படாதவர்கள்தான் வெகுவாகப் பாதிக்கப் பட்டார்கள். ஆதலால் பிரிட்டிஷ் இந்தியாவில் தீண்டப் படாதவர் களின் மொத்த எண்ணிக்கை குறித்து சென்சஸ் தரும் புள்ளி விவரங் களைச் சரியானவை என ஏற்றுக்கொள்ளமுடியாது. ஆனால் அதே சமயம் பிரிட்டிஷ் இந்தியாவில் தீண்டப்படாதவர்களின் இன்றைய எண்ணிக்கை சுமார் 6 கோடி என்று கூறினால் அது தவறாக இருப் பதற்கில்லை.

## இயல் II

# தீண்டப்படாதோரின் முக்கியத்துவம்

உலகின் பல்வேறு பகுதிகளும் அறிஞர் வார்டு குறிப்பிடுவது போன்று தமக்கே உரிய கீழ்மட்ட மக்களைக் கொண்டிருந்திருக் கின்றனர். ரோமானியர்கள் அடிமைகளையும், ஸ்பார்ட்டன்கள் ஹியோட்டுகளையும், பிரிட்டிஷார் வில்லெய்ன்கள் எனப்படும் கொத்தடிமைக் குடியானவர்களையும், அமெரிக்கர்கள் நீக்ரோக் களையும், ஜெர்மானியர்கள் யூதர்களையும் அடித்தட்டு மக்களாக நடத்தி வந்திருக்கின்றனர். ஆனால் இவர்கள் எல்லோரையும் விடத் தீண்டப்படாதவர்களின் கதிப்போக்குத்தான் மிகமிக மோசமான தாகும். அடிமைத் தனம், கொத்தடிமைத்தனம், பண்ணையடிமைத் தனம் போன்றவை எல்லாம் மறைந்தொழிந்துவிட்டன. ஆனால் தீண்டாமை மட்டும் இன்னும் ஒழிந்தபாடில்லை; இந்துமதம் இருக்கும் வரை அது நீடித் திருக்கவே செய்யும். ஒரு தீண்டப்படாத வனின் நிலைமை யூதனின் நிலைமையை விட மிக மிக மோசமானது; பரிதாபத்திலும் பரிதாபத் துக்குரியது. யூதனுக்கு ஏற்பட்டுள்ள அவ லங்கள் அவனே உருவாக்கிக் கொண்டவை. ஆனால் தீண்டப்படாத வனுக்கு ஏற்பட்டுள்ள துன்பதுயரங்களோ அப்படிப்பட்டவை அல்ல; அவற்றிலும் கொடுமையிலும் கொடுமையானவை. இந்து சமயத்தின் திட்டமிட்ட சதியே இவற்றிற்கெல்லாம் காரணம்; நாகரிகமற்ற, காட்டு மிராண்டித்தனமான, முரட்டுத்தனமான. வன் முறையை விடவும் அதிகக் குரூரங்களை விளைவிக்க வல்லது இந்தத் தீண்டாமை எனும் சாபக்கேடு, சாபத்தீடு. யூதன் வெறுக்கப் படுகிறான் என்பதில் ஐயமில்லை; ஆனால் முன்னேறுவதற்கான வாய்ப்புகள் அவனுக்கு மறுக்கப்படுவதில்லை. ஆனால் அதே சமயம் தீண்டப் படாதவனின் நிலைமை என்ன? அவன் வெறுத்து ஒதுக்கப் படுவதோடு, அவன் முன்னேறுவதற்கான சகல வாய்ப்புகளும் மறுக்கப் படுகின்றன; எல்லாக் கதவுகளும் அவனுக்கு மூடப்பட்டுள்ளன. இவ்வாறு ஏறத்தாழ 6 கோடித் தீண்டப்படாதவர்கள் - 600 லட்சம் ஆத்மாக்கள் - சொல்லொண்ணா துன்பிலும் துயரிலும், வேதனை

யிலும் வாதனையிலும் ஆழ்ந்து அமிழ்ந்து, பாம்பு வாய்ப்பட்ட தேரையாக உழன்று வரும்போது இதுகுறித்து எவரும் கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை; அவர்களது நலனுக்காகக் குரல் எழுப்புவதாகவும் தோன்றவில்லை.

துன்பமும் இடர்ப்பாடும் குழப்பமும் மிகுந்த இந்த மண்ணில் எவரது நலமேனும் பாதுகாக்கப்பட்ட வேண்டுமென்றால் அது தீண்டப்படாதவர்களின் நலமாகவே இருக்கமுடியும். இந்துக்களின் நலனும்சரி, முஸ்லீம்களின் நலனும் சரி சுதந்திரத்தின் நலமல்ல. இப்போது நடைபெற்றுவருவது அதிகாரத்திற்கான போராட்டமே யன்றி, சுதந்திரத்திற்கான போராட்டமல்ல. நாடு சுதந்திரமடைவதை தமது லட்சியமாகப் பறைசாற்றிக்கொண்டிருக்கும் எந்த ஒரு கட்சி யும், எந்த ஒரு அமைப்பும் தீண்டப்படாதவர்கள் விஷயத்தில் அணுவளவும் அக்கறை காட்டுவதில்லை. எப்போதுமே இது எனக்குப் பெரிதும் வியப்பூட்டும் விஷயமாக இருந்துவருகிறது. ''நேஷன்'' என்ற அமெரிக்க வார இதழ் இருக்கிறது. ''ஸ்டேட்ஸ் மேன்'' என்ற பிரிட்டிஷ் வார ஏடு இருக்கிறது. இவை இரண்டுமே செல்வாக்குமிக்கவை. இதேபோன்று அமெரிக்கத் தொழிலாளர் கள் அமைப்புகளும் பிரிட்டிஷ் தொழிலாளர்கள் அமைப்புகளும் இந்தியாவின் சுதந்திரக் கோரிக்கையை ஆதரித்து நிற்பவை. எனினும் எனக்குத் தெரிந்தவரை இவற்றில் எவையும் தீண்டப்படாதோரின் நலன்களை ஆதரித்துக் குரல் எழுப்பியதில்லை. உண்மையில், சுதந்திரத்தை நேசிப்பவர்கள் செய்வதற்கு அஞ்சுவதைத்தான் இந்த ஏடுகளும் அமைப்புகளும் செய்துவருகின்றன. இந்திய தேசிய காங்கிரஸ் என்று தன்னை அழைத்துக்கொள்ளும் இந்து அமைப் புடன்தான் அவை ஒட்டும் உறவும் வைத்துக்கொண்டிருக்கின்றன. இந்த அமைப்பின் பெயர் எதுவாக இருந்தபோதிலும், காங்கிரஸ் என்பது இந்து முதலாளிகளின் ஆதரவுபெற்ற, இந்து நடுத்தர வர்க்கத்தினரின் அமைப்பு என்பதையும், இந்தியாவுக்குச் சுதந்திரம் பெற்றுத்தருவது இந்து முதலாளிகளின் நோக்கமல்ல, மாறாக பிரிட்டிஷார் தற்போது வகிக்கும் அதிகார பீடங்களில் தாங்கள் சுதந்திரமாக, சுயேச்சையாக அமர்வதே அவர்களது நோக்கம் என் பதையும் இந்து சமூகத்துக்கு வெளியே தற்போது இந்தியாவிலுள்ள அனைவருமே அறிவர். காங்கிரஸ் எத்தகைய சுதந்திரத்தை விரும்பு கிறதோ அத்தகைய சுதந்திரம் எய்தப்பெறுமானால், கடந்த காலத் தில் இந்துக்கள் தீண்டப்படாதவர்களை எவ்வாறு இழிவினும்

இழிவாக, அடிமையிலும் அடிமையாக, குரூரமாக நடத்திவந்தார்களோ அவ்வாறே அவர்கள் இனியும் பரிவுக்கும் பச்சாபத்திற்குரிய இந்த மக்களை நடத்தி வருவார்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இத்தகைய அக்கறையற்ற, பராமுகமான சூழ்நிலையில், புதிய அரசியல் அமைப்பில் இந்தியாவில் தீண்டப்படாதோர்களின் நிலைமைகளைப் பற்றி எடுத்துரைக்கும் ஆய்வுக் கட்டுரை ஒன்றை பசிபிக் உறவுகள் கழகத்திடம் சமர்ப்பிக்கும்படி என்னைக் கேட்டுக் கொண்டமைக்காக சர்வதேச விவகாரங்கள் கழகத்தின் இந்தியக் கிளையைப் பாராட்டுவது முற்றிலும் பொருத்தமேயாகும். அதிலும், புதிய அரசியலமைப்பில் இந்தியாவிலுள்ள தீண்டப்படாதவர்களின் நிலைமை எத்தகையதாக இருக்கும் என்பதை ஆராய்ந்து ஓர் அறிக்கை சமர்ப்பிக்கும்படி எனக்கு இந்த அழைப்பை விடுத்தமைக்காக மிகுந்த மகிழ்ச்சியும் உளநிறைவும் அடைகிறேன். எனவேதான் எனக்கு எத்தனை எத்தனையோ அலுவல்கள் இருந்தபோதிலும் இந்த ஆய்வறிக்கையைத் தயாரித்தளிக்க நான் மனமுவந்து ஒப்புக்கொண்டேன்.

□□□

# இயல் III

# தீண்டப்படாதோரின் அரசியல் கோரிக்கைகள்

தீண்டப்படாதவர்களின் பிரச்சினை ஒரு மாபெரும் பிரச்சினையாகும். உண்மையில் இந்தப் பிரச்சினை குறித்த ஆய்வில் கடந்த சில காலமாகவே ஈடுபட்டுவருகிறேன்; பல நூறு பக்கங்களைக் கொண்ட ஓர் ஆழமான, விரிவான ஆய்வாக இது இருக்கும். இப்போது நான் சமர்ப்பித்திருக்கும் இந்த ஆய்வறிக்கையில் நான் செய்யக் கூடியதெல்லாம் பிரச்சினையின் தன்மையையும், இப்பிரச்சினைக்குத் தீண்டப்படாதோர்களே தெரிவித்துள்ள பரிகாரங்களையும் சுருக்கமாக எடுத்துக்கூறுவதே ஆகும். நாகபுரியில் 1942 ஜூலை 18,19 தேதிகளில் நடைபெற்ற அகில இந்திய ஷெட்யூல்டு வகுப்பினர்* மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பின்கண்ட தீர்மானங்களை இங்கு உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருவதன் மூலம் இப்பணியைத் தொடங்குவது உசிதமானதும் உகந்ததும் என்றும் நினைக்கிறேன்:

### தீர்மானம் எண் II

## அரசியலமைப்புச் சட்டத்திற்கு இணக்கம் தேவை

''பின்கண்ட நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டாலொழிய எந்த அரசியலமைப்புச் சட்டமும் ஷெட்யூல்டு வகுப்பினருக்கு ஏற்புடையதல்ல என்று இந்த மாநாடு பிரகடனம் செய்கிறது:

i) அது ஷெட்யூல்டு வகுப்பினர்களின் சம்மதத்தைப் பெற்றிருக்கவேண்டும்.

ii) ஷெட்யூல்டு வகுப்பினர்கள் இந்துக்களிலிருந்து வேறுபட்டவர்கள், தனித்தன்மை வாய்ந்தவர்கள், இந்தியாவின் தேசிய

---

* 1935 ஆம் வருட இந்திய அரசாங்கச் சட்டத்தின்படி தீண்டப்படாதவர்கள் ஷெட்யூல்டு வகுப்பினர் என்று குறிப்பிடப்பட்டனர்.

வாழ்க்கையில் ஒரு முக்கிய ஆக்கக்கூறாக அமைந்திருப்பவர்கள் என்பதை அது ஏற்றுக்கொள்ள வேண்டும். மேலும்

iii) புதிய அரசியலமைப்பில் ஷெட்யூல்டு வகுப்பினருக்கு உண்மையான பாதுகாப்பு உணர்வை உண்டுபண்ணக்கூடிய சட்டப் பிரிவுகளை அது கொண்டிருக்கவேண்டும். அத்தகைய சட்டப்பாது காப்புகள் பின்கண்ட தீர்மானங்களில் எடுத்துரைக்கப்பட்டிருக் கின்றன.''

### தீர்மானம் III

## புதிய அரசியலமைப்புச்சட்டத்தில் இடம் பெறவேண்டிய அத்தியாவசியமான வழிவகை ஏற்பாடுகள்

1. ஷெட்யூல்டு வகுப்பினரின் குழந்தைகளுக்கு இடையே ஆரம்பக்கல்வியை வளர்ப்பதற்காக ஒவ்வொரு மாகாண அரசாங்கத் தின் வரவுசெலவுத் திட்டத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு குறிப் பிட்ட தொகையை வருடாந்தரம் ஒதுக்கவேண்டும்; இதேபோன்று அவர்களிடையே மேற்கல்வியை வளர்க்கும் பொருட்டு குறிப்பிட்ட தொகையை வருடந்தோறும் ஒதுக்கவேண்டும். மாகாணத்தின் வர வினத்தில் முதல் செலவினமாக இது இருக்க வேண்டும்.

2. எல்லா மத்திய மற்றும் மாகாண அரசாங்கங்களிலும் ஷெட்யூல்டு வகுப்பினருக்குப் பிரதிநிதித்துவம் கிட்டுவதற்கு சட்ட ரீதியாக வழிவகை செய்யப்பட வேண்டும்; ஷெட்யூல்டு வகுப் பினரின் எண்ணிக்கை, அவர்களது தேவைகள், அவர்களின் முக்கியத் துவம் போன்றவற்றைப் பொறுத்து இந்தப் பிரதிநிதித்துவம் நிர்ண யிக்கப்பட வேண்டும்.

3. அரசுப்பணிகளில் ஷெட்யூல்டு வகுப்பினர்களுக்கு அவர்களது எண்ணிக்கை, தேவைகள், முக்கியத்துவம் போன்றவற் றின் அடிப்படையில் பிரதிநிதித்துவம் கிடைக்கச்செய்ய சட்டரீதி யாக வழிவகை செய்யப்படவேண்டும். நீதித்துறை, காவல்துறை, வருவாய்த்துறை போன்றவற்றில் ஷெட்யூல்டு வகுப்பினருக்கு நிர்ண யிக்கப்பட்டிருக்கும் விகிதாசாரம் குறைந்தபட்சத் தகுதி விதிக்கு இணங்க பத்தாண்டுகளுக்குள் செயல்படுத்தப்பட வேண்டும் என்று இந்த மாநாடு வலியுறுத்துகிறது.

4. அனைத்துச் சட்டமன்றங்களிலும், ஸ்தல ஸ்தாபன அமைப்புகளிலும் ஷெட்யூல்டு வகுப்பினருக்கு அவர்களது எண்ணிக்கைக்கும், தேவைகளுக்கும், முக்கியத்துவத்துக்கும் ஏற்ப பிரதிநிதித்துவம் கிட்டச் செய்வதற்கு சட்டரீதியாக வழிவகை செய்யப்படவேண்டும்.

5. எல்லா சட்டமன்றங்களுக்கும் ஸ்தலஸ்தாபன அமைப்புகளுக்கும் ஷெட்யூல்டு வகுப்பினரின் பிரதிநிதிகள் தனி வாக்காளர் தொகுதிகள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு சட்டரீதியாக வழிவகை செய்யப்பட வேண்டும்.

6. அனைத்து மத்திய, மாகாண பொதுப்பணித்துறை ஆணையங்களிலும் ஷெட்யூல்டு வகுப்பினர் உரிய பிரதிநிதித்துவம் பெறுவதற்கு சட்டரீதியாக வழிவகை செய்யப்பட வேண்டும்.

## தீர்மானம் IV

## தனிக்குடியேற்றங்கள்

"பின் வருபவை இந்த மாநாட்டின் ஆழ்ந்து ஆராய்ந்த கருத்தாகும்:

''அ) பிழைப்புக்குப் போதிய ஆதாரமின்றியும், இந்துக்களுடன் ஒப்பிடும்போது சிறு எண்ணிக்கையிலும் ஓர் இந்து கிராமத்தின் புறச்சேரிகளில் ஷெட்யூல்டு வகுப்பினர் தொடர்ந்து வாழ்ந்து வரும்வரை, அவர்கள் தீண்டப்படாதவர்களாகவே இருந்துவருவார்கள், இந்துக்களின் கொடிய அடக்குமுறைக்கும் ஒடுக்குமுறைக்கும் ஆளாகிவருவார்கள், அவர்களால் சுதந்திரமான, முழுநிறைவான வாழ்க்கை வாழமுடியாது.

ஆ) இத்தகைய நிலைமையில், சுயராஜ்யம் என்பது நடைமுறையில் ஓர் இந்து ராஜ்யமாகவே இருக்கும். அத்தகைய கொடுங்கோலாட்சியில் சாதி இந்துக்களின் வல்லாட்சியிலிருந்தும், அக்கிரம அடக்குமுறையிலிருந்தும் ஷெட்யூல்டு வகுப்பினரைச் சிறந்தமுறையில் பாதுகாக்கும் பொருட்டும்,

இ) அவர்கள் தங்களது மனிதஆளுமையை முழு அளவுக்கு வளர்த்துக்கொள்ளும் பொருட்டும், அவர்களுக்குப் பொருளாதார, சமூகப் பாதுகாப்பு அளிப்பது அவசியம்; அதோடு

தீண்டாமையை வேரோடு வேரடி மண்ணோடு ஒழித்துக்கட்டு வதும் முக்கியம்.

நூற்றாண்டு நூற்றாண்டுக் காலமாக ஷெட்யூல்டு வகுப் பினர் இந்துக்களிடம் அனுபவித்துவரும் எல்லாவிதமான தீங்குகளுக் கும், கோரக் கொடுமைகளுக்கும், அல்லல்களுக்கும் அவதிகளுக் கும் ஆணிவேர், ஊற்றுக்கண் இப்போதைய கிராம அமைப்பு முறையேயாகும். எனவே, இந்தக் கிராம அமைப்புமுறையில் ஒரு தீவிர மாற்றத்தைக் கொண்டுவரவேண்டும் என்பது இந்த மாநாட் டின் தீர்க்கமான முடிவாகும். இத்தகைய மாற்றங்களைச் செய்ய வேண்டிய அவசியத்தை உணர்ந்துள்ள இம்மாநாடு ஆட்சிமுறை யில் அரசியல் சட்டமாற்றங்களைக் கொண்டுவருவதோடு, தற் போதுள்ள கிராம அமைப்பு முறையிலும் மாற்றங்கள் செய்யவேண் டும் என்று கருதுகிறது. இந்த மாற்றங்களைப் பின்கண்டவாறு செய்ய லாம் என்றும் அது பரிந்துரைக்கிறது:

1. ஷெட்யூல்டு வகுப்பினரை இன்றைய அவர்களது உறைவிடங்களிலிருந்து மாற்றுவதற்கும், இந்துக் கிராமத்திலிருந்து விலகி தனியே ஷெட்யூல்டு வகுப்பினர் தங்களது சொந்த கிராமங் களை உருவாக்கிக் கொள்வதற்கும் அரசியல் சட்டம் வகை செய்ய வேண்டும்.

2. ஷெட்யூல்டு வகுப்பினரை புதிய கிராமங்களில் குடி யமர்த்துவதற்கு துணைபுரிய ஒரு குடியமர்வு ஆணையத்தை அமைக்க அரசியல் அமைப்புச் சட்டத்தில் வழிவகை செய்யப் படவேண்டும்.

3. பண்படுத்தப்பட்டவையும், எவரும் கைவசப்படுத்திக் கொள்ளாதவையுமான எல்லா அரசுநிலமும் ஷெட்யூல்டு வகுப் பினரைப் புதிதாகக் குடியமர்த்துவதற்காக குடியமர்வு ஆணையத் திடம் ஒப்படைக்க வேண்டும்.

4. ஷெட்யூல்டு வகுப்பினரைப் புதிதாகக் குடியமர்த்தும் திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு, நில ஆர்ஜிதச் சட்டத்தின் படி தனி நபர்களிடமிருந்து புதிதாக நிலம் வாங்கும் அதிகாரம் ஆணையத்துக்கு அளிக்கப்பட வேண்டும்.

5. ஆணையம் தனது பணியை நிறைவேற்றுவதற்காக மத்திய அரசாங்கம் ஆண்டுதோறும் குறைந்தபட்சம் ஐந்துகோடி ரூபாய் ஆணையத்துக்கு மானியமாக வழங்குவதற்கு வழிவகை செய்யப்பட வேண்டும்.

□□□

# இயல் IV

# இந்துக்களின் எதிர்ப்பு

முன்னர் கூறிய தீர்மானங்களில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்:

1) அரசியல் (2) கல்வி (3) பொருளாதாரம் மற்றும் சமூகம்

அரசியல் கோரிக்கைகளை முதலில் எடுத்துக்கொண்டு பார்க்கும்போது அவை மூன்று பாதுகாப்புகளைக் கோருவது புலனாகும்:

1. சட்டமன்றம் என்பது பொதுவாக மக்கள் அனைவரின் பிரதிநிதித்துவ அமைப்பாக மட்டும் இல்லாமல், இந்துக்களையும், தீண்டப்படாதவர்களையும் தனித்தனியாகப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பாகவும் அது இருக்க வேண்டும்.

2. ஆட்சித்துறை சட்டமன்றத்துக்கு மட்டும் பொறுப்புக் கூறக் கடமைப்பட்டதாக இல்லாமல், இந்துக்களுக்கும் அதேபோன்று தீண்டப்படாதவர்களுக்கும் பொறுப்புக்கூறக் கடமைப்பட்டதாகவும் இருக்க வேண்டும்.

3. நிர்வாகம் திறமையாக நடப்பது மட்டும்போதாது; அனைத்து மக்களதும் அதேபோன்று தீண்டப்படாதவர்களதும் நம்பிக்கையைப் பெற்றதாகவும் இருக்கவேண்டும்; தீண்டப்படாதவர்களின் பிரதிநிதிகள் போதிய எண்ணிக்கையில் முக்கிய பதவிகளில் அமர்த்தப்படவேண்டும்; அப்போதுதான் தீண்டப்படாதவர்களுக்கு நிர்வாகத்தினிடம் நம்பிக்கை ஏற்பட முடியும்.

தீண்டப்படாதோரின் இந்த அரசியல் கோரிக்கைகள் தீண்டப்படாதோருக்கும் இந்துக்களுக்கும் இடையே மிகவும் சர்ச்சைக்குரிய விஷயமாக இருந்து வருகின்றன. தீண்டப்படாதோரின் நண்பரான திரு.காந்தி இந்தக் கோரிக்கைகளுக்கு இணக்கம் தெரிவிப்பதற்குப் பதிலாக சாகும்வரை உண்ணாவிரதம் இருக்க முன்வந்தார். பின்னர் அவர் இறங்கிவந்தபோதிலும் இந்தக் கோரிக்கைகளின் நியாயத்தை ஏற்க அவர் தயாராக இல்லை. இந்துக்கள் அல்லது காங்கிரஸ்

திட்டத்தின்படி பிரதிநிதித்துவ அரசாங்கம் என்பது எவ்வாறு இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிடுவது உசிதமானதாகவும், பொருத்தமானதாகவும் இருக்கும். அது வருமாறு:

1. முற்றிலும் பிரதேசவாரியான தொகுதிகள் மூலமே சட்டமன்றம் தேர்ந்தெடுக்கப்படும்.

2. சட்டமன்றத்தில் பெரும்பான்மையினராக உள்ள கட்சியினரே ஆட்சி அமைக்க அனுமதிக்கப்படுவர்.

3. முற்றிலும் திறமையின் அடிப்படையிலேயே அரசுப் பணித்துறைக்கு ஆட்கள் நியமிக்கப்படுவர்.

காங்கிரசிலுள்ள இந்துக்கள் தங்களது திட்டத்தை தேசியத் திட்டம் என்று போற்றிப் புகழ்கின்றனர்; ஆனால் அதேசமயம் தீண்டப்படாதோர் முன்வைத்துள்ள திட்டத்தை வகுப்புவாரித் திட்டம் என்று கூறுகின்றனர். இதில் உண்மையில் வேறுபாடு ஏதுமில்லை என்பதை என்னால் காட்டமுடியும். பிடிக்காத ஒரு விஷயத்தைப் பழிப்பதற்கு அதற்கு இழிவான ஒரு பெயரைத்தந்து அவமதிக்கும் உபாயம் கைக்கொள்ளப்படுவது உண்டு. இதைத்தான் காங்கிரஸ் இந்துக்கள் செய்திருக்கிறார்கள். ஆனால் இயல்பாகவே பலவீனமாக உள்ள ஒரு விஷயத்துக்கு இத்தகைய உபாயத்தின்மூலம் வலுவூட்டமுடியும். தேசியத்திட்டம் எனப்படுவதன் பலவீனத்தைத் தோலுத்துரித்துக் காட்டுவதற்கு அதன் பல்வேறு அமசங்களை இங்கு பரிசீலிப்போம். இது சம்பந்தமாக மேற்கொண்டு ஆராய்வதற்கு முன்னர் இவ்விரு திட்டங்களுக்கும் இடையே உள்ள ஒற்றுமைகளையும் வேறுபாடுகளையும் கவனத்தில் எடுத்துக்கொள்வது உகந்ததாக இருக்கும். பிரதிநிதித்துவம் வாய்ந்த சட்டமன்றம் உருவாக்கப்படவேண்டும் என்ற விஷயத்தைப் பொறுத்தவரையில் இவ்விரு திட்டங்களுமே ஒரே குறிக்கோளைக் கொண்டிருக்கின்றன. சட்டமன்றத்தை உண்மையிலேயே பிரதிநிதித்துவம் வாய்ந்த சட்டமன்றமாக உருவாக்கும் வழிமுறைகள் விஷயத்தில்தான் இவ்விரு திட்டங்களும் வேறுபடுகின்றன. இந்தியாவில் பிரதிநிதித்துவம் வாய்ந்த சட்டமன்றங்களை உருவாக்குவதற்கு பிரதேச வாரியான வாக்காளர் தொகுதிகளே உகந்தவை, சிறந்தவை என்று தேசியத் திட்டம் வலியுறுத்துகிறது. இந்திய சமுதாயத்தின் இன்றைய பிரத்தியேக சமூகக் கட்டமைப்புச் சூழ்நிலைமையில், பிரதேச வாரியான வாக்காளர் தொகுதிகள் மூலம் உண்மையான பிரதிநிதித்துவம்

வாய்ந்த சட்டமன்றங்களை உருவாக்கமுடியாது என்று வகுப்புவாரித் திட்டம் சுட்டிக் காட்டுகிறது. வெறும் பிரதேச வாரியான வாக்காளர் தொகுதிகளால் இந்தியாவில் உண்மையாகவே பிரதிநிதித்துவம் வாய்ந்த சட்டமன்றங்களைத் தோற்றுவிக்கமுடியுமா என்பதுதான் இங்குள்ள பிரச்சினை. இந்தப் பிரச்சினையை மையமாகக் கொண்டு தான் சர்ச்சையே உருவாகியுள்ளது.

இந்துக்களின் தேசியத்திட்டம் பொதுவாக மேலைய நாட்ட வனைக் கவர்கிறது; வகுப்புவாரித் திட்டத்தைவிட இத்திட்டத்தையே அவன் ஆதரிக்கிறான். பிரதேசவாரி வாக்காளர் தொகுதிகளைப் பற்றியே அவன் அறிந்திருப்பதும், அவற்றிற்கு அவன் பழக்கப் பட்டிருப்பதுமே இதற்குப் பெரும்பாலும் காரணம். ஆனால் தேசியத் திட்டம் எனப்படும் இத்திட்டம் தவறானது என்பதிலும், அதன் குறிக்கோள்கள் வகுப்புவாரித் திட்டத்தை விட மிகவும் மோச மானவை என்பதிலும் ஐயமில்லை.

பிரதேசவாரி வாக்காளர் தொகுதிகளின் பயனிறைத் தன்மை யையும் தகுநிறைவுடைமையையும் பற்றிய அனுமானங்களைப் பரிசீலித்துப் பார்க்கும் எவருக்கும் இத்திட்டத்தின் பெரும் குறைபாடு கள் தெளிவாகப் புலனாகும். இத்தகைய அனுமானங்கள், ஊகங்கள் யாவை? இவற்றில் முக்கியமானவற்றைப் பற்றி மட்டும் இங்கு பார்ப்போம்.

1. ஒரு தொகுதியைச் சேர்ந்த பெரும்பான்மையான வாக்காளர்கள் ஒட்டுமொத்தத்தில் தொகுதி முழுவதன் ஆர்வ விருப்பத்தைப் பிரதிபலிக்கிறார்கள் என்று அனுமானிக்கப் படுகிறது.

2. ஒரு தொகுதியில் பெரும்பான்மையினர் பிரதிபலிக் கும் விருப்பத்தை அத்தொகுதியின் பொதுவான விருப்பமாக அங்கீகரிப்பது போதுமானது, எந்த ஒரு குறிப்பிட்ட பகுதியி னரின் விருப்பம் பெரும்பான்மையினரின் விருப்பத்துக்கு எவ்வளவுதான் வேறுபட்டதாக, மாறுபட்டதாக இருப்பினும் அதனை கழிவிரக்கமின்றி, நேர்மையற்று நடந்து கொள் கிறோம் என்ற குற்ற உணர்வின்றி நிராகரிக்கலாம், அதில் தவறேதும் இல்லை.

3. வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு பிரதிநிதி அந்த வாக்காளர்களின் விருப்பங்களையும் நலன்களையும் பிரதி நிதித்துவப்படுத்துகிறார். அவர் தன்னைத் தேர்ந்தெடுக்கும் எந்த ஒரு வாக்காளரின் நலன்களையும் விருப்பங்களையும் புறக் கணித்துவிட்டு தனது சொந்த விருப்பின் நலன்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கும் அபாயம் ஏதும் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை.

இந்த ஊகங்கள் அனைத்துமே தவறானவை, சித்தாந்தரீதி யில் நியாயமற்றவை, அனுபவ உண்மைக்கும் புறம்பானவை. நாடாளுமன்ற அரசுமுறை வரலாற்றில் இந்தக் கருத்துக்கு ஆதர வாக எத்தனை எத்தனையோ சான்றுகள் காணக்கிடக்கின்றன; இங்கிலாந்தின் வரலாறும் இந்த உண்மையையே கூறுகிறது. பெரும்பான்மையினர் ஒரு தொகுதியிலுள்ள அனைத்துத்தரப்பு மக்களின் ஆர்வவிருப்பங்களையும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பிரதிபலிப்பார்கள் என்று எண்ணுவது தவறு. உண்மையில் அவர்கள் எவ்விதத்திலும் திருப்திகரமான முறையில் ஒருபோதும் இதனைச் செய்யமுடியாது. அவ்வாறு ஒருக்கால் செய்வதாயினும் பொது ஆர்வ விருப்பத்தை அவர்கள் மிகக்குறைந்த அளவே பிரதிபலிக்கமுடி யும்; அதிலும் இவ்வாறு மிகமிகக்குறைந்த அளவில் அவர்கள் பிரதிபலிப்பதுகூட தொகுதியிலுள்ள பல்வேறு மக்கள் பகுதியினரின் பலதரப்பட்ட நலன்களையும், அந்த நலன்கள் பரஸ்பரம் ஒன் றுடன் ஒன்று எந்த அளவுக்கு சுதந்திரமாகவும் முழுமையாகவும் செயல்படுகின்றன என்பதையும் பொறுத்தே இருக்கும். இந்தியாவில் பொதுவாகப் பகிர்ந்துகொள்ளப்படும் நலன்கள் இல்லை; அவை ஒன்றுடன் ஒன்று சுதந்திரமாகவும் முழுமையாகவும் செயல்படுவது மில்லை; வெவ்வேறு பகுதியினரும் பொதுப்பங்கேற்புக்கான வாய்ப்பு களும் இல்லை; எந்தப் பகுதியினரும் அவர்கள் பெரிய பகுதியினரோ சிறிய பகுதியினரோ மற்றொரு பகுதியினரின் ஆர்வ விருப்பங்களைப் பிரதிபலிக்க முடியாது. பெரும்பான்மையினரின் விருப்பம் அந்தப் பெரும்பான்மையினரின் விருப்பமேயன்றி வேறன்று. எத்தகைய தர்க்கரீதியான சாமர்த்தியமான வாதமும் இந்த உண்மையை மூடி மறைத்துவிடமுடியாது; பெரும்பான்மையினர் தங்கள் கொடுமையை எப்போதும்போல் நிலைநாட்டவே செய்வர்.

மேலும், சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு பிரதிநிதி தன்னைத் தேர்ந்தெடுத்த வாக்களர்களின் ஆர்வ விருப்பங் களைப் பிரதிபலிப்பார் என்றோ, தனது வகுப்பின் நலன்களை

மறந்துவிடுவார் அல்லது உதாசீனம் செய்துவிடுவார் என்றோ நினைப்பதும் தவறாகும். ஒரு பிரதிநிதி வேறுபட்ட கடமைகளைச் செய்ய வேண்டியவராக இருக்கிறார். அவரை முரண்பட்ட இரண்டு அல்லது இன்னும் சொல்லப்போனால் மூன்று கடமைகள் எதிர் நோக்குகின்றன: 1. தனக்குத்தானே செய்யவேண்டிய கடமை. 2. அவர் சார்ந்த வகுப்புக்குச் செய்யவேண்டிய கடமை. 3. தன்னைத் தேர்ந்தெடுத்த வாக்காளர்களுக்குச் செய்யவேண்டிய கடமை. நமது பரிசீலனையில் முதல் கடமையை ஒதுக்கிவிட்டுப் பார்த்தால் தனது வாக்காளர்களின் நலன்களைவிடவும் தான் சார்ந்துள்ள வகுப்பின் நலன்களுக்கே மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறார். வேறு விதமாக அவர் செயல்படுவார் என்று ஒருவர் ஏன் எதிர்பார்க்க வேண்டும்? தனது தொகுதியைவிட தனது சொந்த நலனுக்கு ஒருவர் பிரதானம் கொடுப்பது என்பது பொதுவான அனுபவம். மனிதனின் சருமம் அவனது சட்டையைவிட அவனுக்கு நெருக்கமாக அமைந்திருக்கிறது என்பது முதுமொழி. சட்டமன்ற உறுப்பினர்கள் விஷயத்திலும் இது பொருந்தும். ஒரு சட்டமன்ற உறுப்பினனுக்கு அவனது வர்க்கம் அல்லது வகுப்புதான் அவனுடைய சருமம்; அவனது தொகுதி அவனது சட்டை; அந்த சட்டை அவனது சருமத்திலிருந்து ஒரு டிகிரி விலகியிருக்கிறது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

எனவே, எல்லா அரசியல் வல்லுநர்களும் வலுவற்றவை என்று அறிவித்துள்ள அடித்தளங்கள் மீது இந்தியாவின் அரசியல் கட்டமைப்பை நிர்மாணிப்பதற்கு பிரதேச வாக்காளர் தொகுதிகள் மீது இந்துக்கள் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பது தெள்ளத் தெளிவு. பிரதேச வாக்காளர் தொகுதிஎன்பது அரசியல்கட்டமைப்பில் ஒரு பலவீனமான பகுதி என்று ஐரோப்பிய நாடுகளில் கூட நீண்டகாலமாகவே கருதப்பட்டு வருகிறது. மிகப்பல ஐரோப்பிய நாடுகளில் பிரதேச வாக்காளர் தொகுதி அடிப்படையில் அமைந்த பிரதிநிதித்துவ முறை ஒழித்துக்கட்டப்பட்டு இதர முறைகள் கைக் கொள்ளப்பட்டு வருகின்றன; பிரதேசப் பிரதிநிதித்துவ முறையால் நல்ல அரசாங்கத்தையோ அல்லது திறமையான அரசாங்கத்தையோ வழங்க முடியாது என்பதே இதற்குப் பிரதான காரணம். பிரதேசவாரி வாக்காளர் தொகுதிகள் முறையின் அடிப்படையில் பிரதிநிதித்துவ அரசாங்கங்கள் இருந்துவந்த நாடுகளில் அதிருப்தி அதிகரித்திருப்பதைத்தான் காண்கிறோம். விவரமும் விவேகமுமிக்கவர்கள் பிரதேசவாரித் தொகுதிகள் முறையைத் திட்டவட்டமாகவும் கடுமையாகவும் எதிர்க்கிறார்கள் என்பதற்கு எவ்வளவோ சான்றுகள், நிரூபணங்கள் உள்ளன; தொழில் வாரிப் பிரதிநிதித்துவம் வேண்டும்,

பொதுமக்கள் வாக்கெடுப்பு முறை வேண்டும் என்ற கோரிக்கைகள் எல்லாம் இதைத்தான் மெய்ப்பிக்கின்றன.

இத்தகைய சூழ்நிலைமையில், எங்கெங்கும் மதிப்பிழந்து போன ஓர் அரசியல் செயல்முறைமையை இந்துக்கள் உடும்புப் பிடிவாதமாக ஏன் ஆதரிக்கிறார்கள் என்ற கேள்வி வியப்பளிப்ப தாகத்தான் இருக்கிறது. இந்த செயல்முறைமை ஒன்றுதான் தேசியத் துக்கு இசைவானது, இணக்கமானது என்று இக்கேள்விக்கு அவர் கள் பதிலளிக்கின்றனர். இது உண்மையான காரணமாக இருக்கும் என்று நான் நம்பவில்லை. இதற்கு உண்மையான காரணம் முற்றிலும் வேறானது என எனக்குத் தோன்றுகிறது. இந்துக்கள் பிரதேசவாரி வாக்காளர் தொகுதி முறையை விரும்புகிறார்கள் என்றால், எல்லா அரசியல் அதிகாரத்தையும் இந்துக்கள் கைகளில் குவிக்க அது துணைபுரியும் என்பதே இதற்குக் காரணம். அவர்களுடைய இந்தக் கணிப்பு தவறானது என்று யார் கூற முடியும்? முற்றிலும் பிரதேசவாரி யாக அமைந்த ஒரு தொகுதியில் மிகப்பெரும்பான்மையினரான இந்து வாக்காளர்களுக்கும் மிகச் சிறுபான்மையினரான தீண்டப்படா தோருக்கும் இடையேதான் போட்டி இருக்கும் என்பதை இந்துக்கள் நன்கு அறிவார்கள். இவ்வாறு பிரதேசவாரித் தொகுதிகள் அடிப் படையில் தேர்தல் நடைபெறுமானால் அனைத்துத் தொகுதிகளி லும் இந்துக்களே வெற்றி பெறுவார்கள். மேலும் இந்துக்கள் தங்க ளுடைய பெரும்பான்மை பலத்தை நம்பியிருப்பது மட்டுமல்ல, வேறு சில காரணக் கூறுகளும் அவர்களுக்குத் துணை புரியும், அவர் களது பெரும்பான்மை பலத்தை வலுப்படுத்தும் இந்தக் காரணக் கூறுகள் இந்து சமுதாயத்தின் பிரத்தியேகத் தன்மையை ஆணி வேராக, அடித்தளமாகக் கொண்டுள்ளன. இந்து சமுதாய அமைப் பானது வகுப்புகளை ஒன்றுக்கு மேல் ஒன்றாக அடுக்கிவைத் துள்ளது; வாக்கெடுப்பின் மீது இது பெரும் தாக்கத்தை உண்டு பண்ணவே செய்யும். இந்து சமுதாய அமைப்பில் சில வகுப்புகள் கௌரவிக்கப்பட்டு ஏறுகதியிலும் வேறு சில வகுப்புகள் அவமதிக்கப் பட்டு இறங்கு கதியிலும் இடம்பெறச் செய்யப்பட்டுள்ளன. இத் தகைய சமூகப் போக்குகள் வாக்கெடுப்பில் எத்தகைய விளைவு களை ஏற்படுத்தும் என்பதைக் கூறுவதற்கு ஒருவர் தீர்க்க தரிசி யாக இருக்க வேண்டும் என்பதில்லை. தீண்டப்படாதோர் சமூகத் தைச் சேர்ந்த ஒரு வேட்பாளருக்கு எந்த சாதி இந்துவும் வாக்களிக்க மாட்டான். ஏனென்றால் ஓர் இந்துவின் நோக்கில் ஒரு தீண்டப் படாதவன் சட்டமன்றத்திற்குச் செல்லுவதற்கு அருகதையற்றவன், வெறுக்கத்தக்கவன். ஆனால் அதேசமயம் ஒரு தீண்டப்படாத

வேட்பாளனுக்கு வாக்களிக்காமல் ஓர் இந்து வேட்பாளனுக்கு விரும்பி வாக்களிக்கும் தீண்டப்படாதோர் எத்தனையோ பேர் இருக்கின்றனர். ஏனென்றால் தன்னை விடவும் அல்லது தன் இனத்தைச் சேர்ந்த ஒரு தீண்டப்படாதவனை விடவும் ஓர் இந்துவை உயர்வாக மதிக்க தீண்டப்படாதவன் கற்றுத்தரப்பட்டிருக்கிறான். இல்லாமையிலும் கல்லாமையிலும் உழலும், விவரம் தெரியாத, ஸ்தாபன ரீதியில் அணி திரளாத தீண்டப்படாதோர் வாக்காளர்களைக் கவர்வதற்கு இந்துக்கள் இன்னும் எத்தனை எத்தனையோ உபாயங்களை, சூழ்ச்சிகளைக் கையாள்கிறார்கள். அவற்றை எல்லாம் இங்கு விவரித்துக் கொண்டிருக்கப் போவதில்லை. இந்தச் சூழ்நிலைகள் அனைத்தும் ஒன்று சேர்ந்துதான் இந்துக்களின் பிரதிநிதித்துவத்தை மேன்மேலும் அதிகப்படுத்துகின்றன. முற்றிலும் பிரதேசவாரி வாக்காளர் தொகுதிகள் அடிப்படையில் தேர்தல் நடத்தப்படும் முறையில் இந்துக்கள் பெரும்பான்மை பெறுவது உறுதி. அதேசமயம் தீண்டப்படாதவர்கள் அனைத்து இடங்களை இழப்பதும் நிச்சயம். ஏனென்றால் முதலாவதாக அவர்கள் சிறுபான்மையினராக உள்ளனர்; இரண்டாவதாக, தீண்டப்படாதோரின் பலவீனத்தை இந்துக்கள் வெற்றிகரமாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும்; இதனால் தீண்டப்படாதவர்கள் தேவர்களுக்கு நைவேத்தியம் செய்வதுபோல் தங்கள் வாக்குகளை இந்துக்களுக்குத் தானம் செய்து விடுவார்கள்.

இந்த அம்சங்கள் யாவும் பிரதேச வாக்காளர் தொகுதிகளை இந்துக்களுக்குச் சாதகமாக்கி விடும் என்பதில் ஐயமில்லை; வகுப்பு வாரித் திட்டம் செயல்படுத்தப்பட்டால் தீண்டப்படாதவர்கள் பெறக்கூடிய அரசியல் அதிகாரத்தை பிரதேசவாரித் திட்டம் இந்துக்களுக்குத் தாரை வார்த்துவிடும்; எனவே, விளைவுகளைக் கொண்டு நோக்கும்போது பிரதேசவாரித் திட்டம் வகுப்பு வாரித் திட்டத்தை விட மிக மோசமானது என்பதில் ஐயமில்லை.

# இயல் V

# கூட்டுத் தொகுதிகளும் தனித் தொகுதிகளும்

இந்தியா போன்ற ஒரு நாட்டுக்கு முற்றிலும் பிரதேசவாரியாக அமைந்த வாக்காளர் தொகுதிகள் ஏற்புடையவை அல்ல என்பதை நீண்ட போராட்டத்திற்குப் பிறகு இந்துக்கள் ஏற்றுக் கொண்டனர். உண்மையிலேயே பிரதிநிதித்துவம் வாய்ந்த சட்டமன்றங்களை உருவாக்கக் கூடிய பிரதேசவாரியான வாக்காளர் தொகுதிகளா, வகுப்புவாரி வாக்காளர் தொகுதிகளா என்பது குறித்த சென்ற இயலில் நடைபெற்ற சர்ச்சை ஒருவிதத்தில் பார்த்தால் அவசியமற்றதே ஆகும். எனினும் இந்த சர்ச்சைக்கு ஆதாரமாக உள்ள அடிப்படைக் கண்ணோட்டங்களை இந்திய அரசியல் நிலைமைகள் குறித்து அறியாத அயல்நாட்டவர் தெரிந்திருக்க வேண்டும் என்பதாலேயே இந்த சர்ச்சையில் இருதரப்பினரது வாதங்களையும் எடுத்துரைத்தேன். ஆனால் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்துக்கு ஆதரவான அடிப்படை வாதத்தை இந்துக்கள் ஏற்றுக் கொண்டாலும், தீண்டப்படாதோர் முன்வைக்கும் எல்லாக் கோரிக்கைகளையும் துரதிர்ஷ்டவசமாக அவர்கள் ஏற்கவில்லை. தனிவாக்காளர் தொகுதிகள் மூலம் சட்டமன்றங்களில் தங்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும் என்று தீண்டப்படாதோர் கோருகின்றனர். தனித்தொகுதி என்பது என்ன? தனித்தொகுதி என்பது முற்றிலும் தீண்டப்படாதோர் வாக்காளர்கள் அடங்கிய தொகுதியாகும்; இந்த வாக்காளர்கள்தான் ஒரு தீண்டப்படாதோரை சட்டமன்றத்திற்குத் தங்கள் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். சட்டமன்றங்களில் தீண்டப்படாதோருக்கு சில குறிப்பிட்ட எண்ணிக்கை உள்ள இடங்களை ஒதுக்குவதற்கு இந்துக்கள் தயாராக இருக்கிறார்கள். ஆனால் சட்டமன்றங்களில் தீண்டப்படாதோரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தீண்டப்படாதோர் முற்றிலும் தீண்டப்படாதோரைக் கொண்ட தனி வாக்காளர் தொகுதியால் அல்லாமல் இந்துக்களையும் தீண்டப்படாதோரையும் கொண்ட கூட்டுத் தொகுதியால்தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்துகிறார்கள். வேறு விதமாகச் சொன்னால் கூட்டுத் தொகுதியா, தனித்தொகுதியா என்பது குறித்து மீண்டும் ஒரு சர்ச்சை எழுகிறது.

இங்கும் இந்த சர்ச்சையின் சாதக பாதகங்களை எடுத்துரைக்க விரும்பு கிறேன். தனித்தொகுதிகள் என்பவை நாட்டை சிறுசிறு கூறுகளாகத் துண்டாடிவிடும் என்று இந்துக்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்ற னர். இதற்கான பதில் தெள்ளத்தெளிவானது. முதலாவதாக, தேசம் என்ற சொல்லின் உண்மையான பொருளில் இந்தியர்களின் தேசம் என்று ஏதுமில்லை; இனிமேல்தான் அத்தகைய ஒரு தேசத்தை உரு வாக்க வேண்டும். தனித்த, வேறுபட்டதொரு சமூகத்தை ஒடுக்குவது ஒரு தேசத்தை உருவாக்கும் உபாயமாகாது என்ற உண்மை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று விரும்புகிறேன். இரண்டாவதாக, சட்ட மன்றத்தில் தீண்டப்படாதோருக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப் பட வேண்டும் என்று இந்துக்களும் ஏனையோரும் ஒப்புக் கொண் டிருக்கும்போது அவ்வாறு சட்டமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெறும் தீண்டப்படாதோர் தீண்டப்படாதவர்களின் உண்மையான பிரதிநிதி யாக இருக்க வேண்டும் என்பதை யாரும் மறுக்க முடியாது. இது ஒரு சரியான, பிழையற்ற நிலைப்பாடு என்றால், தீண்டப்படாதோருக்கு உண்மையான பிரதிநிதித்துவத்தை உத்தரவாதம் செய்யக்கூடிய ஒரே மார்க்கம் தனி வாக்காளர் தொகுதி முறையேயாகும் என்பதில் எள்ளளவும் ஐயம் இருக்க முடியாது. தனித்தொகுதிக்கு எதிராக இந்துக்கள் முன்வைக்கும் வாதம் ஆழமற்றது, ஆதாரமற்றது, நிலைத்து நிற்க முடியாதது. தீண்டப்படாதோரின் அரசியல் கோரிக்கைகள் எந்த வாத ஆதாரங்களின் அடிப்படையில் அமைந் துள்ளனவோ அந்த வாத ஆதாரங்களை இந்துக்கள் ஏற்றுக் கொள் கின்றனர். தனித்தொகுதி என்பது இந்த வாத ஆதாரங்களிலிருந்து கனிந்த கனியே தவிர வேறன்று. அப்படியிருக்கும்போது இந்த வாத ஆதாரங்களை ஏற்றுக் கொண்டுவிட்டு, அவற்றின் விளைவை மட்டும் எப்படி மறுக்க முடியும்? சிறுபான்மையினரைப் பாது காப்பதற்கே விசேடத் தொகுதிகள் அமைக்கப்படுகின்றன. இவ் விதம் இருக்கையில் தீண்டப்படாதோர் போன்ற ஒரு சிறுபான்மை யினர் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளுவதற்கு எவ்வகையான வாக் காளர் தொகுதி இருக்க வேண்டும் என்பதைத் தீர்மானித்துக் கொள்ள அவர்களை ஏன் அனுமதிக்கக்கூடாது? தனித் தொகுதிகள் வேண்டு மெனத் தீண்டப்படாதோர் தீர்மானித்தால் அதை ஏன் ஏற்கக் கூடாது? இந்தக் கேள்விகளுக்கு இந்துக்களால் பதிலளிக்க முடியாது. ஏன்? ஏனென்றால் தனித்தொகுதிகளை இந்துக்கள் எதிர்ப்பதற்கு உண்மையான காரணம் தேசம் என்ற பெயரால் அவர்கள் முன் வைக்கும் வெளிப்பகட்டான காரணத்திலிருந்து வேறுபட்டதாகும். தீண்டப்படாதவர்களுக்கு ஒதுக்கப்படும் இடங்களை இந்துக்கள் கைப்பற்றிக் கொள்ள தனித்தொகுதி அனுமதிக்காததே அவர்களது

எதிர்ப்புக்கு உண்மையான காரணம். ஆனால் கூட்டுத்தொகுதிகளோ இதை அனுமதிக்கின்றன. தேர்தலின்போது கூட்டு வாக்காளர் தொகுதியும் தனி வாக்காளர் தொகுதியும் எவ்வாறு செயல்படு கின்றன என்பதற்கு இங்கு சில உதாரணங்களைக் காட்ட விரும்பு கிறேன். சென்னை மாகாணத்திலுள்ள பின்கண்ட தொகுதிகளை எடுத்துக் கொள்ளவோம்.

| மாகாணத்தின் பெயர் | இந்துக் களுக்கான மொத்த இடங்கள் | தீண்டப் படாதவர் களுக்கான ஒதுக்கப் பட்ட இடங்கள் | மொத்த இந்து வாக்கா ளர்கள் | மொத்த தீண்டப் படாத வாக்கா ளர்கள் | இந்து மற்றும் தீண்டப்படாத வாக்காளர் களிடையே உள்ள சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1. சென்னை தென் சென்னை | 2 | 1 | 40,626 | 2,577 | 16 - 1 |
| 2. சிகாகோல் | 2 | 1 | 83,456 | 5,125 | 16 - 1 |
| 3. விஜயனா கிராமம் | 2 | 1 | 47,594 | 996 | 49 - 1 |
| 4. அமலாபுரம் | 1 | 1 | 52,805 | 7,760 | 7 - 1 |
| 5. எல்லூர் | 1 | 1 | 51,795 | 5,155 | 9 - 1 |
| 6. பந்தர் | 1 | 1 | 84,191 | 8,723 | 10 - 1 |
| 7. தெனாலி | 2 | 1 | 1,32,107 | 5,732 | 24 - 1 |

மேலே கண்ட அட்டவணையில் சென்னை மாகாணத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு தொகுதிகளின் வாக்காளர் எண்ணிக்கை தரப்பட்டிருக்கிறது. மேற் கண்ட பட்டியலை கூர்ந்து நோக்கும் நியாயம் உள்ளம் படைத்த எவரும் இந்த ஏழு தொகுதிகளில் தீண்டப்படாதோருக்கு தனி வாக் காளர் தொகுதி இருக்குமானால், தீண்டப்படாதவர் தங்களது முழு நம்பிக்கைக்குப் பாத்திரமானவரும், சட்டமன்றத்தில் இந்துக்களின். பிரதிநிதிகளை எதிர்த்து சுதந்திரமாகப் போராடக்கூடியவருமான ஒருவரைத் தமது பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்து அனுப்புவது

சாத்தியமாகும் என்பதை உணர்வர். ஆனால் அதேசமயம் இத் தொகுதிகள் கூட்டு வாக்காளர் தொகுதிகளாக இருக்குமானால் தீண்டப்படாதவரின் பிரதிநிதி பெயரளவான பிரதிநிதியாகவே இருப்பார்; அவர்களுடைய உண்மையான பிரதிநிதியாக இருக்க மாட்டார்; ஏனென்றால் தீண்டப்படாதோர் இனத்தைச் சேர்ந்த வாக்காளர்கள் இந்து வாக்காளர்களுடன் ஒப்பிடும்போது 24க்கு 1 என்ற விகிதாசாரத்தில் அல்லது சில சந்தர்ப்பங்களில் 49க்கு 1 என்ற விகிதாசாரத்தில் மிகக் குறைந்த எணணிக்கையிலுள்ள கூட்டுத் தொகுதியில் இந்தக்களால் நியமனம் செய்யப்பட்டு அவர்களுடைய கைக்கருவியாக இருப்பதற்கு இணங்காத தீண்டப்படாதோர் இனத் தைச் சேர்ந்த எந்த வேட்பாளரும் வெற்றிபெற முடியாது. கூட்டுத் தொகுதி என்பது இந்துக்களின் கண்ணோட்டத்தில் 'அது அவர் களது பாக்கெட் தொகுதி'யாகும்; தீண்டப்படாதோர் இனத்தைச் சேர்ந்த ஒருவரை பெயரளவுக்கு தீண்டப்படாதோரின் பிரதிநிதியாக நிய மிப்பதற்கு இந்துக்களுக்கு இது வாய்ப்பளிக்கிறது; ஆனால் உண்மை யில் அந்தப் பிரதிநிதி இந்துக்களின் கைப்பொம்மையாகவே இருப்பார். தீண்டப்படாதோரின் வகுப்புவாரித் திட்டத்தை தங்க ளது தேசியத் திட்டம் எனப்படுவதைக் கொண்டு எதிர்ப்பதை அவர்கள் ஏதோ ஒரு கோட்பாட்டுக்காகப் போராடுவதாகவோ அல்லது தேசத்திற்காகப் போராடுவதாகவோ எடுத்துக் கொள்ளக் கூடாது. அவர்கள் தங்கள் சொந்த நலன்களுக்காகவே போராடு கிறார்கள். அரசியல் அதிகாரம் முழுவதும் தங்கள் கைகளில் இருக்க வேண்டும் என்று அவர்கள் போராடுகிறார்கள். இந்துக் கூட்டுக் குடும்பத்தின் தலைவர் போன்று அதிகாரத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள இந்துக்கள் விரும்பவில்லை. இது அவர்களது முதல் பாதுகாப்பு அரண் அதனால்தான் அவர்கள் முற்றிலும் பிரதேச வாரியான வாக்காளர் தொகுதிகளுக்காகப் பாடுபட்டு வருகிறார்கள். இந்த முயற்சி தோல்வியடையும்போது அவர்கள் இரண்டாவது பாதுகாப்பு அரணை நாடுகிறார்கள். அதிகாரத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுமாயின் அதிகாரத் தின் மீது தங்களுக்குள்ள பிடியை இழந்துவிடாமல் இருக்கப் பாடுபடு கிறார்கள். இதனை கூட்டுத் தொகுதிகள் மூலமே சாதிக்க முடியும். எனவேதான் இந்துக்கள் தனித் தொகுதிகளை எதிர்க்கிறார்கள்; கூட்டுத் தொகுதிகளை ஆதரித்து நிற்கிறார்கள்.

# இயல் VI

# ஆட்சித்துறை

தீண்டப்படாதோரின் இரண்டாவது அரசியல் கோரிக்கை சட்ட மன்றத்தில் மட்டுமன்றி, ஆட்சித் துறையிலும் தங்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும் என்பதாகும். இந்தக் கோரிக்கையையும் இந்துக்கள் எதிர்க்கிறார்கள். இது சம்பந்தமாக அவர்கள் இரண்டு விதமான வாதங்களை முன்வைக்கிறார்கள். ஆட்சித்துறையானது சட்டமன்றத்திலுள்ள பெரும்பான்மையினரையே பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும் என்பது அவர்களது முதலாவது வாதம். ஆட்சித் துறையிலிருப்பவர்கள் மிகவும் திறமை வாய்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்பது அவர்களது இரண்டாவது வாதம். முதலில் இரண்டாவது வாதத்தைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று எண்ணுகிறேன்.

இந்த வாதம் அடிப்படையில் சரியானதாக இருக்கலாம். ஆனால் ஒரு பிரதிநிதித்துவ அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இந்த வாதத்தை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்த முடியாது என்பதையும் உணர்வது அவசியம். இது குறித்து பேராசிரியர் டைசே பின்வருமாறு கூறினார்: ''அறிவாற்றலில் மிகச் சிறந்த நாடாளுமன்றத்தை உருவாக்குவது பிரதான குறிக்கோளாக ஒருபோதும் இருந்ததில்லை. உண்மையில், தேசத்தின் சாமானிய மக்களின் அறிவாற்றலைவிட மிகவும் மேம்பட்டதொரு நாடாளுமன்றத்தை உருவாக்கும் முயற்சி ஒரு பிரதிநிதித்துவ அரசாங்கம் என்ற கருத்துக்கு முரண்பட்டதாகவே இருக்கும்.''

தகுதியையும் திறமையையும் அளவுக்கு அதிகமாக வலியுறுத்துவது தேவையற்றது. தீண்டப்படாத இனத்தோர் என்பதற்காக அறிவற்றவர்களை அமைச்சர்களாக்க வேண்டும் என்று யாரும் கூறவில்லை. அமைச்சரவையில் பிரதிநிதித்துவம் பெறும் உரிமை வழங்கப்படுமாயின் தீண்டப்படாதோர் தங்களில் மிகச் சிறந்தோரை இவ் உயர் பதவிகளுக்குத் தேர்ந்தெடுப்பர் என்பதில் ஐயமில்லை; இந்த இடங்களை நிரப்புவதற்கு ஒவ்வொரு மாகாணத்திலும் ஏராள

மானோர் இருக்கின்றனர். மேலும், இந்த நிபந்தனையை தீண்டப் படாதோருக்கு மட்டும் ஏன் பயன்படுத்த வேண்டும்? அமைச்சரவை யில் இடம் பெறும் உரிமை தங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று தீண்டப்படாதோரைப் போன்றே முஸ்லீம்களும் கோரி வருகின்ற னர். முஸ்லீம்கள் விஷயத்தில் இந்த நிபந்தனையை இந்துக்கள் ஏன் வலியுறுத்தவில்லை? இந்துக்களின் ஆட்சேபமும் எதிர்ப்பும் நியாயத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல என்பதையே இது காட்டுகிறது. இது ஒரு வெறும் சாக்குப்போக்குதான்.

இனி இரண்டாவது வாதத்தை எடுத்துக் கொண்டால், பெரும் பான்மை, சிறுபான்மை என்ற சொற்களை இந்துக்கள் துஷ்பிர யோகம் செய்கிறார்கள் என்றே கூற வேண்டும். பெரும்பான்மை, சிறுபான்மை என்பது அரசியல் வகையைச் சேர்ந்தது என்பதை அவர்கள் மறந்துவிட்டதாகத் தோன்றுகிறது. அரசியல் வகைப் பட்டவை என்ற அடிப்படையில் பார்க்கும்போது, நிலையான பெரும்பான்மை என்றோ அல்லது நிலையான சிறுபான்மை என்றோ எதுவும் இல்லை. அரசியல் பெரும்பான்மைகளும் சிறுபான்மை களும் அடிக்கடி மாறக்கூடியவை; இன்று பெரும்பான்மையாக இருப்பது நாளை ஒரு சிறுபான்மையாக மாறக்கூடும்; இவ்வாறே இன்று சிறுபான்மையாக இருப்பது நாளை பெரும்பான்மையாக மாறும் சாத்தியம் உண்டு. ஆனால் இந்துக்களுக்கும் தீண்டப்படா தோருக்கும் இடையேயான வேறுபாடு இவ்வகையான வேறுபாட்டைச் சேர்ந்தது என்ற கூற முடியாது. பெரும்பான்மையினருக்கும் சிறு பான்மையினருக்கும் இடையேயான வேறுபாடு போன்ற வேறுபாடு தீண்டப்படாதோருக்கும் இந்துக்களுக்கும் இடையே இல்லை. பெரும்பான்மையினருக்கும் சிறுபான்மையினருக்கும் இடையே யான உறவின் மற்றொரு பிரத்தியேக அம்சம் இந்துக்களுக்கும் தீண்டப்படாதோருக்கும் இடையே நிலவும் உறவுக்குப் பொருந் தாது. பெரும்பான்மையினரும் சிறுபான்மையினரும் ஒரே ஒரு வேறுபாட்டால்தான் பிரிந்துள்ளனர்; கண்ணோட்டங்களில் நிலவும் வேறுபாடுதான் அது. இந்துக்கள் தீண்டப்படாதோர்பால் காட்டுவது போன்ற கடுமையான, கொடுமையான பகைமை உணர்வால் பெரும்பான்மையினரும் சிறுபான்மையினரும் பிரிந்திருக்கவில்லை. இந்துக்களுக்கும் தீண்டப்படாதோருக்கும் இடையேயான உறவில் காணப்படாத மூன்றாவதொரு அம்சம் பெரும்பான்மையினருக்கும் சிறுபான்மையினருக்கும் இடையேயான உறவில் காணப்படுகிறது. சிறுபான்மை சிறுபான்மையாகவே வளர்கிறது; ஒரு பெரும்பான்மை

பெரும்பான்மையாகும்போது சிறுபான்மையின் உணர்வுகளைப் பெருமளவுக்குத் தன்னுள் ஈர்த்துக் கொள்கிறது; இதனால் சிறு பான்மை திருப்தியடைகிறது; இதன் விளைவாக, எந்தப் பிரச்சினை குறித்தும் பெரும்பான்மையுடன் போராட வேண்டிய நிலைக்கு அது உள்ளாவதில்லை. ஆனால் இத்தகைய அம்சங்களை இந்துப் பெரும்பான்மைக்கும் தீண்டப்படாதோர் இனச் சிறுபான்மைக்கும் இடையே காண முடியாது. அவை இரண்டுமே நிரந்தர சமூகங்களாக நிர்ணயிக்கப்பட்டு விடுகின்றன. அவை வேறுபட்டிருப்பதோடு, பகைமை சக்திகளாகவும் ஆகிவிடுகின்றன. அவர்களைப் பெரும் பான்மையினர் என்றும் சிறுபான்மையினர் என்றும் குறிப்பிடுவது ஜெர்மானியர்களைப் பெரும்பான்மையினர் என்றும் பிரெஞ்சுக் காரர்களை சிறுபான்மையினர் என்றும் குறிப்பிடுவது போன்ற தாகவே இருக்கும்.

□□□

# இயல் VII

# அரசுப்பணித் துறைகள்

குறைந்தபட்சத் தகுதி விதியின் அடிப்படையில், அரசுப் பணித் துறைகளில் சில குறிப்பிட்ட சதவீத இடங்களைத் தங்களுக்கு ஒதுக்க வேண்டும் என்று தீண்டப்படாதோர் கோருகின்றனர். தீண்டப்படாதோரின் இதர கோரிக்கைகள் விஷயத்தில் போன்றே இந்துக்கள் இந்தக் கோரிக்கையையும் எதிர்க்கின்றனர். அரசுப் பணித் துறைகளுக்கு நியமனங்கள் செய்யும்போது, நாட்டின் நலனைக் கருதி ஆற்றல், திறமை நற்பண்பு ஆகியவற்றை மட்டுமே கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர சாதி, மதம் முதலியவற்றுக்கு இடமளிக்கக் கூடாது என்ற நிலையை அவர்கள் மேற்கொள்கின்றனர். நற்பண்பு ஓர் அவசியமான தகுதியாக இருக்க வேண்டும் என்பதில் சர்ச்சைக்கு இடமில்லை; அதேபோன்று ஆற்றலும், திறமையும் இருக்க வேண்டும் என்பதிலும் சர்ச்சை ஏதும் இல்லை. ஆனால் சர்ச்சைக்குரிய ஒரே விஷயம் அரசுப்பணித் துறைகளுக்கு நியமனம் செய்வதில் சாதியையும் மதத்தையும் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டுமா என்பதுதான்; இது மிக முக்கியமான விஷயம். கல்வித் தகுதியை திறமைக்கு ஒரே அடிப்படையாகக் கொண்டு இந்துக்கள் ஒரு விஷயத்தை வலியுறுத்துகின்றனர்; அனைத்து சாதியினரும் மதத்தினரும் பங்கு கொள்ளக் கூடிய போட்டித் தேர்வுகள் மூலம் அரசுப் பணித்துறைகள் நிரப்பப்பட வேண்டும் என்று அவர்கள் முயலுக்கே மூன்றே கால் என்று சாதிக்கின்றனர். இத்தகையதோர் ஏற்பாடு இரண்டு நோக்கங்களை நிறைவேற்றுகிறது. முதலாவதாக அது திறமை நோக்கத்தை பூர்த்தி செய்கிறது, இரண்டாவதாக, அரசுப் பணித்துறைகளில் தீண்டப்படாதோர் பங்கெடுத்துக் கொள்வதை அது தடை செய்யவில்லை என்று அவர்கள் வாதிடுகின்றனர்.

திறமைக்கும் போட்டித் தேர்வுகளுக்கும் முக்கியத்துவம் தந்து, தீண்டப்படாதோர் கோரிக்கையைத் தாங்கள் எதிர்ப்பதற்கு நியாயம் கற்பிக்க இந்துக்கள் முயல்கின்றனர். இங்கும் அவர்களது வாதம் தடம்புரண்டு செல்லுகிறது. அரசுப் பணித்துறைகளுக்குத் திறமையான நபர்களைத் தெரிவு செய்வதற்கு போட்டித்தேர்வு முறை சரியான முறையா, இல்லையா என்பதல்ல இங்கு பிரச்சினை. போட்டித் தேர்வு முறையில் அனைத்து சாதியினரும் மதத்தினரும்

கலந்து கொள்ளலாம் என்பதனால் பணித்துறைகளில் தீண்டப்படாதோர் இடம் பெறுவதை அது சாத்தியமாக்குமா என்பதே பிரச்சினை. இது அரசின் கல்வி முறையைப் பொறுத்து அமைந்துள்ளது. இந்தக் கல்விமுறை போதிய அளவு ஜனநாயகரீதியாக உள்ளதா? எல்லா வகுப்பினரும் போட்டித் தேர்வுகளில் பங்கு கொள்வதை அனுமதிக்கும் அளவுக்குக் கல்வி வசதிகள் விரிவானவையாக இருக்கின்றனவா? இவ்வசதிகள் எல்லோருமே பயன்படுத்திக் கொள்ளக் கூடியவையாக இருக்கின்றனவா? இவ்வாறு இல்லையென்றால், பகிரங்கப் போட்டியில் பல வகுப்பினர் பங்குகொள்ள இயலாது போகக்கூடும். இந்தியாவில் அடிப்படையான இத்தகைய விரிந்து பரந்த கல்வி வசதிகள் இல்லை. இந்த நாட்டில் மேற் கல்வி என்பது இந்துக்களின் அதிலும் குறிப்பாக சாதி இந்துக்களின் ஏகபோகமாக இருந்து வருகிறது. தீண்டாமை காரணமாக தீண்டப்படாதவர்களுக்கு கல்வி வசதி மறுக்கப்படுகிறது. அரசுப்பணித்துறைகளில் உயர் பதவிகள் வகிப்பது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஆனால் உயர் பதவிகள் பெறுவதற்கு அவசியமான மேற்கல்வி பெறுவது வறுமை காரணமாக தீண்டப்படாதோருக்குச் சாத்தியமில்லாமல் இருக்கிறது. அதே சமயம் அவர்களுக்கு மேற்கல்வி அளிப்பதற்கு ஆகும் செலவை ஏற்க அரசும் தயாராக இல்லை. இந்து அறக்கொடை அமைப்புகளும் தீண்டப்படாதோருக்குக் கைகொடுத்து உதவுவதில்லை. இதில் பச்சையான வகுப்பவாதம் வெட்கங்கெட்ட முறையில் தலைவிரித்தாடுகிறது. இவ்வாறிருக்கும்போது போட்டித் தேர்வுகளில் கலந்து கொண்டு அவற்றின் முடிவுகளை நம்பியிருக்கும்படி தீண்டப்படாதவர்களுக்கு உபதேசம் செய்வது கடைந்தெடுத்த மோசடியாகும், முழுக்க முழுக்க கபடநாடகமாகும். இத்தகைய சூழ்நிலையில் தீண்டப்படாதோர் மேற்கொண்டிருக்கும் நிலைப்பாடு நியாயமற்றது என்று கூற முடியாது. திறமையை நிலைநாட்ட வேண்டிய அவசியத்தை அவர்கள் ஒப்புக் கொள்கின்றனர். இதனால் தான் குறைந்தபட்சத் தகுதி விதியின் அடிப்படையில் தங்கள் கோரிக்கையைப் பரிசீலிக்க வேண்டுமென்று தங்களது தீர்மானத்திலேயே அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். வேறுவிதமாகக் கூறினால், அரசுப் பணித்துறையில் ஒவ்வொரு பதவிக்கும் குறைந்தபட்ச தகுதி நிர்ணயிக்கப்பட வேண்டும்; இத்தகைய பதவிக்கு இருவர் விண்ணப்பித்துக் கொள்ளும்போது, தீண்டப்படாதவர் குறைந்தபட்ச தகுதிபெற்றிருந்தால், இந்தக் குறைந்தபட்சத் தகுதியைக் காட்டிலும் அதிகத் தகுதி பெற்றுள்ள ஓர் இந்துவை விட அவனுக்கே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்று தீண்டப்படாதோர் கோருகின்றனர். அரசுப் பதவி நியமனத்துக்கான அடிப்படை குறைந்தபட்சத்

தகுதியாக இருக்க வேண்டுமேயன்றி, அதிகப்பட்சத் தகுதியாக இருக்கக் கூடாது என்பதே இதன் பொருள். இந்தத் திறமை கோட்பாடு சில குறிப்பிட்ட வகுப்பினர் அரசுப் பணிகளைப் பெறுவதில் ஏக போகம் எய்துவதைப் பற்றிக் கவலைப்படாதவர்களுக்கு இது விந்தையானதாகத் தோன்றக்கூடும்; ஆனால் நல்ல அரசாங்கத்தை விடத் தன்னாட்சி அரசாங்கம் சிறந்தது என்று காம்பெல் - பானர்மேன் கூறவில்லையா? தீண்டப்படாதவர்கள் வேறு என்ன கோருகிறார் கள்? திறமையான அரசாங்கம் இருக்க வேண்டிய அவசியத்தை அவர்கள் ஒப்புக் கொள்கின்றனர். இதனால்தான் நாட்டின் அரசுப் பணித் துறைகளில் சேருவதற்கு குறைந்தபட்ச தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையை ஏற்க அவர்கள் தயாராக இருக்கின் றனர். ஆனால் நல்ல அரசாங்கத்துக்காக தன்னாட்சியைத் தியாகம் செய்ய அவர்கள் தயாராக இல்லை. மிக உயர்ந்த தகுதிகளின் அடிப் படையில் அமைந்த நல்ல அரசாங்கம் வகுப்புவாரி அரசாங்க மாகவே இருக்கும்; ஏனென்றால் குறைந்தபட்ச தகுதிகளுக்கும் மேலான தகுதிகளை இந்தக்கள் மட்டுமே பெற்றிருக்க முடியும். இதைத்தான் அவர்கள் விரும்பவில்லை. திறமையான அரசாங்கத் துக்குக் குறைந்தபட்சத் தகுதிகளே போதுமானவை, அவை தன் னாட்சி உருவாவதைச் சாத்தியமாக்குவதால் அரசப்பணித் துறை யில் பிரவேசிப்பதற்கு குறைந்தபட்சத் தகுதி இருந்தால் போது மானது என்று விதி செய்யப்பட வேண்டும் என்று அவர்கள் கூறு கிறார்கள். இது தன்னாட்சியையும் திறமையான ஆட்சியையும் உத்தரவாதம் செய்கிறது.

# இயல் VIII

## தனிக் குடியேற்றங்கள்

இந்த ஆய்வுக்கட்டுரையின் முந்தைய பகுதியில் கூறப்பட்டிருக்கும் தீர்மானம் IV தானே விளக்கும் தன்மையுடையது; அதன் மூலக் கருத்தை எடுத்துரைப்பதற்கு விரிவான விளக்கம் ஏதும் தேவையில்லை. இந்தக் குறுகிய ஆய்வுரையின் கட்டுக் கோட்டிற்குள் அதனை பொதுப்படையான முறையில் எடுத்துரைப்பதற்கும் அதிகமாக வேறு எதுவும் செய்வது சாத்தியமுமில்லை. புதிய குடி யேற்றங்கள் தேவை என்ற கோரிக்கை தீண்டப்படாதவர்களிடையே தோன்றியுள்ள ''புதிய வாழ்வு இயக்கம்'' என்பதன் விளைவாக உருவானதென்றே கூறலாம். இந்துக்களின் இரக்கமற்ற அரக்கத்தனமான கோரப்பிடியிலிருந்து தீண்டப்படாதோரை விடுவிப்பதே இந்த இயக்கத்தின் நோக்கம். இன்றைய அமைப்பு முறை தொடரும் வரை தீண்டப்படாதோர் இந்துக்களின் நுகத்தடியிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதோ அல்லது தமது தீண்டாமையை ஒழித்துக் கட்டுவதோ சாத்தியமல்ல. அதே கிராமங்களில் தீண்டப்படாதோர் இந்துக்களுடன் சேர்ந்து வாழ்வதுதான் அவர்களைத் தீண்டப்படாதோராக எடுத்துக் காட்டுகிறது; இந்துக்கள் அவர்களைத் தீண்டப்படாதவர்களாக இனங் காணுவதையும் சாத்தியமாக்குகிறது. இந்தியாவைக் கிராமங்கள் நிறைந்த நாடு எனக்கூறலாம். தீண்டப்படாதவர்களைத் தனியே பிரித்துக் காட்டக்கூடிய, இனம் காட்டக்கூடிய ஓர் எளிய வழியை கிராம அமைப்பு முறை வழங்கும் வரை தீண்டப்படாதோர் தீண்டாமையிலிருந்து விடுபடுவதற்கு, தப்புவதற்கு மார்க்கம் ஏதுமில்லை. கிராம அமைப்பு முறைதான் தீண்டாமையை நீடித்திருக்கச் செய்கிறது, நிலைத்திருக்கச் செய்கிறது; எனவே, இந்த அமைப்பு முறையை உடைத்தெறிய வேண்டும் என்று தீண்டப்படாதவர்கள் கோருகின்றனர்; சமூக ரீதியில் தனிமைப் படுத்தப்பட்டிருக்கும் தாங்கள் பூகோள ரீதியிலும் பிரதேச ரீதியிலும் தனிமைப்படுத்தப்பட வேண்டும் என்றும், தீண்டப்படாதோருக்கென உருவாக்கப்படும் தனிக் கிராமங்களில் தாங்கள் ஒன்றாக இணைக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்துகின்றனர்; இத்தகைய கிராமங்கள் அமைக்கப்பட்டால் அவற்றில் உயர்ந்தவர்கள்

தாழ்ந்தவர்கள், தீண்டத்தக்கவர்கள், தீண்டத்தகாதவர்கள் என்ற பேதம் ஏதும் இருக்காது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தனிக் குடியேற்றங்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்படுவதற்கு இரண்டாவது காரணம் கிராமத்தில் தீண்டப்படாதோருக்குள்ள பொருளாதார நிலையாகும். அவர்களது நிலை மிகவும் இரங்கத்தக்கது, பரிதாபகரமானது என்பதை எவரும் மறுக்க முடியாது. அவர்கள் நிலமற்ற தொழிலாளிகள், இந்துக்கள் விரும்பி அளிக்கும் வேலையையும், கூலியையும் முற்றிலும் சார்ந்திருப்பவர்கள். தாங்கள் வசிக்கும் கிராமங்களில் அவர்கள் வேறு எந்தத் தொழிலிலும் வியாபாரத்திலும் ஈடுபட முடியாது; தீண்டாமை காரணமாக எந்த இந்துவும் அவர்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ள விரும்ப மாட்டான். எனவே, இந்து கிராமத்தைச் சார்ந்துள்ள ஒரு பகுதியினராக தீண்டப்படாதவர்கள் வாழ்ந்துவரும் வரை அவர்களது ஜீவனத்துக்கு வேறு எந்த மார்க்கமும் இல்லை. இந்தப் பொருளாதார சார்பு நிலையிலிருந்து வறுமையும் வெறுமையும் இழிவும் மட்டுமன்றி வேறு பல தீய விளைவுகளும் உருவாகின்றன. இந்துவுக்கென்று ஒரு வாழ்க்கை நியதி இருக்கிறது; அது அவனது சமயத்தின் ஒரு பிரிக்கமுடியாத பகுதியாக அமைந்திருக்கிறது. இந்த வாழ்க்கை நியதி அவனுக்கு எத்தனை எத்தனையோ சலுகைகளையும் வசதிகளையும் வாரி வழங்குகிறது; அதேசமயம் தீண்டப்படாதவர்கள் மீது வாழ்வின் புனிதத்துக்கு ஒவ்வாத எண்ணற்ற அவமதிப்புகளையும், இழிவுகளையும், ஏளனங்களையும் சுமத்துகிறது. தீண்டப்படாதவர்களை இப்போது ஆட்கொண்டுள்ள புதிய வாழ்வு இயக்கத்தைப் பின்பற்றி, அவர்கள் மாபெரும் போராட்டத்தில் இறங்கியிருக்கின்றனர்; மதத்தின் பேரால் இந்துக்கள் தங்கள்மீது திணித்துள்ள அவமதிப்புகளையும் அநீதிகளையும் எதிர்த்து அவர்கள் இந்தியாவெங்கணும் ஒரு புனிதமான அறப்போரில் குதித்துள்ளனர். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கிராமத்திலும் இந்துக்களுக்கும் தீண்டப்படாதவர்களுக்கும் இடையே ஒரு நிரந்தர யுத்தம் நடைபெற்று வருகிறது. அது வெளியே தெரிவதில்லை. அதனை விளம்பரப்படுத்த இந்துக்களின் பத்திரிகைகள் தயாராக இல்லை; உலகக் கண்ணோக்கில் தங்களது சுதந்திர லட்சியத்துக்கு அது ஊறு விளைவித்து விடுமோ என்று அவற்றுக்கு அச்சம், ஆனால் ஒரு மௌனப் போராட்டம் நடைபெற்று வருகிறது என்பது மட்டும் உண்மை. கிராம அமைப்பு முறையில் சுதந்திரமான, கௌரவமான வாழ்க்கைக்கான போராட்டத்தில் தீண்டப்படாதவன் தன் கைகள் பெரிதும் கட்டப்பட்டிருப்பதைக் காண்கிறான். பொரு

ளாதார ரீதியிலும் சமூக ரீதியிலும் வலுமிக்க இந்துக்களுக்கும் பொருளாதார ரீதியில் மிகவும் கீழ்ப்பட்டவர்களாகவும், சமூக ரீதியில் ஒதுக்கிப் புறக்கணிக்கப்பட்டவர்களாகவும் உள்ள தீண்டப் படாதவர்களுக்கும் இடையே நடைபெறும் ஒரு கடுமையான போட்டி என்றே இதனைக் கூற வேண்டும். தீண்டப்படாதவர்களைக் காலை வாரிவிடுவதில் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இந்துக்கள் வெற்றி பெறுகிறார்கள். இதற்குப் பல காரணங்கள் உண்டு. காவல்துறையும் குற்றவியல் நடுவர் துறையும் இந்துவின் பக்கமே இருக்கின்றன. தீண்டப்படாதோருக்கும் இந்துக்களுக்கும் இடையே நடைபெறும் சச்சரவில் தீண்டப்படாதோர் காவல்துறையிடமிருந்து பாதுகாப் பையோ நீதித் துறையிலிருந்து நீதியையோ ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது. காவல்துறையினரும் நீதித்துறையினரும் இந்துக்கள், அவர் கள் தங்கள் கடமையைவிட தங்கள் இனத்தையே பெரிதும் நேசிக்கின் றனர். இவற்றை எல்லாம்விட இந்துக்களின் படைக்கலக்கொட்டிலி லுள்ள பிரதான ஆயுதம் கிராமத்தில் வசிக்கும் ஏழைத் தீண்டப் படாதவர்கள்மீது அவர்கள் பெற்றுள்ள பொருளாதார ஆதிக்கமே யாகும். சமத்துவ உரிமைகளுக்காகத் தீண்டப்படாதவர்கள் நடத்தும் போராட்டத்தில் இந்துக்கள் தமது பொருளாதார வலிமையைக் கொண்டு அவர்களை எவ்வாறு ஒடுக்குகிறார்கள் என்பது தாழ்த்தப் பட்ட மக்களுக்குள்ள* குறைகளை விசாரிப்பதற்கு 1928ல் பம்பாய் அரசு நியமித்த குழுவின் அறிக்கையில் தெள்ளத் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையிலிருந்து பின்வரும் பகுதி கள் கீழே தரப்படுகின்றன. இந்துக்கள் ஈவு இரக்கமின்றி எவ் வளவு கொடூரமாக தீண்டப்படாதவர்களை நடத்துகிறார்கள் என்பதை இந்து சமூக அமைப்பின் புதிர்கள் பற்றி அறியாத அயல் நாட்டினர்கூட எளிதாகப் புரிந்து கொள்ளும் வகையில் இந்த அறிக்கை எடுத்துரைக்கிறது. அந்தக் குழு கூறியிருப்பதாவது:

> "சகல பொதுவசதிகளும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கிட்டும் படிச் செய்வதற்கு நாங்கள் பல்வேறு பரிகாரங்களைப் பரிந் துரைத் திருந்தபோதிலும் அவற்றை அவர்கள் பயன்படுத்திக் கொள்வதில் நீண்டகாலம் அவர்களுக்குச் சிரமங்கள் இருக்கும்

---

* 1935 ஆம் வருட இந்திய அரசாங்கச் சட்டம் பிறப்பிக்கப்படும் முன்னர் தீண்டப் படாதவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்றே பொதுவாக அழைக்கப்பட்டனர். 1935 ஆம் வருட இந்திய அரசாங்கச் சட்டம் அவர்களை ஷெட்யூல்டு வகுப்பினர் என்று குறிப்பிடுகிறது.

என்று அஞ்சுகிறோம். முதலாவது சிரமம் சாதி இந்துக்கள் அவர்கள் மீது வன்முறையைக் கட்டவிழ்த்துவிடக்கூடும் என்ற அச்சமாகும். ஒவ்வொரு கிராமத்திலும் தாழ்த்தப்பட்ட மக்கள் மிகச் சிறு எண்ணிக்கையிலேயே இருக்கிறார்கள் என்பதையும், அவர்களுக்கு எதிராக சாதி இந்துக்கள் பெரும் எண்ணிக்கையில் இருக்கிறார்கள் என்பதையும், தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களிடமிருந்து தங்களது நலன்களையும் கௌரவத்தையும் எவ்விதத்திலும் பாதுகாக்க அவர்கள் உறுதிபூண்டிருக்கிறார்கள் என்பதையும் கவனத்திற்கொள்ளவேண்டும். காவல் துறையினர் நடவடிக்கை எடுப்பார்களோ என்ற பயம் சாதி இந்துக்களின் வன்முறையை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தியுள்ளது; இதன் விளைவாக இத்தகைய சம்பவங்கள் அரிதாகி விட்டன.

''தாழ்த்தப்பட்ட வகுப்பினரை இன்று எதிர்நோக்கும் பொருளாதார நிலைமை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் இரண்டாவது சிரமமாகும். மாகாணத்தின் பெரும்பாலான பகுதிகளில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குப் பொருளாதார சுதந்திரம் இல்லை. சிலர் சாதி இந்துக்களின் நிலங்களை அவர்களது குத்தகைகாரர்களாக உழுதுசாகுபடி செய்துவருகின்றனர். சிலர் சாதி இந்துக்களால் வேலைக்கமர்த்திக்கொள்ளப்படும் விவசாயத் தொழிலாளிகளாக வாழ்க்கை நடத்திவருகின்றனர். இதர சிலர் கிராமத்தலையாரிகளாகப் பணியாற்றுவதற்காக சாதி இந்துக்கள் வழங்கும் உணவையோ தானியத்தையோ கொண்டு பிழைப்பு நடத்தி வருகின்றனர். கிராமங்களில் சாதிஇந்துக்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக தங்களது பொருளாதார ஆதிக்கத்தை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தி வரும் பல நிகழ்ச்சிகள் குறித்து நாங்கள் கேள்விப்படுகிறோம். தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள் உரிமைகளைப் பயன்படுத்தத் துணிந்தால் சாதி இந்துக்கள் அவர்களை நிலத்திலிருந்து வெளியேற்றிவிடுகிறார்கள்; வேலையிலிருந்து நீக்கிவிடுகிறார்கள்; தலையாரிகள் என்ற முறையில் அவர்கள் பெறும் ஊதியத்தை நிறுத்திவிடுகிறார்கள். இந்தப் பகிஷ்காரம் பல சந்தர்ப்பங்களில் திட்டமிட்டமுறையில் மிகப் பரந்த அளவில் நடைபெறுகிறது; தாழ்த்தப்பட்ட மக்கள் பொது சாலைகளைப் பயன்படுத்தாதபடி தடுக்கப்படுகிறார்கள்; அவர்களுக்கு கிராமக் கடைக்காரர்கள் அத்தியாவசியமான பொருள்களை விற்பனை செய்யக்கூடாது என்று தடை செய்துவிடுகிறார்கள். சில சமயங்களில் சின்னஞ்சிறு

விஷயங்களுக்குக்கூட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக சமூகப் பகிஷ்காரம் பிரகடனம் செய்யப்படுவதாக சான்றுகள் பகர்கின்றன. பொதுக் கிணறைப் பயன்படுத்திக் கொள்வதற்குத் தங்களுக்குள்ள உரிமையைச் செயல்படுத்த தாழ்த்தப்பட்ட வகுப்பினர் முற்படும்போதும் இதுபோன்றே அடிக்கடி நடைபெறுகின்றன. இதுமட்டுமல்ல, தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஒருவன் பூணூல் அணிந்து கொண்டாலோ, துண்டு துக்காணி நிலத்தை வாங்கிவிட்டாலோ, நல்ல உடைகளையோ நகைகளையோ அணிந்து கொண்டாலோ, மணமகனை குதிரை மீது உட்காரவைத்து பொதுத் தெருவில் திருமண ஊர்வலம் நடத்தினாலோ கடுமையான சமூகப் பகிஷ்காரம் கைக்கொள்ளப்படுகிறது.''

தனிக் குடியேற்றங்கள் வேண்டும் என்ற இந்தக் கோரிக்கை புதிய கோரிக்கை; தீண்டப்படாதவர்கள் முதல் தடவையாக இக்கோரிக்கையை முன்வைத்துள்ளனர். இக்கோரிக்கை விஷயத்தில் இந்துக்களின் மனப்போக்கு எவ்வாறு இருக்கும் என்பதை இப்போது சொல்லுவதற்கில்லை. ஆனால் இது தீண்டப்படாதோர் முன்வைத்துள்ள மிக முக்கியமான கோரிக்கை என்பதில் ஐயமில்லை; இதர கோரிக்கைகளுக்கு என்ன நேர்ந்தாலும் இந்தக் கோரிக்கைகள் விஷயத்தில் அவர்கள் அணுவளவும் விட்டுக்கொடுக்கமாட்டார்கள் என்பது உறுதி. தாங்களும் தீண்டப்படாதவர்களும் ஆண்டவன் அருளால் பைபிள் கூறுவது போன்று கணவன் மனைவியுடன் இணைவது போன்று இணையலாம் என்று இந்துக்கள் நினைக்கக்கூடும். ஆனால் இந்துக்களுடன் தங்களுக்குள்ள உறவுகள் குறித்து இத்தகைய கண்ணோட்டம் எதையும் தீண்டப்படாதோர் மறுதலிக்கிறார்கள். இந்த இணைப்பு துண்டிக்கப்படவேண்டும் என்றும், இந்துக்களுடனான பிணைப்பு இனியும் தாமதியாமல் முற்றிலும் ரத்து செய்யப்பட வேண்டுமென்றும் அவர்கள் விரும்புகிறார்கள்.

இதற்காகும் செலவும் நேரமும்தான் இதிலுள்ள ஒரே பிரச்சினை. செலவைப் பொறுத்தவரையில் அரசாங்கமே ஏற்கவேண்டும் என்று தீண்டப்படாதவர்கள் கூறுகிறார்கள். இதில் பெரும்பகுதியை இந்துக்கள் ஏற்கவேண்டிவரும் என்பதில் ஐயமில்லை. ஆனால் இந்துக்கள் இதனை ஏற்காமலிப்பதற்குக் காரணம் இல்லை. இந்துக்களுக்கு எல்லாமே சொந்தமாக இருக்கின்றன. இந்த நாட்டிலுள்ள நிலம் அவர்களுக்குச் சொந்தமாக இருக்கிறது. வணிகத்துறையில் அவர்கள் கொடிகட்டிப் பறக்கிறார்கள். அரசும் அவர்கள் வசம்

இருக்கிறது. வருவாய், ஆதாயம் இவற்றின் மூலஊற்று அவர்களிடமே உள்ளது. இதர வகுப்பினர் அதிலும் குறிப்பாக தீண்டப்படாதவர்கள் வெறும் விறகு வெட்டிகளாகவும், தண்ணீர் வண்டி ஓட்டுபவர்களாக வுமே இருந்து வருகின்றனர். சமூக அமைப்பானது எதிலும் எல்லா வற்றிலும் இந்துக்கள் ஏகபோகம் செலுத்துவதற்குத் துணை செய் கிறது. அநேகமாக இந்த நாடே இந்துக்களுக்குச் சொந்தமாக இருக்கும்போது இந்தத் திட்டத்திற்கான செலவை அவர்கள் ஏற்க வேண்டுமென்று கோருவதில் நியாயம் இல்லாமல் இல்லை.

அடுத்து, அவகாசத்தை எடுத்துக்கொண்டால், தீண்டப்படாத வர்களைப் புதிய குடியேற்றங்களில் குடியமர்த்துவதற்கு 20 ஆண்டு கள் பிடிக்கும் என்றால்கூடப் பரவாயில்லை. ஆயிரம் ஆண்டுகாலம் இந்துக்களின் அடிமைகளாக இருந்தவர்கள் 20 ஆண்டுகளின் முடி வில் தங்களுக்கு சுதந்திரம் கிடைக்கும் வாய்ப்பு இருக்கும்போது அதனை அவர்கள் வரவேற்கவே செய்வர்.

□□□

# இயல் IX

# சாதியும் அரசியலமைப்புச் சட்டமும்

தீண்டப்படாதோரின் இந்தக் கோரிக்கைகள் எழுப்பும் இத்தகைய விஷயங்கள் அரசியலமைப்புச் சட்டத்தில் ஏன் இடம் பெறவேண்டும் என்று வினவலாம். உலகின் வேறு எங்கும் அரசிய லமைப்புச் சட்டங்களை உருவாக்கியவர்கள் இத்தகைய விஷயங் களை எதிர்ப்பட்டதில்லை. இது ஒரு முக்கியமான கேள்வி. இத் தகைய பிரச்சினைகளை எழுப்புபவர்கள், இவை அரசியலமைப் புச்சட்ட முக்கியத்துவம் வாய்ந்தவை என்று கூறுபவர்கள் இந்தக் கேள்விக்குப் பதிலளித்தாக வேண்டும் என்பதை ஒப்புக்கொள்கி றேன். இந்தக் கேள்விக்கான விடைத் தெள்ளத்தெளிவானது. இந்திய சமுதாயத்தின் இயல்புதான் அரசியலமைப்புச் சட்ட முக்கியத் துவம் வாய்ந்த இத்தகைய விஷயத்தை முன்னணிக்குக் கொண்டு வருகிறது. இந்துக்களின் சாதிஅமைப்பு முறையும், சமயமும்தான் இதற்கு முழு முதல் காரணம். இந்துக்களின் சாதி மற்றும் சமய அமைப்பு முறைகள் ஏற்படுத்தும் சமூக, அரசியல் விளைவுகளை அயல்நாட்டினருக்கு விளக்குவதற்கு இது போதுமானதாக இல்லா திருக்கலாம். ஆனால் அதேசமயம் இந்த ஆய்வுக்கட்டுரையைக் குறுகிய வட்டத்துக்குள் சாதிஅமைப்பு முறை அரசியலமைப்புச் சட்டத்தில் ஏற்படுத்தும் தாக்கத்தை விவரிப்பது சாத்தியமல்ல என் பதையும் இங்கு கருத்திற் கொள்ளவேண்டும். இந்த விஷயம் குறித்த எனது முழு ஆய்வை சாதி ஒழிப்புப் பற்றி சிலகாலத்திற்கு முன்னர் நான் எழுதியுள்ள நூலில் படிக்கலாம். இந்துக்களின் சாதி அமைப்பு முறையும் சமயமும் எத்தகைய சமூக, பொருளாதார விளைவுகளை உண்டுபண்ணுகின்றன என்பது குறித்த போதிய விவரங்களை அந்த நூல் வழங்கும் என்று நம்புகிறேன். இந்த ஆய்வுக்கட்டுரையில் பின் வரும் சில பொதுவான கருத்துகளைக் கூறுவதோடு நிறுத்திக் கொள்கிறேன். அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கும்போது, சமூகக் கட்டமைப்பை எப்போதும் மனத்திற் கொள்ளவேண்டும். அரசியல் கட்டமைப்பு சமூகக்கட்டமைப்புடன் தொடர்புடைய தாக இருக்க வேண்டும். சமூக சக்திகளின் செயல்பாடு சமூகத் துறையுடன் நின்றுவிடுவதில்லை. அவை அரசியல் துறைக்கும்

வியாபித்துச் செயல்படுகின்றன. இது தீண்டப்படாதவர்களின் கருத் தோட்டமாகும். இது சர்ச்சைக்கு இடமற்றது என்பது திண்ணம். இந்துக்கள் இந்த வாதத்தையும் அதன் வலிமையையும் நன்கு உணர்ந் துள்ளனர். ஆனால் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், இந்து சமுதாயக் கட்டமைப்பு ஐரோப்பிய சமுதாயக் கட்டமைப்பிலிருந்து மாறுபட்டது என்பதை மறுக்கின்றனர். இந்துக்களின் சாதி அமைப்பு முறைக்கும் மேற்கத்திய சமுதாயத்தின் வர்க்க அமைப்புமுறைக்கும் வேறுபாடு ஏதுமில்லை என்று அவர்கள் வாதிக்கின்றனர். இது தவறான வாதம் என்பது கண்கூடு. சாதி அமைப்பு முறையையும் வர்க்கஅமைப்பு முறையையும் பற்றி அவர்களுக்குள்ள அறியாமை யையே இது புலப்படுத்துகிறது. சாதி அமைப்புமுறை தனிமைப் படுத்தும் இயல்பை தன்னுள் கொண்டது; ஒரு சாதியை இன்னொரு சாதியிலிருந்து தனிமைப்படுத்துவதை இது ஒரு நற்கூறாகக் கருது கிறது. வர்க்க அமைப்புமுறையிலும் தனிமைப் படுத்தல் இருக்கவே செய்கிறது; ஆனால் தனிமைப்படுத்தலை அது நற்பண்பாகக் கருது வதில்லை; மேலும் சமூகக் கூட்டுறவை அது தடுப்பதும் இல்லை. வர்க்க அமைப்புமுறை குழுக்களைத் தோற்றுவிக்கிறது என்பது உண்மையே. ஆனால் அவை சாதிக் குழுக்களைப் போன்றவை அல்ல. வர்க்க அமைப்புமுறையில் குழுக்கள் சமூக ரீதியற்றவையே ஆகும்; ஆனால் சாதி அமைப்புமுறையிலோ சாதிகள் அவற்றின் பரஸ்பர உறவுகளில் நிச்சயமாகவும், திட்டவட்டமாகவும் சமூக-விரோதமானவை. இந்தப் பகுத்தாய்வு உண்மையாக இருக்குமாயின், இந்து சமுதாயத்தின் சமூகக்கட்டமைப்பு வேறுபட்டது என்பதும் இதனால் அரசியல் கட்டமைப்பும் வேறுபட்டதாகவே இருக்க வேண்டும் என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும். பொதுவாகக் கூறுவதானால் தீண்டப்படாதோர் வலியுறுத்துவதெல்லாம் குறிக் கோள்களுக்கும் அவற்றை எய்தும் வழிகளுக்கும் இடையே முறை யான ஒப்புமைத் தொடர்பு இருக்க வேண்டும் என்பதேயாகும். ஆனால் குறிக்கோள் ஒன்றாக இருந்தாலும் அவற்றையடைவதற் கான வழிகளும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று பொருளல்ல. குறிக்கோள்கள் ஒன்றாக இருப்பினும் அவற்றை அடைவதற்கான மார்க்கங்கள் காலத்துக்கும் சூழ்நிலைமைகளுக்கும் ஏற்ப மாறுபடக் கூடும். தங்கள் குறிக்கோள்களில் உறுதியோடிருப்பவர்கள் இந்த உண்மையை ஒப்புக்கொள்ள வேண்டும்; தாங்கள் கருதிக்கொண் டிருக்கிற குறிக்கோள் வீணாகிவிடக்கூடாது என்று விரும்புபவர்கள் பல்வேறு வழிகளைக் கைக்கொள்ள முன்வர வேண்டும்.

இது சம்பந்தமாக மற்றொரு விஷயத்தையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். நான் ஏற்கனவே கூறியது போன்று இந்து சமுதாயத்தின் சாதி அடிப்படைதான் தனது அரசியல் கட்டமைப்பு வேறுபட்டதாக, தனது சமூகக் கட்டமைப்பு வேறுபட்டதாக, தனது சமூகக் கட்டமைப்புக்கு ஏற்றதாக இருக்க வேண்டும் என்று கோருகிறது. இந்த உண்மையை ஒப்புக்கொள்ளுபவர்கள் பலர் இருக்கிறார்கள்; ஆனால் இந்து சமுதாயத்திலிருந்து சாதியை ஒழித்துக்கட்டிவிட முடியும் என்று அவர்கள் வாதிக்கிறார்கள். இதனை நான் மறுக்கிறேன். இத்தகைய கருத்தை முன்வைப்பவர்கள் சாதி என்பது ஒரு மன்றம்போன்றோ, நகரசபை போன்றோ அல்லது ஒரு மாவட்டக் கவுன்சில் போன்றோ ஓர் அமைப்பு என்று நினைக்கிறார்கள். இது முற்றிலும் தவறாகும். சாதி என்பது சமயச்சார்புடையது.

அதனை ஓர் அமைப்பாக்கலாம்; ஆனால் அது இணைந்துள்ள அமைப்பைப்போன்று இருக்காது. சமயம் என்பது ஒவ்வொரு தனிநபரின் வாழ்க்கையிலும் ஊடிப் பரவி நிற்கும் ஒரு சக்தி அல்லது ஓர் ஆற்றல்கூறு; அது அவனது குணப்பண்பை வார்த்து உருவாக்குகிறது; அவனுடைய செயல்களையும் எதிர்ச்செயல்களையும் தீர்மானிக்கிறது; அவனுடைய விருப்புவெறுப்புகளை நிர்ணயிக்கிறது. இந்த விருப்புகளும் வெறுப்புகளும், செயல்களும் எதிர்ச்செயல்களும் களைந்தெறிந்துவிடக்கூடிய அமைப்புகள் அல்ல. அவை கட்டுப்பாட்டின் மூலமோ அல்லது எதிர்ப்பின் மூலமோ சமாளிக்கப்படவேண்டிய சக்திகள், செல்வாக்குகள். சமூகச் சக்திகள் அரசியலை நச்சுப்படுத்தாதபடி தடுக்கவேண்டுமானால், ஒரு சிலர் செல்வாக்குப் பெறுவதையும் மிகப்பலர் தாழ்த்தப்படுவதையும் தடுத்து நிறுத்த வேண்டும்; தப்பெண்ணங்களுக்கு, தீங்குகளுக்கு, கேடுகளுக்கு 'லகான்' போடக்கூடிய, சமூக சக்திகளைத் தலைவிரித்துத் தாண்டவமாட அனுமதித்தால் அவை விளைவிக்கும் அநீதிகளுக்கு அணைபோடக்கூடிய ஏற்பாடுகளை அந்த அரசியல் கட்டமைப்புப் பெற்றிருப்பது அவசியம்.

இந்து சமுதாயத்தின் தனித்தன்மை வாய்ந்த சமூகக் கட்டமைப்புக்கு ஏன் ஒரு தனித்தன்மையான அரசியல் கட்டமைப்பு தேவைப்படுகிறது என்பதையும், இந்திய அரசியல் அமைப்பை உருவாக்குபவர்கள் ஏனைய நாடுகளில் அரசியலமைப்பை உருவாக்கியவர்களுக்குத் தொல்லை கொடுக்காத பிரச்சினைகளிலிருந்து ஏன் தப்ப முடியாது என்பதையும் இதுவரை பொதுப்படையான முறையில்

எடுத்துரைத்தேன். இனி அடுத்து இந்திய அரசியல் அமைப்பில் வகுப்புவாரித் திட்டம் இடம்பெறுவது ஏன் அவசியம், பணித்துறைகளில் தீண்டப்படாதவர்களுக்கு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள இடங்களை ஏன் ஒதுக்கவேண்டும் என்ற பிரச்சினையை இப்போது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்கிறேன். இந்தக் கோரிக்கைகள் முற்றிலும் நியாயமானவை என்பது தெள்ளத்தெளிவு. தீண்டப்படாதோரை இந்துக்களிடமிருந்து பிரிப்பது அவசியமற்ற விஷயங்களில் நிலவும் வேறுபாடுகள் சம்பந்தப்பட்ட விஷயமல்ல என்ற மறுக்கமுடியாத உண்மையிலிருந்து இது எழுகிறது. மாறாக இது அடிப்படையான பகைமை உணர்வு மற்றும் வெறுப்பு உணர்வு சம்பந்தப்பட்டதாகும். இந்தப்பகைமை உணர்வுக்கும் வெறுப்பு உணர்வுக்கும் சான்று ஏதும் தேவையில்லை. இந்துக்களுக்கும் தீண்டப்படாதோருக்கும் இடையேயான உள்ளார்ந்த பகைமை உணர்வுக்கு தீண்டாமையே போதுமான சான்றாக அமைந்துள்ளது. இத்தகைய பகைமை உணர்வு இருந்துவரும்போது, பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரமும் விடுதலையும் பெற்றதும் இந்துக்கள் தங்களுக்கு நியாயம் வழங்குவார்கள் என்று அவர்கள் மீது நம்பிக்கை வைக்கும்படி தீண்டப்படாதோரைக் கேட்பது சாத்தியமல்ல. ஓர் இந்துவை நான் நம்பமாட்டேன் என்று ஒரு தீண்டப்படாதவன் கூறுவது சரியல்ல என்று யார் கூறமுடியும்? ஓர் ஐரோப்பியனைப் போலவே ஓர் இந்துவும் அவனுக்கு அந்நியமானவன்; இதில் மோசமான விஷயம் என்னவென்றால் ஐரோப்பிய அந்நியன் நடுநிலையானவனாக இருக்கிறான், ஆனால் அதேசமயம் ஓர் இந்துவோ மிகவும் வெட்கக்கேடான முறையில் தனது சொந்த வர்க்கத்திடம் ஒருசார்புடையவனாகவும், தீண்டப்படாதவர்களிடம் பகைமை உணர்வு கொண்டவனாகவும் இருக்கிறான். ஒரு வேறுபட்ட வருண இனத்தைச் சேர்ந்தவர்களாக அல்லாவிட்டாலும் தீண்டப்படாதவர்களை சமுதாயத்தின் ஒரு வேறுபட்ட, வெறுக்கத்தக்கப் பிரிவினராக காலம் காலமாக, வழிவழியாக இழிவுப்படுத்தி வந்திருக்கின்றனர், புறக்கணித்து வந்திருக்கின்றனர்; அடியோடு கைவிட்டு வந்திருக்கின்றனர் என்பதில் எள்ளளவும் ஐயம் இருக்க முடியாது. இந்துக்கள் தங்கள் சொந்த நடத்தையின் மூலம் தங்களுடைய சொந்த முற்சார்பான எண்ணங்களில் அமிழ்ந்துபோய் தீண்டப்படாதவர்களின் ஆர்வ விருப்பங்களை ஒருபோதும் மதிப்பதில்லை; அவர்களுடன் எத்தகைய தொடர்புகளும் கொள்வதில்லை; இந்துக்களின் நலன்கள் தீண்டப்படாதவர்களின் நலன்களுக்கு மாறுபட்டவையாக இருக்கின்றன. இவ்வாறிருக்கும்போது தீண்டப்

படாதோர் தங்களது எதிர் காலத்தை, கதிப்போக்கை இத்தகையோ ரிடம் ஒப்படைக்க வேண்டுமா? இந்துக்கள் உண்மையில் தீண்டப் படாதவர்களின் நோக்கங்களையும் நலன்களையும் எதிர்க்கின்றனர்; தீண்டப்படாதோர் மத்தியில் செயல்பட்டுவரும் ஜீவசக்திகளிடம் அவர்கள் அனுதாபம் காட்டு வதில்லை; ஆர்வ விருப்பங்களையும் அவர்கள் கணக்கிலெடுத்துக் கொள்வதில்லை; அவர்களுடைய அபிலாஷைகளுக்கு எதிராக இருக்கின்றனர்; அவர்கள் தீண்டப் படாதவர்களுக்கு நிச்சயமாக நியாயம் வழங்க மாட்டார்கள்; அவர் களிடம் பல வகைகளிலும் பாரபட்சமுடன் நடந்துகொள்வார்கள், சமயத்தின் ஆதாரபலம் அவர்களுக்கு இருப்பதால் தீண்டப்படாத வர்களிடம் மிகவும் மனிதாபிமானமற்ற முறையில் நடந்துகொள்ள அவர்கள் சிறிதும் தயங்கவோ மயங்கவோ மாட்டார்கள்; அதற்காக வெட்கித் தலைகுனியவும் மாட்டார்கள். இந்துப் பெரும்பான்மை யினரின் கொடுங்கோன்மைக்கு எதிராக அரசியல் சட்டத்திலேயே தீண்டப்படாதவர்களின் அரசியல் உரிமைகள் உத்தரவாதம் செய்யப் படுவதுதான் இத்தகைய மக்களிடமிருந்து அவர்களைக் காப்பாற்று வதற்கான வழியாகும். தீண்டப்படாதவர்கள் கோரும் இந்தப் பாது காப்பை மிகையான கோரிக்கை என்று எவரேனும் கூற முடியுமா?

## இயல் 10

# இந்துக்களுக்கும் அவர்களுடைய நண்பர்களுக்கும் சில கேள்விகள்

இந்துக்கள் வெவ்வேறு சமூகத்தினரிடம் வெவ்வேறுவிதமாக நடந்துகொள்கிறார்கள் என்பதை இந்த அரசியல் சர்ச்சைக்கு இடையேயும் எவரும் காணமுடியும். அரசியல் பாதுகாப்புகளைக் கோரும் மக்கள் இந்தியாவில் தீண்டப்படாதோர் மட்டுமே அல்ல. தீண்டப்படாதவர்களைப் போன்றே முஸ்லீம்களும் சீக்கியர்களும் தங்கள் அரசியல் கோரிக்கைகளை இந்துக்களிடம் முன்வைத்துள்ளனர். முசல்மான்களையும் சீக்கியர்களையும் எவ்வகையிலும் நிராதரவான சிறுபான்மையினர் என்று கூறிவிடமுடியாது. மாறாக அவர்கள் இந்தியாவில் மிக சக்திவாய்ந்த இரு சமூகங்களாக இருந்து வருகின்றனர். அவர்கள் கல்வித் துறையில் பெரிதும் முன்னேறியுள்ளனர். பொருளாதார ரீதியில் வலுவான இடத்தைப் பெற்றுள்ளனர். அவர்களுடைய சமூக அந்தஸ்தின் காரணமாக இந்துக்களைப் போன்றே உயர்நிலைமையில் இருக்கின்றனர். அவர்களது அமைப்பு வலுவான கட்டுமானத்தைக் கொண்டிருக்கிறது. ஆதலால் எந்த இந்துவும் அவர்களிடம் தன்னிச்சையான, அதிகார தோரணையானமுறையில் நடந்துகொள்ளமுடியாது; அவர்களுக்கு எத்தகைய தீங்கு இழைக்கவும் துணியமுடியாது.

முஸ்லீம்கள் மற்றும் சீக்கியர்களின் அரசியல் கோரிக்கைகள் என்ன? அவற்றை இங்கு விரிவாக எடுத்துரைப்பது சாத்தியமல்ல. ஆனால் அவை மிகவும் மிகையானவை, இந்துக்கள் அவை குறித்து பெரிதும் சீற்றம் கொண்டுள்ளனர் என்ற ஒரு பொதுவான கருத்து நிலவுகிறது. இதற்கு மாறாக, தீண்டப்படாதோர் முன்வைத்திருக்கும் கோரிக்கைகளும் அவர்களது நிலைமையும் முஸ்லீம்களும் சீக்கியர்களும் முன்வைத்திருக்கும் கோரிக்கைகளுக்கும் அவர்களது நிலைமைக்கும் நேர்மாறானவை. தீண்டப்படாதவர்கள் பலவீனமான, நிராதரவான, இகழப்படும் சிறுபான்மையினர். அவர்கள் அனைவரது தயவையும் முற்றிலும் எதிர்பார்த்து நிற்கும் அவல நிலையில், பரிதாப நிலையில் இருப்பவர்கள். இந்துக்களும், முஸ்லீம்களும், சீக்கியர்களும் ஒன்றுசேர்ந்து அவர்களை அடக்கும், ஒடுக்கும் சந்தர்ப்பங்கள் கொஞ்சநஞ்சமல்ல. எல்லா சிறுபான்மையினர்களிலும்

அவர்களுக்குத்தான் மிகப் பெருமளவில் ஆதரவு தேவை, பலமிக்க பாதுகாப்புத் தேவை. அவர்களது கோரிக்கைகள் மிதமானவை; முஸ்லீம்கள் மற்றும் சீக்கியர்களது கோரிக்கைகள் போன்று அவை எவ் விதத்திலும் மிகையானவை அல்ல. முஸ்லீம்கள், சீக்கியர்கள், தீண்டப்படாதவர்களின் கோரிக்கைகள் விஷயத்தில் இந்துக்களின் நிலை என்ன? முஸ்லீம்கள், சீக்கியர்களின் கோரிக்கைகள் மிகை யானவையாக இருப்பினும் அவர்களுடன் அதிலும் முக்கியமாக முஸ்லீம்களுடன் சமரசம் செய்துகொள்ள இந்துக்கள் தயாராக இருக் கிறார்கள்; முசல்மான்களுடனான உறவுவிஷயத்தில் சரியானபடி நடந்துகொள்ள அவர்கள் விரும்புவது மட்டுமன்றி, அவர்கள் விஷ யத்தில் விட்டுக்கொடுக்கவும், தாராளமனப்பான்மையுடன் நடந்து கொள்ளவும் தயாராக இருக்கின்றனர். இங்கு திரு. ராஜகோபாலாச் சாரியரின் அரசியல் சாணக்கியங்களையும், சாகசங்களையும் எவரும் மறந்துவிட முடியாது. அவர் திடீரென்று தம்மை முஸ்லீம் லீகின் படைவீரராகப் பதிவு செய்து கொண்டார், தம் சொந்த இனத்தவர் மீதும், பழைய நண்பர்கள் மீதும் போர்ப்பிரகடனம் செய்தார். இவை எல்லாம் எதற்காக? முஸ்லீம்களின் நியாயமான கோரிக்கைகள் ஏற்கப்படத் தவறியமைக்காக அல்ல, மாறாக அவர்களது மிகவும் மிகையான கோரிக்கை ஏற்கப்பட வேண்டும் என்பதற்காக. அந்தக் கோரிக்கை வேறொன்றுமல்ல, பாகிஸ்தான்!! அதேசமயம் தீண்டப் படாதவர்களின் கோரிக்கைக்கு திரு.ராஜகோபாலாச்சாரியாரின் பதில் என்ன? நான் அறிந்தவரை இது விஷயத்தில் அவரிடத்தில் எந்தப் பதிலும் இல்லை. இந்த நாட்டில் 6 கோடி தீண்டப்படாத மக்கள் இருந்து வருகிறார்கள் என்பதையும், அவர்களும் முஸ்லீம் களைப் போன்றே அரசியல் கோரிக்கைகளை முன்வைத்திருக்கிறார் கள் என்பதையும்கூட அவர் அறிந்திருப்பதாகத் தோன்றவில்லை. திரு. ராஜகோபாலாச்சாரியரின் இந்தத் திட்டமிட்ட மௌனப் போக்கும், அலட்சியநோக்கும் இந்து சமுதாயம் முழுவதன் நிலை யைப் பிரதிபலிப்பதாக உள்ளன. இந்துக்கள் ஒரு வேட்டை நாயின் விடாப் பிடியோடும், ஒரு கட்சிமாறியின் வக்கரிப்போடும் தீண்டப் படாதவர்களின் அரசியல்கோரிக்கைகளை எதிர்த்து வருகின்றனர். பத்திரிக்கைகள் அவர்களுடையவை; அவர்களுக்குப் பாசுரம் பாடு பவை; எனவே இவற்றின் உதவிகொண்டு தீண்டப்படாதோரை உதாசீனம் செய்வதற்கு, அலட்சியம் செய்வதற்கு திட்டமிட்ட முறை யில் முயன்று வருகின்றனர். தீண்டப்படாதவர்களைப் புறக்கணிப் பதில், அலட்சியம் செய்வதில் தோல்வியுறும்போது, அவர்களது தலைவர்களை விலைக்கு வாங்குகின்றனர்; எவரேனும் ஒரு தலைவன் அவர்களிடம் விலைக்கு போகத் தயாராக இல்லை

என்றால் அவர்கள் திட்டமிட்ட முறையில் அவனைப் பழிதூற்றுகின்றனர்; திரித்துப் படம் பிடித்துக் காட்டுகின்றனர், அவனை அச்சுறுத்துகின்றனர், அவனை அடக்கி ஒடுக்குவதற்கும் அவனது வாயை அடைப்பதற்கும் தங்கள் சக்திக்குட்பட்ட அனைத்தையும் செய்கின்றனர்; தீண்டப்படாதவர்களின் லட்சியத்துக்கு, நல்வாழ்வுக்கு, உய்வுக்கு, உயர்வுக்குப் பாடுபட உறுதிகொண்டுள்ள இத்தகைய ஒரு தலைவனுக்கும் அவனைப் பின்பற்றுவோருக்கும் தேசவிரோதி என்ற முத்திரையைக் குத்திவிடுகின்றனர். தீண்டப்படாதவர்களின் அரசியல் கோரிக்கைகள் விஷயத்தில் இந்துக்கள் எந்த அளவுக்கு ஆத்திரமும் அங்கலாய்ப்பும் அடைந்திருக்கிறார்கள் தெரியுமா? ஒரு சில அரசியல் பாதுகாப்புகளுக்குப் பிரதியாக இந்துப் பெரும்பான்மையினரால் ஆளப்படுவதற்கு எவ்வளவு பெருந்தன்மையோடு தீண்டப்படாதவர்கள் சம்மதிக்க முன்வந்துள்ளனர் என்பதை தங்களது பெரும் சீற்றத்தில் இந்துக்கள் ஒப்புக்கொள்ள மறுக்கும் அளவுக்குச் சென்றிருக்கிறார்கள். ஐக்கிய அயர்லாந்து பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது ரெட்மாண்டிடம் கார்சன் என்ன கூறினார் என்பதை இந்துக்கள் அறியார் போலும். இந்த சம்பவத்தை இங்கு நினைவு கூருவது பொருத்தமாக இருக்கும். கார்சனிடம் ரெட்மாண்ட் பின்வருமாறு கூறினார்: ''அல்ஸ்டரின் சிறுபான்மை புராட்டெஸ்டன்டுக்களுக்காக நீங்கள் விரும்பும் எத்தகைய பாதுகாப்புகளை வேண்டுமானாலும் கேளுங்கள், தருகிறேன்; ஆனால் ஒரே அரசியலமைப்புச் சட்டத்தைக் கொண்ட ஐக்கிய அயர்லாந்து உருவாகவேண்டும்.'' கார்சன் இதற்குப் பண்பற்ற, முரட்டுத்தனமான பதிலை அளித்தார். இதுகுறித்துப் பரிசீலிப்பதற்கு அவகாசம் வேண்டும் என்று கூடக் கேட்காமல், ''உங்கள் பாதுகாப்புகளைக் குப்பைத் தொட்டியில் போடுங்கள், அவை யாருக்கு வேண்டும்? உங்களால் ஆளப்படுவதை நான் விரும்பவில்லை'' என்று நெத்தியடியாகப் பதிலளித்தார். தீண்டப்படாதவர்கள் கார்சன் மேற்கொண்ட போக்கை கைக்கொள்வதற்காக இந்துக்கள் அவர்களுக்கு உண்மையில் நன்றி கூறவேண்டும். ஆனால் நன்றி கூறுவதற்குப் பதிலாக அவர்கள் பெரும் சீற்றம் கொண்டனர்; அரசியல் உரிமைகளைக் கோருவதற்குத் தீண்டப்படாதவர்கள் துணிந்துவிட்டார்களே என்று அவர்களுக்கு அளவிட முடியாத ஆத்திரம். எந்த உரிமைகளையும் கோருவதற்கு தீண்டப்படாதவர்களுக்கு உரிமை ஏதும் இல்லை என்பது இந்துக்களின் கருத்து. பல்வேறு சமூகங்களின் அரசியல் கோரிக்கைகள் சம்பந்தமாக இந்துக்கள் வெவ்வேறு விதமான நிலையை மேற்கொள்வது எதைக் காட்டுகிறது? அது மூன்று விஷயங்களைச் சுட்டிக்காட்டுகிறது:

1. எல்லா அதிகாரங்களையும் தாங்களே அனுபவிக்கவேண்டும் என்று இந்துக்கள் விரும்புகிறார்கள் 2. அவர்கள் தங்கள் அரசியல் அமைப்புகளை நீதி,நியாயம்,நேர்மை என்னுக் கோட்பாட்டின் அடிப்படையில் உருவாக்கிக் கொள்ள விரும்பவில்லை. 3. எங்கு தாங்கள் அதிகாரத்தை ஒப்படைக்க வேண்டியிருக்குமோ அங்கு இரக்கமற்ற அரக்கத்தனமான சக்திகளிடம் அதனை அவர்கள் ஒப்படைப்பார்களே தவிர நீதியின் ஆணைகளுக்கு ஒருபோதும் கட்டுப்பட மாட்டார்கள்.

இந்துக்களின் இந்தப் போக்கு இந்திய அரசியலின் ஒரு துன்பியல் நாடகமாக, இரங்கத்தக்க காட்சியாக அமைந்துள்ளது. துரதிஷ்டவசமாக இந்திய அரசியலைப் பொறுத்தவரையில் இது ஒன்றுதான் சோகக்காட்சி என்பதல்ல. இதேபோன்று இன்னொரு அவலக் காட்சியையும் காண்கிறோம். இது இந்துக்களின் அயல்நாடுகளிலுள்ள நண்பர்கள் சம்பந்தமானது. இந்துக்கள் தங்களுடைய திறமையான, சூழ்ச்சிநயம் வாய்ந்த பிரசாரத்தின் மூலம் உலகெங்கிலும் அதிலும் குறிப்பாக''சுதந்திரபூமி'' எனப்படும் அமெரிக்காவில் ஏராளமான நண்பர்களை வரித்துக் கொண்டுள்ளனர். இதிலுள்ள அவலம் என்னவென்றால் இந்துக்களின் நண்பர்கள் தாங்கள் எந்தத் தரப்பை ஆதரிக்கிறார்களோ அந்தத் தரப்பு நியாயமாகவே தங்களது ஆதரவைப் பெறத் தகுதி வாய்ந்ததுதானா என்பதை ஆராயாமலே அந்தத் தரப்பை அவர்கள் குருட்டுத்தனமாக ஆதரித்து வருவதேயாகும். இந்துக்கள் எந்தக் குறிக்கோளுக்காகப் பாடுபடுகிறார்கள் என்று எனக்குத் தெரிந்தவரை அவர்களது எந்த அமெரிக்க நண்பர்களும் இதுவரை கேட்டதில்லை. அவர்கள் தேச சுதந்திரத்திற்காகப் போராடுகிறார்களா அல்லது தங்களது அதிகாரத்திற்காகப் போராடுகிறார்களா? இந்துக்கள் தங்களுடைய அதிகாரத்துக்காகப் போராடுகிறார்கள் என்றால் அமெரிக்கர்கள் அவர்களை ஆதரிப்பது நியாயமாகுமா? இந்துக்கள் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றால் தங்களது போராட்ட லட்சியங்களை அறிவிக்கும்படி அவர்களிடம் கேட்கப்படவேண்டாமா? இந்த அமெரிக்க நண்பர்கள் இதையாவது செய்யவேண்டும். தங்களுக்கு ஆதரவளிக்கும்படி இந்துக்கள் விடுத்த வேண்டுகோளுக்கு செவிசாய்ப்பது ஏற்புடையது என்று அமெரிக்கர்கள் கருதும் நிலைமையில், இந்தியத் தரப்புக்கு வகைதொகையின்றி, குருட்டுத்தனமான முறையில் ஆதரவளிப்பதன் மூலம் சுதந்திர லட்சியத்துக்கு அவர்கள் எத்தகைய தீங்கை விளைவிக்கிறார்கள் என்பதை இந்துக்களின் இந்த அமெரிக்க நண்பர்களுக்கு ஆழமாக, அழுத்தம் திருத்தமாக எடுத்துரைப்பது அவசியம். இந்துக்கள்

எத்தகைய வாதப்போக்கைக் கடைப்பிடித்தார்களோ அதே வாதப் போக்கையே நானும் பின்பற்ற விரும்புகிறேன். போர் ஆரம்பமானதும் பிரிட்டிஷார் தங்களது போர் குறிக்கோள்களை அறிவிக்க வேண்டும் என்று காங்கிரசுக்குள் இருக்கும் இந்துக்களும் வெளியே இருக்கும் இந்துக்களும் கோரினர். ''எங்களது ஆதரவு உங்களுக்கு வேண்டு மென்றால் நீங்கள் எதற்காகப் போரில் ஈடுபட்டிருக்கிறீர்கள் என்பதை எங்களுக்குத் தெரிவியுங்கள். சுதந்திரத்திற்காக நீங்கள் போர் புரிந்து வருகிறீர்கள் என்றால், எந்த சுதந்திரத்தின் பேரால் இந்தப் போரை நீங்கள் நடத்துகிறீர்களோ அந்த சுதந்திரத்தை எங்களுக்கும் வழங்கு வீர்களா என்பதைச் சொல்லுங்கள்'' என்று இடைவிடாமல் அல்லும் பகலும் பிரிட்டிஷாரிடம் அவர்கள் கேட்டு வந்தனர். பிரிட்டிஷார் போரிட்டுவரும் சுதந்திரத்தின் பலன் இந்தியாவுக்குக் கிட்டும் என்று பிரிட்டிஷார் அளித்த வாக்குறுதியுடன் இந்துக்கள் திருப்தியடைந்த கட்டம் ஒன்று இருந்தது. ஆனால் இப்போது அவர்கள் இதற்கும் மேல் சென்றுள்ளனர். வெறும் வாக்குறுதியோடு திருப்தியடைய இனி யும் அவர்கள் தயாராக இல்லை. அல்லது ஒரு காங்கிரஸ்காரரின் மொழியிலேயே இதைக் கூறுவதானால் ''திவாலாகிக் கொண்டிருக்கும் ஒரு வங்கியின் முன்தேதியிட்ட காசோலை வாங்குவதற்கு அவர்கள் மறுக்கின்றனர்.'' யுத்த முயற்சிகளுக்கு ஆதரவளிக்க இந்துக்கள் முன்வர வேண்டுமானால் இப்போதே, இந்த கணமே சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும் என்று அவர்கள் விரும்பினர். இதுதான் ''இந்தியாவை விட்டுவெளியேறு'' என்ற திரு. காந்தியினது புதிய கோஷத்தின் சாராம்சம். இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதிலளிக்கும் பொறுப்பை ஏற்ற திரு. சர்ச்சில் பகைவனை தோற்கடித்து வெற்றிவாகை சூடுவதே இந்த யுத்தத்தின் நோக்கம் என்ற கூறினார். இது கேட்டு இந்துக்கள் திருப்தியடையவில்லை. அவர்கள் அவரிடம் பின்வருமாறு மேலும் கேள்விக் கணைகளைத் தொடுத்தனர்: ''வெற்றி பெற்றபிறகு நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்? யுத்தத்திற்குப் பிறகு எத்தகைய சமூக அமைப்பை நிறுவ நீங்கள் உத்தேசித்திருக்கிறீர்கள்?'' பிரிட்டிஷ் பாரம்பரியத்தை நிலைநாட்ட முடியும் என்று தாம் நம்புவதாக திரு. சர்ச்சில் பதிலளித்த போது ஒரு பெரும் கண்டனப்புயல் எழுந்தது. இந்தக் கேள்விகள் எல்லாம் நியாயமானவையே என்பதை ஒப்புக் கொள்கிறேன். திரு. சர்ச்சிலிடம் கேட்கப்பட்ட இக்கேள்விகள் நியாயமானவை என்றால் திரு. காந்தியிடமும் இந்துக்களிடமும் இதே கேள்விகளைக் கேட்பது நியாயமானதுதான் என்று இந்துக்களின் நண்பர்கள் நினைக்கவில்லையா? பிரிட்டிஷார் ஹிட்லருக்கு எதி ராகப் போர்ப் பிரகடனம் செய்தார்கள். அதேபோன்று திரு. காந்தி பிரிட்டிஷாருக்கு எதிராகப் போர்ப் பிரகடனம் செய்திருக்கிறார்.

பிரிட்டிஷாருக்கு ஒரு சாம்ராஜ்யம் இருக்கிறது. அதேபோன்று இந்துக்களுக்கும் ஒரு சாம்ராஜ்யம் இருக்கிறது. அப்படியானால், இந்து சமயம் ஓர் ஏகாதிபத்திய வடிவமில்லையா, தீண்டப்படாதவர்கள் ஓர் அடிமை இனமில்லையா, அவர்கள் தங்களுடைய இந்து எஜமானர்களிடம் கடப்பாடு கொண்டு அவர்களுக்குத் தொண்டூழியம் செய்யவில்லையா? தம்முடைய போர் குறிக்கோள்களை அறிவிக்க வேண்டுமென சர்ச்சில் கேட்கப்பட வேண்டுமென்றால் திரு. காந்தியும் இந்துக்களும் தங்களுடைய போராட்ட இலட்சியங்களை அறிவிக்க வேண்டுமென அவர்களிடம் கோருவதை எவரும் எப்படித் தவிர்க்க முடியும்? தங்களுடைய போர் சுதந்திரத்திற்கான போர் என்று இருவருமே கூறுகின்றனர். அவ்வாறாயின் இருவருமே தங்களுடைய போர் இலட்சியங்களை அறிவிப்பது அவர்களது கடமை. பிரிட்டிஷார்மீது வெற்றி பெற்ற பிறகு திரு. காந்தி என்ன செய்ய உத்தேசித்திருக்கிறார்? அவர் வென்று பெறும் சுதந்திரத்தைக் கொண்டு தீண்டப்படாதவர்களின் விடுதலைக்கு வழிவகுப்பாரா? அல்லது இப்போது இந்துக்கள் பெற்றிருக்கும் அதிகாரத்தை விடவும் அவர்களுக்கு மேலும் அதிகாரத்தை வழங்கவும், தீண்டப்படாதவர்களை அவர்களது தொழும்பர்களாக நீடித்து வைத்திருக்கவும் இந்த சுதந்திரத்தை அவர் பயன்படுத்திக்கொள்வாரா? திரு. காந்தியும் இந்துக்களும் ஒரு புதிய சமுதாய அமைப்பை உருவாக்குவார்களா? அல்லது சாதிகளும் தீண்டாமையும் மலிந்த, சுதந்திரமும் சமத்துவமும் சகோதரத்துவமும் மறுக்கப்படுகிற பழைய பாசி படிந்த இந்து இந்தியாவை ஏதோ ஒப்புக்கு சிறிதளவு செப்பம் செய்வதோடு திருப்தியடைவார்களா? அமெரிக்க நண்பர்கள் இந்தக் கேள்விகளை சுதந்திரப் போராட்டத்தில் எவர்களுக்குத் தங்கள் ஆதரவை அறிவித்திருக்கிறார்களோ அந்த இந்துக்களிடமும், திரு. காந்தியிடமும் கேட்க வேண்டும் என்று கருதுகிறேன். இந்தக் கேள்விகள் நியாயமானவை, பொருத்தமானவை, இந்தக் கேள்விகளுக்கு அளிக்கப்படும் பதில்கள்தான் திரு. காந்தியின் யுத்தம் சுதந்திர யுத்தமா அல்லது அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான யுத்தமா என்பதை இந்த அமெரிக்க நண்பர்கள் தெரிந்து கொள்ள துணைபுரியும். இந்தக் கேள்விகள் உசிதமானவையும் நியாயமானவையும் மட்டுமல்ல, அவசியமானவையும் கூட. இந்துக்களைப் பற்றித் தெரிந்திருப்பவர்கள் இதற்கான காரணத்தை நன்கு அறிவார்கள். இந்துக்கள் மக்கி மசிந்து போன, வேரூன்றிவிட்ட பழைமை வாதத்தை உள்ளியல்பாகவே பெற்றிருக்கிறார்கள்; சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவத்துக்கு அதாவது ஜனநாயகத்துக்கு முரண்பட்ட ஒரு சமயத்தை அவர்கள் கொண்டிருக்கிறார்கள். ஏற்றத் தாழ்வு என்பது உலகில் எல்லா இடங்களிலுமே இருந்து வருகிறது

என்பதில் ஐயமில்லை. இது பெரும்பாலும் சுற்றுச் சூழல்களைப் பொறுத்துள்ளது. ஆனால் மதத்தின் ஆதரவு அதற்கு என்றுமே இருந்த தில்லை. ஆனால் இந்துக்கள் விஷயம் முற்றிலும் வேறுபட்டது. இந்து சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வு நிலவிவருவது மட்டுமல்ல, இந்த ஏற்றத் தாழ்வு இந்து மதத்தின் முறைமைப்பட்ட சித்தாந்தமாகவும் அமைந் துள்ளது. ஓர் இந்துவுக்கு சமத்துவத்தில் நம்பிக்கை இல்லை. அவ னுடைய மனச்சார்பும் மனப்போக்கும் ஒரு மனிதன் ஒரு மதிப்பு என்னும் ஜனநாயக சித்தாந்தத்துக்கு முரண்பட்டவையாக உள்ளன. ஒவ்வொரு இந்துவும் சமூக ரீதியில் ஒரு டோரியாகவும் (பழமை வாதி), அரசியல் ரீதியில் ஒரு ரேடிக்கல்லாகவும் (தீவிரவாதி) இருக் கிறான். திரு. காந்தி இதுவிஷயத்தில் எவ்வகையிலும் விதிவிலக் கானவர் அல்ல. அவர் தம்மை உலகிற்கு ஒரு முற்போக்காளராகக் காட்டிக் கொள்கிறார்; ஆனால் ஒரு மிதியடியில் ஒட்டிக்கொண் டிருக்கும் தூசிபோல் பரந்த மனப்பான்மை என்பது அவரிடம் அணு வளவே ஒட்டிக் கொண்டிருக்கிறது. அவரைக் கீறிப்பார்த்தார்களே யானால் அவரது பரந்த மனப்பான்மைக்குக் கீழே பிற்போக்கு உணர்வு பொதிந்திருப்பதைக் காணலாம். அவர் சாபக்கேடான சாதி அமைப்பு முறையை ஆதரிக்கிறார். அவர் இந்து சமயத்தைத் தாங்கிப் பிடித்து நிற்கும் வெறிபிடித்த இந்து, புகழ் பெற்ற 1776 ஆம் வருட அமெரிக்க சுதந்திரப் பிரகடனத்தை இந்துக்கள் எந்த உணர்வோடு வாசிக்கிறார்கள் என்பதைப் பாருங்கள். பிரகடனம் பின்வருமாறு கூறுவதை ஓர் இந்து படிக்கும்போது மகிழ்ச்சியால் துள்ளிக் குதிக் கிறான் -

> ''இந்தக் குறிக்கோள்களை அழிக்கக்கூடியதாக ஓர் அரசு மாறும்போது அதனை மாற்றுவதற்கும் அல்லது நீக்கு வதற்கும், புதிய அரசை உருவாக்குவதற்கும், இத்தகைய கோட்பாடுகளின் அடிப்படையில் இதற்கு அடித்தளங்கள் இடுவதற்கும், தங்களது பந்தோபஸ்துக்கும் நல்வாழ்வுக்கும் உத்தரவாதமளிக்கக் கூடிய அதிகாரங்களை அதற்கு வழங்கு வதற்கும் மக்களுக்கு உரிமை உண்டு.''

ஆனால் அவன் இத்துடன் நிறுத்திக்கொள்கிறான். இந்தப் பிரக டனத்தின் முந்திய பகுதியைப்பற்றி அவன் அணுவளவும் அக்கறை எடுத்துக்கொள்வதில்லை. அந்தப் பகுதி கூறுவதாவது:

> ''எல்லா மனிதர்களும் சமமானவர்களாகப் படைக்கப் பட்டிருக்கின்றனர்; அவர்கள் பரம்பொருளால் சில மறுக்க

முடியாத உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றனர், உயிர் வாழ்வதற்கும், சுதந்திரமாக இருப்பதற்கும், நல்வாழ்வைத் துய்ப்பதற்குமான உரிமைகள் இவற்றில் அடங்கும். இந்த உரிமைகளை ஈட்டுவதற்கே மனிதர்களிடையே அரசாங்கங்கள் அமைக்கப்படுகின்றன, ஆளப்படுவோரின் இசைவோடு, இணக்கத்தோடு அவை தமக்குரிய நியாயமான அதிகாரங்களைப் பெறுகின்றன.''

இந்தப் பிரகடனத்தின் செயலாக்கம் அமெரிக்காவின் வரலாற்றில் ஒரு துன்பியல் நிகழ்ச்சியாக அமைந்துள்ளது என்பதில் ஐயமில்லை. இந்த ஆவணம் பற்றி இரண்டு விதமான கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. இது ஒரு மாபெரும் ஆன்மீக ஆவணம் என்று சிலர் கருதுகின்றனர். இது பல பொய்களை சாசுவதமாக்கி விட்டது என்று வேறு சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். இது எப்படியிருந்த போதிலும் இந்த மனித சுதந்திர சாசனம் நீக்ரோக்கள் விஷயத்தில் செயல்படுத்தப்படவில்லை. எனினும் இங்கு கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயம் இந்தப் பிரகடனத்துக்கு ஆதார அடிப்படையாக அமைந்துள்ள நல்லெண்ணமாகும். இது குறித்து எத்தகைய ஐயப்பாட்டுக்கும் இடமில்லை; அதேபோல் இந்தப் பிரகடனத்தின் பிதாமகரான ஜெபர்சனனின் நல்லெண்ணத்தைப் பற்றியும் எத்தகைய ஐயமும் இருக்க முடியாது. நீண்ட அடியெடுத்துவைக்கும் இந்தக் கோட்பாட்டை உருவாக்கும்போது இதனை அவர் ஒருபோதும் மறந்துவிடவில்லை. ஆனால் அவரது நாடு குறுகிய அடியெடுத்து வைக்கத் தீர்மானித்தது. ''என் நாட்டு மக்களுக்காக நான் வருந்துகிறேன்'' என்று அவர் எழுதினார். இந்த ஆவணம் நீக்ரோக்களுக்குப் பெரிய நன்மை எதையும் செய்துவிடவில்லை. எனினும் நாட்டின் மனச்சான்று முற்றிலும் அழிந்துவிடவில்லை என்பதும், அநீதிக்கு எதிரான கோபாவேசத் தீ ஒருநாள் பெருநெருப்பாகக் கொழுந்து விட்டெரியும் என்பதும் சிறிதளவு ஆறுதலளிக்கக் கூடிய விஷயமாகும். நீக்ரோக்கள் இதைக் கேட்டு நகைக்கலாம். ஆனால் நீக்ரோக்களுக்குள்ள இந்த சிறு ஆறுதலைக்கூட தீண்டப்படாதவர்கள் இந்துக்களிடமிருந்து எதிர்பார்க்க முடியாது என்பது கசப்பான உண்மையாகும். இந்துக்கள் ஒரு முழுமையான அமைப்பாக இருக்கின்றனர் என்று மக்கள் இன்று பெருமைப்பட்டுக் கொள்ளலாம். ஆனால் விந்தையானதாகத் தோன்றிலும் இந்தியாவிலுள்ள தீண்டப்படாத மக்களுக்கு இது ஆறுதலைவிட அச்சத்தைத் தரக்கூடிய விஷயமாகும்; அமெரிக்காவிலும் ''ஒன்றுபட்ட தெற்கை''க் கண்டு நீக்ரோக்கள் அச்சமடைந்துள்ளனர். நீக்ரோக்களின் நிலைமை கண்டு ஜெர்னைப்

போல் வெட்கித் தலைகுனிந்த, கழிவிரக்கங் கொண்ட ஒரு நபரை யேனும் இந்தியாவில் இந்துக்களிடையே யாரும் காண முடியுமா? தீண்டாமை என்னும் வடு தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் நிலைமை யில் சுதந்திரக் கோரிக்கையை உலகின் முன்வைக்க இந்துக்கள் வெட்கப்படுவார்கள் என்றுதான் நினைத்தேன். ஆனால் சுதந்திரத் திற்காக கூச்சநாச்சமின்றி அவர்கள் ஆர்ப்பரித்து வருவதைப் பார்க் கும்போது - இதில் பரிதாபத்துக்குரிய விஷயம் என்னவென்றால் அவர்களை ஆதரிப்பவர்கள் இருக்கவே செய்கிறார்கள் என்பதுதான் - அவர்கள் மனச்சான்று செத்துமடிந்து விட்டது, அவர்கள் தீண்டாமை குறித்து எவ்விதத்திலும் கோபாவேசம் கொள்ளவில்லை என்ற முடி வுக்கே வரவேண்டியிருக்கிறது. தீண்டாமை என்பது அவர்களுக்கு தார்மிக ரீதியில் ஒரு பாவமாகவோ அல்லது சமூகக் குற்றமாகவோ தோன்றவில்லை. கிரிக்கெட் அல்லது ஹாக்கி போன்று அது அவர் களுக்கு ஒரு விளையாட்டு. திரு. காந்தியின் நண்பர்கள் அவரது வாழ்க்கையையும் பணியையும் சுட்டிக்காட்டலாம். தீண்டப்படாதவர் களுக்கு நியாயம் கிடைக்கும் என்பதற்குச் சான்றாக திரு. காந்தியின் வாழ்வையும் பணியையும் ஜனநாயகவாதிகள் சுட்டிக்காட்டும் அளவுக்கு அவர் இந்து சமுதாயத்தைச் சீர்திருத்துவதற்கு என்ன செய்து விட்டார்? ஹரிஜன சேவா சங்கத்தைப் பற்றி அவருடைய நண்பர் களிடம் கூறப்பட்டிருக்கிறது. இதை அடிப்படையாகக் கொண்டு ''ஹரிஜனங்களின் முன்னேற்றத்திற்கு திரு. காந்தி பாடுபடவில் லையா?'' என்று அவர்கள் இடைவிடாது கேட்டுக் கொண்டிருக் கின்றனர். அப்படியா, அவர் பாடுபட்டாரா? இந்த ஹரிஜன சேவா சங்கத்தின் நோக்கம் என்ன? இந்து எசமானர்களிடமிருந்து தீண்டப் படாதவர்கள் சுதந்திரம் பெறுவதற்காகவும் சமூக ரீதியிலும் அரசியல் ரீதியிலும் இந்துக்களுக்குச் சமமானவர்களாக ஆவதற்காகவும் இந்த சங்கம் அவர்களைத் தயார் செய்து வருகிறதா? திரு. காந்தி இத்தகைய குறிக்கோளை ஒருபோதும் கொண்டிருந்ததில்லை; இதைச் செய்வதற்கு அவர் என்றும் விரும்பியதில்லை; இதை அவரால் செய்யவும் முடியாது. ஒரு ஜனநாயகவாதி, ஒரு புரட்சியாளர் செய்யக் கூடிய பணி இது. திரு. காந்தி இந்த இரண்டு பிரிவிலும் சேர்ந்தவர் அல்ல. அவர் பிறப்பிலும் சமய உணர்விலும் ஒரு பழமைவாதி. தீண்டப்படாதவர்களின் நிலைமையை மேம்படுத்துவது ஹரிஜன சேவா சங்கத்தின் குறிக்கோள் அல்ல, இந்தியாவை இந்துக்களுக்கும் இந்து சமயத்துக்கும் சொந்தமாக்குவதே அவரது பிரதான நோக்கம். சுயமரியாதை உள்ள ஒவ்வொரு தீண்டப்படாதவனும் இதை அறி வான். தீண்டப்படாதவர்களுக்காக நிச்சயமாக அவர் போராடிக் கொண்டிருக்கவில்லை, மாறாக, சேவா சங்கத்தின் மூலம் சுயநலமிக்க

சில தீண்டப்படாதவர்களுக்கு அற்பப் பரிசுகளை அளிப்பதன் மூலம் தீண்டப்படாதவர்களின் எதிர்ப்பை முனை மழுங்கச் செய்ய முயன்று வருகிறார்; சாதி அமைப்பு முறையைச் சிதைத்து இந்தியாவில் உண்மையான ஜனநாயகத்தை நிலைநாட்டக்கூடிய ஒரே சக்தி தீண்டப்படாதவர்கள்தான் என்பதை அவர் அறிவார். ஆனால் திரு. காந்தியோ இந்து சமயமும், இந்து சாதி அமைப்பு முறையும் அப் படியே நிலைத்து நிற்க வேண்டும் என்று விரும்புகிறார். தீண்டப் படாதவர்கள் இந்து மத அரவணைப்பில் கட்டுண்டு இந்துக்களாக தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்றும் திரு. காந்தி விரும்புகிறார். ஆனால் எந்த விதத்தில்? கூட்டாளிகளாக அல்ல, மாறாக இந்துக் களுடன் ஏனோதானோவென்ற தொடர்புடையவர்களாக. திரு. காந்தி தீண்டப்படாதவர்களிடம் அன்பு காட்டுகிறார். எதற்காக? ஏனென் றால் அன்பின் மூலம் அவர்களைக் கொல்லவும், இந்துக்களிட மிருந்து பிரிந்து செல்ல விரும்பும் அவர்களது இயக்கத்தை நசுக்க வுமே அவர் விரும்புகிறார். ஏமாற்றுவித்தையை வெற்றிகரமாகச் செய்வதற்கு திரு. காந்தி கையாண்ட பல உத்திகளில் ஹரிஜன சேவா சங்கமும் ஒன்று.

இனி அடுத்து ஜவாஹர்லால் நேருவுக்கு வருவோம். அவர் ஜெபர்சனது பிரகடனத்திலிருந்து ஆதர்சத்தை, அகத்தூண்டுதலைப் பெறுகிறார்; 6 கோடி தீண்டப்படாதவர்களின் நிலைமை குறித்து அவர் எப்போதேனும் வெட்கித் தலை குனிந்து இருக்கிறாரா? அதற்காக என்றேனும் கடுங்கழிவிரக்கத்தை வெளிப்படுத்தி இருக் கிறாரா? அவர் பேனா முனையிலிருந்து நீரோடைபோல் பொழிந்த மலைமலையான நூல்களில் எங்கேயேனும் அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறாரா? இந்தியாவின் இளம் தலைமுறையினரை எடுத்துக் கொள்ளுங்கள். பல்கலைக் கழகங்களை நிரப்பும் இளை ஞர்கள், பண்டிட்டின் தலைமையைப் பின்பற்றும் இளைஞர்கள் பிரிட்டிஷாருக்கு எதிரான இந்தியாவின் அரசியல் போராட்டத்தில் பங்கு கொள்ள எப்போதும் தயாராக இருக்கிறார்கள். ஆனால் தீண்டப் படாதவர்களுக்கு தங்களுடைய முன்னோர்கள் இழைத்த தீங்குகளை, கொடுமைகளைக் களைவதற்கு வசதி படைத்த இந்துக்களின் இந்தக் குழந்தைகள் என்ன செய்தார்கள்? அரசியல் பிரசாரத்தில் ஈடுபடு வதற்கு ஆயிரக்கணக்கான இந்து இளைஞர்களைத் திரட்ட முடியும்; சாதி அமைப்பு முறையை மண்ணோடு மண்ணாக்குவதற்கு, அதனை உடைத்தெறிவதற்கு அல்லது தீண்டாமையை ஒழித்துக் கட்டுவதற்கு ஒரே ஓர் இளைஞன்கூடக் கிடைக்க மாட்டான். ஜனநாயகக் கோட் பாட்டில் கொண்டுள்ள உறுதியான, திடமான நம்பிக்கையால்

நிலைநாட்டப்படும் ஜனநாயகமும், ஜனநாயக வாழ்க்கையும், ஜன நாயக உணர்வும் ஓர் இந்து உள்ளத்துக்கு அந்நியமானவை. ஜன நாயகத்தையும் சுதந்திரத்தையும் இத்தகைய பழைமைவாதிகளின், டோரிகளின் கைகளில் ஒப்படைப்பது ஜனநாயகவாதிகள் செய்யும் மிகப்பெரிய தவறாக இருக்கும். எனவே தங்களுடைய போராட்ட நோக்கங்களை அறிவிக்கும்படி இந்துக்களின் அமெரிக்க நண்பர்கள் திரு. காந்தியையும், இந்துக்களையும் கேட்பது மிகமிக அவசியம்; அப்போதுதான் பிரிட்டிஷாருக்கு எதிராக இந்துக்கள் நடத்தும் போராட்டம் உண்மையிலேயே, எதார்த்தத்திலேயே சுதந்திரத்திற் கான போராட்டம்தானா என்பதை நிச்சயிக்க முடியும். சிறுபான்மை யினரின் உரிமைகள் குறித்து காங்கிரஸ் இயற்றியுள்ள தீர்மானங் களைப் படித்துப் பார்க்கும்படி காங்கிரசும் இந்துக்களும் தங்க ளுடைய அயல்நாட்டு நண்பர்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள் வார்கள் என்பதில் ஐயமில்லை. காங்கிரசின் சிறுபான்மையினர் உரிமை கள் பிரகடனத்தில் ''பகட்டாகவும் ஆடம்பரமாகவும்'' பொதுமைப் படுத்திக் கூறப்பட்டிருக்கும் விஷயங்களைப் பார்த்து ஏமாந்துவிட வேண்டாம் என்று இந்துக்களின் அமெரிக்க நண்பர்களை எச்சரிக்க விரும்புகிறேன். சிறுபான்மையினரின் உரிமைகளைப் பிரகடனம் செய்வது என்பது வேறு, அவற்றைச் செயல்படுத்துவது என்பது வேறு. இந்துக்களின் நண்பர்கள் உண்மையிலேயே சுதந்திரத்தின் நண்பர்கள் என்றால் இந்த உரிமைகளை உடனே அமல் நடத்தும்படி ஏன் வலியுறுத்தக் கூடாது? சுதந்திரம் வழங்குவதாக பிரிட்டிஷார் அளிக்கும் வாக்குறுதியோடு தாங்கள் திருப்தியடைய முடியாது என்று இந்துக்கள் கூறிவரவில்லையா? அந்த வாக்குறுதியை உடனே நிறைவேற்றும்படி அவர்கள் கோரி வரவில்லையா? பிரிட்டிஷார் தங்களுடைய போர்க்குறிக்கோள்களை நிறைவேற்ற வேண்டும் என்று இந்துக்கள் விரும்பும்போது, அவர்கள் தங்கள் போராட்ட லட்சியங்களை நிறைவேற்ற ஏன் தயாராக இருக்கக்கூடாது? பிரிட்டி ஷாருக்கு எதிராக இந்துக்கள் நடத்தும் இந்தப் போராட்டம் சுதந் திரத்திற்கான போராட்டம் என்ற இந்துக்களின் பிரசாரத்தைக் கண்டு இந்துக்களின் அமெரிக்க நண்பர்கள் ஏமாந்துவிட மாட்டார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இந்துக்களுக்கு ஆதரவளிப்பதற்கு முன்பு, பிரிட்டிஷாருக்கு எதிராகத் தாங்கள் நடத்தும் போராட்டம் சுதந்திரப் போராட்டமே என்று சாதிக்கும் இந்துக்கள் தீண்டப்படா தோர் போன்ற லட்சக்கணக்கான இந்தியர்களின் போராட்டத்துக்குப் பகைவர்களாக மாறிவிடமாட்டார்கள் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த வேண்டுகோளைத்தான் இந்தியாவின் 6 கோடி தீண்டப்படாதோரின் சார்பில் முன்வைக்கிறேன். இவற்றை

எல்லாம்கூட முக்கியமாக ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்பு கிறேன்; போராட்டமானது மக்களால் நடத்தப்படுவதால், அதிலும் சுதந்திரத்தின் பெயரால் நடத்தப்படுவதால் அரசியலமைப்பில் கட்டுப்பாடுகளும் சரியீடுகளும் இடம் பெற வேண்டிய அவசிய மில்லை என்று அமெரிக்க நண்பர்கள் நினைக்கக்கூடாது; ஏனென் றால் இந்திய சூழ்நிலைமைகளுக்கு இசைந்த வகையில்தான் இந்தக் கட்டுப்பாடுகளும் சரியீடுகளும் கோரப்படுகின்றன. ஜான் ஆடம்ஸ் கூறியதை ஜனநாயகத்தின், சுதந்திரத்தின் நண்பர்கள் இங்கு நினை விற் கொள்ள வேண்டும். அவர் பின்வருமாறு கூறினார்:

> ''எத்தகைய கட்டுப்பாடுகளும் இல்லாதபோது எந்த ஒரு மன்னனையும் அல்லது ஆட்சிமன்றத்தையும் போல் பலர் நேர்மையற்றவர்களாக, கொடுங்கோலர்களாக, இரக்க மற்றவர்களாக, பண்பற்றவர்களாக, காட்டுமிராண்டித்தன முடையவர்களாக, குரூரமானவர்களாக மாறி விடுகின் றனர்; பெரும்பான்மையினர் நிரந்தரமாகவும் எத்தகைய விதிவிலக்குமின்றி சிறுபான்மையினரின் உரிமைகளை தகாவழியில் அபகரித்துக் கொள்கின்றனர். வரலாற்றின் எந்த ஓர் ஏட்டைப் புரட்டிப்பார்த்தாலும் இதற்கு அசைக்க மறுக்க முடியாத சான்று இருப்பதை அவற்றில் காண்கிறோம்.''

எல்லாப் பெரும்பான்மையினரும் கட்டுப்பாடுகளுக்கும் சரியீடுகளுக்கும் உட்படுத்தப்பட வேண்டும் என்கிறபோது இந்த விதி இந்துக்கள் விஷயத்தில் இன்னும் பெருமளவுக்குப் பொருந்தும் அல்லவா?

# பின் இணைப்பு சம்பந்தமான ஒரு குறிப்பு

''தீண்டப்படாதவர்களுக்கு காங்கிரசும் காந்தியும் சாதித்தது என்ன?'' என்ற இந்தத் தொகுதி 1945ல் வெளியிடப்பட்ட முதல் பதிப்பின் மறுபிரசுரமாகும். டாக்டர் அம்பேத்கர் இதன் இரண்டாவது பதிப்பை 1946ல் வெளிக் கொணர்ந்தார். சில விஷயங்களைக் கூடுதலாக சேர்த்தும் திருத்தங்கள் செய்தும் இப் பதிப்பில் சிற்சில மாற்றங்கள் செய்யப்பட்டன. எனவே, இத்தகைய மாற்றங்களை உள்ளடக்கிய இயல் 9 இத்தொகுதியில் பின் இணைப்பாக சேர்க்கப்பட்டிருக்கிறது. இப்பதிப்பில் மேற்கொண்டு மாற்றங்கள் எதுவும் செய்யப்பட வில்லை.

இரண்டாவது பதிப்பின் உள்ளடக்கங்களை ஆசிரியர் குழுவின் கவனத்திற்குக் கொண்டு வந்தமைக்காக நாக்பூரைச் சேர்ந்த திரு. மந்தவ்கருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

# இயல் 9

# அயல்நாட்டவருக்கு ஓர் வேண்டுகோள்

## அடிமைப்படுத்துவதற்கு கொடுங்கோன்மைக்கு சுதந்திரம் அளிக்காதீர்

இந்திய அரசியல் விவகாரங்களில் ஆர்வமும் அக்கறையும் காட்டும் அயல்நாட்டினரில் ஒருசிலரைத் தவிர ஏறத்தாழ எல்லோருமே காங்கிரசை ஆதரிப்பது ஒரு பொதுவான அனுபவமாகும். இது நாட்டிலுள்ள இதர அரசியல் கட்சிகளிடம் திகைப்பையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியிருப்பது இயல்பே. இந்தக் கட்சிகளில் முசல்மான்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக உரிமை கொண்டாடும் முஸ்லீம் லீக், பிராமணரல்லாதோர் சார்பில் பேசுவதாகக் கூறிக்கொள்ளும் ஜஸ்டிஸ் கட்சி - இப்போது அது செயலற்றுப் போயிருந்தாலும்- தீண்டப்படாதோரைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறப்படும் அகில இந்திய ஷெட்யூல்டு வகுப்பினர் சம்மேளனம் போன்றவற்றை இவ்வகையில் முக்கியமாகக் குறிப்பிடலாம். இக்கட்சிகள் யாவும் தங்களுக்கு ஆதரவு அளிக்கும்படி அயல்நாட்டவரை நெடுகிலும் வேண்டி வருகின்றன. ஆனால் அயல்நாட்டவர் இக்கட்சிகளின் வேண்டுகோளை பரிவோடு செவிமடுத்துக் கேட்கக் கூடத் தயாராக இல்லை. அயல்நாட்டவர் ஏன் காங்கிரசை ஆதரிக்கிறார்? இந்தியாவிலுள்ள மற்ற கட்சிகளை ஏன் ஆதரிக்கவில்லை? அயல்நாட்டவர் தமது இந்தப் போக்குக்கு பொதுவாக இரண்டு காரணங்களைக் கூறுவது வழக்கம். காங்கிரசை ஆதரிப்பதற்கு அவர் கூறும் ஒரு காரணம் காங்கிரசைதான் இந்தியர்களின் ஒரே பிரதிநிதித்துவ அமைப்பாகவும், இந்தியாவின் சார்பில் பேசுவதற்கும் இன்னும் சொல்லப்போனால் தீண்டப்படாதவர்களின் சார்பில் பேசுவதற்கும்கூடத் தகுதி படைத்ததாகவும் அவர் கருதுவதே ஆகும். இத்தகைய கருத்து உண்மை நிலவரங்களை அடிப்படையாகக் கொண்டதா? இத்தகைய கருத்தைத்

தோற்றுவிக்கக்கூடிய சூழ்நிலைகள் இருந்தன என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

இந்தக் கருத்துப் பரவுவதற்கு முதலாவதும் முக்கியமானது மான காரணம் பத்திரிகைகள் இடை விடாது நடத்திவரும் பிரசார மேயாகும். இந்தியப் பத்திரிகை உலகம் காங்கிரசின் எடுப்பார் கைப்பிள்ளையாக இருந்து வருகிறது; காங்கிரஸ் ஒருபோதும் தவறு செய்யாது என்ற வரட்டுச் சித்தாந்தத்தை உடும்புப் பிடியாக நம்பு கிறது; காங்கிரஸ் செல்வாக்குக்கோ அல்லது காங்கிரஸ் சித்தாந்தத் துக்கோ முரணான எந்தச் செய்தியையும் எத்தகைய முக்கியத்துவம் கொடுத்தும் வெளியிடுவதில்லை என்ற கோட்பாட்டின் அடிப்படை யில் அது செயல்பட்டு வருகிறது. அயல்நாட்டவர் இந்திய அரசியல் விவகாரங்களைப் பற்றிய தகவல்களை தெரிந்து கொள்ள உதவும் பிரதான சாதனம் பத்திரிகைகளேயாகும். காங்கிரஸ்தான் இந்திய மக்கள் அனைவரின் ஏகப்பிரதிநிதி என்ற அதன் இந்தக் கோஷம் இந்தியப் பத்திரிகைகளால் இடைவிடாது தொடர்ச்சியாக விளம்பரப் படுத்தப்பட்டு வந்திருக்கிறது. இதன் விளைவாய் இங்கிலாந் திலும் அமெரிக்காவிலுமுள்ள மக்கள் இந்தியாவைப் பற்றித் தெரிந்து கொண்ட ஒ.ரே ஒரு விஷயம் காங்கிரஸ்தான் இந்தியாவி லுள்ள ஒரே பிரதிநிதித்துவ அமைப்பு என்பதாகும். காங்கிரஸ் கொண்டாடும் இந்த உரிமைக்கு எதிராக தீண்டப்படாதோர் சார்பில் பிரசாரம் செய்ய இயலாமல் போனதால் காங்கிரஸ் பிரச்சாரம் மேலும் வலுவடைந்தது. தீண்டப்படாதோர் இவ்வாறு பிரசாரம் செய்ய இயலாமல் போனதற்குப் பல காரணங்கள் உண்டு.

தீண்டப்படாதவர்களுக்குப் பத்திரிகைகள் ஏதும் இல்லை. காங்கிரஸ் பத்திரிகைகளோ அவர்களுக்குத் தமது கதவுகளை மூடி விட்டன. தீண்டப்படாதோருக்கு இம்மியும் விளம்பரம் தருவ தில்லை என அவை உறுதிபூண்டுள்ளன. தீண்டப்படாதோரால் சொந்தமாகப் பத்திரிகை நடத்த முடியாது. விளம்பர வருவாயின்றி எந்தப் பத்திரிகையும் உயிர் வாழ முடியாது என்பது அனைவரும் அறிந்த உண்மை. வர்த்தக, தொழில் நிறுவனங்களிலிருந்துதான் விளம்பர வருவாய் கிட்ட முடியும். ஆனால் இந்தியாவிலோ எல்லா பெரிய, சிறிய தொழில் நிறுவனங்களும் காங்கிரசுடன் பின்னிப் பிணைந்துள்ளன; காங்கிரஸ் அல்லாத எந்தப் பத்திரிகைகளையும் அவை ஆதரிக்க மாட்டா. இந்தியாவின் பிரதான செய்தி விநியோக நிறுவனமான ''அசோசியேட்டட் பிரஸ் ஆப் இந்தியாவின்'' அலுவலர்கள் அனைவரும் சென்னையைச் சேர்ந்த பிராமணர்கள்; இன்னும்

சொல்லப்போனால் இந்தியப் பத்திரிகை உலகம் முழுவதுமே அவர்கள் கையில்தான் இருக்கிறது; அனைவருக்கும் தெரிந்த காரணங்களால் இவர்கள் முற்றிலும் காங்கிரஸ் ஆதரவாளர்கள்; காங்கிரசுக்கு விரோதமான எந்தச் செய்தியும் பிரதானம் பெற அவர்கள் ஒரு போதும் அனுமதிக்க மாட்டார்கள். இவை எல்லாம் தீண்டப்படாதவர்களின் சக்திக்கு அப்பாற்பட்ட காரணங்கள்.

எனினும் பிரசாரத் துறையில் அவர்கள் மிகவும் பின்தங்கியிருந்ததற்குப் பிரதான காரணம் பிரசாரம் செய்ய வேண்டுமென்ற ஆர்வம் அவர்களிடம் இல்லாததுதான். வெளி உலகத்தாரின் கண்களில் நாட்டின் லட்சியத்துக்கு ஊறுவிளைவிக்கக் கூடிய எதையும் செய்துவிடக் கூடாது என்ற தேசபக்த நோக்கிலிருந்தே இந்த ஆர்வமின்மை தோன்றுகிறது என்றும் சொல்லலாம். இந்தியாவின் அரசியலில் இரண்டு வேறுபட்ட அம்சங்கள் அடங்கியுள்ளன; அயல்நாட்டு அரசியல், அரசியலமைப்புச் சட்ட அரசியல் ஆகியவையே அந்த இரு அம்சங்கள். இந்தியாவின் அயல்நாட்டு அரசியல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலிருந்து இந்தியாவின் விடுதலை சம்பந்தப்பட்டது; அரசியலமைப்புச் சட்ட அரசியலோ சுதந்திர இந்தியாவின் அரசியலமைப்பு எவ்வாறு இருக்க வேண்டும் என்பதுடன் சம்பந்தப்பட்டது. கூறறிவு படைத்த மாணவனுக்கு இவை இரண்டும் வெவ்வேறானவை. ஆனால் இந்திய அரசியலின் இந்த இரு அம்சங்களும் தனித்தனியானவை என்றாலும், அயல்நாட்டவர் இவற்றை வேறுபடுத்திப் பார்க்க இயலாமல் போவதற்கும், அரசியலமைப்பு குறித்த சர்ச்சையை இந்தியாவின் அயல்நாட்டு அர்சியலின் இறுதிக் குறிக்கோள் குறித்த கருத்து வேறுபாடாகத் தவறாகப் புரிந்து கொள்வதற்கும் வாய்ப்பு உண்டு. இதனால்தான் இந்த விஷயத்தில் மௌனம் சாதிக்கும் போக்கையும், காங்கிரஸ் பிரசாரம் தங்குதடையின்றி நடைபெறுவதை அனுமதிக்கும் போக்கையும் தீண்டப்படாதவர்கள்மேற்கொண்டனர்.

தங்களுக்கு எதிராக நடைபெறும் காங்கிரஸ் பிரசாரம் குறித்து தீண்டப்படாதவர்கள் மௌனம் சாதிப்பதற்குப் பின்னாலுள்ள அவர்களது தேசபக்த நோக்கங்களை காங்கிரஸ்காரர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். எனினும் தீண்டப்படாதவர்களின் இந்த மௌனமும், பகிரங்க எதிர்ப்பைத் தவிர்க்க வேண்டுமென்ற அவர்களது ஆர்வமும் தீண்டப்படாதவர்கள் உட்பட இந்திய மக்கள் அனைவரையுமே காங்கிரஸ் பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்ற ஒரு பொதுவான

கருத்தைத் தோற்றுவிக்க முக்கிய காரணமாக இருந்திருக்கிறது என்பதில் ஐயமில்லை.

தீண்டப்படாதவர்கள் உட்பட அனைவரையுமே காங்கிரஸ் பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்ற கருத்தைத் தோற்றுவிப்பதற்கான சூழ்நிலைமைகள் உள்ளன என்பதை ஏற்கெனவே விளக்கிக் கூறினேன். ஆனால் 1937ல் நடைபெற்ற தேர்தல்கள் வெளியிட்டிருக்கும் உண்மைகள் இந்தக் கருத்தை உறுதிபடுத்துபவையாக இல்லை. எல்லோரையும் தான் பிரதிநிதித்துவப்படுத்துவதாக காங்கிரஸ் உரிமை கொண்டாடி வருவதை இந்தத் தேர்தல்கள் எவ்வாறு நிராகரித்து விட்டன என்பதை இந்த நூலின் ஆரம்பப் பகுதியில் பொதுவாகவும், குறிப்பாக தீண்டப்படாதவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக காங்கிரஸ் கொண்டாடி வரும் உரிமை சம்பந்தமாகவும் விளக்கிக் கூறியுள்ளேன். அயல்நாட்டவர் இதனைக் கருத்திற் கொண்டால் காங்கிரசார் செய்துவரும் பிரசாரம் உண்மையிலிருந்து எவ்வளவு தூரம் மாறுபட்டிருக்கிறது என்பதைக் காண்பார்கள்.

காங்கிரசின் பிரதிநிதித்துவத் தன்மை தேர்தலில் சோதித்துப் பார்க்கப்படாத சமயத்தில் அயல்நாட்டவர் காங்கிரசின் பிரசாரத்தில் மயங்கிவிட்டது இயல்பானதே, இதனைத் தவறாக எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. ஆனால் 1937ல் நடைபெற்ற தேர்தல்களில் இந்த விஷயம் இப்போது சோதனைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது. தேர்தல் முடிவுகள் உண்மை நிலையை விளக்கிவிட்ட பிறகு, தீண்டப்படாதவர்கள் உட்பட அனைவரையுமே காங்கிரஸ் பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்ற கருத்தை அயல்நாட்டவர் மாற்றிக் கொள்வார்கள் என்றும், காங்கிரசுக்கு வெளியே உள்ள இதர கட்சிகளும் இந்தியாவின் சமூக வாழ்க்கையில் பிரதிநிதித்துவம் பெற்ற சக்திகளாக இருக்கின்றன, எனவே அவை என்ன கூறுகின்றன என்பதை கேட்பதும் அவசியம் என்பதை அவர்கள் உணர்வார்கள் என்றும் நம்புகிறோம்.

## II

ஓர் அயல்நாட்டவர் காங்கிரசுக்கு ஏன் தன் ஆதரவை அளிக்கிறார் என்பதற்கு மற்றொரு காரணமும் இருக்கிறது. நாட்டிலுள்ள காங்கிரஸ் மற்றும் ஏனைய அரசியல் கட்சிகளின் கிளர்ச்சி நடவடிக்கைகளுக்கு இடையே உள்ள வேறுபாட்டில்தான் இந்தக் காரணம் பொதிந்துள்ளது. காங்கிரஸ்காரர்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் மோதலில் ஈடுபட்டிருக்கின்றனர்; சட்டமறுப்பு இயக்கங்களை

அவ்வப்போது நடத்தி வருகின்றனர்; அந்நிய அரசாங்கம் இயற்றிய சட்டங்களை மீறி வருகின்றனர்; வரிகொடா இயக்கங்களை முன் னின்று நடத்தி வருகின்றனர்; ஆயிரக் கணக்கில் வெஞ்சிறைகளை நிரப்பி வருகின்றனர்; ஒத்துழையாமை இயக்கத்தை ஆதரித்துப் பிர சாரம் செய்து வருகின்றனர்; பட்டம் பதவிகளைத் துறந்து வருகின் றனர்; நாட்டின் சுதந்திரத்திற்காக எல்லா வகைகளிலும் தியாகம் செய்யத் தயாராக இருக்கின்றனர். ஆனால் அதேசமயம் ஏனைய கட்சிகள் இவற்றிலிருந்தெல்லாம் ஒதுங்கி நிற்பதை அயல்நாட்டவர் காண்கிறார். இதிலிருந்து, காங்கிரசானது நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடும் ஓர் அமைப்பு என்றும், எனவே, ''சுதந்திரப் போராட் டத்தை'' நடத்திவரும் காங்கிரசை ஆதரிப்பது சுதந்திரத்தை விரும்பு பவர்கள் என்ற முறையில் தமது கடமை என்றும் அவர் கருதுகிறார்.

இது முற்றிலும் இயல்பே. ஆனால் இங்கு ஒரு கேள்வி எழு கிறது. காங்கிரசின்பால் காட்டும் இந்த ஒருசார்பான ஆதரவு ''சுதந்திரப் போராட்ட இயக்கத்தினிடம்'' அயல்நாட்டவருக்கு ஏற்பட்டுள்ள மோகத்தின் விளைவாக ஏற்பட்டதா? அல்லது ''சுதந்திரப் போராட்டம்'' இந்திய மக்களுக்கு விடுதலையைப் பெற்றுத்தரப் போகிறது என்ற நம்பிக்கையின் விளைவாக இது தோன்றியதா? முதலாவதாகக் குறிப் பிடப்பட்ட விஷயம் இதற்குக் காரணமாக இருக்குமாயின் தீண்டப் படாதவர்கள் இந்த ''சுதந்திரப் போராட்டத்தில்'' ஏன் பங்கெடுத் துக் கொள்ளவில்லை என்பதற்கு 7 ஆவது இயலில் நான் தந்துள்ள விளக்கம் அயல்நாட்டவரிடம் விரும்பிய பலனை ஏற்படுத்தத் தவறிவிட்டதற்காக வருத்தப்படுவதைத் தவிர நான் வேறு எதுவும் சொல்வதற்கில்லை. ஆனால் இதன் பொருட்டு அவருடன் நான் சச்சர விட முடியாது. ஏனென்றால் அந்த இயலைப் படித்த பல அயல் நாட்டவர்கள் ''சுதந்திர போராட்டத்தில்'' சேருவதற்கு தீண்டப் படாதவர்கள் ஏன் மறுக்கிறார்கள் என்பதற்கு நான் தெரிவித்துள்ள காரணங்கள் போதிய வாத ஆதாரமுடையதாகவும், நேர்மையானவை யாகவும் இருக்கலாம்; ஆனால் சுதந்திரத்திற்காகப் போராடிக் கொண்டிருக்கும் ஓர் அமைப்பை நாங்கள் ஏன் ஆதரிக்கக் கூடாது என்பதற்கு நான் எத்தகைய ஆதாரத்தையும் காட்டவில்லையே என்று கூறலாம்.

அயல்நாட்டவர் காங்கிரசிடம் கொண்டிருக்கும் பாசத்துக்கு இரண்டாவதாகக் கூறப்பட்டிருப்பதுதான் அடிப்படையான காரணம்

என்றால், அப்போது விஷயம் வேறுபட்டதொரு கோணத்தைப் பெற்றுவிடுகிறது.

சாதாரணமாக, தமது நேர்மையைக் காட்டும் வகையிலும், தம்முடைய உள்நோக்கங்கள் பற்றி ஐயப்பாடு கொண்டிருப்பவர் களிடம் நம்பிக்கையை ஊட்டி, அவர்களது ஒத்துழைப்பைப் பெறும் வகையிலும் எதையும் மூடி மறைக்காமல், ஒரு திட்டவட்டமான நிலையை மேற்கொள்ளத் தயாராக இல்லாத ஒருவரது சொல்லை எவரும் நம்ப மாட்டார்கள். இது காங்கிரசுக்கும் பொருந்தும். ஆனால் இயல் VIIல் நான் எடுத்துக்காட்டியிருப்பதுபோல் இந்தியாவில் எத்தகைய ஜனநாயகத்தை நிலைநாட்ட காங்கிரஸ் விரும்புகிறது, அதில் கீழ்ப்பட்ட வகுப்பினர், அதிலும் குறிப்பாக தீண்டப்படாதவர் கள் எத்தகைய இடத்தைப் பெறுவார்கள் என்பதற்கான பூர்வாங்கத் திட்டம் எதையும் காங்கிரஸ் இதுவரை முன்வைக்கவில்லை. தீண்டப் படாதவர்களும் ஏனைய சிறுபான்மையினரும் எவ்வளவோ வலி யுறுத்திக் கேட்டுக் கொண்ட போதிலும் இத்தகைய ஒரு திட்டத்தை முன்வைக்க காங்கிரஸ் மறுத்துவிட்டது. இப்படிப்பட்ட ஓர் அறிவிப்பு வெளியிடப்படாத நிலைமையில், காங்கிரஸ் ஜனநாயகத்தை ஆத ரித்து நிற்கிறது என்று கூறி அயல்நாட்டவர் அதற்கு ஆதரவு அளித்து வருவது ஏமாளித்தனமாகவே தோன்றுகிறது.

இந்தியாவில் ஜனநாயகத்தை நிலைநாட்ட காங்கிரஸ் திட்ட மிட்டு வருகிறது என்று கருதுவதற்கு திட்டவட்டமான ஆதாரம் ஏதும் இல்லை. காங்கிரஸ் ''சுதந்திரப் போராட்டத்தில்'' ஈடுபட்டிருக்கிறது என்று கூறுவது மட்டுமே இத்தகைய ஒரு முடிவுக்கு வருவதற்கு உத்தர வாதமாகாது. இத்தகைய ஒரு முடிவுக்கு வருவதற்கு முன்னர் மேலும் விஷயத்துக்குச் சென்று ''யாருடைய சுதந்திரத்திற்காக காங்கிரஸ் போராடி வருகிறது?'' என்ற கேள்வியை எழுப்புவது அவரது கடமை. சுதந்திரத்திற்காக காங்கிரஸ் போராடி வருகிறதா என்ற கேள்வி யாருடைய சுதந்திரத்திற்காக காங்கிரஸ் போராடி வருகிறது என்னும் கேள்வியுடன் ஒப்பிடும்போது மிகக் குறைந்த முக்கியத்துவத்தையே பெறுகிறது. இது மிகவும் பொருத்தமான, அவசியமான விசாரணை யாகும். இந்த விஷயத்தை நன்கு ஆய்ந்து ஆராய்ந்துப் பரிசீலித்து, உண்மை என்னவென்று தெரிந்து கொள்ளாமல் சுதந்திரத்தை விரும் பும் எவரும் காங்கிரசை ஆதரிப்பது தவறு. ஆனால் இவ்வாறிருக்கும் போது காங்கிரசை ஆதரிக்கும் அயல்நாட்டவர் இத்தகைய கேள்வியை எழுப்பக்கூட அக்கறை கொள்வதில்லை. இத்தகைய கேள்வியை அவர் எழுப்புவார் என்றே யாரும் எதிர்பார்ப்பார்கள். அவ்வாறு

இக்கேள்வியை எழுப்பியிருப்பாரேயானால் காங்கிரஸ் ஜனநாயகத்துக்குத் திட்டமிடுவதற்குப் பதிலாக தலைமுறை தலைமுறையான ஓர் ஆளும் வகுப்பு தலைமுறை தலைமுறையான ஒரு கீழ்ப்பட்ட வகுப்பை ஆளும் பண்டைய இந்து ஆட்சி முறையை உயிர்ப்பிப்பதற்கே திட்டமிட்டு வருகிறது என்பதற்கு ஏராளமான ஆதாரச் சான்றுகளை அவர் பெறுவார் என்பதில் எனக்கு எள்ளளவும் ஐயமில்லை.

அடிமட்ட வகுப்பினர்களின் பிரச்சினை சம்பந்தமாக அதிலும் குறிப்பாக தீண்டப்படாத மக்களின் பிரச்சினை சம்பந்தமாக அயல்நாட்டவர் காட்டும் மனப்போக்கு ஒரு ஜீவாதாரமான விஷயமாகும்; இது தனிமனப்போக்கு என்று எந்தக் கட்சியும் அதனைக் கணக்கிலெடுத்துக் கொள்ளாமல் விடமுடியாது. தீண்டப்படாதவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எவரும் இதனைக் கருத்திற் கொள்வதும் காங்கிரசை ஆதரிப்பதன் மூலம் ஒரு தவறான கட்சியை அயல்நாட்டவர் ஆதரிக்கிறார் என்பதை எடுத்துக் கூறி அவர் மனத்தை மாற்றுவதற்கு முழு முயற்சி எடுத்துக் கொள்வதும் அவசியம்.

## III

சொந்த விருப்பு வெறுப்புகள் ஒருபுறமிருக்க, காங்கிரஸ் சம்பந்தமாக அயல்நாட்டவர் இத்தகைய விந்தையான போக்கைக் கடைப்பிடிப்பதற்கு சுதந்திரம், சுயாட்சி, ஜனநாயகம் பற்றி மேலைய அரசியல் விஞ்ஞான எழுத்தாளர்கள் தெரிவித்துள்ள குறிப்பிட்ட கருத்துகளும், அவை சராசரி அயல்நாட்டவரின் கையிருப்புச் சரக்காகி இருப்பதுமே காரணம் என்று தோன்றுகிறது.

சுதந்திரத்தைப் பொறுத்தவரையில் அயல்நாட்டவர் ஒரு நாட்டின் சுதந்திரத்திற்கும் அந்த நாட்டு மக்களது சுதந்திரத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டை எண்ணிப் பார்த்ததாகத் தெரியவில்லை. ஒரு நாட்டின் சுதந்திரமும் அந்த நாட்டு மக்களின் சுதந்திரமும் ஒன்றே என்றும், நாட்டின் சுதந்திரம் பெறப்பட்டதும் மக்களின் சுதந்திரமும் உத்தரவாதம் செய்யப்பட்டு விடுகிறது என்றும் அவர் கற்பனை செய்து கொள்கிறார்.

தன்னாட்சி விஷயத்தைப் பொறுத்தவரையில் அரசியலமைப்புச் சட்டம் குறித்து மக்களிடையே தார்மிகப் பண்பு இருக்க வேண்டும். இந்த அரசியலமைப்புச் சட்ட தார்மிகப் பண்பு என்பது

எதைக்குறிக்கிறது? இதுபற்றி குரோட்டே கூறுவதாவது:[1] அரசிய லமைப்புச் சட்டத் தார்மிக பண்பு என்பது பின்வருபவற்றை அர்த்தப் படுத்துகிறது: அரசியலமைப்புச் சட்ட வடிவத்தின்பால் தலையாய மரியாதை காட்டும் மனப்பாங்கை வளர்த்துக் கொள்ள வேண்டும்; இந்த வடிவங்களின் கீழும், அவற்றின் கட்டுக் கோப்பிற்குள்ளும் செயல்படும் அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும்; அதேசமயம் திட்டவட்டமாக சட்ட வரம்புக்குட்பட்டு மட்டுமே வெளிப்படையாகப் பேசலாம், செயல்படலாம், அதிகாரிகளை அவர்களுடைய பொதுப்பணிகள் சார்ந்த செயல்பாடுகள் குறித்து தாராள மாகக் கண்டிக்கலாம்; அத்தோடு ஒவ்வொரு குடிமகனது உள்ளத்திலும் முழு நிறைவான நம்பிக்கை இருக்க வேண்டும்; கட்சி களிடையே கடுமையான போட்டி அனுமதிக்கப்படுகிறது; ஆனால் அரசியலமைப்புச் சட்ட வடிவங்கள் ஒருவரது சொந்த நோக்கில்கூட எதிராளியின் நோக்கில் குறைந்த புனிதத்தன்மை கொண்டவையாக ஆகிவிடக்கூடாது,'' மக்களிடையே இந்த பழக்க வழக்கங்கள், மனப்பாங்குகள் குடிகொண் டிருக்குமாயின் தன்னாட்சி என்பது எதார்த்தமாகிவிடும், இதற்குமேல் வேறு எதைக் குறித்தும் கவலைப் பட வேண்டியதில்லை என்று மேலைய அரசியல் எழுத்தாளர்கள் கருதுகின்றனர். இதே போன்று, ஜனநாயகம் பற்றி எழுதும் மேலைய எழுத்தாளர்கள் ஜனநாயக லட்சியம் ஈடேறுவதற்கு அதாவது மக்க ளுக்காக, மக்களால் நடத்தப்படும் மக்கள் அரசாங்கம் உருவாவதற்கு வேண்டியதெல்லாம் வயது வந்தோர் வாக்குரிமையை நிலைநாட்டு வதுதான் என்று வலியுறுத்துகின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதி நிதிகளைத் திரும்ப அழைத்தல், பொதுமக்கள் கருத்தறியும் வாக் கெடுப்பு, குறுகிய கால நாடாளுமன்றங்கள் போன்ற வேறு சில யோசனைகளும் கூறப்பட்டு, சில நாடுகளில் அவை செயல்படுத்தப் பட்டும் வருகின்றன. ஆனால் மக்களால் மக்களைக் கொண்டு மக்களுக்காக நடைபெறும் ஆட்சியை நிறுவுவதற்கு வயது வந்தோர் வாக்குரிமைக்கும் அதிகமாக வேறு எதுவும் தேவையில்லை என்று கருதப்படுகிறது.

இந்த கண்ணோட்டங்கள் யாவும் குறைபாடுடையவை, பெரிதும் தவறான எண்ணங்களுக்கு இட்டுச் செல்லக்கூடியவை என்று கூறுவதில் எனக்கு எந்தத் தயக்கமும் இல்லை. ஒரு நாட்டின் சுதந்திரத்தையும் அந்த நாட்டு மக்களது சுதந்திரத்தையும் வேறு படுத்திக் காணத் தவறுவது ஒருவரை ஏமாற்றுவதற்கு இட்டுச்செல்லா

1. குரோட்டே, கிரேக்க வரலாறு, தொகுதி III , பக்கம் 347.

விட்டாலும், தவறான எண்ணத்தால் வழிநடத்தப்படுவதற்கு அவரை இட்டுச் செல்லும். ஏனென்றால் சமுதாயம், தேசம், நாடு போன்ற சொற்கள் திட்டவட்டமாக, தெளிவான அர்த்தத்தைக் கொடுக்காத சொற்கள். ''தேசம்'' என்பது ஒரே சொல்லானாலும் அது பல வகுப்பினர்களை அர்த்தப்படுத்துகிறது. தத்துவார்த்த ரீதியில் பார்த்தால் ஒரு தேசத்தை ஒரே யூனிட்டாக கருதலாம்; ஆனால் சமூக ரீதியில் பார்க்கும்போது பல வகுப்பினர்கள் கொண்டதாக அதனை கருத முடியும். ஒரு தேசத்தின் சுதந்திரம் என்று கூறும்போது, அது உண்மையாக இருக்கும்பட்சத்தில், அதில் அடங்கியுள்ள பல்வேறு வகுப்பினர்களின் சுதந்திரத்தையும் அதிலும் குறிப்பாக அடிமைகள் போல் நடத்தப்படும் வகுப்பினர்களின் சுதந்திரத்தையும் அது உத்தரவாதம் செய்வதாக இருக்க வேண்டும்.

அரசியலமைப்புச் சட்ட வடிவ அரசாங்கத்தைப் பேணிக் காப்பதற்கு அரசியல் சட்டத் தார்மிகப் பண்புகள் இன்றியமையாதவையாக இருக்கலாம். ஆனால் அரசியலமைப்புச் சட்ட வடிவ அரசாங்கத்தை நிலைநாட்டுவதும் மக்களின் தன்னாட்சி அரசாங்கமும் ஒன்றல்ல. இதேபோன்று வயது வந்தோர் வாக்குரிமை மன்னர் ஆட்சி போன்றல்லாது மக்களின் அரசாங்கத்தை அந்த வாசகத்தின் தருக்க முறைப்பட்ட அர்த்தத்தில் உருவாக்கக்கூடும். ஆனால் இதை மட்டும் வைத்து மக்களுக்காக மக்களால் நடத்தப்படும் அரசாங்கம் என்ற அர்த்தத்தில் ஒரு ஜனநாயக அரசாங்கத்தை உருவாக்கிவிட முடியாது.

மேற்கு ஐரோப்பாவில் நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கு நேர்ந்த பரிதாபகரமான கதியை அறிந்திருப்போர் எவரும் ஜனநாயகம் பற்றிய இத்தகைய கண்ணோட்டங்கள் எவ்வளவு தவறானவை என்பதை புரிந்து கொள்வதற்கு மேற்கொண்டு சான்றுகள் எவையும் தேவையில்லை.[1] மேற்கு ஐரோப்பாவில் ஜனநாயகம் தோல்வியடைந்ததற்கான காரணங்களை விளக்கி நான் நிகழ்த்திய சொற்பொழிவிலிருந்து சில மேற்கோள்களைக் கீழே தந்துள்ளேன்:

> ''மனித சமுதாயத்தின் அரசாங்கம் சில குறிப்பிடத்தக்க மாற்றங்களை அடைந்துள்ளது. மனித சமுதாயத்தின் அரசாங்கம் ஒருசமயம் கொடுங்கோல் மன்னர்களின் எதேச்சதிகார ஆட்சி வடிவத்தை எய்தியிருந்தது. கடுமையான நீண்ட

1. தொழிலாளர்களும் நாடாளுமன்ற ஜனநாயகமும் - 1943 செப்டம்பர் 17ஆம் தேதி டில்லியில் நடைபெற்ற அகில இந்திய தொழிற்சங்கப் பயிற்சி முகாமில் நிகழ்த்தப்பட்ட உரை

நெடும் போராட்டத்திற்குப் பிறகு நாடாளுமன்ற ஜனநாயகம் என்னும் அரசாங்க அமைப்பு முறை அதன் இடத்தில் அமர்ந்தது. அரசு அமைப்பு முறையில் இதுவே இறுதி முடிவாக இருக்கும் என்று கருதப்பட்டது. இது பொற்காலத்தைக் கொண்டுவரும் என்றும், ஒவ்வொரு மனிதனும் சுதந்திரமும் சொத்துரிமையும், நல்வாழ்வும் பெற அது வகைசெய்யும் என்றும் நம்பப்பட்டது. இவ்விதம் நம்புவதற்குப் போதிய காரணங்களும் இருந்தன. நாடாளுமன்ற ஜனநாயகத்தில் மக்களின் குரலை எதிரொலிக்க சட்டசபைகள் இருக்கின்றன; சட்டமன்றத்திற்குக் கீழ்ப்பட்ட, அதன் சொற்படி நடக்கக் கடமைப்பட்ட ஆட்சித்துறை இருக்கிறது. சட்டமன்றத்திற்கும் ஆட்சித்துறைக்கும் மேலாக அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கும், நிர்ணயிக்கப்பட்ட வரம்புக்குட்பட்டு அவை செயல்படும்படியாகப் பார்த்துக் கொள்வதற்கும் நீதித்துறை இருக்கிறது. நாடாளுமன்ற ஜனநாயகம் ஒரு மக்கள் அரசாங்கத்துக்குரிய, மக்களால், மக்களைக் கொண்டு, மக்களால் நடத்தப்படும் ஓர் அரசாங்கத்துக்குரிய எல்லாத் தகுதிகளையும் பெற்றிருக்கிறது. எனவே, இத்தகைய ஓர் ஆட்சிமுறை உலகளாவிய அளவில் ஏற்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு நூறு ஆண்டுக்காலம் கூடக் கழிவதற்கு முன்னதாகவே அதற்கு எதிராக கிளர்ச்சி எழுந்திருப்பது ஓரளவு வியப்புக்குரிய விஷயமாக இருக்கிறது. இத்தாலியிலும், ஜெர்மனியிலும், ரஷ்யாவிலும், ஸ்பெயினிலும் அதற்கு எதிராகக் கலகக் கொடி தூக்கப்பட்டிருக்கிறது; நாடாளுமன்ற ஆட்சிமுறைக்கு எதிராக அதிருப்தி தலைதூக்காத நாடுகள் மிகச் சொற்பமேயாகும். நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கு எதிராக இத்தகைய அதிருப்தி ஏன் ஏற்பட வேண்டும்? இது பரிசீலனைக்குரிய விஷயமாகும். இந்தப் பிரச்சினையைப் பரிசீலிக்க வேண்டிய அவசரம் வேறு எந்த நாட்டையும் விட இந்தியாவுக்குத்தான் அதிகமாக இருக்கிறது. நாடாளுமன்ற ஜனநாயகத்துக்காக இந்தியா பாடுபட்டு வருகிறது. இத்தகைய தருணத்தில் ''நாடாளுமன்ற ஜனநாயகத்தைப் பற்றி எச்சரிக்கையாக இருங்கள், அது வெளிக்குத் தோன்றுவதுபோல் அப்படி ஒன்றும் உயர்ந்த சரக்கல்ல'' என்று எச்சரிப்பதற்குப் போதிய துணிவுள்ள ஒருவர் மிகவும் தேவைப்படுகிறார்.

''நாடாளுமன்ற ஜனநாயகம் ஏன் தோல்வியடைந்தது? சர்வாதிகாரிகள் நாட்டில் அது தோல்வியடைந்ததற்கு அது

மிக மெதுவாக இயங்கும் ஓர் எந்திரமாக இருந்ததே காரணம். விரைவாக செயல்படுவதற்கு அது தடையாக இருக்கிறது. நாடாளுமன்ற ஜனநாயகத்தில் ஆட்சித் துறையை சட்ட மன்றம் தடுத்து நிறுத்தலாம்; ஆட்சித்துறை விரும்பும் சட்டங்களை நிறைவேற்ற சட்டமன்றம் மறுக்கலாம்; சட்ட மன்றம் தடுத்து நிறுத்தவில்லை என்றால் நீதித்துறை அதனைத் தடுத்து நிறுத்தலாம்; அது இயற்றும் சட்டங்களை சட்டவிரோதமானவை என்று அறிவிக்கலாம். சர்வாதிகாரம் சுதந்திரமாக செயல்பட நாடாளுமன்ற ஜனநாயகம் அனுமதிப்பதில்லை. இதனால்தான் இத்தாலி, ஸ்பெயின், ஜெர்மனி போன்ற நாடுகளில் நாடாளுமன்ற ஜனநாயகம் அவப்பேறுக்குள்ளான ஆட்சிமுறையாகிவிட்டது; இந்த நாடுகள் எல்லாம் சர்வாதிகார ஆட்சிகளை இரு கை நீட்டி வரவேற்றன. நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கு சர்வாதிகாரிகள் மட்டுமே பகைவர்களாக இருப்பின் அது கவலைப்பட வேண்டிய விஷயமாக இருந்திருக்காது. நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கு அவர்கள் எதிராக இருப்பதே சர்வாதிகாரத்துக்கு மூக்கணாங்கயிறு போடுவதன் அவசியத்தை எடுத்துக்காட்டுவதாக இருக்கிறது; அந்த வகையில் இதனை வரவேற்கலாம். ஆனால் சர்வாதிகாரத்தை மக்கள் கடுமையாக எதிர்க்கும் நாடுகளில்கூட துரதிர்ஷ்டவசமாக நாடாளுமன்ற ஜனநாயகம் தேக்க நிலையில் இல்லாமல் முன்னேறிக் கொண்டிருப்பினும் இந்த அதிருப்தி நிலவுவது மிகமிக வருந்தத்தக்கதாகும். அது மூன்று திசைகளில் முன்னேறியிருக்கிறது. சமத்துவ வாக்குரிமை என்னும் வடிவத்தில் சமத்துவ அரசியல் உரிமைகளுடன் அது தனது பயணத்தைத் தொடங்கிற்று. நாடாளுமன்ற ஜனநாயகத்தைக் கடைப்பிடிக்கும் நாடுகளில் வயது வந்தோர் வாக்குரிமையை செயல்படுத்தாத நாடுகள் மிகச் சிலவேயாகும். சமத்துவ அரசியல் உரிமைகள் என்னும் கோட்பாட்டை விரிவுபடுத்தி சமத்துவ, சமூக, பொருளாதார வாய்ப்புகள் என்னும் குறிக்கோளை நோக்கி அது முன்னேறியிருக்கிறது. சமூக விரோத நோக்கங்கள் கொண்ட பெரிய தொழில் முதலீட்டுக் கழகங்கள் அரசை இக்கட்டுக்கு உள்ளாக்க முடியாது என்பதை அது ஏற்றுக் கொண்டிருக்கிறது. இவ்வாறெல்லாம் இருப்பினும் ஜனநாயகத்தில் பெரும் பற்றுதல் கொண்ட நாடுகளில் கூட நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கு எதிராக பெரும் அதிருப்தி நிலவுகிறது. இத்தகைய நாடுகளில் நிலவும் அதிருப்திக்கான காரணங்கள் சர்வாதிகார நாடுகளில் நிலவும் அதிருப்திக்கான

காரணங்களிலிருந்து மாறுபட்டவையாகவே இருக்கும் என்பது தெள்ளத் தெளிவு. இவற்றையெல்லாம் இங்கு விரிவாகக் கூறுவதற்கு அவகாசம் இல்லை. எனினும் நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மீது அதிருப்தி ஏற்பட்டிருப்பதற்கு அது மக்களுக்கு சுதந்திரத்தையும், சொத்துரிமையையும், சுபிட்ச வாழ்க்கையும் உத்தரவாதம் செய்யத் தவறிவிட்டது என்ற உணர்வே காரணமாகும் என்று பொதுப்படையாகக் கூறலாம். இது உண்மையாயின் இந்தத் தோல்விக்கான காரணங்களைத் தெரிந்து கொள்வது முக்கியம். இந்தத் தோல்விக்கு தவறான சித்தாந்தமோ, தவறான அமைப்பு முறையோ அல்லது இவ்விரண்டுமோ காரணமாக இருக்கலாம். இவ்விரண்டுமே காரணமாக இருக்கும் என்பதுதான் என் கருத்து.

''நாடாளுமன்ற ஜனநாயகத்தின் தோல்விக்கு காரணமான சித்தாந்தங்களில் ஒப்பந்த சுதந்திரம் என்னும் கோட்பாடும் ஒன்று என்பதில் ஐயமில்லை. இந்தக் கோட்பாடு ஒரு விதிமுறையாக்கப்பட்டு சுதந்திரத்தின் பெயரால் நிலைநாட்டப்பட்டும் இருக்கிறது. நாடாளுமன்ற ஜனநாயகம் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளில் கவனம் செலுத்தவில்லை; சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் ஒப்பந்த சுதந்திரம் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது என்பதை ஆராயவும் அது முற்படவில்லை; பேரம் பேசும் ஆற்றலில் இருதரப்புகளிடையே நிலவிய ஏற்றத்தாழ்வையும் அது கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை. ஒப்பந்த சுதந்திரம் வலிமையுள்ளவர்கள் வலிமையற்றவர்களை ஏமாற்றுவதற்கு சுதந்திரம் அளித்து வந்ததைப் பற்றியும் அது எவ்வகையிலும் கவலைப்படவில்லை. இதன் விளைவாக, சுதந்திரத்தின் பாதுகாவலனாக இருக்க வேண்டிய நாடாளுமன்ற ஜனநாயகம் ஏழைகளுக்கு, அடக்கி ஒடுக்கிப்பட்டவர்களுக்கு, சொத்து சுகமற்ற வகுப்பினருக்கு மேலும் பொருளாதாரக் கேடுகளை, தீங்குகளை இழைத்து வருகிறது.

''சமூக, பொருளாதார ஜனநாயகம் இல்லை என்றால், அரசியல் ஜனநாயகம் வெற்றி பெற முடியாது என்பதை உணரத் தவறியது இரண்டாவது தவறான சித்தாந்தமாகும். சிலர் இந்தக் கூற்றை ஏற்க மறுக்கலாம். இவ்வாறு ஏற்க மறுப்பவர்களிடம் நான் ஓர் எதிர்க் கேள்வி கேட்க விரும்புகிறேன். இத்தாலியிலும், ஜெர்மனியிலும், ரஷ்யாவிலும்

நாடாளுமன்ற ஜனநாயகம் ஏன் மிக எளிதாக தகர்ந்து நொறுங்கி விட்டது? அதேசமயம் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் அது ஏன் எளிதாக வீழ்ச்சியடையவில்லை? எனக்குத் தெரிந்த வரை இதற்கு ஒரே ஒரு விடைதான் இருக்கிறது. அதாவது முதலில் குறிப்பிட்ட நாடுகளை விட இரண்டாவதாகக் குறிப்பிட்ட நாடுகளில் அதிக அளவு பொருளாதார, சமூக ஜனநாயகம் இருந்தது என்பதே அந்த விடை. சமூக, பொரு ளாதார ஜனநாயகம் என்பது அரசியல் ஜனநாயகத்தின் நரம்பும் நாளமுமாகும். இந்த நரம்பும் நாளமும் எந்த அள வுக்கு வலுவானவையாக இருக்கின்றனவோ அந்த அள வுக்கு உடல் வலிவுடையதாக இருக்கும். ஜனநாயகம் என்பது சமத்துவத்துக்கு மற்றொரு பெயர். நாடாளுமன்ற ஜன நாயகம் சுதந்திர தாகத்தை கிளர்த்திவிட்டது; சுதந்திர ஆர் வத்தைத் தூண்டிவிட்டது. அதேசமயம் அது சமத்துவம் விஷ யத்தில் ஒருபோதும் தலையைக் கூட அசைத்ததில்லை. அது சமத்துவத்தின் முக்கியத்துவத்தை உணரத் தவறிவிட்டது; சுதந்திரத்துக்கும் சமத்துவத்துக்கும் இடையே சமநிலை உண்டுபண்ண முயற்சிகூட செய்யவில்லை; இதன் விளை வாக சுதந்திரம் சமத்துவத்தை விழுங்கி ஏப்பம் விட்டு விட்டது; ஜனநாயகத்தை செல்லாக்காசாக, கேலிக்கூத்தாக ஆக்கிவிட்டது.

''நாடாளுமன்ற ஜனநாயகம் தோல்வியடைந்ததற்குக் காரணமான தவறான சித்தாந்தங்களைப் பற்றிக் குறிப்பிட் டேன். எனினும் ஜனநாயகத்தின் தோல்விக்கு தவறான சித்தாந்தத்தை விட தவறான அமைப்பு முறையே காரணம் என்பது என் கருத்து. எல்லா அரசியல் சமுதாயங்களும் ஆள்வோர், ஆளப்படுவோர் என இரண்டு வர்க்கங்களாகப் பிரிந்துள்ளன. இது ஒரு தீமையாகும். இந்தத் தீமை இத்துடன் நின்றிருந்தால் பரவாயில்லை. ஆனால் இதில் துரதிர்ஷ்டவசமான விஷயம் என்னவென்றால் இந்தப் பிரி வினை கால இட வேறுபாடின்றி ஒரே மாதிரியானதாக, படி நிலை அடிப்படையில் அமைந்து, ஆள்வோர் எப்போதும் ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாகவும், ஆளப்படுவோர் ஒருபோதும் ஆளும் வர்க்கமாக மாறமுடியாதவர்களாகவும் இருப்பதேயாகும். நம்மை நாமே ஆண்டு கொள்கிறோமா என்பது குறித்துப் பொதுவாக மக்கள் கவலைப்படாததாலேயே இவ்வாறு நிகழ்கிறது. ஓர் அரசாங்கத்தை அமைப்பதோடு

> திருப்தியடைந்து, அந்த அரசாங்கம் தங்களை ஆள்வதற்கு விட்டு விடுகிறார்கள். நாடாளுமன்ற ஜனநாயகம் மக்களது அரசாங்கமாக அல்லது மக்களால் நடத்தப்படும் அரசாங்கமாக என்றும் இல்லாதிருந்ததற்கும், உண்மையில் ஏன் அது பரம்பரை பரம்பரையாக ஒடுக்கப்பட்டு வந்த மக்களை வழிவழியாக ஓர் ஆளும் வர்க்கத்தால் ஆளப்பட்டு வந்த அரசாங்கமாக இருந்து வந்திருக்கிறது என்பதற்கும் இதுவே காரணமாகும். நேர்மையற்ற இந்த அரசியல் அமைப்பு முறைதான் நாடாளுமன்ற ஜனநாயகத்தை இத்தகைய பரிதாபகரமான தோல்விக்கு இட்டுச் சென்றுள்ளது. இதன் காரணமாகத் தான் நாடாளுமன்ற ஜனநாயகத்தால் சாமானிய மக்களுக்கு அது அளித்திருந்த வாக்குறுதியை, சுதந்திரத்தையும், சொத்துரிமையையும், சுபிட்ச வாழ்வையும் அவர்களுக்கு அளிப்பதாக அது தந்திருந்த உறுதிமொழியைக் காப்பாற்ற முடிய வில்லை.''

ஜனநாயகத்தின் தோல்விக்கு இட்டுச் சென்ற காரணங்களைப் பற்றிய இந்த ஆய்வு சரியானதென்றால் ஜனநாயகத்தின் ஆதரவாளர்களுக்கு இது ஓர் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்; ஜனநாயகத்துக்கு ஆணிவேராக சில அடிப்படையான அம்சங்கள் இருக்கின்றன என்பதையும், அவற்றை அவர்கள் உதாசீனம் செய்ய முடியாது என்பதையும், அவ்வாறு செய்தால் அது ஜனநாயகத்துக்குத் தான் ஆபத்து என்பதையும் அவர்கள் உணர வேண்டும். அந்த அடிப்படை அம்சங்களை இங்கு ஒன்றன்பின் ஒன்றாக எடுத்துரைப்பது உசிதமாக இருக்கும்.

**முதலாவதாக**, ஒவ்வொரு நாட்டிலும் ஆதிக்க வகுப்பினர், அடிமட்ட வகுப்பினர் என இரண்டு வகுப்பினர் இருந்து வருகின்றனர். அதிகாரத்துக்காக அவர்களிடையே இடையறாது போராட்டம் நடைபெற்று வருகிறது என்னும் நிதர்சனமான வரலாற்று உண்மையை ஒப்புக்கொள்ள வேண்டும். **இரண்டாவதாக** ஆதிக்க வகுப்பினர் அவர்களது அதிகார வலிமை காரணமாகவும் செல்வாக்கு காரணமாகவும் அடிமட்ட வகுப்பினர் மீது தமது மேலாதிக்கத்தை செலுத்துவது எளிதாகிறது. **மூன்றாவதாக** வயது வந்தோர் வாக்குரிமையும், அடிக்கடி நடைபெறும் தேர்தல்களும் ஆதிக்க வகுப்பினர் ஆட்சியையும் அதிகாரத்தையும் கைப்பற்றுவதற்கு எவ்வகையிலும் தடையாக இல்லை. **நான்காவதாக**, அடிமட்ட வகுப்பினர் தங்களது தாழ்வுமனப்பான்மை காரணமாக ஆதிக்க வகுப்பினரை

தங்களது தலைவர்களெனக் கருதுகின்றனர், ஆதிக்க வகுப்பினரை தங்கள் ஆட்சியாளர்களாக அவர்களே முன்வந்து தேர்ந்தெடுக்கின்றனர். ஐந்தாவதாக, ஆதிக்க வகுப்பினர் இருந்துவருவது ஜனநாயகத்துக்கும் தன்னாட்சிக்கும் முரணானதாகும். ஆதிக்க வகுப்பினர் ஆளும் அதிகாரத்தை எங்கு தக்கவைத்துக் கொண்டிருக்கின்றனரோ அங்கு ஜனநாயகமும் தன்னாட்சியும் வாழ்க்கை எதார்த்தங்களாகி விட்டதாக நினைப்பது தவறு. ஆறாவதாக, வயது வந்தோர் வாக்குரிமையை அடிப்படையாகக் கொண்ட ஓர் அரசியலமைப்பு உருவானதும் தன்னாட்சியும் ஜனநாயகமும் எதார்த்தமாகி விடமாட்டா. அதற்கு மாறாக ஆதிக்க வகுப்பினர் ஆட்சியைக் கைப்பற்றும் தமது ஆற்றலை இழக்கும்போதுதான் இவை எதார்த்தமாகும். ஏழாவதாக, சில நாடுகளில் அடிமட்ட வகுப்பினர் வெறும் வயது வந்தோர் வாக்குரிமையின் உதவியைக் கொண்டே கூட ஆதிக்க வகுப்பினரை ஆட்சிபீடத்திலிருந்து இறக்குவதில் வெற்றி பெறக்கூடும், வேறு சில நாடுகளில் ஆதிக்க வகுப்பினர் ஆட்சிபீடத்தில் அசைக்க முடியாதபடி வலுவாக இருக்கும்போது, அடிமட்ட வகுப்பினர் தங்கள் குறிக்கோளை எய்துவதற்கு வயது வந்தோர் வாக்குரிமை தவிர வேறு பாதுகாப்புகளை நாட வேண்டியிருக்கும்.

இந்த அடிப்படை அம்சங்கள் எல்லாம் ஒவ்வொரு ஜனநாயக அபிமானியின் முன்னரும் சுவரில் எழுதப்பட்டது போன்று இருக்க வேண்டும். அவற்றை அவர்கள் பார்த்துக் குறித்துக் கொள்ள வேண்டும். ஒரு ஜனநாயக அரசியலமைப்பை வகுக்கும்போது பின் கண்டவற்றை மனத்தில் கொள்வதற்கு அது உதவும்: இத்தகைய ஓர் அரசியலமைப்பின் பிரதான குறிக்கோள் ஆதிக்க வகுப்பினரை அதிகாரத்திலிருந்து இறக்கக் கூடியதாகவும், அவர்கள் என்றென்றும் ஆதிக்க வகுப்பினராக இருப்பதைத் தடுக்கக்கூடியதாகவும் இருக்க வேண்டும்; ஒரு ஜனநாயக அரசாங்கத்தை நிறுவக்கூடிய அமைப்பு சித்தாந்தம் சம்பந்தப்பட்டதாக இருக்கக்கூடாது; ஆதிக்க வகுப்பினரை அதிகாரபீடத்திலிருந்து அகற்றுவதே பிரதான குறிக்கோளாக இருப்பதால் ஒரு ஜனநாயக அரசாங்கத்தை ஏற்படுத்துவதற்கான அமைப்பு ஒரே மாதிரியானதாக இருக்க முடியாது; ஜனநாயக அமைப்பில் காணப்படும் வேறுபாடுகளைப் பொறுத்துக் கொள்வதோடு நில்லாமல், அவற்றை ஏற்றுக் கொள்ளவும் வேண்டும்; ஏனென்றால் ஒவ்வொரு நாட்டிலும் இத்தகைய இயக்க நிகழ்வின் மூலம்தான் ஆதிக்க வகுப்பினர் அடிமட்ட வகுப்பினர் மீது தமது ஆதிக்கத்தை நிலைநாட்டினர்.

இத்தகைய நிலைமையில்தான் ஜனநாயகம் இருந்து வருகிறது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக யாரிடமிருந்து அயல்நாட்டவர் தமது கருத்துகளை உருவாக்கிக் கொள்கிறார்களோ அந்த மேலைய எழுத்தாளர்கள் ஜனநாயகம் பற்றிய இத்தகைய எதார்த்தமான கண்ணோட்டத்தை உருவாக்கிக் கொள்ளத் தவறிவிட்டனர். இதற்கு மாறாக இதுகுறித்து அவர்கள் மிகவும் சம்பிரதாயபூர்வமான, மேலெழுந்தவாரியான கருத்தை மேற்கொண்டுள்ளனர்; அரசியல் சட்ட தார்மிகப் பண்பும், வயதுவந்தோர் வாக்குரிமையும், அடிக்கடி நடைபெறும் தேர்தல்களும்தான் ஜனநாயகத்தின் முற்றும் முடிவும் என்ற நிலையை எடுத்துள்ளனர்.

ஜனநாயகத்தில் இந்த மூன்று அம்சங்கள் இருந்தால் போதும், அவற்றிற்கு மேல் வேறு எதுவும் தேவையில்லை என்று கருதுபவர்கள் அநேகமாக ஓர் உண்மையைத் தெரிந்து கொள்ளவில்லை என்றே தோன்றுகிறது. அதாவது அவர்கள் இவ்வாறு செய்வதன் மூலம் ஆதிக்க வகுப்பினரின் கண்ணோட்டத்தைப் பிரதிபலிப்பதைத் தவிர வேறு எதுவும் செய்துவிடவில்லை; வேறு எந்த மாறுபட்ட நிலையையும் கைக்கொண்டுவிடவில்லை என்பதை அவர்கள் உணரத் தவறிவிட்டார்கள் என்றே கூறவேண்டும். இத்தகைய அடிப்படை அம்சங்கள் தங்கள் ஆட்சியையும் அதிகாரத்தையும் எவ்வகையிலும் பாதித்துவிட மாட்டா என்பதை ஆதிக்க வகுப்பினர் அனுபவ ரீதியாக அறிந்திருக்கின்றனர். உண்மையைக் கூறுவதானால், அவர்களுடைய அதிகாரத்துக்கும் செல்வாக்குக்கும் சட்ட வலிமையை அளிக்க இவை உதவியுள்ளன; அடிமட்ட வகுப்பினரின் தாக்குதல்களிலிருந்து இவர்கள் தப்பித்துக் கொள்ள வகை செய்துள்ளன.

ஜனநாயகமும் தன்னாட்சியும் தாமாகவே வளர வேண்டும், அவை வெறும் சம்பிரதாய வடிவங்களாக இருத்தலாகாது என்று விரும்புவோர் ஆதிக்க வகுப்பினர் இருந்துவருவது ஜனநாயகத்தையும் தன்னாட்சியையும் எதிர்நோக்கும் ஓர் அடிப்படையான, மிக முக்கியமான உண்மை என்பதை அங்கீகரிப்பது அவசியம்; இதுதான் ஜனநாயகமும் தன்னாட்சியும் தட்டுத்தடங்கலின்றி வளர்ச்சியுறுவதை விரும்புவோர் கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பான, எதார்த்தபூர்வமான அணுகுமுறையாக இருக்க முடியும். ஒரு சுதந்திர நாட்டில் சுதந்திரம் என்பது ஆதிக்க வகுப்பினர் மட்டுமே அனுபவிக்கக்கூடிய ஒரு தனிச்சலுகையாக இருக்குமா அல்லது அந்த சுதந்திரம் அனைவருக்கும் பொதுவானதாக எல்லோரும் அனுபவிக்கக் கூடியதாக இருக்குமா என்பதை முடிவு செய்வதில் இதனைக் கணக்கி

லெடுத்துக் கொள்ளத் தவறுவது பெரிதும் தீங்கு விளைவிக்கக்கூடிய மிகப் பெரும் பிழையாக இருக்கும். ஆதலால் காங்கிரசை ஆதரிக்கும் அயல்நாட்டவர் காங்கிரஸ் சுதந்திரத்திற்காகப் போராடுகிறதா என்று கேட்கக் கூடாது, அதற்குப் பதிலாக பின்கண்ட கேள்வியைக் கேட்க வேண்டும் என்பது என் கருத்து: யாருடைய சுதந்திரத்திற்காக காங்கிரஸ் போராடி வருகிறது? ஆதிக்க வகுப்பினரின் சுதந்திரத்திற்காகவே காங்கிரஸ் போராடுகிறது என்பதை அயல்நாட்டவர் கண்டால் அவர் காங்கிரஸ்காரர்களிடம் பின்வருமாறு கேட்க வேண்டும்: இந்தியாவிலுள்ள ஆதிக்க வகுப்பினர் ஆளுவதற்குத் தகுதி படைத்தவர்களா? காங்கிரசை ஆதரிப்பதற்கு முன்னர் அவர் குறைந்தபட்சம் இதையாவது செய்ய வேண்டும்.

காங்கிரஸ்காரர்கள் இந்தக் கேள்விகளுக்கு என்ன பதிலளிப்பார்கள்? இது எனக்குத் தெரியாது. ஆனால் இந்தக் கேள்விகளுக்கு எவை உண்மையான பதிலாக இருக்க முடியும் என்று நான் கருதுவதை மட்டும் இங்கு தருகிறேன்.

## IV

இந்த இயலின் முந்திய பகுதியில் கூறியுள்ளவற்றை அயல்நாட்டவர் ஏற்றுக்கொள்கிறாரா என்பது எனக்குத் தெரியாது. அவ்வாறு அவர் ஏற்றுக்கொண்டிருப்பாரானால், நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடி வருவதாக கூறிக் கொள்ளும் காங்கிரஸ் உண்மையில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காகப் போராடவில்லை, அதற்கு மாறாக, பரம்பரை பரம்பரையாக அடிமட்ட வகுப்பினரை பரம்பரை பரம்பரையாக ஆண்டுவரும் ஆதிக்க வகுப்பினரின் பண்டை இந்து ஆட்சி அமைப்பு முறையைப் புனரமைப்பதற்கே அது பாடுபட்டு வருகிறது என்று தெரிவிக்கப்பட்டிருக்கும் கருத்துக்குப் போதிய ஆதாரங்கள் தருமாறு அவர் கேட்பார் என்பதில் ஐயமில்லை. அத்தகைய சான்றுகளைக் கொண்டு அவர் திருப்தியடைவார் என்ற நிச்சயமில்லை. இருப்பினும் அத்தகைய சான்றுகளை அவர் முன் வைக்க தயாராகவே இருக்கிறேன்.

இந்தியாவில் ஆதிக்க வகுப்பினராக இருப்பது யார்? இந்தியர்களுக்கு இத்தகைய கேள்வி தேவையற்றது. ஆனால் அயல்நாட்டவருக்கோ இது முக்கியமானது. எனவே, இக்கேள்விக்குப் பதிலளிப்பது அவசியம். இந்தியாவில் ஆதிக்க வகுப்பினர்களாக இருப்பவர்கள்

பிரதானமாக பிராமணர்கள் ஆவர். இன்றைய பிராமணர்கள் ஒரு காலத்தில் தங்களை பூதேவர்களாக (அதாவது இப்புவியிலுள்ள தெய்வங்களாக) வருணித்துக் கொண்டனர்; அப்படிப்பட்டவர்கள் தாங்கள் ஆதிக்க வகுப்பினர் என வருணிக்கப்படுவதை இப்போது மறுதலிப்பது விந்தையாக இருக்கிறது. இந்தத் திடீர் குட்டிக்கரணத்துக்கு என்ன காரணம்? ''நீங்கள் உலக நீதிமன்றக் குற்றக்கூண்டில் ஏற்றப்படாதிருக்க வேண்டுமென்றால் உங்கள் சொந்த வகுப்பினர் நலன்களுக்கு மட்டுமே சேவை செய்வதை விடுத்து, அனைவரது நலன்களையும் பாதுகாக்க முன்வாருங்கள்'' என்று ஒவ்வொரு சமுதாயத்திலுமுள்ள அறிவுத்துறையினருக்கு மனிதகுலப் புனிதச்சட்டம் விதித்துள்ள கடமைப் பொறுப்பை நிறைவேற்றத் தவறிவிட்டோமே என்று உணர்ந்ததால் ஏற்பட்ட மனச்சான்றின் பொறுமலா இது? குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கிறதா? அல்லது இது அவர்களது தன்னடக்கமா? இதில் எது உண்மை என்று ஊகித்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை.

பிராமணர்கள் ஆதிக்க வகுப்பினர்தான் என்பது சர்ச்சைக்கு இடமற்ற விஷயம். இது சம்பந்தமாக இரண்டு சோதனைகளைப் பயன்படுத்தலாம். ஒன்று மக்களின் மனப்போக்கு; மற்றொன்று நிர்வாகத்தில் ஆதிக்கம். இவை இரண்டைத் தவிர சிறந்ததான, தீர்மானமான வேறு சோதனைகள் இருக்க முடியும் என்று நான் கருதவில்லை. முதல் சோதனையைப் பொறுத்தவரையில் அதில் எத்தகைய ஐயத்துக்கும் இடமில்லை. மக்களின் மனப்போக்கைக் கொண்டு பார்க்கும்போது பிராமணன் புனிதமானவன். பண்டைக் காலத்தில், அவன் எத்தகைய கொடிய குற்றம் செய்தாலும் அவனைத் தூக்கிலிட முடியாது. கீழ்மட்ட வகுப்பைச் சேர்ந்த எந்த ஒரு நபரும் பிராமணர்களின் பாதங்களைக் கழுவிய நீரை அருந்தாமல் தனது உணவை உண்ண முடியாத காலம் ஒன்று இருந்தது. இது சம்பந்தமாக தமது குழந்தைப் பருவ நாட்களை சர். பி.சி. ரே பின்வருமாறு வருணிக்கிறார்: அந்நாட்களில் கீழ்ச் சாதிகளைச் சேர்ந்த குழந்தைகள் காலை வேளையில் கல்கத்தாவின் சாலை ஓரத்தில் கையில் நீர் நிறைந்த குவளைகளுடன் வரிசை வரிசையாக நிற்பார்கள்; அந்தப் பக்கம் ஒரு பிராமணன் எப்போது வருவான் என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். ஏன் தெரியுமா? அந்தப் பிராமணனின் பாதங்களைக் கழுவிய நீரை வீட்டிற்கு எடுத்துச் சென்றால்தான் அவர்களுடைய பெற்றோர்கள் அதனைச் சிறிதளவு உறிஞ்சி குடித்துவிட்டு உணவு உண்ண ஆரம்பிப்பார்கள். புனிதமானவன் என்ற முறையில் அவனுக்குப் பல சட்டக்காப்புரிமைகளும் சலுகைகளும்

உண்டு; இவை அடிமட்ட வகுப்பினருக்கு மறுக்கப்பட்டன. எதிலும் முதல் பலன்கள் பிராமணனையே சேரும். சம்பந்தம் என்னும் திருமண முறை நடை முறையிலுள்ள மலபாரில் நாயர்கள் போன்ற அடிமட்ட வகுப்பினர் தங்கள் பெண்களை பிராமணர்கள் காமக் கிழத்திகளாக வைத்துக் கொள்வதை ஒரு கௌரவமாகக் கருதுகின்றனர். மன்னர்களே கூட தங்கள் ராணிகளுடன் முதலிரவை அனுபவித்துக் கன்னிக் கழிப்பதற்கு பிராமணர்களை விரும்பி அழைத்தனர்.[1]

பிரிட்டிஷ் ஆட்சியில் சமத்துவ சட்டக் கோட்பாடு காரணமாக இந்த உரிமைகள், காப்புரிமைகள், சலுகைகள் யாவும் முடிவுக்கு வந்தன. எனினும் இந்த உரிமைகள் தந்த அனுகூலங்கள் இன்னும் இருந்து வரவே செய்கின்றன; கீழ்ப்பட்ட வகுப்பினர்களின் கண்ணோட்டத்தில் பிராமணன் இன்னும் தனிச் சிறப்புடையவனாக, புனிதமானவனாகவே கருதப்பட்டு வருகிறான்; இன்னமும் அவன் ''சாமி'' (எசமான் என்று இதற்குப் பொருள்) என்றே அழைக்கப் படுகிறான்.

---

1. 16-ஆம் நூற்றாண்டின் மத்தியில் இந்தியாவுக்கு வந்து மலபாரில் சுற்றுப் பயணம் செய்த லுதவிகோ டி வர்த்தேமா பின்வருமாறு கூறுகிறார்:

''இந்தப் பிராமணர்கள் யார் என்பதைத் தெரிந்து கொள்வது முறையானதும் அதேசமயம் உகந்ததுமாகும். நம்மிடையே குருமார்கள் இருப்பதுபோன்று இவர்கள்தான் சமய வினை முறைகளில் பிரதானமானவர்கள். மன்னர் ஒரு பெண்ணை தன்னுடைய மனைவியாகத் தேர்ந்தெடுத்ததும் இந்தப் பிராமணர்களில் மிகச் சிறந்தவனை மிகவும் தகுதியானவனை அழைத்து தன்னுடைய மனைவியுடன் முதலிரவைக் கழித்து கன்னிக் கழிக்கும்படிக் கேட்டுக் கொள்கிறான். அந்தப் பிராமணன் இந்தக் காரியத்தைச் செய்ய தானே விருப்பார்வத்துடன் செல்லுவதாக நினைத்துவிடாதீர்கள். இதன் பொருட்டு மன்னன் அவனுக்கு நூறு முதல் ஐநூறு டுகாட் பணம் தருவதற்குக் கடமைப்பட்டிருக்கிறான். கள்ளிக் கோட்டையில் மன்னனைத் தவிர வேறு எவரும் இவ்வாறு செய்வதில்லை. **வர்த்தேமாவின் சுற்றுப் பயணம்** (ஹக்லுயத் சமுதாயம்), தொகுதி I பக். 141.

ஏனைய யாத்ரிகர்கள் இந்தப் பழக்கம் மிகப் பரவலாக இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளனர். ஹாமில்டன் தமது **கிழக்கிந்தியப் பயண அனுபவங்களில்** பின்வருமாறு கூறுகிறார்:

''சமோரின் திருமணம் செய்து கொள்ளும்போது, மணப்பெண்ணை நம்பூரி (நம்பூத்ரி) அல்லது தலைமைப் புரோகிதன் அனுபவிக்கும்வரை அவளுடன் அவன் கூடி வாழ முடியாது. புரோகிதன் விரும்பினால் மேலும் மூன்று இரவுகளை அவளுடன் கூடி மகிழலாம். ஏனென்றால் அவளது மண உறவின் முதல் கனிகள் அவள் வழிபடும் தெய்வத்துக்கு புனித காணிக்கையாகப் படைக்கப்பட வேண்டும். பிரபுக்கள் சிலரும் புரோகிதர்கள் இதே மாதிரி தங்களுடைய பெண்களை அனுபவிப்பதை மகிழ்வோடு வரவேற்கின்றனர். சாமானிய மக்களும் தங்கள் பெண்களை புரோகிதர்களின் வீடுகளுக்கு அனுப்பும்படி நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். தொகுதி I, பக்கம் 308.

இரண்டாவது சோதனையும் இதுபோன்றே ஐயத்துக்கிட மற்ற உண்மையை வெளிப்படுத்துகிறது. உதாரணத்துக்கு சென்னை மாகாணத்தை மட்டும் எடுத்துக் கொள்வோம். 18 ஆவது அட்டவணை யைப் பாருங்கள் (பக்கம் 83). 1943ல் அரசு பதிவு பெற்ற பதவிகளில் பிராமணர்களும் ஏனைய வகுப்பினர்களும் பெற்றுள்ள பதவிகளின் எண்ணிக்கையை அது காட்டுகிறது.

இதர மாகாணங்களின் புள்ளி விவரங்களும் இதனையே உறுதிப்படுத்துகின்றன. எனினும் அவற்றை எல்லாம் இங்கு எடுத்துக் காட்ட வேண்டிய அவசியம் இல்லை. பிராமணர்கள் தாங்கள் ஆதிக்க வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று உரிமை கொண்டாடினாலும் சரி, கொண்டாடாவிட்டாலும் சரி, நிர்வாகத்தை அவர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்கள் என்ற உண்மையும், அதே போன்று கீழ்மட்ட வகுப்பினர்கள் அவர்களது உச்ச நிலையை ஏற்றுக் கொண்டிருக்கின்றனர் என்ற உண்மையும் நாம் கூற வந்த விஷயத்தை நிலைநாட்டப் போதுமானவையாகும்.

---

(அடிக்குறிப்புத் தொடர்ச்சி)

இந்தப் பழக்கம் குறித்து புச்சானன் தமது பயண நூலில் பின்கண்டவாறு குறிப் பிடுகிறார்:

> ''தமூரி குடும்பப்பெண்கள் பொதுவாக நம்பூதிரிகளால் கருவுறச் செய்யப்படு கின்றனர்; அவர்கள் விரும்பினால் நாயர்களில் உயர்நிலையில் உள்ளவர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம்; எனினும் நம்பூதிரிகள் புனிதத்தன்மை வாய்ந்தவர் களாகக் கருதப்படுவதால் எப்போதும் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.'' **பிங்கர்டெனின் பயணங்கள்**, தொகுதி VIII, பக்கம் 734.

மலபார் மற்றும் அஞ்செங்கோ கெஜட்டீரின் ஆசிரியரான திரு. சி.ஏ. இன்னஸ் சென்னை அரசாங்கத்தின் அனுமதியோடு பின்வருமாறு கூறுகிறார்: **மருமக்கள்தாயம்** என்னும் முறையைப் பின்பற்றும் எல்லா வகுப்பினரிடையேயும் அதேபோன்று மருமக்கள் தாயத்தைக் கடைப்பிடிப்போரில் பலரிடையேயும் ''தாலிகட்டும் திருமணம்'' என்னும் மற்றொரு ஏற்பாடு நடைமுறையில் இருந்து வருகிறது. மலையாளிகளின் திருமண பழக்க வழக்கங்களிலேயே இது நூதனமானது, தனித்தன்மை வாய்ந்தது என வருணிக்கப்படு கிறது. இதன்படி, ஒரு யுவதி பூப்புப்பருவம் எய்துவதற்கு முன்னர் அவள் கழுத்தில் தாலி (தங்கத்தாலோ அல்லது வேறு ஏதேனும் உலோகத்தாலோ செய்யப்பட்ட பதக்கம் போன்ற ஒரு சிறு ஆபரணம் நூல்கயிற்றில் கட்டப்படுவது) கட்டப்படுகிறது. அதே சாதியை அல்லது உயர் சாதியைச் சேர்ந்த ஒருவனால் இவ்வாறு தாலி கட்டப்படுகிறது. இவ்வாறு செய்த பிறகுதான் அந்த இளம் பெண் சம்பந்தம் செய்து கொள்ள முடியும். தாலிகட்டுபவனுக்கு அல்லது மணவாளனுக்கு (மணமகன்) அந்தப் பெண்ணுடன் கூடி வாழும் உரிமை அளிப் பதற்காகவே இந்தச் சடங்கு செய்யப்படுவதாக பொதுவாகக் கருதப்படுகிறது. கீழ்ச்சாதிப் பெண்களை முதலில் அனுபவிப்பதற்கு பூதேவர்களும் (அதாவது பிராமணர்களும்) சத்திரியர்களும் உரிமை கொண்டாடி வந்ததிலிருந்தும் இந்த வழக்கம் தோன்றியிருக்கக் கூடும், தொகுதி I, பக்கம் 101.

ஆதிக்க வகுப்பு அந்தஸ்தை தனக்கு அளிக்கத் தயாராக இருப்பவர்களும், தனக்கு அடிபணிந்து ஒத்துழைக்கக் கூடியவர்களுமான ஏனைய வகுப்பினரை பிராமணன் எப்போதுமே தன்னுடைய கூட்டாளிகளாக வரித்துக் கொண்டு வந்திருக்கிறான் என்பதை வரலாறு காட்டுகிறது. பண்டைக் காலத்திலும் மத்தியக் காலத்திலும் போர் வீரர் வகுப்பினரான சத்திரியர்களுடன் அவன் இத்தகைய நேச உறவை வளர்த்துக் கொண்டு வந்திருக்கிறான். இந்த இரு வகுப்பினரும் சேர்ந்து பொது மக்களை அடக்கி ஆண்டு வந்திருக்கின்றனர்; இன்னும் சொல்லப்போனால் பிராமணன் தனது எழுதுகோலைக்கொண்டும், சத்திரியன் தனது வாளைக் கொண்டும் அவர்களைப் பணியவைத்து வந்திருக்கின்றனர் என்று கூற வேண்டும். தற்போது, பனியாக்கள் எனப்படும் வைசிய வகுப்பினருடன் பிராமணன் கூட்டுறவை வளர்த்துக் கொண்டு வருகிறான். இந்தக் கூட்டுறவு சத்திரியனிடமிருந்து பனியாவுக்கு மாறியது முற்றிலும் இயல்பே. பெரு வணிகம் கொடி கட்டிப் பறந்து வரும் இக்காலத்தில் பணம் வாளைவிட வலிமை மிக்கது. வகுப்புகளின் உறவில் இந்த மாற்றம் ஏற்பட்டிருப்பதற்கு இதுவும் ஒரு காரணம். இரண்டாவது காரணம் அரசியல் எந்திரத்தை செம்மையுற இயக்குவதற்குப் பணம் இன்றியமையாததாக இருப்பதாகும். பனியாவிடமிருந்தே பணம் கிடைக்க முடியும். பனியாக்கள் தான் காங்கிரசுக்குப் பிரதானமாக நிதி உதவி அளித்து வருகின்றனர். திரு. காந்தி ஒரு பனியாவாக இருப்பதும், அரசியலில் முதலீடு செய்யப்படும் பணம் நல்ல ஆதாயத்தை அளிக்கும் என்று அவர் உணர்ந்திருப்பதும்தான். இது விஷயத்தில் எவருக்கேனும் ஐயமிருக்குமாயின் 1942 ஜூன் 6ஆம் தேதி திரு. லூயி பிஷரிடம் திரு. காந்தி என்ன கூறினார் என்பதைப் படித்துப் பார்ப்பது நலம். பிஷர் கூறுகிறார்:[1]

> ''காங்கிரஸ் கட்சியைப் பற்றி அவரிடம் கேட்பதற்கு ஏராளமான கேள்விகள் இருப்பதாக நான் கூறினேன். காங்கிரஸ் பெரு முதலாளிகளின் ஆதிக்கத்தில் இருக்கிறதென்றும், திரு. காந்தி பம்பாய் மில் முதலாளிகளின் ஆதரவைப் பெற்றிருக்கிறார் என்றும், அதனால் அவர் எவ்வளவு பணம் கேட்டாலும் அவர்கள் அள்ளி வாரித் தருகிறார்கள் என்றும் உயர் நிலையிலுள்ள பல பிரிட்டிஷ்காரார்கள் என்னிடம் கூறியதை

1. காந்தியுடன் ஒரு வாரம் (1943), பக்கம் 41.

## அட்டவணை - 18

| வகுப்பினர் | மக்கள் தொகை லட்சத்தில் | மக்கள் தொகை சத வீதம் | அரசு பதிவு பெற்ற மொத்த பதவிகளில் (2,200) ஒவ்வொரு வகுப்பினரும் பெற்றுள்ள பதவிகளின் எண்ணிக்கை | பணி நிய மனங்களின் சதவிகிதம் | அரசு பதிவு பெறாத பதவிகள் — ரூ. 100க்கு மேல் மொத்தம் 7,500 — ஒவ்வொரு வகுப்பினரும் பெற்றுள்ள பதவிகளின் எண்ணிக்கை | அரசு பதிவு பெறாத பதவிகள் — ரூ. 100க்கு மேல் மொத்தம் 7,500 — ஒவ்வொரு வகுப்பினரும் பெற்றுள்ள பதவிகளின் சதவிகிதம் | அரசு பதிவு பெறாத பதவிகள் — ரூ. 35க்கு மேல் மொத்தம் 20,732 — ஒவ்வொரு வகுப்பினரும் பெற்றுள்ள பதவிகளின் எண்ணிக்கை | அரசு பதிவு பெறாத பதவிகள் — ரூ. 35க்கு மேல் மொத்தம் 20,732 — ஒவ்வொரு வகுப்பினரும் பெற்றுள்ள பதவிகளின் சதவிகிதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| பிராமணர்கள் | 15 | 3 | 820 | 37 | 3,280 | 43.73 | 8,812 | 42.4 |
| கிறித்தவர்கள் | 20 | 4 | 190 | 9 | 750 | 10 | 1,655 | 8.0 |
| முகமதியர்கள் | 37 | 7 | 150 | 7 | 497 | 6.63 | 1,624 | 7.8 |
| தாழ்த்தப்பட்ட வகுப்பினர் | 70 | 14 | 25 | 1.5 | 39 | .52 | 144 | .69 |
| பிராமணரல்லாதோர் — முன்னேறிய பிராமணரல்லாதோர் | 113 | 22 | 620 | 27 | 2,543 | 33.9 | 8,440 | 40.6 |
| பிராமணரல்லாதோர் — பின்தங்கிய வகுப்பினர் | 245 | 50 | 50 | 2 | | | | |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஆசியரல்லாதோரும் ஆங்கிலோ-இந்தியர்களும் | - | - | - | - | 372 | 5.0 | 83 | .4 |
| இதர வகுப்பினர் | - | - | - | - | 19 | .5 | 24 | .11 |

*நினைவு கூர்ந்தேன். 'இந்தக் கூற்றுகளில் எந்த அளவுக்கு உண்மை இருக்கிறது' என்று அவரிடமே கேட்டேன்.''*

*'துரதிர்ஷ்டவசமாக அது உண்மைதான்' என்று சர்வ சாதாரணமாகக் கூறினார். 'காங்கிரஸ் தனது பணியைச் செய்ய அதனிடம் போதிய பணமில்லை, ஒவ்வொரு உறுப் பினரிடமிருந்து ஆண்டுக்கு நான்கு அணாக்கள் (சுமார் எட்டு சென்ட்டுகள்) வசூலித்து கட்சியை நடத்தலாம் என்று ஆரம் பத்தில் நினைத்தோம். ஆனால் அது காரியசாத்தியமாக வில்லை.''*

*'காங்கிரசின் வரவு செலவுத் திட்டத்தில் செல்வந்தர் களின் பங்கு எவ்வளவு' என்று கேட்டேன்.''*

*'அநேகமாக எல்லாம் அவர்கள் பங்குதான்' என்று அவர் கூறினார். 'உதாரணமாக இந்த ஆசிரமத்தில் நாங்கள் இப்போது செய்வதைவிட மிகச் சிக்கனமாக வாழ முடியும், மிகக் குறைவாக செலவிட முடியும். ஆனால் நாங்கள் அவ் வாறு செய்வதில்லை. ஏனென்றால் எங்களுடைய செல்வந் தர்களான நண்பர்களிடமிருந்து எங்களுக்குப் பணம் வரு கிறது.''*

இந்தக் காரணத்துக்காக பனியாவை ஆதிக்க வகுப்பு அந்தஸ் திலிருந்து கீழே இறக்குவது பிராமணனுக்கு சாத்தியமில்லை. உண்மையில், பனியாவுடன் வெறும் செயல் முறையிலான உறவை மட்டுமன்றி, நேச பூர்வமான உறவையும் பிராமணன் வளர்த்து வரு கிறான் என்றே கூற வேண்டும். இதன் விளைவாக இன்று இந்தியா வில் ஆதிக்க வகுப்பினர் பிராமணன் - சத்திரியன் என்றிருந்தது மாறி பிராமணன் - பனியா என்றாகிவிட்டது.

இந்தியாவில் ஆதிக்க வகுப்பினராக இருப்பது யார் என்பது குறித்து ஏற்கெனவே போதிய அளவு கூறிவிட்டேன். 1937ல் மாகாண சட்டமன்றங்களுக்கு நடைபெற்ற தேர்தல்களில் ஆதிக்க வகுப்பினர் எந்த அளவுக்கு வெற்றி பெற்றனர் என்பதை இனி பார்ப்போம்.

1937 ஆம் வருடத் தேர்தல்கள் வயது வந்தோர் வாக்குரிமை அடிப்படையில் நடைபெறவில்லை. எனினும் ஆதிக்க வகுப்பினர் மட்டுமன்றி ஏனைய பல வகுப்பினரும் வாக்காளர் பட்டியலில்

இடம் பெற்றிருந்தனர்; சொல்லப்போனால் 1937 ஆம் வருடத்திற்கு முந்திய ஏனைய தேர்தல்களில் பயன்படுத்தப்பட்ட வாக்காளர் பட்டியலை விட இது விரிவானதாக இருந்தது என்றே கூறவேண்டும். இந்த வாக்காளர் பட்டியலின் அடிப்படையில் நடைபெற்ற இத்தேர்தல்களில் அடிமட்ட வகுப்பினர்களுக்கு எதிராக ஆதிக்க வகுப்பினர் எந்த அளவுக்கு வாக்குகளைப் பெற்றனர் என்பதைப் பார்ப்போம்.

துரதிர்ஷ்டவசமாக, டோடின் நாடாளுமன்ற கையேடு போன்ற ஒன்றை எந்த இந்தியப் பத்திரிகையாளரும் தயாரிக்கவில்லை. இதன் காரணமாக காங்கிரஸ் சார்பில் நின்று வெற்றி பெற்ற உறுப்பினர்களின் சாதி, தொழில், கல்வி, சமூக அந்தஸ்து முதலியவை குறித்த துல்லியமான விவரங்கள் கிடைக்கவில்லை. இந்த விஷயம் முக்கியமானது என்பதால் 1937ல் மாகாண சட்டமன்றங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் குறித்த விவரங்களைச் சேகரிப்பது அவசியம் என்று கருதினேன். ஆனால் ஒவ்வொரு உறுப்பினர் குறித்த துல்லியமான விவரங்களைச் சேகரிப்பதில் என்னால் வெற்றிபெற முடியவில்லை. இதனால் வகைப்படுத்தப்பட முடியாதவர்கள் என்று பலரை விட்டுவிட வேண்டியதாயிற்று. எனினும் என்னால் சேகரிக்க முடிந்த விவரங்களே கூட சில திட்டவட்டமான முடிவுகளுக்கு வருவதற்குப் போதுமானவை என்று கருதுகிறேன்.

1937 ஆம் வருடத் தேர்தலில் ஆதிக்க வகுப்பினர் எந்த அளவுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்ற கேள்விக்கு அட்டவணை 19ல் (பக்கம் 89) விடை காணலாம். சட்டமன்றங்களுக்கு காங்கிரஸ் சார்பில் நின்று வெற்றி பெற்றோரில் ஆதிக்க வகுப்பினரைப் பிரதிநிதித்துவப் படுத்தும் பிராமணர்கள், பனியாக்கள் (நிலப்பிரபுக்கள் மற்றும் லேவாதேவிக்காரர்கள்) போன்றோரின் விகிதாசாரத்தையும், அடிமட்ட வகுப்பினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிராமணரல்லாதோர், ஷெட்யூல்டு வகுப்பினர் போன்றோரின் விகிதாசாரத்தையும் இந்த அட்டவணையில் தெரிந்து கொள்ளலாம்.

இந்துக்களின் மொத்த மக்கட் தொகையில் பிராமணர்களின் விகிதாசாரம் எவ்வளவு சின்னதாக இருக்கிறது என்பதை அறியாதவர்கள் இந்தத் தேர்தலில் பிராமணர்கள் எந்த அளவுக்கு அபரிதமான பிரதிநிதித்துவத்தைப் பெற்றிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள முடியாது. ஆனால் பிராமணர்கள் அவர்களது எண்ணிக்கை

யோடு ஒப்பிடும்போது அளவுக்கு அதிகமான பிரதிநிதித்துவத்தைப் பெற்றிருக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை.

பனியாக்கள், வணிகர், நிலப் பிரபுக்கள் போன்ற சொத்துடைமை வர்க்கத்தினர் எந்த அளவுக்குப் பிரதிநிதித்துவம் பெற்றிருக்கின்றனர் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புபவர்கள் அட்டவணை 20ல் (பக்கம் 90) தரப்பட்டிருக்கும் புள்ளிவிவரங்களைப் பார்க்கலாம். காங்கிரஸ் சார்பில் எத்தனை பனியாக்கள், வணிகர்கள், நிலப்பிரபுக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர் என்பதை இந்த அட்டவணை காட்டுகிறது. இதிலும், பனியாக்களும், வணிகர்களும், நிலப்பிரபுக்களும் பெற்றுள்ள பிரதிநிதித்துவம் அவர்களது எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது மிக அதிகமாகும்.

1937ல் நடைபெற்ற தேர்தல்களைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட சட்டமன்றங்களில் ஆதிக்க வகுப்பினரின் நிலை இவ்வாறுதான் இருந்தது. ஒட்டுமொத்தத்தில் பார்க்கும்போது ஆதிக்க வகுப்பினர் சட்டமன்றங்களில் சிறுபான்மையினராகத்தானே இருக்கின்றனர் என்று சிலர் வாதிக்கலாம். ஆனால் இவ்வாறு வாதிப்பவர்களுக்கு ஒரு விஷயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்: ஆதிக்க வகுப்பினரின் மேலாதிக்கத்தை சட்டமன்றத்தில் அவர்கள் பெற்றிருக்கும் இடங்களைக் கொண்டு மதிப்பிடலாகாது; மாறாக, நிர்வாக அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்வதற்கு அவர்களுக்குள்ள ஆற்றலைக் கொண்டே அதனை மதிப்பிட வேண்டும். எனவே, அமைச்சர்களின் வர்க்க இயைபை ஆராய்வது இங்கு பொருத்தமாக இருக்கும். இதுசம்பந்தமான விவரங்களை அட்டவணைகள் 21, 22ல் (பக்கங்கள் 91, 92) காணலாம். இந்த அட்டவணைகளை[1] மேலெழுந்தவாரியாகப் பார்த்தால்கூட தற்போதைய தலையாய ஆதிக்க வகுப்பினரான பிராமணர்கள் அமைச்சரவையில் மிக அதிகமான இடங்கள் பெற்றிருப்பதைக் காணலாம்.

அனைத்து இந்து மாகாணங்களிலும் பிரதம அமைச்சர்கள் பிராமணர்களே. எல்லா இந்து மாகாணங்களிலும் இந்துவல்லாத அமைச்சர்களைத் தவிர்த்துப் பார்த்தால், பெரும்பாலான அமைச்சர்

1. இந்த அட்டவணைகளில் தரப்பட்டிருக்கும் விவரங்கள் இந்திய அரசாங்கம் அதிகாரப்பூர்வமாக வெளியிடும் தகவல் என்னும் வெளியீட்டின் 1939, ஜூலை 15 இதழிலிருந்து சேகரிக்கப்பட்டவையாகும்.

## அட்டவணை - 19

### மாகாண சட்டமன்றங்களில் சாதி வாரியாக காங்கிரஸ் உறுப்பினர்களின் வகைப்பிரிவு

| மாகாணம் | பிராமணர்கள் | பிராமண ரல்லாதோர் | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் | தகவல் அளிக்காத வர்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| அசாம் | 6 | 21 | 1 | 5 | 33 |
| வங்காளம் | 15 | 27 | 6 | 6 | 54 |
| பீகார் | 31 | 39 | 16 | 12 | 98 |
| மத்திய மாகாணங்கள் | 28 | 35 | 7 | - | 70 |
| சென்னை | 38 | 90 | 26 | 5 | 159 |
| ஒரிசா | 11 | 20 | 5 | - | 36 |
| ஐக்கிய மாகாணங்கள் | 39 | 54 | 16 | 24 | 133 |

## அட்டவணை - 20

### மாகாண சட்டமன்றங்களில் தொழில்வாரியாக. காங்கிரஸ் உறுப்பினர்களின் வகைப் பிரிவு

| மாகாணம் | வழக்குரைஞர்கள் | மருத்துவர்கள் | நிலப் பிரபுக்கள் | தொழிலதிபர்கள் வணிகர்கள் | தனியார் துறை அதிகாரிகள் | லேவாதேவிக்காரர்கள் | எப்பிரிவிலும் சேராதவர்கள் | தகவல் தராதவர்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அசாம் | 16 | 2 | 2 | 1 | - | - | 3 | 9 | 33 |
| வங்காளம் | 9 | 2 | 16 | 5 | 2 | - | 16 | 4 | 54 |
| பீகார் | 14 | 4 | 56 | 6 | 3 | - | 1 | 14 | 98 |
| மத்திய மாகாணங்கள் | 20 | 2 | 25 | 10 | - | - | 8 | 5 | 70 |
| சென்னை | 52 | 2 | 45 | 18 | 2 | 1 | 3 | 36 | 159 |
| ஒரிசா | 8 | 1 | 17 | 4 | 4 | 1 | 1 | - | 36 |

## அட்டவணை - 21

## காங்கிரஸ் மாகாணங்களில் அமைச்சரவைகளின் இயைபு*

| மாகாணம் | காபினட் அமைச்சர்களின் மொத்த எண்ணிக்கை | இந்துக்கள் அல்லாத அமைச்சர்களின் எண்ணிக்கை | அமைச்சரவையின் இந்து அமைச்சர்கள் | | | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் | பிரதம மந்திரிகள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | மொத்தம் | பிராமணர்கள் | பிராமணர் அல்லாதவர்கள் | | |
| அசாம் | 8 | 3 | 5 | 1 | 1 | இல்லை | பிராமணர் |
| பீகார் | 4 | 1 | 3 | 1 | 1 | 1 | பிராமணர் |
| பம்பாய் | 7 | 2 | 5 | 3 | 2 | இல்லை | பிராமணர் |
| மத்திய மாகாணங்கள் | 5 | 1 | 4 | 3 | 1 | இல்லை | பிராமணர் |
| சென்னை | 9 | 2 | 7 | 3 | 3 | 1 | பிராமணர் |
| ஒரிசா | 3 | இல்லை | 3 | 1 | 1 | 1 | பிராமணர் |
| ஐக்கிய மாகாணங்கள் | 6 | 2 | 4 | 4 | இல்லை | இல்லை | பிராமணர் |

* இந்தியத் தகவல் ஏடு 1939 ஜூலை 15 ஆம் தேதிய இதழில் பிரசுரித்தபடி 1939 மே மாதம் இருந்த நிலையை இந்த அட்டவணை காட்டுகிறது.

## அட்டவணை - 22

### காங்கிரஸ் மாகாணங்களில் பார்லிமெண்டரி காரியதரிசிகளின் வகைப்பிரிவு*

| மாகாணம் | பார்லிமெண்டரி காரியதரிசிகளின் மொத்த எண்ணிக்கை | இந்துவல்லாத பார்லிமெண்டரி காரியதரிசிகளின் எண்ணிக்கை | இந்து பார்லிமெண்டரி காரியதரிசிகள் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | மொத்தம் | பிராமணர்கள் | பிராமணர் அல்லாதவர்கள் | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் |
| அசாம் | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| பீகார் | 8 | இல்லை | 8 | 2 | 5 | 1 |
| பம்பாய் | 6 | இல்லை | 6 | 1 | 5 | இல்லை |
| மத்திய மாகாணங்கள் | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| சென்னை | 8 | 1 | 9 | 3 | 4 | 1 |
| ஒரிசா | 3 | இல்லை | 3 | ? | -? | இல்லை |
| ஐக்கிய மாகாணங்கள் | 12 | 1 | 11 | 2 | 8 | 1 |

★ 1939 ஜூலை 15ஆம் தேதி இந்தியத் தகவல் ஏட்டிலிருந்து தொகுக்கப்பட்டது. கேள்விக்குறி பிராமணரா, பிராமணரல்லாதவரா என்பதை நிச்சயிக்க இயலாமையைக் குறிக்கிறது.

களும், பார்லிமெண்டரி காரியதரிசிகளும்கூட பிராமணர்களாக இருப்பதைக் காணலாம்.

இதுவரை கூறப்பட்டவற்றிலிருந்து இரண்டு விஷயங்கள் பட்டப்பகல் போல் வெட்ட வெளிச்சமாகின்றன. முதலாவதாக, அடிமட்ட வகுப்பினரிடமிருந்து முற்றிலும் வேறுபட்ட, மாறுபட்ட, நன்கு வரையறுக்கப்பட்ட ஓர் ஆதிக்க வகுப்பினர் இந்தியாவில் இருக்கின்றனர். இரண்டாவதாக, இந்த ஆதிக்க வகுப்பினர் எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் மிகவும் சக்தி வாய்ந்தவர்கள். இதனால்தான் 1937 ஆம் வருடத் தேர்தல்களில் அவர்கள் மிக எளிதாக அதிகாரத்தைக் கைப்பற்றினர்; அடிமட்ட வகுப்பினர் மீது தங்கள் மேலாதிக்கத்தை நிலைநாட்டினர். எனது கருத்தை வலியுறுத்துவதற்கு மற்றுமொரு விஷயத்தை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். 1937 ஆம் வருடத் தேர்தல்களில் ஆதிக்க வகுப்பினர் வெற்றி பெறுவதற்கு காங்கிரசே காரணம் என்பதை எடுத்துக்காட்டுவதே என் நோக்கம். அடிமட்ட வகுப்பினர்மீது ஆதிக்க வகுப்பினர் தமது மேலாதிக்கத்தை நிலைநாட்டுவதற்கு காங்கிரஸ்தான் உதவிற்று என்பதை ஐயத்துக்கிடமின்றி மெய்ப்பிக்க வேண்டும் என்பதை நான் அறிவேன். காங்கிரசுக்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்று சிலர் கூறலாம். அப்படியே காங்கிரஸ் இதற்குக் காரணமாக இருந்தாலும் அதனால் ஏற்பட்ட விளைவு தற்செயலானதே என்றும், ஆதிக்க வகுப்பினர்கள் இந்த மேலாதிக்க நிலையை எய்துவதற்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் எதுவும் காங்கிரசுக்கு இல்லை என்றும் வாதிக்கலாம்.

## V

இவற்றில் முதல் வாதத்தை எடுத்துக் கொள்வோம். இத்தகைய வாதத்தில் ஈடுபடுவோர் அநேகமாக அட்டவணைகள் 19, 20, 21, 22ல் தரப்பட்டுள்ள புள்ளிவிவரங்கள் எந்த மாகாணங்களுக்குரியவையோ அந்த மாகாணங்களின் அரசியல் இயல்பை அறியாதவர்களாக இருக்கக்கூடும். இதை அவர்கள் அறிந்திருந்தால் இத்தகைய வாதத்தில் இறங்கியிருக்க மாட்டார்கள். இந்தப் புள்ளிவிவரங்கள் காங்கிரஸ் மாகாணங்கள் எனப்படும் மாகாணங்கள் சம்பந்தப்பட்டவை. இந்த மாகாணங்களில் பெரும்பான்மை கட்சி காங்கிரஸ் கட்சிதான்; அமைச்சரவைகள் காங்கிரஸ் அமைச்சரவைகளே. இந்த காங்கிரஸ் மாகாணங்களில் ஆதிக்க வகுப்பினர்கள் அடிமட்ட வகுப்பினர்கள் மீது தங்கள் ஆட்சியை நிலைநாட்டுவதில் வெற்றிபெற்றுள்ளனர்;

அப்படியிருக்கும்போது இதற்கான பொறுப்பிலிருந்து காங்கிரஸ் எப்படித் தப்பிக்க முடியும் என்று தெரியவில்லை. காங்கிரஸ் ஒழுங் கும் கட்டுப்பாடும் மிக்க கட்சி. தேர்தல்களை நடத்துவதற்கு நன்கு ஆலோசித்து ஒரு திட்டத்தையும் தயாரித்திருந்தது. ஒவ்வொரு மாகாணத்திலும் பார்லிமெண்டரி போர்டு அமைக்கப்பட்டிருந்தது. பின்வரும் பணிகள் அதனிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன: (1) தேர் தலில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுத்தல், (2) அமைச் சரவைகள் அமைப்பது பற்றி முடிவெடுத்தல், (3) அமைச்சர்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தல். மாகாண பார்லிமெண்டரி போர்டுகளுக்கு அவற்றின் பணிகளை மேற்பார்ப்பதற்கு மத்திய பார்லிமெண்டரிபோர்டு இருந்தது. காங்கிரஸ் நன்கு திட்டமிட்டு, கட்டுப்பாடாக பங்கு கொண்ட தேர்தல் அது. இவ்வாறெல்லாம் இருக்கும்போது, 1937 தேர்தல்களில் ஆதிக்க வகுப்பினர்கள் அதி காரத்தைக் கைப்பற்றினார்கள் என்றால் அதற்கு காங்கிரஸ் பொறுப் பல்ல என்று வாதிப்பது அர்த்தமற்றதும் அபத்தமானதுமாகும்.

இரண்டாவது வாதமும் முதல் வாதத்தைப் போன்றே சோடை யானது. காங்கிரஸ் மாகாணங்களில் ஆதிக்க வகுப்பினர்கள் அதி காரத்துக்கு வந்தது தற்செயலானது என்றும், அது திட்டமிடப்பட்டது அல்ல என்றும் வாதிக்க விரும்புவோர் தங்களது வாதம் எடுபடாத ஒரு வாதம் என்பதை அறிந்திருக்க வேண்டும். இதை தற்செய லானது எனக் கருத முற்படுபவர்களின் கவனத்துக்குப் பின்கண்ட நிகழ்ச்சிகளைக் கொண்டு வருகிறேன்; அவற்றை அவர்கள் பரிசீலித் துப் பார்க்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

முதலாவதாக, கடந்த காலத்தில் காங்கிரசுக்கு வழிகாட்டி வந்தவர்களும், தற்போது காங்கிரஸ் விவகாரங்களை நிர்வகித்து வருபவர்களுமான காங்கிரஸ் மேலிடத்தைச் சேர்ந்த முக்கிய தலை வர்களின் மனப்போக்கைப் பரிசீலிப்போம். திலகருடன் ஆரம்பிப்பது உசிதமாக இருக்கும். அவர் இன்று இல்லை. ஆனால் அவர் உயிரோ டிருந்த காலத்தில் காங்கிரசில் மிக உன்னதமான தலைவராக இருந்தார்; காங்கிரஸ் அமைப்பில் மிகப்பெரும் செல்வாக்கை பெற் றிருந்தார். திரு. திலகர் ஒரு பிராமணர்; ஆதிக்க வகுப்பைச் சேர்ந் தவர். சுயராஜ்ய இயக்கத்தின் தந்தை என அவர் ஏற்றிப் போற்றப் படினும் அடிமட்ட வகுப்பினரிடம் அவருக்கு இருந்த வெறுப்பு அனைவரும் அறிந்த ஒன்று. அடிமட்ட வகுப்பினர் சம்பந்தமாக அவர் கொண்டிருந்த மனப்போக்கை அம்பலப்படுத்துவதற்கு ஒரே ஒரு

நிகழ்ச்சியை மட்டும் இடத்துக்கு அஞ்சி இங்கு விவரிக்க விரும்பு கிறேன்.

சட்டமன்றங்களில் தங்களுக்குத் தனிப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும் என்று 1918ல் பிராமணரல்லாதோரும் பிற்பட்ட வகுப்பினரும் ஓர் இயக்கத்தைத் தொடங்கினர். அச்சமயம் ஷோலாப்பூரில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் திரு. திலகர் பேசும்போது, எண்ணெய் எடுக்கும் செட்டியார்களும், புகையிலைக் கடைக்காரர்களும், சலவையாளர்களும், அவர்களைப் போன்ற ஏனையோரும் - இதுதான் பிராமணரல்லாதோரையும் பிற்பட்ட வகுப்பினரையும் பற்றிய அவரது வருணனையாகும் - சட்டமன்றத் துக்குச் செல்ல வேண்டுமென்று ஏன் ஆசைப்படுகிறார்கள் என்பதை தம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை என்று கூறினார். தமது அபிப்பிராயத்தில், சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து நடந்து கொள்வதுதான் அவர்களது கடமையே தவிர சட்டங்களை இயற்றும் அதிகாரங் களைப் பெறுவதற்கு அவர்கள் விழையக்கூடாது என்றும் குறிப் பிட்டார்.

திரு. திலகரை அடுத்து இனி திரு. வல்லபாய் பட்டேலை எடுத்துக் கொள்வோம். அவரது மனப்போக்கை வெளிப்படுத்துவதற்கு இங்கு ஒரே ஒரு நிகழ்ச்சியை மட்டும் கூறுகிறேன். 1942ல் லின் லித்கோ பிரபு இந்திய மக்களில் பல்வேறு பகுதியினரையும் பிரதி நிதித்துவப்படுத்தும் 52 முக்கியமான இந்தியப் பிரமுகர்களைத் தமது இருப்பிடத்துக்கு அழைத்தார்; போர் முயற்சியில் அனைத்து இந்தியர் களது ஒத்துழைப்பையும் ஒத்துணர்வையும் ஈடுபடுத்தும் வகையில் மத்திய அரசாங்கத்துக்குப் பொது மக்களின் ஆதரவை மேலும் திரட்டு வதற்கு என்ன வழிவகைகளை மேற்கொள்ளலாம் என்பது குறித்து இந்தப் பிரமுகர்களுடன் கலந்தாலோசிப்பதே இதன் நோக்கம். இவ் வாறு அழைக்கப்பட்டவர்களில் ஷெட்யூல்டு வகுப்புகளைச் சேர்ந்த வர்களும் இருந்தனர். இத்தகைய கீழ்த்தரமானவர்களுக்கு வைசிராய் அழைப்பு விடுத்ததை திரு. வல்லபாய் பட்டேலால் சகித்துக் கொள்ள முடியவில்லை. இந்த நிகழ்ச்சி முடிந்த பிறகு ஆமதாபாத்தில் நடை பெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசிய திரு. வல்லபாய் பட்டேல் பின்கண்டவாறு கூறினார்:[1]

---

3. அரசியலில் அர்த்தமும் அனர்த்தமும் என்னும் கட்டுரையில் திரு. அஞ்சனாவின் மேற்கோள் : 1945 ஜனவரி 14 ஆம் தேதிய ராஸ்த் ரகபார் பம்பாய் குஜராத்தி வார இதழ், தொடர் எண் XII

> ''வைசிராய் இந்துமகாசபைத் தலைவர்களை அழைத்தார், முஸ்லீம் லீக் தலைவர்களை அழைத்தார், அத்தோடு **காஞ்சிகள்** (எண்ணெய் எடுப்போர்), **மோச்சிகள்** (செருப்பு செப்பனிடும் செம்மான்கள்) போன்றோரையும் கூட அழைத்தார்.''

திரு. வல்லபாய் பட்டேல் மனக்காழ்ப்பும் வன்மமும் சுடுசொல்லும் கொண்ட தமது சொற்களில் **காஞ்சிகளையும், மோச்சிகளையும்** மட்டுமே குறிப்பிட்ட போதிலும், இந்த நாட்டின் அடிமட்ட வகுப்புகளிடம் ஆதிக்க வகுப்புகளும் காங்கிரஸ் மேலிடமும் கொண்டுள்ள பொதுவான வெறுப்பையும் இகழ்ச்சியையுமே அவருடைய உரை குறிக்கிறது என்பதில் அணுவளவும் ஐயமில்லை.

இது விஷயத்தில் பண்டித ஜவாஹர்லால் நேருவின் நிலைப்பாடுகளைத் தெரிந்து கொள்வது நலமாக இருக்கும். பண்டித ஜவாஹர்லால் நேரு ஒரு பிராமணர்; வகுப்புவாதக் கண்ணோட்டம் இல்லாதவர் என்றும், சமய சார்பற்ற மனோபாவம் கொண்டவர் என்றும் புகழ் பெற்றவர். ஆனால் சில உண்மைகள் இந்தப் புகழாரத்தை நியாயப்படுத்துவதாகத் தோன்றவில்லை. 1931ல் பண்டிட் ஜவாஹர்லால் நேருவின் தந்தை காலமானார். அப்போது அவர் என்ன செய்தார்? வைதிக இந்து மதம் வகுத்துத் தந்துள்ள சமய சடங்குகளை கங்கை நதிக்கரையில் பிராமண புரோகிதர்கள் முன்னிலையில் முறைப்படி செய்தார். இப்படிப்பட்டவரை சமயசார்பற்றவர் என்று எப்படிக் கூறமுடியும்? நேரு வகுப்புவாத மனோபாவம் கொண்டவர் அல்ல என்ற கூற்றைப் பொறுத்தவரையில் டாக்டர் பட்டாபி சீதாராமையாவே என்ன கூறுகிறார் என்று பார்ப்போம். பண்டிட் நேருவிடம் தாம் ஒரு பிராமணர் என்ற உணர்வு அதிகமிருந்தது என்று அவர் கூறுகிறார்.[1] பண்டிட் நேரு இந்தியாவில் மிகவும் தேசிய மனோபாவம் கொண்ட தலைவர் என்று கருதி வருபவர்களுக்கு இது மிகுந்த அதிர்ச்சி அளிக்கக் கூடியதாக இருக்கக்கூடும். ஆனால் டாக்டர் சீதாராமையா தாம் என்ன சொல்லுகிறோம் என்பதைத் தெரிந்தே இக்கருத்தை வெளியிட்டிருக்கிறார். இதைவிட மனத்தை உறுத்தும் வேறொரு விஷயத்தையும் இங்கு குறிப்பிட வேண்டும். பண்டிட் நேருவின் சொந்த மாகாணம் ஐக்கிய மாகாணம்; அங்கு அவர் செல்வாக்கு கொடிக்கட்டிப் பறக்கிறது; அந்த மாகாணத்தில் அமைச்சர்களாக இருப்பவர்கள்

1. ஜவாஹர்லால் நேருவுக்கு அழைப்பு, ஒய்.ஜி. கிருஷ்ணமூர்த்தி, பக்கம் XVI.

அனைவரும் பிராமணர்கள். பண்டிட் ஜவாஹர்லால் நேருவின் புகழ் பெற்ற சகோதரியான திருமதி விஜயலட்சுமி பண்டிட்டும் தாம் பிராமண சாதியைச் சேர்ந்தவர் என்ற உணர்வு கொண்டிருப்பவ ராகவே தோன்றுகிறது. 1940 டிசம்பரில் டில்லியில் நடைபெற்ற அகில இந்திய மாதர் சங்க மாநாட்டில் ஒரு பிரச்சினை குறித்து விவாதம் நடைபெற்றது. குடிமதிப்பீட்டுக் கணக்கெடுக்கும் போது ஒருவர் தமது சாதி இன்னது என்று சொல்லாதிருப்பது குறித்த விவாதமே அது. ஆனால் திருமதி பண்டிட் இந்தக் கருத்தை ஏற்கவில்லை.[1] தமது இரத்தம் பிராமண இரத்தம் என்பது குறித்துப் பெருமிதம் கொள்ளா திருப்பதற்கு எந்தக் காரணமும் இருப்பதாகத் தெரியவில்லை என்று அவர் கூறினார். மேலும் குடிமதிப்புக் கணக்கெடுப்பின்போது தம்மை ஒரு பிராமணர் என்றும் பிரகடனம் செய்து கொண்டார்.

இவர்கள் எல்லோரும் எப்படிப்பட்டவர்கள்? அவர்களுடைய அந்தஸ்து என்ன? திரு. திலகர் சுயராஜ்ய இயக்கத்தின் தந்தை எனப் புகழ் பெற்றவர். திரு. பட்டேலும் பண்டிட் நேருவும் திரு. காந்திக்கு அடுத்த அந்தஸ்தை வகிப்பவர்கள்.

இவை எல்லாம் தனி நபர்களின், காங்கிரஸ் மேலிடத்தைச் சேர்ந்த தனிப்பட்ட தலைவர்களின் கருத்துகள் எனச் சிலர் எண்ணக் கூடும். ஆனால் அவ்வாறு எண்ணுவது தவறு. இத்தகைய கருத்துகள் காங்கிரஸ் தேர்தல் பிரசாரத்தின்போது செயல்படுத்தப்பட்டுள்ளன என்பதற்கு எத்தனையோ உதாரணங்களைக் கூறலாம்.

திரு. காந்தி 1919ல் காங்கிரசைக் கைப்பற்றியதிலிருந்து சுயராஜ்யக் கோரிக்கைக்குப் பிரிட்டிஷ் அரசாங்கத்தை இணங்க வைக்கும் நிர்ப்பந்த நடவடிக்கைகளில் ஒன்றாக சட்டமன்ற பகிஷ் காரத்தை காங்கிரஸ்காரர்கள் கருதி வந்துள்ளனர். இந்தக் கொள்கை யின்படி, தேர்தல் நடைபெறும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அதில் கலந்து கொள்வதில்லை என்று காங்கிரஸ் தீர்மானித்து வந்தது; காங்கிரஸ் சார்பில் வேட்பாளர் எவரையும் நிறுத்தாததோடு, சுயேச்சை வேட் பாளராகப் போட்டியிட முன்வரும் எந்த இந்துவை யும் எதிர்த்துக் கடுமையான பிரசாரமும் செய்து வந்தது. இத்தகைய கொள்கையின் தகுதி பற்றி எவரும் சர்ச்சை செய்ய வேண்டிய தில்லை. ஆனால் இந்துக்கள் சுயேட்சை வேட்பாளர்களாகப் போட்டி

1. அரசியலில் அர்த்தமும் அனர்த்தமும் என்னும் கட்டுரையில் திரு. சஞ்சனாவின் மேற் கோள் - 1945, ஜனவரி 14 ஆம் தேதிய ராஸ்த் ரஹபார் இதழ், தொடர் எண். XII

யிடுவதைத் தடுப்பதற்கு காங்கிரஸ் கையாண்ட வழிமுறைகள் என்ன? சட்டமன்றங்களை இகழ்ச்சிக்கும் ஏளனத்துக்கும், அவமதிப்புக்கும் வெறுப்புக்கும் உரியவையாக சித்தரித்துக் காட்டும் கீழ்த்தரமான வழிகளை அவர்கள் கையாண்டனர். இதன்படி, பல்வேறு மாகாணங்களில் விதம் விதமான விளம்பர அட்டைகளைத் தாங்கிச் செல்லும் ஊர்வலங்களை காங்கிரஸ் நடத்தத் தொடங்கிற்று; ''சட்ட மன்றங்களுக்கு யார் செல்வார்கள்? சவரம் செய்பவர்களும், செருப்புத் தைப்பவர்களும், குயவர்களும், தோட்டிகளும்தான் அங்கு செல்வார்கள்'' என்ற சுலோகங்கள் அந்த அட்டைகளில் எழுதப்பட்டிருந்தன. ஊர்வலத்தில் செல்லும் ஒருவர் சுலோகத்தின் ஒரு பகுதியாக மேற்கண்ட கேள்வியை உரத்த குரலில் கேட்பார்; கூட்டத்தினர் சுலோகத்தின் இரண்டாவது பகுதியை இதற்குப் பதிலாக முழக்கமிடுவர். எவரும் தேர்தலில் நிற்காதபடி தடுப்பதற்கு இது போதுமானதல்ல என்பதை காங்கிரஸ்காரர்கள் கண்டபோது, இவற்றைவிட கடுமையான நடவடிக்கைகளை எடுப்ப தெனத் தீர்மானித்தனர். சவரம் செய்வோர், குயவர்கள், தோட்டிகள் போன்றோருடன் சேர்ந்து சட்டமன்றங்களில் தாங்கள் அமர நேரிடும் என அஞ்சி கௌரவமானவர்கள் தேர்தல்களில் போட்டியிட மாட்டார்கள் எனக் காங்கிரஸ் நம்பிற்று. இந்த நம்பிக்கையோடு, இந்தக் கீழான வகுப்புகளைச் சேர்ந்த வேட்பாளர்களை காங்கிரஸ் சார்பில் நிறுத்தி அவர்களை வெற்றி பெறச் செய்யும் அளவுக்கும் காங்கிரஸ் சென்றது. காங்கிரசின் இந்த அருவருப்பான நடத்தைக்கு சான்று கூறும் சில நிகழ்ச்சிகளை இங்கு கூறுவது பொருத்தமாக இருக்கும். 1920 தேர்தலில் மத்திய மாகாண சட்டமன்றத்திற்கு ஒரு செருப்புத் தைக்கும் தொழிலாளியையும் தேர்ந்தெடுத்தது.[1] 1930ஆம் ஆண்டுத் தேர்தலில் மத்திய மாகாணங்களில் இரண்டு செருப்புத் தைக்கும் தொழிலாளர்களையும்[2], ஒரு பால்காரரையும்[3], ஒரு சவரத் தொழிலாளியையும்[4], பஞ்சாபில் ஒரு தோட்டி யையும்[5] காங்கிரஸ்காரர்கள் தேர்ந்தெடுத்தனர். 1934ல் மத்திய சட்டமன்றத்திற்கு ஒரு குயவரை[6] காங்கிரஸ் தேர்ந்தெடுத்து அனுப்பிற்று. இதெல்லாம் பழங்கதை என்று கூறலாம். இந்தக் கருத்து சரியானதல்ல என்பதை மெய்ப்பிக்க 1943ல்,

1. ஃபகுவா ரோஹிதாஸ்
2. குரு கோரிசைன் அகம்தாஸ் மற்றும் பலராஜ் ஜைஸ்வார்
3. சுன்னு
4. அர்ஜுன்லால்
5. பன்ஸிலால் சௌதாரி
6. பகத் சண்டிமால் கோலா

பம்பாயின் புறநகர்ப் பகுதியான அந்தேரியில் நடைபெற்ற நகர சபைத் தேர்தல்களில் என்ன நிகழ்ந்தது என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். நகரசபைத் தேர்தல்களை மற்றவர்கள் பகிஷ்கரிக்கச் செய்ய வேண்டும் என்ற நயவஞ்சக நோக்கத்துக்காக காங்கிரஸ் ஒரு சவரத் தொழிலாளியை வேட்பாளராக நிறுத்திற்று.

எத்தகைய வெங்கொடுமை! அயர்லாந்திலுள்ள சின் ஃபெயின் இயக்கமும் கூட பிரிட்டிஷ் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிக்கவே செய்தது. ஆனால் தங்கள் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக தங்கள் நாட்டு மக்களையே அவர்கள் இவ்வாறு அருவருக்கத் தக்க முறையில் பயன்படுத்திக் கொண்டார்களா? 1930ல் இந்தியாவில் நடைபெற்ற சட்டமன்றப் பகிஷ்கார இயக்கம் ஒருவகையில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். நாம் மேலே குறிப்பிட்ட சம்பவங்கள் நடைபெற்ற 1930ஆம் வருட மாகாண சட்டமன்றத் தேர்தல்களின் போதுதான் திரு. காந்தியின் 1930 ஆம் வருட உப்பு சத்தியாக்கிரகமும் நடைபெற்றது! அச்சமயம் எவ்வாறு திரு. காந்தி சில கோரிக்கைகளை வைசிராய் இர்வின் பிரபுவிடம் முன்வைத்து அவை குறிப்பிட்ட கால கெடுவுக்குள் நிறைவேற்றப்பட வேண்டுமென வற்புறுத்தினார் என்பதையும், இக்கோரிக்கைகளை வைசிராய் ஏற்காவிட்டால் சட்ட மறுப்பு இயக்தம் நடத்த எவ்வாறு திரு. காந்தி தீர்மானித்தார் என்பதையும், இது சம்பந்தமான தனது எச்சரிக்கையை வைசிராயிடம் தெரிவிக்க எவ்வாறு திரு. காந்தி ஓர் ஆங்கிலேயரைத் தேர்ந்தெடுத்தார் என்பதையும், எவ்வாறு திரு. காந்தி தனது தாக்குதலுக்கு உப்புச் சட்டத்தைத் தேர்ந்தெடுத்தார் என்பதையும், எவ்வாறு அவர் தண்டியை போராட்டக் களமாகப் பொறுக்கியெடுத்தார் என்பதையும், எவ்வாறு அவர் இந்த இயக்கத்துக்குத் தாமே தலைமை தாங்க முடிவு செய்தார் என்பதையும், எவ்வாறு அவர் ஆமதாபாத்திலுள்ள தமது ஆசிரமத்திலிருந்து ஆடம்பர ஆர்ப்பாட்டமாக பவனி புறப்பட்டார் என்பதையும், எவ்வாறு ஆமதாபாத் பெண்மணிகள் அவருக்கு ஆரத்தி எடுத்தும், நெற்றியில் வெற்றித் திலகமிட்டும் அவரை வழியனுப்பி வைத்தார்கள் என்பதையும், இந்தியாவுக்கு சுதந்திரம் பெற்றுத் தருவதற்கு குஜராத் மட்டுமே கூடப் போதும் என்று எவ்வாறு திரு. காந்தி அவர்களுக்கு உறுதி கூறினார் என்பதையும், சுயராஜ்யம் கிடைக்காமல் தாம் ஆமதாபாத்துக்குத் திரும்பப் போவதில்லை என்று எவ்வாறு திரு. காந்தி பிரகடனம் செய்தார் என்பதையும் எதிர்கால காங்கிரஸ் வரலாற்றாசிரியர்கள் பதிவு செய்வார்கள் என்று நம்புகிறேன். அதேசமயம் இன்னொரு விஷயத்தையும் அவர்

கள் குறிப்பிடத்தவற மாட்டார்கள் என்று எதிர்பார்க்கிறேன்; அதாவது மக்களின் சார்பில் மக்களுக்காக நாங்கள் சுயராஜ்யப் போராட்டத்தில் ஈடுபட் டிக்கிறோம் என்று காங்கிரஸ்காரர்கள் ஒருபுறம் கூறிக் கொண்டு இன்னொருபுறம் இதே ஆண்டில் அதே மக்களை வெறுத்தொதுக்கப் பட வேண்டியவர்களாக, தவிர்க்கப்பட வேண்டியவர்களாகப் பகி ரங்கமாகப் படம்பிடித்துக் காட்டி அவர்களுக்கு எதிராக கொடிய அட்டூழியங்கள் புரிந்து வருகிறார்கள் என்பதையும் அவர்கள் பதிவு செய்யத் தவற மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

## VI

காங்கிரஸ் மாகாணங்களில் ஆதிக்க வகுப்பினரின் மேலாதிக் கம் நிலவுவது தற்செயலானதுதான் என்ற வாதம் தவறானது என்ப தற்கு அடிமட்ட வர்க்கங்களின்பால் காங்கிரஸ் மேலிடம் காட்டும் இந்த மனப்போக்கே போதுமான சான்றாகும். இந்த வாதத்தைப் பொய் யாக்குவதற்கு வேறு சில சான்றுகளும் உள்ளன. இவை அட்டவணை 23ல் (பக்கம் 101 பார்க்க) தொகுத்துரைக்கப்பட்டிருக்கின்றன. இவை தேர்தலில் போட்டியிடுவதற்கு காங்கிரஸ் தேர்ந்தெடுத்த பல்வேறு வகுப்புகளைச் சேர்ந்த வேட்பாளர்களின் கல்வித் தகுதிகள் பற்றி யவை ஆகும். இந்த அட்டவணை காட்டுவது என்ன? பிராமணர்கள் விஷயத்தில் பட்டதாரிகளுக்கும் பட்டதாரிகளல்லாதோருக்கும் இடையேயான விகிதாசாரம் பிராமணரல்லாதோர் மற்றும் ஷெட்யூல்டு வகுப்பினர் விஷயத்தில் காணப்படுவதை விட மிக அதிகமாக இருப்பது தெளிவு. இது தற்செயல் நிகழ்ச்சியா, அல்லது கொள்கை சம்பந்தப்பட்ட விஷயமா? இவ்வகையான தேர்வு முறையானது இது விஷயத்தில் காங்கிரஸ் ஒரு திட்டமிட்ட கொள்கையைக் கடைப்பிடிக் கிறது என்ற ஐயத்தை ஏற்படுத்தியுள்ளது. எடுத்துக்காட்டாக, பிராம ணர்கள் விஷயத்தில் மிக உயர்ந்த கல்வித் தகுதிகள் கொண்ட வேட் பாளருக்கு முன்னுரிமை அளித்தது; அதேசமயம் பிராமணரல்லாதோர் மற்றும் ஷெட்யூல்டு வகுப்பினர் விஷயத்திலோ மிகக் குறைந்த கல்வித் தகுதிகள் கொண்ட வேட்பாளருக்கே முன்னிடம் அளித்தது.

பட்டதாரிகளுக்கும் பட்டதாரிகளல்லாதவர்களுக்கும் இடையே யான இந்த வேறுபாடு உண்மையில் சரியான நிலைமையை வெளிப் படுத்தவில்லை என்றே சொல்லவேண்டும். சரியாகக் கூறுவதானால், பிராமண பட்டதாரிகள் பெரிதும் புகழ்பெற்ற அனுபவமிக்க அரசியல் வாதிகள்; பிராமணரல்லாத பட்டதாரிகள் அனுபவமில்லாத பட்ட தாரிகள், மேலும் இரண்டாந்தர அரசியல்வாதிகள்.

## அட்டவணை - 23

### காங்கிரஸ் கட்சியில் பிராமணர் மற்றும் பிராமணரல்லாதோரிடையே எழுதப் படிக்க தெரிந்தவர்களின் வகைப்பிரிவு*

| மாகாணங்கள் | சாதிப் பிரிவினர் | மொத்தம் | பட்ட தாரிகள் | பட்டதாரி கள் அல்லா தோர் | மெட்ரிக் குலேசன் படித்த வர்கள் | படிக்காத வர்கள் | தகவல் தராத வர்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| அசாம் | பிராமணர் | 6 | 5 | 1 | - | - | - |
| | பிராமணரல்லாதோர் | 21 | 15 | 2 | - | 1 | 9 |
| வங்காளம் | பிராமணர் | 15 | 14 | 1 | - | - | - |
| | பிராமணரல்லாதோர் | 27 | 21 | 4 | - | - | - |
| | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் | 6 | 3 | - | 1 | 2 | - |
| பீகார் | பிராமணர் | 31 | 11 | 5 | 8 | 4 | 3 |
| | பிராமணரல்லாதோர் | 39 | 23 | 4 | 3 | 8 | 13 |
| | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் | - | 1 | 1 | 4 | 10 | - |
| மத்திய மாகாணங்கள் | பிராமணர் | 39 | 15 | - | 2 | 9 | 2 |
| | பிராமணரல்லாதோர் | 54 | 15 | - | 2 | 17 | 1 |
| | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் | - | 1 | - | - | 6 | - |

| மாகாணங்கள் | சாதிப் பிரிவினர் | மொத்தம் | பட்ட தாரிகள் | பட்டதாரி கள் அல்லா தோர் | மெட்ரிக் குலேசன் படித்த வர்கள் | படிக்காத வர்கள் | தகவல் தராத வர்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| சென்னை | பிராமணர் | 15 | 14 | 1 | - | - | - |
| | பிராமணரல்லாதோர் | 27 | 21 | 4 | - | - | - |
| | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் | 6 | 3 | - | 1 | 2 | - |
| | பின்தங்கிய வகுப்பினர் | - | 1 | - | - | - | - |
| ஒரிசா | பிராமணர் | 11 | 6 | 1 | - | 3 | 1 |
| | பிராமணரல்லாதோர் | 20 | 7 | 3 | 2 | 7 | 1 |
| | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் | 5 | - | - | - | 5 | - |

மிகவும் கல்விகற்ற பிராமணர்களை தேர்தலில் தனது வேட்பாளர்களாக காங்கிரஸ் ஏன் தெரிந்தெடுக்கிறது? அதே சமயம் மிகவும் குறைந்த கல்வித்தகுதியே பெற்ற பிராமணரல்லோதோரையும் ஷெட்யூல்டு வகுப்பினரையும் தேர்தலில் தனது வேட்பாளராக ஏன் தெரிவு செய்கிறது? இந்தக் கேள்விக்கு ஒரே ஒரு பதிலைத்தான் என்னால் காணமுடிகிறது. பிரமாணரல்லாதோர்- அடிமட்டவகுப்புகளின் பிரதிநிதிகள் அமைச்சரவை அமைக்கும் வாய்ப்பைத் தடுப்பதற்கே இவ்வாறு செய்யப்படுகிறது. நன்கு கல்விகற்ற பிராமணரல்லாதவர்கள் கிடைக்கவில்லை என்பதல்ல. கல்விகற்ற பிராமணரல்லாதவனை விட கல்விகற்காத பிராமணரனல்லாதவனை வேண்டுமென்றே காங்கிரஸ் விரும்பியதாகத் தோன்றுகிறது. இது ஏன்? ஆதிக்க வகுப்பின் கண்ணோட்டத்தில் கல்விகற்ற பிராமணனல்லாதவனைவிட கல்விகற்காத பிராமணனல்லாதவனுக்கு இரண்டு அனுகூலங்கள் உண்டு. முதலாவதாக, கல்விகற்ற பிராமணனை விட்டுவிட்டுத் தன்னைத் தேர்ந்தெடுத்ததற்காக அவன் காங்கிரஸ் தலைமையிடம் மிகவும் விசுவாசமாக நடந்து கொள்வான். இரண்டாவதாக, காங்கிரஸ் கட்சியிலுள்ள கல்விகற்ற பிராமணரல்லோதோர் ஒன்றுகூடி, ஆதிக்க வகுப்பினர்களது அரசாங்கத்துக்குப் பதிலாக தங்களது சொந்த அரசாங்கத்தை அமைக்க முற்படும்பட்சத்தில் ஆளும் வகுப்பினர்கள் அமைத்த காங்கிரஸ் அமைச்சரவைக்கு எதிராக இவன் இவர்களுடன் கைகோத்துக்கொண்டு கலகக்கொடி தூக்கமாட்டான். மூன்றாவதாக, பட்டப்படிப்புப் படிக்காத அல்லது அத்தனை, அனுபவமில்லாத பட்டதாரிகளான பிரமாணரல்லாதோரை அதிக எண்ணிக்கையில் தேர்ந்தெடுப்பதற்கு ஒரு முக்கிய நோக்கம் இருக்கிறது; அதாவது ஆதிக்க வகுப்பினர்களின் நலன்களுக்குப் பாதகம் விளைவிக்கும் வகையில் காங்கிரசிலுள்ள பிராமணரல்லாத பிரதிநிதிகள் ஒன்று சேர்ந்து ஒருமாற்று அமைச்சரவையை அமைத்திடாதபடி தடுப்பதே அந்த நோக்கம்.

இந்தச் சந்தர்ப்ப சூழ்நிலைமைகளை எல்லாம் கருத்திற்கொண்டு பார்க்கும்போது, ''சுதந்திரத்திற்கான போராட்டம்'' என்பது ஆதிக்கவர்க்கத்தின் சுதந்திரத்திற்கான போராட்டமேயன்றி வேறல்ல என்பதில் எவருக்கேனும் எள்ளளவும் ஐயம் இருக்க முடியுமா? காங்கிரஸ்தான் ஆதிக்கவர்க்கம், ஆதிக்க வர்க்கம்தான் காங்கிரஸ் என்பதில் சந்தேகம் ஏதும் இருக்க முடியுமா? 1937ல் மாகாண சுயாட்சி என்ற வடிவத்தில் சுதந்திரம் வந்தபோது காங்கிரஸ் திட்டமிட்ட முறையில், வெட்கக்கேடானமுறையில் ஆதிக்க வகுப்பினரை அதிகாரபீடத்தில்,

ஆட்சிபீடத்தில் அமர்த்தியது என்பதில் ஐயப்பாடு எதுவும் இருக்க முடியுமா?

## VII

காங்கிரஸ் தொடங்கிய ''சுதந்திரப்போராட்டம்'' இந்திய சுதந்திரத்தின் நோக்கத்தையும் குறிக்கோளையும் திசைமாற்றிவிட்டது என்பதையும், இதற்கு காங்கிரசே காரணம் என்பதையும் மேலே கூறிய மெய்ம்மைகள் துளியும் ஐயத்திற்கிடமின்றி மெய்ப்பிக்கின் றன. இதனால் சொல்லொண்ணா வெங்கொடுமைதான் விளைந் தது. இந்தியாவிலுள்ள ஆதிக்க வகுப்பினர்களின் சமூகக் கண்ணோட் டம், சமூகத் தத்துவம் முதலியவற்றைப் பற்றிய போதிய ஞானம் இருந்தாலொழிய இந்த சாபக்கேட்டின், சாபத்தீட்டின் பரிமாணத்தை அயல்நாட்டவரால் புரிந்து கொள்ள முடியாது.

இந்தியாவிலுள்ள ஆதிக்க வகுப்பினரில் மிகவும் வலுவான, ஆற்றல்மிக்க பிராமணர்களை எடுத்துக்கொண்டால் அவர்கள்தான் அடிமட்ட வகுப்பினரின், சூத்திரர்களின் (பிராமணரல்லோதோரின் பழையபெயர்), தீண்டப்படாதோரின் பரம வைரிகளாக இருந்து வருகின்றனர் என்று கூறுவது சற்றும் மிகையாகாது; இவர்கள் அனை வரும் சேர்ந்து இந்தியாவின் மொத்த இந்து மக்கட்தொகையில் 80 அல்லது 90 சதவீதத்தினராக உள்ளனர். இன்று இந்தியாவில் அடி மட்ட வகுப்புகளைச் சேர்ந்த சாமானிய மனிதன் இந்த அளவுக்கு வீழ்ந்தவனாக, தாழ்ந்தவனாக, இழிந்தவனாக, சுயமரியாதை இழந்த வனாக, நம்பிக்கையற்றவனாக, ஆதர்சமில்லாதவனாக, உயிரற்ற நடைபிணமாக இருக்கிறான் என்றால் அதற்கு பிராமணர்களும் அவர் களுடைய சித்தாந்தமே முற்றிலும் காரணம். பிராமணர்களது இந்த சித்தாந்தம் பின்வரும் ஆறு கோட்பாடுகளைக் கொண்டிருக்கிறது: 1. பல்வேறு வகுப்பினரிடையே படிநிலையில் அமைந்த ஏற்றத் தாழ்வு; 2. சூத்திரர்களையும் தீண்டப்படாதவர்களையும் முற்றிலும் நிராயுதபாணிகளாக்குதல்; 3. சூத்திரர்களும் தீண்டப்படாதவர்களும் கல்வி கற்பதற்கு அறவே தடைவிதித்தல்; 4. ஆட்சி பீடங்களிலிருந்தும் அதிகார பீடங்களிலிருந்தும் சூத்திரர்களையும் தீண்டப்படாதோரை யும் முற்றிலும் ஒதுக்கிவைத்தல்; 5. சூத்திரர்களும் தீண்டப்படாதவர் களும் சொத்துக்கள் வாங்காதபடி முழுமையாகத் தடை செய்தல்; 6. பெண்களை அறவே கீழ்ப்படுத்துதல், அடக்கிவைத்தல் ஏற்றத் தாழ்வு என்பது பிராமணீயத்தின் சமய சார்புடைய கோட்பாடாகும்.

சமத்துவத்தில் நாட்டம் கொள்ளும் அடிமட்ட வகுப்பினர்களை அடக்குவதை, ஒடுக்குவதை பிராமணர்கள் தங்களுடைய அறமுறை கடப்பாடாக, கடமையாகக் கருதினர்; அதனை ஈவு இரக்கமின்றி, கழிவிரக்கமின்றிச் செயல்படுத்தினர். ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கு அப்பால் கல்வி பரவாத நாடுகள் இருக்கின்றன. ஆனால் இந்திய நாடு ஒன்றில்தான் அறிவுத் துறையினர் அதாவது பிராமணர்கள் கல்வி கற்பதை தங்கள் ஏகபோகமாக்கிக் கொண்டனர்; அதுமட்டு மல்ல அடித்தட்டு வகுப்பினர்கள் கல்வி கற்பதை ஒரு பெரிய குற்றமாக்கி அதற்கு கடும் தண்டனை விதித்தனர்; அவர்களுடைய நாக்குகளைத் துண்டித்தனர், ஈயத்தை அவர்களுடைய செவிகளில் ஊற்றினர். இதன் விளைவு என்ன? கல்விகற்கும் உரிமையை நூற்றாண்டுகளாக அடிமட்ட வகுப்பினர்களுக்குப் பிராமணர்கள் மறுத்து வந்திருக்கின்றனர். இன்றுங்கூட பிராமணர்கள் அவர்கள் கல்வி கற்கும் விஷயத்தில் அதே பகைமை உணர்வை காட்டி வரு கின்றனர். வெகுஜனங்களிடையே கல்வி பரவாததற்கான காரணங் களை விளக்கி 1891 ஆம் வருட குடிமதிப்புப் புள்ளி விவர ஆணையர் திரு. பய்னஸ் பின்கண்டவாறு கூறினார்:

> ''கல்வி அறிவு பெருமளவுக்குப் பரவாததற்கு தலைமுறை தலை முறையாக ஒரு சுயநல வகுப்பினர் நீண்டகாலம் தொடர்ந்து இருந்துவருவதேயாகும்; அவர்கள் கல்வி அறிவு முழுவதையும் தங்களது ஏகபோகமாகப் பராமரித்துவந்தனர்; சமூக ரீதியில் மேலாதிக்கம் வகிப்பதற் கான பிரதான ஆயக்காலாக, முட்டுக்காலாக அதனை பயன் படுத்தி வந்தனர். படிப்பறி வில்லாதல்லவர்கள், எழுத்தறி வில்லாதவர்கள் மீதுதான் தனது ஆதிக்கத்தைச் செலுத்த முடியும் என்பதை புரோகிதத்துவம் அறியும். எழுத்தாளர் வர்க்கத்தின் வளர்ச்சிக்கு பிராமணன் காட்டி வந்த எதிர்ப்பு பற்றி ஏற்கனவே கூறியிருக் கிறோம். வெகுஜனங்களிடையே கல்வி அறிவு பரவுவதற்கு இவை இரண்டும் காட்டிவரும் எதிர்ப்பின் விளைவுகளை நீண்ட அனுபவத்துக்குப் பிறகு தான் உணரமுடியும். ஆரம்பக் கல்வியின் அவசியத்தையும் நன்மையையும் பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்றிருப்பது கல்வி கற்ற வகுப்பினரின் ஆதரவை ஓரளவு பெற்றுள்ளது. இந்த வகுப்பினரைச் சேர்ந்த பலரை ஆசிரியர்களாக்கி அவர்களது ஜீவனோபாயத்துக்கு வழி செய்திருப்பது வரவேற்கத்தக்கது. இந்த வகுப்பினரின் உண்மையான ஆர்வம் உயர்நிலைக்

கல்வியின் மீதே இருக்கிறது; அநேகமாக அதன் பலனை அனுபவிக்கக் கூடிய நிலையில் அவர்கள் இருக்கின்றனர்.''

இந்திய மக்களை முற்றிலும் நிராயுதபாணிகளாக, பாதுகாப் பற்றவர்களாக ஆக்கி பிரிட்டிஷார் இந்தியாவை ஆண்டு வருகின் றனர் என்று காங்கிரஸ் அரசியல்வாதிகள் குற்றம் சாட்டிவருகிறார் கள். நிராயுதபாணிகளாகவும், பாதுகாப்பற்றவர்களாகவும் ஆக்குவது பிராமணர்களின் பிரகடனப்படுத்தப்படாத சட்டமாக இருந்து வருவதை அவர்கள் மறந்து விட்டார்கள். உண்மையில், சூத்திரர் களும் தீண்டப்படாதவர்களும் நிராயுதபாணிகளாக்கப்படவேண்டும் என்பதில் பிராமணர்கள் மிகத் தீவிரமாக இருந்தார்கள். இதனால்தான் பிராமணர்கள் தங்களுடைய உரிமைகளையும் சலுகைகளையும் பாதுகாத்துக்கொள்ளும்பொருட்டு தங்களை ஆயுதபாணிகளாக்கிக் கொள்வதற்கு சட்டத்தைத் திருத்தியபோது இதுவிஷயத்தில் சூத்திரர் கள் மீதும் தீண்டப்படாதவர்கள்மீதும் இருந்த தடையை அதன் கடுமையைச் சற்றுக்கூடக் குறைக்காமல் அப்படியே நீடிக்க விட்டு விட்டனர். இந்திய மக்களில் மிகப்பெரும்பாலோர் இன்று கோழை களாக, மோழைகளாக, எழுச்சியற்றவர்களாக, கிளர்ச்சியற்றவர் களாக தோன்றுகிறார்கள் என்றால் பிராமணர்கள் அவர்களைக் கால காலமாக முற்றிலும் நிராயுதபாணிகளாக ஆக்கி வைத்திருந்ததே அதற்குக் காரணம். பிராமணன் தன் ஆதரவை அளித்திடாத எந்த சமூகக்கேடுமே, சமூக அநீதியுமே இல்லை எனலாம். வெறித்தன மான சாதி உணர்வு, தீண்டாமை, அணுகாமை, பார்க்காமை போன்ற மனிதனிடம் மனிதன் நடந்துகொள்ளும் சிறிதும் மனிதாபிமான மற்ற, மனிதநேயமற்ற செயல்கள் அவனுக்கு தர்மம் போன்றதாகும். எனினும் மனிதனுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் மட்டுமே அவனுக்கு தர்மம் என்று எண்ணிவிடாதீர்கள். உலகின் எந்தப் பகுதியிலும் பெண்களுக்கு இழைக்கப்படும் மிகமிக மோசமான அக்கிரமங்களை எல்லாம், அட்டூழியங்களை எல்லாம் அவன் ஆத ரித்திருக்கிறான். விதவைகள் சதிகளாக உயிரோடு சுட்டெரிக்கப்பட் டனர். விதவைப் பெண்களை உயிரோடு துள்ளத்துடிக்க சுட்டெரிக் கும் சதிமுறைக்கு பிராமணன் தனது முழு ஆதரவை அளித்தான். விதவைகள் மறுமணம் செய்துகொள்ள அனுமதிக்கப்படவில்லை. இந்த சித்தாந்தத்தை அவன் உறுதியோடு நிலைநாட்டினான். சிறுமி கள் 8 வயதுக்கு முன்னதாக திருமணம் செய்துவைக்கப்பட்டனர். அவள் பூப்புப் பருவத்தை எய்திருந்தாலும் இல்லாவிட்டாலும் அவனுடைய கணவன் அவளுடன் உறவு கொள்ள உரிமை பெற்றிருந்தான். இந்த

சித்தாந்தத்துக்கும் பிராமணனது பலமான ஆதரவு இருந்தது. சூத்திரர்களும் தீண்டப்படாதவர்களுக்கும், பெண்களுக்கும் சாஸ்திர சட்ட விதிமுறைகளை வகுத்துத் தருபவர்கள் என்ற முறையில் பிராமணர்கள் நிகழ்த்தியிருக்கும் சாதனை உலகின் இதர பகுதிகளிலுள்ள அறிவுத்துறை வகுப்பினர்களின் சாதனைகளுடன் ஒப்பிடும்போது மிகவும் குரூரமானதாகும். ஏனென்றால் கல்வி அறிவற்ற தனது நாட்டு மக்களை என்றென்றும் சாசுவதமாக அறியாமையிலும் வறுமையிலும் ஆழ்த்திவைப்பதற்கு ஒரு சித்தாந்தத்தை உருவாக்க இந்தியாவிலுள்ள பிராமாணர்களைப்போல் வேறு எந்த அறிவுத்துறை வகுப்பினரும் தங்கள் அறிவை சோரம் போகவிட்டதில்லை. தன்னுடைய முன்னோர்களால் வகுத்துத் தரப்பட்ட இந்தப் பிராமணீய சித்தாந்தத்தில் இன்று ஒவ்வொரு பிராமணனும் முழு நம்பிக்கை வைத்திருக்கிறான். சூத்திரனும் தீண்டப்படாதவனும் கீழானவன் என்ற பிராமணிய சித்தாந்தத்தில் அவன் முழு நம்பிக்கை வைத்திருக்கிறான். அவன் இந்து சமுதாயத்தில் ஓர் அந்நியசக்தி ஆவான். பிரெஞ்சுக்காரனுக்கு ஜெர்மானியன் எவ்வாறு அந்நியனோ, யூதரல்லாதவனுக்கு யூதன் எவ்வாறு அந்நியனோ, நீக்ரோவுக்கு வெள்ளையன் எவ்வாறு அந்நி யனோ அவ்வாறே சூத்திரர்களுக்கும் தீண்டப்படாதவர்களுக்கும் பிராமணன் அந்நியன். அவனுக்கும் கீழ்மட்ட வகுப்பினர்களான சூத்திரர்களுக்கும் தீண்டப்படாதவர்களுக்கும் இடையே உண்மையிலேயே ஒரு படுபாதாளம் இருக்கிறது. அவன் அவர்களுக்கு அந்நியன் மட்டுமல்ல, பகைவனுமாவான். அவர்களுக்கிடையேயான உறவில் மனச்சான்றுக்கு, நேர்மை உணர்வுக்கு இடமில்லை; நியா யத்தின் குரலை கேட்க முடியாது.

பனியாதான் வரலாற்றிலேயே மிகவும் புல்லுருவித்தனமான, அட்டை போன்ற வகுப்பாகும். பணம் சேர்க்கும் அவனது பேராசையில் மனச்சான்றுக்கோ, பண்பாட்டுக்கோ இடமில்லை. எங்கும் கொள்ளைநோய் பரவி சாவு தலைவிரித்தாடும்போது அதில் ஆதாயம் பெற நினைக்கும் வெட்டியான் போன்றவன் அவன். பனியாவுக்கும் வெட்டியானுக்கும் இடையே உள்ள ஒரே வேறுபாடு வெட்டியான் கொள்ளை நோயைத் தோற்றுவிப்பதில்லை, பனியா அதைச் செய்கிறான். அவன் தனது பணத்தை உற்பத்தி நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதில்லை. மாறாக, ஆக்கவளமற்ற காரியங்களுக்கு கடுவட்டிக்கு பணத்தைக் கடன்கொடுத்து, வறுமையை, ஏழ்மையை மேன்மேலும் வளர்க்கிறான். வட்டியைக்கொண்டே அவன் பிழைக்கிறான், வாழ்கிறான்; லேவாதேவிதான் மனு அவ

னுக்கு வகுத்துத்தந்த தொழில் என்று அவனுடைய மதம் அவனுக்குக் கூறுகிறது; இத்தொழிலை அவன் தனது புனித உரிமையாகவும் தர்ம மாகவுமே கருதுகிறான்; அவன் தொடுக்கும் வழக்குகளில் எல்லாம் சாதகமாகத் தீர்ப்பளிக்கும் பிராமண நீதிபதியின் உதவியோடு அவன் தனது தொழிலை தங்குதடையின்றிச் செய்கிறான். வட்டி,வட்டி, வட்டி என்று மேன்மேலும் கூட்டிக்கொண்டே சென்று அதன்மூலம் குடும்பம் குடும்பமாக தனது நயவஞ்சகவலையில் நிரந்தரமாக வீழ்த்துகிறான். அவன் கடனுக்கு மேல் கடன்கொடுத்து ஏழை எளிய மக்களை என்றென்றைக்கும் கடனாளிகளாக்குகிறான். அணுவளவும் மனச்சான்று இன்றி அவன் செய்யாத பித்தலாட்டம் இல்லை, மோசடி இல்லை, ஏமாற்று வித்தை இல்லை. நாட்டின்மீது அவ னுக்குள்ள பிடி முழுமையானது. ஏழ்மையிலும், பட்டினியிலும், கல்லாமையிலும் மூழ்கிக்கிடக்கும் இந்தியா முழுவதுமே பனியா விடம் அடமானம் வைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு நாட்டிலும் ஆதிக்க வர்க்கம் இருக்கிறது. ஆனால் இந்தியாவில் இருப்பது போன்று முழுக்கமுழுக்க சுயநலம் கொண்ட, சீரழிவு பாதையில் செல்லுகின்ற, மிகவும் அபாயகரமான, மூர்க்க வெறி மனோபாவம் கொண்ட ஓர் ஆதிக்க வகுப்பு உலகில் வேறு எங்கேனும் இருக்கிறதா? ஆதிக்க வகுப்பினரின் அதிகாரத்தையும் புகழையும், சீர்த்தியையும், கீர்த்தியையும் நிலைநாட்டும்பொருட்டு அடிமட்ட வகுப்புகளை மிதித்துத் துவைக்கும்படி போதிக்கும் ஓர் அருவருப்பான , இகழார்ந்த, வெறுக்கத்தக்க வாழ்க்கைத் தத்து வத்தைக் கொண்ட ஓர் ஆதிக்கவகுப்பு இப்பூவுலகில் எங்கேனும் இருக்கிறதா? எனக்குத் தெரிந்தவரை இல்லை. பிறநாடுகளிலுள்ள ஆதிக்க வர்க்கங்கள் தங்கள் வர்க்கத்தைச் சேராதவர்களை இரு கைநீட்டிவரவேற்று தங்களது சமுதாயத்தில் அனுமதிப்பதில்லை என்பது உண்மையே, எனினும் தங்கள் தரத்துக்கு உயர்ந்துவிட்ட வர்களை அனுமதிப்பதற்கு அவர்கள் மறுப்பதில்லை. தங்கள் தரத் துக்கு உயரமுயலும் எவரையும் அவர்கள் தடுப்பதுமில்லை. ஆனால் இந்தியாவில் ஆதிக்க வகுப்பு மிகவும் கட்டுப்படுத்தப்பட்ட ஓர் அமைப்பாக, அதன் கதவுகள் மூடப்பட்டுவிட்ட ஓர் அமைப்பாக இருக்கிறது. பிறப்பின் மூலம் தங்களைச் சேர்ந்தவர்களல்லாதவர் கள் எவரையும் அது அனுமதிப்பதில்லை. அடிமட்ட வர்க்கங்கள் தங்கள் தரத்துக்கு உயர்ந்துவிடாதபடித்தடுக்க அது எல்லா வழிமுறை களையும் கையாள்கிறது.

# VIII

பிரெஞ்சுப் புரட்சிக்கு முன்னர் பிரான்சில் ஓர் ஆதிக்க வர்க்கம் இருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் எழுபதுகளுக்கு முன்னர் ஜப்பான் தனது அரசியலமைப்பை நவீனப்படுத்தத் தீர்மானித்த போது அங்கும் ஓர் ஆதிக்கவர்க்கம் இருந்தது. எனினும் இருநாடு களிலுமே ஆதிக்க வர்க்கங்கள் இது தேசியநெருக்கடி நேரம் என்பதை உணர்ந்தன; சிலவராட்சியிலிருந்து ஜனநாயத்துக்கு மாறுவதை சிக்க லற்றதாகவும், எளிதானதாகவும் ஆக்குவதற்காக தங்கள் பண்டைய உரிமைகளையும் சலுகைகளையும் கைவிடத் தீர்மானித்தன.

பிரான்சில் புரட்சிவெடித்து சமத்துவம் கோரப்பட்டபோது என்ன நடைபெற்றது? அங்கிருந்த ஆதிக்கவர்க்கம் தானே முன்வந்து தன் அதிகாரங்களையும் சலுகைகளையும் விட்டுக்கொடுக்கவும், நாட்டின் மக்களுடன் ஒன்றுகலக்கவும் முன்வந்தது. பிரான்சின் சட்ட மன்றம் கூட்டப்பட்டபோது என்ன நடைபெற்றது என்பதிலிருந்து இதனைத் தெரிந்துகொள்ளலாம். அப்போது பொதுமக்கள் 600 பிரதி நிதிகளையும், திருச்சபை குருமார் தொகுதியினர் 300 பிரதிநிதிகளை யும், உயர்குடியினர் 300 பிரதிநிதிகளையும் கொண்டிருந்தனர். அப்போது ஒரு சிக்கல் எழுந்தது; இந்த 1200 பிரதிநிதிகளும் எங்கு கூடி, எப்படி விவாதித்து, எவ்வாறு வாக்களிப்பது என்ற பிரச்சினை தோன்றிற்று. மூன்று பிரிவினரும் ஒரே மன்றத்தில் கூடுவோம். ‘தலைக்கு ஒரு வாக்கு’ என்ற அடிப்படையில் வாக்கெடுப்பு நடத்து வோம் என்று பொதுமக்கள் பிரதிநிதிகள் கூறினர். இதனை குருமார் தொகுதியினரும் உயர்குடிப் பிரதிநிதிகளும் ஏற்பது என்பது அவ் வளவு சுலபமான விஷயமல்ல. ஏனென்றால் இதன் காரணமாக, பண்டைக் காலம் முதல் அனுபவித்துவரும் உரிமைகளையும் சலுகை களையும் அவர்கள் கைவிடவேண்டியிருக்கும். எனினும் இவர்களில் கணிச மான பகுதியினர் பொதுமக்கள் பிரதிநிதிகளின் கோரிக்கையை ஏற்க முன்வந்தனர்; இதன்பேரில் இவர்கள் அனைவரும் சேர்ந்து சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் அடிப்படையில் அமைந்த அரசியலமைப்பை பிரான்சுக்கு வழங்கினர்.

ஜப்பானில் 1885க்கும் 1870க்கும் இடைப்பட்ட ஆண்டுகள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். அந்தக் காலப்பகுதியில் தான் ஜப்பானிய மக்கள் நிலப்பிரபுத்துவ சமுதாயத்திலிருந்து, ஒரு நவீன தேசமாக மாறினர். அப்போது ஜப்பானின் ஆதிக்க வர்க்கங் கள் கடைப்பிடித்த போக்கு பிரெஞ்சு ஆதிக்க வர்க்கங்கள் காட்டிய

போக்கை விடவும் தேசபக்தி மிகுந்ததாக இருந்தது. ஜப்பானிய வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டிருப் பதுபோல்[1] ஜப்பானிய சமுதாயத்தில் நான்கு வர்க்கங்கள் இருந்தன. 1. **டமியோஸ்** 2. **சமுராய்** 3. **ஹெமின்** அல்லது சாமானிய மக்கள். 4. **எதா** அல்லது கீழ்த்தட்டு வர்க்கத்தினர். இந்த நான்கு வர்க்கத்தினரும் படிநிலை ஏற்றத்தாழ்வு அடிப்படையில் அமைந்திருந்தனர். இந்த வரிசையில் சில பல ஆயிரங்களைக் கொண்ட **எதாக்கள்** எல்லோருக்கும் கீழே இருந்தனர். **எதாக்களுக்கு** மேலே **ஹெமின்கள்** இருந்தனர். அவர்களுடைய எண்ணிக்கை சுமார் 2.5 கோடி முதல் 3 கோடியாக இருந்தது. அவர் களுக்கு மேலே **சமுராய்கள்** இருந்தனர். இவர்களது எண்ணிக்கை ஏறத்தாழ 20 லட்சமாக இருந்தது. **ஹெமின்களின்** வாழ்வும் மரணமும் இவர்கள் கையில்தான் இருந்தன. **டமியோஸ்கள்** அல்லது குறுநிலக் கோமான்கள் இவர்களுக்கு எல்லாம் மேலே உச்சியில் இருந்தனர். இவர்கள் எண்ணிக்கை வெறும் 300 தான். வர்க்க இயைபும் வர்க்க உறவுகளும் கொண்ட இந்த நிலப் பிரபுத்துவ சமுதாயத்தை மாற்றுவது சாத்தியமல்ல என்று தான் பலரும் நினைத்தனர். எனினும் டமியோஸ் கள் தேசபக்த உணர்வால் உந்தப்பட்டும், சாமானிய மக்களுடன் இதயபூர்வமாக தங்களை இணைத்துக் கொள்ளவும் மனமுவந்து முன்வந்தனர். 1869 மார்ச் 5 ஆம் தேதி சக்கரவர்த்தியிடம் சமர்ப்பித்த மகஜரில் பின்கண்டவாறு அவர்கள் குறிப்பிட்டிருந்தனர். [1]

> ''நாங்கள் வசிக்கும் இடம் சக்கரவர்த்தியின் இடம். நாங்கள் உண்ணும் உணவு சக்கரவர்த்தியின் ஆட்கள் உழுது பயிரிட்ட தானியத்திலிருந்து கிடைத்தது. அப்படி யிருக்கும்போது எங்களுக்குச் சொந்த சொத்து இருப்பதாக நாங்கள் எப்படி உரிமை கொண்டாடமுடியும்? இப்போது எங்களது உடைமைகளையும் எங்களையும் (சமுராய் களையும் சாமானிய மக்களையும்) தங்களுக்குப் பயபக்தி யுடன் அர்ப்பணிக்கிறோம். எங்களில் யார் வெகுமானத்துக் குரியவர்களோ அவர்களுக்கு வெகுமானம் அளிக்கும்படி யும் யார் வெகுமானத்துக்குத் தகுதியற்றவர்களோ அவர் களை அபராதம் விதித்துத் தண்டிக்கும்படியும் சக்கரவர்த்தி அவர்களை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறோம். பல்வேறு குலமரபுக் குழுக்களின் பிரதேசங்களை மாற்றியமைப் பதற்கும் திருத்தியமைப்பதற்கும் பேரரசின் ஆணைகளை எதிர்பார்க்கிறோம். சிவில் சட்டங்கள், குற்றவியல்

1. ஜப்பானில் வீரகாவியம், ஜேம்ஸ். ஏ.பி.செக்கரர்

சட்டங்கள், சீருடைகளுக்கான விதிகள் உட்பட ராணுவச் சட்டங்கள், போர் எந்திரத்தைக் கட்டி உருவாக்கும் சட்டங்கள் ஆகிய இவை யாவும் சக்கரவர்த்தியிடமிருந்து வரட்டும். பேரரசு சம்பந்தப்பட்ட எல்லா பெரிய, சிறிய விவகாரங்களும் அவருடைய பார்வைக்கே செல்லட்டும்.''

இதில் ஜப்பானின் ஆதிக்க வர்க்கத்துடன் ஒப்பிடும்போது இந்தியாவின் ஆதிக்கவகுப்பு எந்த நிலையில் உள்ளது? முற்றிலும் எதிர்மாறானதாக இருக்கிறது. இந்தியாவில் அடிமட்ட வகுப்பினர் ஆதிக்க வகுப்பினருக்கு எதிராக நடத்திவரும் போராட்டம் பற்றிய வரலாறு துரதிஷ்டவசமாக இன்னும் எழுதப்படவில்லை. இந்தியாவிலுள்ள ஆதிக்க வகுப்புக்கு நாட்டின் சுதந்திரத்திற்காக எத்தகைய தியாகமும் செய்யும் எண்ணமில்லை. இந்தியாவிலுள்ள ஆதிக்க வகுப்பினர் தேசியத்தின் பொருட்டு தமது தனி உரிமைகளையும் சலுகைகளையும் கைவிடுவதற்குப் பதிலாக தங்களது சலுகைகளை தக்க வைத்துக் கொள்வதற்காக தேசியத்தின் பெயரைத் தவறாகப் பயன்படுத்தி வருகின்றனர். சட்டமன்றங்களிலும், அமைச்சரவைகளிலும், அரசுப் பணித் துறையிலும் தங்களுக்கு இடஒதுக்கீடுகள் வேண்டுமென்று அடிமட்ட வகுப்பினர் கேட்கும்போதெல்லாம் ஆதிக்க வகுப்பினர் 'தேசியத்துக்கு அபாயம்' என்று கூக்குரலிடுகின்றனர். நாம் தேச சுதந்திரத்தைப் பெற வேண்டுமென்றால், தேசிய ஒற்றுமையைப் பாதுகாக்க வேண்டும், சட்டமன்றங்களிலும் நிர்வாகத்திலும் அரசுப் பணித் துறையிலும் இடஒதுக்கீடுகள் கோருவது சம்பந்தப்பட்ட எல்லாப் பிரச்சினைகளும் தேச ஒற்றுமைக்குப் பங்கம் விளைவிக்கக் கூடியவை, ஆதலால் நாட்டின் சுதந்திரத்தில் அக்கறையுள்ள எவரும் இத்தகைய இட ஒதுக்கீடுகளை ஆதரிப்பது பாவம், அது பிளவுகளையும் உட்பூசல்களையும்தான் தோற்றுவிக்கும் என்று மக்களிடம் கூறப்படுகிறது. ஆதிக்க வகுப்பினரின் போக்கு இத்தகையதாக இருக்கிறது. ஜப்பானிலுள்ள ஆதிக்க வர்க்கத்தினருடன் ஒப்பிடும்போது இது எவ்வளவு முரண்பாடானதாக இருக்கிறது என்பது புலனாகும். இந்தியாவிலுள்ள ஆதிக்க வகுப்பினர்கள் தேசியத்திற்காக தங்களது சலுகைகளை தியாகம் செய்வதற்குப் பதிலாக அவற்றைப் பாதுகாப்பதற்காக அந்த தேசியத்தையே பயன்படுத்தி வருகின்றனர். ஆனால் இத்தகைய துஷ்பிரயோகத்துக்காக ஆதிக்க வகுப்பினர் எவ்வகையிலும் கழிவிரக்கம் கொள்ளவில்லை.

இந்தியாவிலுள்ள ஆதிக்க வகுப்பினர்கள் தங்களது அதிகாரத்தைத் துறப்பதற்கு மறுப்பது மட்டுமன்றி கீழ்மட்ட வகுப்பினர்கள்

முன்வைக்கும் அரசியல் கோரிக்கைகளைக் கண்டு எள்ளி நகையாடவும் செய்கின்றனர். கீழ்மட்ட வகுப்பினர்களின் கோரிக்கை அபத்தமானது, நகைப்புக்கிடமானது என்று காட்டும் பொருட்டு அது குறித்த கீழ்த்தரமான வருணனைகளையும், நையாண்டிச் சித்திரங் களையும் படைக்கும் அளவுக்கு ஆதிக்க வகுப்புகளைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் சென்றுள்ளனர்.[1] இத்தகைய கேலிச் சித்திரங்களில் ஒன்று ஆஸ்திரேலியாவுக்கு தற்போது இந்திய ஹைகமிஷனராக நியமிக்கப்பட்டிருக்கும் டாக்டர்.ஆர்.பி.பரஞ்ச்பேயின் கைவண்ணத் திலிருந்து தோன்றியதாகும். டாக்டர் பரஞ்ச்பே போன்ற ஒரு முற் போக்காளர் இத்தகைய கருத்துக்களை எவ்விதம் வளர்த்துக் கொண் டுள்ளார் என்பதைப் புரிந்து கொள்வது கடினமாக இருக்கிறது.

---

1. டாக்டர் ஆர்.பி.பரஞ்ச்பே எழுதிய நையாண்டிச்சித்திரம் 1926 ஆம் ஆண்டு மே மாதம் குஜராத்தி பஞ்ச் என்னும் சஞ்சிகையில் ''எதிர்காலம் குறித்த கண்ணோட்டம்'' என்னும் தலைப்பில் வெளியாயிற்று. வகுப்பு வாரிக் கோட்பாட்டின் கீழ் நடந்ததாகக் ''கற்பனை செய்யப்பட்ட சில சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு தீட்டப்பட்ட ஒரு கேலிச் சித்திரம் இந்தக் கட்டுரை இந்த சஞ்சிகை எல்லோருக்கும் எளிதாக கிடைப்பது சாத்திய மில்லையாதலால் அதில் வெளிவந்த கட்டுரையை இங்கு தருகிறேன்:

'எதிர்காலம் குறித்த ஒரு கண்ணோட்டம்'

1930-1950 ஆம் ஆண்டுகளுக்கு இடையே வெளியிடப்பட்ட கமிஷன்களின் அறிக்கைகள், காவல்துறை ஆவணங்கள், நீதிமன்ற விசாரணைகள், சட்டமன்ற நடவடிக் கைகள், நிர்வாக அறிக்கைகள் முதலியவற்றிலிருந்து எடுக்கப்பட்ட பின்கண்ட பகுதிகள் குஜராத்திபஞ்ச்சின் வாசகர்களுக்காகப் பிரத்தியேகமாக இங்கு வெளியிடப் படுகின்றன.

I

**இந்திய அரசாங்கம் பற்றிய ராயல் கமிஷன் அறிக்கை, 1930**

இந்தியாவிலுள்ள பல்வேறு வகுப்பினர்கள் சார்பில் அளிக்கப்பட்ட மகஜரை நாங்கள் மிக நுணுக்கமாகப் பரிசீலித்தோம். எங்கள் முன்னால் வைக்கப்பட்டிருக்கும் அனைத்துக் கோரிக்கைகளும் சமீபத்திய சென்சஸின் புள்ளிவிவரங்களை அடிப்படையாகக் கொண்டு ஓரளவுதான் ஏற்கமுடியும். ஏனென்றால் பல்வேறு வகுப்பினர்கள் தரும் எண்ணிக்கை குறித்து ஒரு பொதுஉடன்பாடு இல்லாததால், இந்த நாட்டிலுள்ள ஒவ்வொருவருமே அரசாங்கத்தில் இடம்பெற்றாலொழிய ஓர் அரசாங்க எந்திரத்தை உருவாக்கும் பிரச்சினைக்கு முற்றிலும் துல்லியமான தீர்வுகாண்பது சாத்தியமல்ல. 2375ஐ அரசியலமைப்பின் அடிப்படை எண் ணாக நாங்கள் நிர்ணயிக்கிறோம். எங்கள் அறிக்கையின் அட்டவணையில் காட்டப்பட் டிருக்கும் பல்வேறு வகுப்பினரிடையே இந்த எண்ணிக்கை பகுதி பகுதியாகப் பகிர்ந் தளிக்கப்படும். ஒவ்வொரு வகுப்பினரின் கோரிக்கைகளும் இனிமேல் அதன் முறையான எண்ணால் குறிப்பிடப்படும். எல்லா நியமனங்களும், பல்வேறு அமைப்புகளின் உறுப்பினர் பதவிகளும் இன்னும் சொல்லப்போனால் நாட்டிலுள்ள சகலமுமே அட்டவணையில் காட்டப்பட்டிருக்கும் விகிதாசாரத்தின்படி முடிந்தளவு வழங்கப்படும். வைசிராயின்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

இத்தகைய கோரிக்கைகளை முன்வைக்கும் கீழ்மட்ட வகுப்பினர்கள் மட்டிகளாக அல்லாவிட்டாலும் கோணல்புத்தி உடையவர்கள் என்ற கருத்தையே இந்தக் கேலிச் சித்திரங்கள் வழங்குகின்றன; அதேசமயம் கீழ்மட்ட வகுப்பினர்களின் கோரிக்கைகளை எதிர்க்கும் ஆதிக்கவகுப்பினர் நாட்டில் ஒரு திறமையான நிர்வாக அமைப்பை உருவாக்கப் பாடுபடுகின்றனர் என்றும், இதன் பொருட்டு ஒவ்வொரு இடமும், பதவியும் மிகச் சிறந்தவர்களைக் கொண்டே நிரப்பப்பட வேண்டும் என வலியுறுத்துகின்றனர் என்றும் இவை படம்பிடித்துக் காட்டுகின்றன. மிகச் சிறந்தவருக்குப் பதிலாக அதற்கடுத்த சிறந்தவரும், அந்தச் சிறந்தவருக்குப் பதிலாக சுமாரானவரும், அந்த சுமாரானவருக்குப் பதிலாக மோசமானவரும் தேர்ந்தெடுக்கப்படும் விதத்தில் எதையும் செய்துவிடக்

---

*(முன்பக்கத் தொடர்ச்சி)*

*நிர்வாகக் குழு 475 உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கும்; ஒவ்வொரு வகுப்பினருக்குரிய எண்ணிக்கையில் ஐந்திலொரு பங்கினர் வீதம் இவர்கள் பொறுக்கியெடுக்கப்படுவார்கள்; மூன்று உறுப்பினர்கள் வீதம் ஓராண்டுக்காலத்துக்குப் பதவி வகிப்பார்கள்; இதன் மூலம் ஒவ்வொரு வகுப்பினரும் ஐந்தாண்டுகளுக்குள் தங்கள் பங்கை எய்திவிடுவார்கள். உயர்நீதிமன்றத்தில் 125 நீதிபதிகள் இருப்பார்கள். ஒவ்வொரு நீதிபதியும் ஐந்தாண்டுக் காலம் பதவி வகிப்பார். ஆனால் இந்த ஏற்பாட்டின்படி ஒவ்வொரு பிரிவினரும் தமக்குரிய பங்கை அடைவதற்கு 19 ஆண்டுக்காலம் காத்திருக்கவேண்டியிருக்கும். இதர நியமனங்களும் இம்மாதிரியே நிர்ணயிக்கப்படும்.*

*இந்த எண்ணிக்கைகளின் அடிப்படையில் எல்லா அமைப்புகளும் முறைப்படி செயல்படவேண்டுமானால், இதற்கேற்றமுறையில், தற்போதுள்ள கட்டிடங்களை இடித்துத்தள்ளி புதிய கட்டிடங்களைக் கட்டவேண்டியிருக்கும்.*

**II**

***இந்திய அரசாங்கத்தின் அறிவிப்பு, 1932***

*1931 ஆம் வருட இந்திய அரசாங்கச் சட்டவிதிகளின்படி மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் பின்கண்ட 475 கனவான்களை கவர்னர்-ஜெனரலின் நிர்வாகக்குழு உறுப்பினர்களாக நியமிக்கிறார்:*

*267. மத்தாதின் ராம்தின் (சாதி நாவிதர்) மருத்துவ இலாகாவின் அறுவைச் சிகிச்சைப்பிரிவுக்குப் பொறுப்பேற்கும் உறுப்பினர்.*

*372. அல்லாபக்ஸ் பீர்பக்ஸ் (முகமதியர், ஒட்டகம் ஓட்டுபவர்) படைத்துறையில் ஒட்டகப் போக்குவரத்துப் பிரிவுக்குப் பொறுப்பாளர்.*

*433. ராமசாமி(சாதி, ஆந்திரா தோட்டி) பொதுப்பணித் துறையின் சாலை சுத்திகரிப்பு பொறுப்பாளர்.*

கூடாது என்ற கோட்பாடு குறித்து எவரும் ஆட்சேபம் எழுப்ப முடியாது. ஆனால் இந்த வாதம் சரியானதென மெய்ப்பிக்க முற்றிலும் தவறி விடுகிறது. ஏனென்றால் இந்தியாவின் பிரத்தியேக வரலாற்றுச் சூழ்நிலைகளில், நடைமுறையில் ஒவ்வொரு முறையும் தேர்ந்தெடுக்கப்படும் ''மிகச் சிறந்த மனிதன்'' எப்போதும் ஆதிக்க வகுப்பைச் சேர்ந்தவனாகவே இருப்பதைப் பார்க்கிறோம். ஆதிக்க வகுப்பினரின் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது இது

---

*(முன்பக்கத் தொடர்ச்சி)*

*437. ஜகன்னாத் பட்டாச்சாரியா (குலின் பிராமணர், புரோகிதர்) பத்திரப் பதிவுத் துறையின் உள்நாட்டுப் பிரிவுக்குப் பொறுப்பாளர்.*

* * *

### IV

#### எல்லா ஸ்தல ஸ்தாபன அரசாங்கங்களுக்கும் கடிதம், 1934

*இந்திய அரசாங்கத்தின் முழு ஒப்புதலுக்கு இணங்க சட்டமன்றம் நிறைவேற்றிய ஒரு தீர்மானத்தின்படி இனிமேல் ஒவ்வொரு அரசாங்கப்பதவியும் மனுதாரர்களின் தகுதிகள் எவ்வாறிருப்பினும் சுற்றுமுறையில் ஒவ்வொரு வகுப்புக்கும் கிட்டும்படிப் பார்த்துக் கொள்ள வேண்டும் என அறிவிக்குமாறு எனக்குப் பணிக்கப்பட்டுள்ளது.*

### V

#### பம்பாய் அரசாங்க பதிவேட்டின் அறிவிப்பு, 1934

*பம்பாய் அரசாங்கம் பின்கண்ட நியமனங்களை டிசம்பரில் செய்ய முடிவு செய்துள்ளது. பல்வேறு நியமனங்களுக்கான மனுதாரர்கள் 1934 நவம்பர் 24 ஆம் தேதியிட்ட ஆணை எண் பிரகாரம் அரசாங்கம் நிர்ணயித்துள்ள சுற்றுமுறைக்கு குறிப்பிடப் பட்டிருக்கும் சாதிகளைச் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டும்.*

*1. நீர்ப்பாசனத் தலைமைப் பொறியாளர் (சிந்து); வட கனராவைச் சேர்ந்த குன்பி.*

*2. சமஸ்கிருதப் பேராசிரியர், எல்பின்ஸ்டன் கல்லூரி, பம்பாய்: சிந்துவைச் சேர்ந்த பலுச்சி பட்டாணியர்.*

*3. மேதகைய ஆளுநரது மெய்க்காவற்படைத் தளபதி; வட குஜராத்தைச் சேர்ந்த மார்வாரி*

*4. அரசாங்கக் கட்டிடக்கலை ஆலோசகர்: தக்காணத்தைச் சேர்ந்த வதாரி (சுற்றித் திரியும் ஜிப்ஸி).*

*5. இஸ்லாமியப் பண்பாட்டு இயக்குநர்: கர்ஹதா பிராமணர்.*

*6. உடல் உறுப்புகள் அமைப்பியல் பேராசிரியர். (கிராண்ட் மருத்துவக் கல்லூரி), முகமதிய கசாப்புக் கடைக்காரர்*

*(தொடர்ச்சி அடுத்த பக்கம்)*

சரியானதாக இருக்கலாம். ஆனால் கீழ்ப்பட்ட வகுப்பினர்களின் கண்ணோட்டத்திலிருந்து நோக்கும்போது இது சரியானதாக இருக்க முடியுமா? ''மிகச் சிறந்த'''ஜெர்மன்'' மிகச் சிறந்த பிரெஞ்சுக்காரனாக இருக்க முடியுமா? ''சிறந்த துருக்கியன்'' சிறந்த கிரேக்கனாக இருக்க முடியுமா? ''சிறந்த'' போலந்துக்காரன் யூதர்களால்

---

*(முன்பக்கத் தொடர்ச்சி)*

7. எரவாடா சிறையின் கண்காணிப்பாளர்; தகந்திசோர்

8. இரண்டு மதுவிலக்கு அமைப்பாளர்கள்: தரலா (கைரா மாவட்ட பில்) (பஞ்ச் மஹால்).

## VI

### ஓர் உயர்நீதிமன்ற வழக்கு பற்றிய விவரம், 1935

ஏ.பி.என்பவன் (சாதி தெலி) தன் தந்தை ஆழ்ந்த நித்திரையில் இருந்தபோது அவரைப் படுகொலை செய்துவிட்டான் என்று குற்றம் சாட்டப்பட்டிருந்தான். நீதிபதி குற்றவிவரங்களை எடுத்துரைக்க, ஜூரர்கள் அவன் குற்றவாளி என்று தீர்ப்பளித்தனர். நீதிபதி தீர்ப்பை அறிவிக்கும் முன்னர் குற்றவாளியின் வழக்குரைஞரிடம் அவர் ஏதேனும் கூறவிரும்புகிறாரா என்று கேட்டார். வழக்குரைஞர் திருவாளர் பொம்மன்ஜி தீர்ப்பை தாம் ஏற்பதாக கூறினார். ஆனாலும் குற்றவாளியை சட்டப்படி எவ்வகையிலும் தண்டிக்க முடியாது, தூக்கு தண்டனை அளிப்பதுபற்றி சொல்லவேவேண்டாம் என்று அவர் ஒரு குண்டைத் தூக்கிபோட்டார். இதற்கான காரணங்களையும் விளக்கினார். அதாவது நடப்பு ஆண்டில் ஏற்கனவே ஏழு தெலிகள் தண்டிக்கப்பட்டுவிட்டனர்; இவர்களில் இரண்டு பேருக்கு தூக்குதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசாங்கத்தின் சட்டப்படி இதர பல வகுப்பினர்கள் இன்னமும் தங்கள் 'கோட்டாவை'ப் பூர்த்தி செய்யாதபோது தெலிகள் ஏற்கனவே தங்கள் 'கோட்டா'க்களைப் பூர்த்தி செய்துவிட்டனர். எனவே, இந்தக் குற்றவாளியைத் தண்டிக்கமுடியாது என்று வாதாடினார். வாதி வழக்குரைஞரின் வாதத்தை ஏற்று குற்றவாளியை நீதிபதி விடுதலை செய்தார்.

## VII

### ('இந்தியன் டெய்லி மெயில்' பத்திரிகையிலிருந்து ஒரு செய்தி, 1936)

அன்னாஜி ராமச்சந்திரா என்பவன் (சித்பவன பிராமணன்) கையில் ஒரு நீண்ட கத்தியோடு புனாவின் தெருக்களில் சுற்றிக்கொண்டிருந்தான்; எதிர்ப்பட்டோரை எல்லாம் தாக்கிக் காயப்படுத்திக் கொண்டிருந்தான். குற்றவியல் நடுவர் முன்னர் கொண்டுவந்து நிறுத்தப்பட்டபோது, அவன் அண்மையில் மனநல மருத்துவமனையிலிருந்து வெளியே செல்ல அனுமதிக்கப்பட்டவன் என்று காவல்துறையினர் அவனை அடையாளம் காட்டினர். பின்னர் மனநலமருத்துவமனை கண்காணிப்பாளர் சாட்சியம் அளிக்கும்போது அன்னாஜி ஓர் ஆபத்தான மனநோயாளியாக மூன்று வருடகாலம் மருத்துவமனையில் இருந்தான் என்றும், அவனது சாதியான சித்பவன பிராமணர்களுக்கான 'கோட்டா' முடிந்து, மற்ற வகுப்பினர் இன்னமும் தங்கள் 'கோட்டாவை' பூர்த்தி செய்துகொள்ளாத காரணத்தால் இவனை மேற்கொண்டு மருத்துவமனையில் தங்கியிருப்பதற்கு அனுமதிக்க தன்னால் இயலவில்லை என்றும், சித்பவன பிராமணர்களுக்கு விசேட சலுகை எதுவும் தருவதற்கில்லை என்றும், எனவே, மருத்துவத்துறை சம்பந்தமான அரசாங்க ஆணை பிரகாரம் அவனை மருத்துவமனையிலிருந்து அனுப்பிவிட்டதாகவும் கூறினார். இதன்பேரில் அன்னாஜியை விடுவிக்க குற்றவியல் நடுவர் உத்தரவிட்டார்.

''சிறந்த வனாகக் கருதப்படமுடியுமா? இந்தக் கேள்விகளுக்கான சிறந்த பதில் எதுவாக இருக்கமுடியும் என்பதில் எவருக்கும் எத் தகைய ஐயமும் இருக்கமுடியாது. வகுப்புத்தகுதிகள் ஒருபோதும் புறக்கணிக்கப்படமுடியாது. மனிதன் என்பவன் ஒரு வெறும் எந்திரம் அல்ல. சிலரிடம் அனுதாபமும் வேறு சிலரிடம் வெறுப்புணர்வும் கொள்ளக்கூடிய ஒரு மனித ஜீவன் அவன். ''மிகச் சிறந்த மனித னுக்கும் கூட இது பொருந்தும். அவனிடமும் சில வகுப்பினரிடம் அனுதாப உணர்வும் வேறு சில வகுப்பினரிடம் வெறுப்பு உணர்வும்

---

*(முன்பக்கத் தொடர்ச்சி)*

## VIII

**பம்பாய் மாகாணத்தின் சிறைநிர்வாக அறிக்கையிலிருந்து சில பகுதிகள், 1937**

எவ்வளவோ முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்ட போதிலும், சிறையிலுள்ள கைதிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு வகுப்புக்கும் நிர்ண யிக்கப்பட்டுள்ள 'கோட்டாவை' எட்டவில்லை. இந்த ஏற்றத்தாழ்வை சரிசெய்யும் நோக் கத்தோடு சிறைக்கண்காணிப்பாளர் ஏற்கனவே அரசாங்கத்துக்கு எழுதி அதன் ஆணைகளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்.

அரசாங்கத்தின் தீர்மானம்: சிறைகளின் இன்ஸ்பெக்டர் ஜெனரலது இந்தக் கடமைத் தவறுதலை அரசாங்கம் மிகவும் கவலையோடு நோக்குகிறது. பல்வேறு வகுப்பினர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் 'கோட்டாக்'களை எட்டுவதற்கு ஏற்றபடி அந்தந்த வகுப்புகளைச் சேர்ந்த உறுப்பினர்களைக் கைதுசெய்து சிறையிலடைப்பதற்கு உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். கைது செய்வதற்கு போதுமான எண்ணிக்கையில் நபர்கள் கிடைக்கவில்லை என்றால் அதற்கேற்ப சிறையிலிருந்து போதுமான எண்ணிக்கையில் கைதிகளை விடுதலை செய்து 'கோட்டா'வை சமன் செய்ய வேண்டும்.

## IX

**சட்டமேலவையின் கூட்ட நடவடிக்கைகள், 1940**

திரு.சென்னப்பாவின் கேள்வி: அண்மையில் பாலியில் நடைபெற்ற எம்.ஏ. தேர்வுக்கான பட்டியலில் மாங்-கருடிஸ்களுக்கான 'கோட்டா' முறையாகக் காட்டப்பட வில்லை என்பது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா?

மாண்புமிகு திரு.தாமு ஷராப் (கல்வி அமைச்சர்): மாங் கருடிஸ் சாதியைச் சேர்ந்த எந்த மாணவனும் எம்.ஏ தேர்வு எழுத முன்வரவில்லை என்று பல்கலைக்கழகச் செயலாளர் அறிவிக்கிறார்.

திரு.சென்னப்பா: இத்தகைய ஒரு மாணவர் பரீட்சை எழுத முன்வரும் வரை இந்தத் தேர்வை அரசாங்கம் நிறுத்தி வைக்குமா? பல்கலைக்கழகம் அரசாங்கத்தின் இந்த ஆணையை மீறினால் பல்கலைக் கழக மானியம் நிறுத்தப்படுமா? பல்கலைக் கழகச் சட்டம் திருத்தப்படுமா?

காணப்பட வாய்ப்பு உண்டு. இவற்றை எல்லாம் கருத்திற்கொண்டு பார்க்கும்போது, ஆதிக்க வகுப்பைச் சேர்ந்த'' மிகச் சிறந்த'' மனிதன் கீழ்மட்ட வகுப்பினர்களின் கண்ணோட்டத்தில் மிக மோசமானவனாக கருதப்படக் கூடும். பரஸ்பரம் ஒருவர்மீது ஒருவர் கொண்டுள்ள மனப்போக்குகள் விஷயத்தில் ஆதிக்க வகுப்பினர்களுக்கும் கீழ்மட்ட வகுப்பினர்களுக்கும் இடையேயான வேறுபாடு ஒரு தேசத்தைச் சேர்ந்த ஒருவர் மற்றொரு தேசத்தைச் சேர்ந்தவரிடம் காட்டும் மனப்போக்கில் காணப்படும் வேறுபாட்டை ஒத்ததாகும். கீழ்மட்ட வகுப்பினரின் கோரிக்கைகளை எள்ளி நகையாடும் ஆதிக்க வகுப்புகளைச் சேர்ந்தவர்கள் ஒரு முக்கிய விஷயத்தை மறந்து விடுகிறார்கள். அதாவது இந்தியாவிலுள்ள ஆதிக்க வகுப்பினர்களுக்கும் கீழ்மட்ட வகுப்பினர்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஜெர்மானியர்களுக்கும், துருக்கியர்களுக்கும் கிரேக்கர்களுக்கும் அல்லது போலந்தியர்களுக்கும், யூதர்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு போன்றதே என்பதையும், ஒரு வகுப்பினர் மற்ற வகுப்பைச் சேர்ந்த அரசாங்கத்தை அது எவ்வளவு மிகச் சிறந்தவர்களைக் கொண்டிருந்தாலும் ஏற்க ஒப்பாதற்கான காரணங்கள் எல்லா நாடுகளிலும் ஒரே மாதிரியானவைதான் என்பதையும் இவர்கள் கணக்கிலெடுத்துக் கொள்ளத் தவறி விடுகிறார்கள்.

கீழ்மட்ட வகுப்பினரின் கோரிக்கையை ஏளனம் செய்யும் தங்கள் முயற்சியில் எத்தகைய வழிகளில் தங்களது அதிகாரத்தைக் கட்டி வளர்த்துக் கொண்டனர் என்பதையும் ஆதிக்க வகுப்பினர் மறந்துவிடுகின்றனர். அவர்கள் தங்கள் சொந்த மனுஸ்மிருதியையே படித்துப் பார்க்கட்டும். டாக்டர் பரஞ்ச்பே கற்பனையாகத் தெரிவித்துள்ள தீர்மானங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் வழிகளிலேயே இவர்கள் தங்கள் அதிகாரத்தைக் கட்டமைத்துக் கொண்டதைக் காண்பார்கள். ஆதிக்க வகுப்பில் தலைமையான, பிரதான இடம் வகிக்கும் பிராமணர்கள் தங்களது அறிவாற்றலின் வலிமையால் -

---

*(முன்பக்கத் தொடர்ச்சி)*

*மாண்புமிகு அமைச்சர்: அரசாங்கம் இந்த பரிந்துரையை சாதகமான முறையில் பரிசீலிக்கும் (கரவொலி).*

அறிவாற்றல் என்பது எவரது ஏகபோக உரிமையுமல்ல - அரசியல் அதிகாரத்தைப்பெறவில்லை, மாறாக முற்றிலும் வகுப்புவாதத்தின் அடிப்படையிலேயே அதனைப் பெற்றனர் என்பதை மனுஸ்மிருதியே எடுத்துக்காட்டுகிறது. மனுஸ்மிருதியின் விதிகளின்படி புரோகிதர், அரசரின் குடும்பகுரு, பிரதான அமைச்சர், தலைமை அமைச்சர், தலைமை நீதிபதி, உயர்நீதிமன்ற நீதிபதிகள், அமைச்சர்கள் முதலான பதவிகள் எல்லாம் பிராமணர்களுக்கே ஒதுக்கப்படுகின்றன. பிரதம தளபதி பதவி பிராமணர்களுக்கு ஒதுக்கப்படாவிட்டாலும் இப் பதவிக்கு பிராமணன் முற்றிலும் தகுதியானவன், பொருத்தமானவன் என்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. கேந்திரமான பதவிகள் யாவும் பிராமணர்களுக்கு ஒதுக்கப்பட்டுவிட்ட நிலைமையில், எல்லா அமைச்சர் பதவிகளும் அவர்களுக்கே ஒதுக்கப்பட்டன என்பதைக் கூறத் தேவையில்லை. இதுமட்டுமல்ல. ஆதாயமும் அதிகாரமும் அளிக்கக்கூடிய பதவிகள் தனது வகுப்புக்கு ஒதுக்கப்பட்டதுடன் பிராமணன் திருப்தியடைந்து விடவில்லை. வெறும் ஒதுக்கீடு மட்டும் போதாது என்பதை அவன் அறிவான். தன்னைப்போலவே இந்தப் பதவிகளை வகிப்பதற்கு முற்றிலும் தகுதி படைத்தவர்கள் இதர பிராமணரல்லாத வகுப்பினரிடமிருந்து தோன்றி, இந்த ஒதுக்கீட்டு முறையை அவர்கள் தகர்ந்தெறிந்துவிடாதபடி அவன் தடுத்தாக வேண்டும். எல்லா அரசாங்க நிர்வாகப் பதவிகளும் பிராமணர் களுக்கு ஒதுக்கப்பட்டதோடு, கல்வி வசதி பெறுவதை பிராமணர்

---

*(முன்பக்கத் தொடர்ச்சி)*

**X**

*('டைம்ஸ் ஆப் இந்தியா' பத்திரிகையிலிருந்து ஒரு செய்தி, 1942)*

ஜே.ஜே. மருத்துவமனையில் ஓர் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டதன் விளைவாக ராம்ஜி சோனு இறந்துபோனது குறித்து விசாரணை செய்யும்பொருட்டு நேற்றுமாலை பிண ஆய்வாளர் திரு..... அவசரமாக வரவழைக்கப்பட்டார். டாக்டர் தானு பாண்டவ் (சாதி நாவிதர்) தான்தான் அறுவைச் சிகிச்சை செய்ததாகக் கூறினார். இறந்தவரின் அடிவயிற்றில் காணப் பட்ட ஒரு கட்டியை அறுவைச் சிகிச்சையின்மூலம் அகற்ற தான் முயன்றதாகவும், ஆனால் தனது கத்தி அவரது இருதயத்தை துளைத்துவிட்டதாகவும் அவர் விவரித்தார். இத்தகைய அறுவை சிகிச்சையை இதற்கு முன்னர் எப்போதேனும் செய்தது உண்டா என்று கேட்கப் பட்டபோது, தனது வகுப்புக்கு ஒதுக்கப்ட்ட இடத்தை நிரப்புவதற்காக முன்தினம்தான் இந்த மருத்துவமனையின் தலைமை அறுவைச்சிகிச்சை நிபுணராக தான் நியமிக்கப்பட்டதாக வும், சவரம் செய்ய சவரக் கத்தியைப் பயன்படுத்தியதைத் தவிர இதற்குமுன்னர் ஒருபோதும் அறுவைச் சிகிச்சை கருவியை தான் பயன்படுத்தியதே இல்லை என்றும் தெரிவித்தார். தற்செயலாக நிக்ழ்ந்த மரணம் என்று ஜூரர்கள் தீர்ப்பளித்தனர்.

களின் ஏகபோக உரிமையாக்குவதற்கு வகைசெய்யும் ஒரு சட்டம் இயற்றப்பட்டது. நாம் ஏற்கனவே கூறியதுபோல் இந்த சட்டத்தின் பிரகாரம் இந்து சமுதாயத்தில் அடிமட்டத்திலுள்ள சூத்திரர்கள் கல்வி கற்பது ஒரு கடுமையான குற்றமாக்கப்பட்டது. இந்தச் சட்டத்தை மீறுபவர்கள் காட்டுமிராண்டித்தனமான, மனிதத்தன்மையற்ற, குரூர மான தண்டனைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர்; அவர்களது நாக்கு கள் துண்டிக்கப்பட்டன; அவர்களது செவிகளில் காய்ச்சிய ஈயம் ஊற்றப்பட்டது. இத்தகைய சலுகைகள் எல்லாம் பிரிட்டிஷ் ஆட்சி யில் பிராமணர்களுக்கு இல்லை என்று கூறி காங்கிரஸ்காரர்கள் தப்பித்துக் கொள்ளமுடியாது. மனு ஏற்பாடு செய்த இந்த சலுகைகள் இப்போது மறைந்துவிட்டாலும் அவற்றின் மூலம் நூற்றாண்டு நூற் றாண்டுகளாக அவர்கள் அனுபவித்துவந்த அனுகூலங்கள் இன்னமும் நீடிக்கவே செய்கின்றன என்பதை அவர்கள் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

ஒதுக்கீடுகள் வேண்டும் என்று அடிமட்ட வகுப்பினர்கள் கேட்கும்போது அவர்கள் புதிதாக எதையும் கேட்டுவிடவில்லை; அசாதாரணமான எதையும் கேட்டுவிடவில்லை. ஒதுக்கீடுவேண் டும் என்ற கோரிக்கை ஆதிக்க வகுப்பினர்களின் வெறிபிடித்த வகுப்பு வாதத்துக்கு எதிராக பாதுகாப்பு வேண்டும் என்று வலியுறுத்தும் கோரிக்கையேயாகும். ஆதிக்க வகுப்பினர் அடிமட்ட வகுப்பினர் களை எல்லாத் துறைகளிலும் ஆதிக்கம் செலுத்த விரும்புகின் றனர். பிராமணர்கள் தங்களது செல்வாக்கை வளர்த்துக் கொள்வதற் காகவும், சூத்திரர்கள்மீது தங்களுக்குள்ள ஆதிக்கத்தை நிரந்தரப் படுத்திக் கொள்வதற்காகவும் செய்ததுபோன்று எத்தகைய இழிவான கட்டுப்பாடுகளும் தங்கள்மீது விதிக்கப்படுவதை அதாவது ஆதிக்க வகுப்பினர் கல்வி கற்பதையோ அல்லது சொத்துக்கள் ஈட்டு வதையோ ஒரு குற்றமாக்குவதை ஆதிக்க வகுப்பினர் விரும்பவில்லை.

தகுதி திறமை குறித்த இந்த அப்பட்டமான வாதத்தை மக்களின் சேமநலக் கண்ணோட்டத்திலிருந்தும் பரிசீலிக்க வேண்டும். அயர்லாந்து பற்றி காமன்ஸ் சபையில் நடைபெற்ற விவாதத்தில் பங்கெடுத்துக்கொண்டு காம்பெல் பான்னர்மேன் பேசும்போது நல் லாட்சியைவிட சுயாட்சி சிறந்தது என்று கூறினார். அவரது இந்த சொற்பொழிவு இந்தியாவில் பெரிதும் பிரபலம் பெற்றது; ஒரு சுலோகத்தைவிட அதிக முக்கியத்துவம் அதற்குக்கிடைத்தது. அது ஒரு கோட்பாடாகவே ஆகிவிட்டது. ஆனால் உண்மையில் இந்தக் கருத்து முற்றிலும் அபத்தமானதாகும். காம்பெல் பான்னர்மேன் சுயாட்சியை ஒப்பீட்டு அடிப்படையில் நல்லாட்சியுடன் வேறுபடுத்திப்

பார்க்கவில்லை. மாறாக, அவர் சுயாட்சியை திறமையான அரசாங்கத்துடன் அல்லது இன்னும் சொல்லப்போனால் அவருடைய எதிரி சாலிஸ்பரி பிரபுவின் பதத்தைப் பயன்படுத்திக் கூறுவதானால் ''உறுதியான அரசாங்கத்துடன்'' ஒப்பிட்டு நோக்கி வேறுபடுத்திப் பார்த்தார் என்றுதான் சொல்ல வேண்டும். சுயாட்சி என்பது ஒரு நல்லாட்சியாக இருக்க வேண்டும் என்பதை எவரும் மறுக்கமுடியாது. இல்லையென்றால் சுயாட்சி பெறுவதில் அர்த்தமில்லாது போய்விடும். ஆனால் இங்கு எழும்கேள்வி என்னவென்றால் நல்ல அரசாங்கம் என்பது எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும். சுயாட்சி என்பது தனியுரிமை ஆட்சியைக் குறிக்கும் என்பதால் அது நல்லாட்சியாகத்தான் இருக்கும் என்று சிலர் கருதுவதாகத்தோன்றுகிறது. இது மிகப் பெரிய மாயைகளில், பொய்த்தோற்றங்களில் ஒன்றாகும்; இந்த மாயைக்கு ஆளாகிதான் சார்புநாடுகளிலுள்ள பெரும்பாலான மக்கள் அவதிப்படுகின்றனர். இத்தகைய மாயையில் சிக்கியிருப்பவர்கள் இந்தவிஷயம் குறித்து பேராசிரியர் டிசே கூறியிருப்பதைப் படிப்பது உசிதம். முழு சுயாதிக்கம் படைத்த நபர்களும் அமைப்புகளும் என்ன சாதிக்க முடியும் என்பது குறித்து பின்வருமாறு கூறுகிறார்:

> ''எந்த ஓர் ஆட்சியாளனும் குறிப்பாக நாடாளுமன்றம் கையாளும் அதிகாரம் இருவகை வரம்புகளுக்கு உட்பட்டுள்ளன அல்லது கட்டுப்பட்டுள்ளன. இவற்றில் ஒன்று புறவயவரம்பு, மற்றொன்று அகவயவரம்பு.
>
> '' ஓர் ஆட்சியாளனது உண்மையான அதிகாரத்தின் அகவயவரம்பு அவனது குடிமக்கள் அல்லது அவர்களில் பெரும் எண்ணிக்கையினர் அவனது சட்டங்களுக்குக் கீழ்ப்படிய மறுக்கும் அல்லது அவற்றை எதிர்க்கும் சாத்தியக் கூறில் அல்லது நிச்சயத் தன்மையில் அடங்கியுள்ளது.
>
> ''மிகவும் வல்லாட்சியான, கொடுங்கோன்மையான முடியாட்சிகளில்கூட இந்தவரம்பு நிலவுகிறது. பதினெட்டாம் நூற்றாண்டின் மத்தியில் ஒரு ரோமாபுரி சக்கரவர்த்தி அல்லது பிரெஞ்சு மன்னன்(தற்காலத்தில் ஜார் இருப்பது போன்று) ''முழு அதிகாரம் படைத்தவனாக'' இந்தச் சொல்லின் கறாரான சட்ட அர்த்தத்தில் இருந்துவந்தான். அவன் சட்டம் இயற்றும் முழு அதிகாரத்தைப் பெற்றிருந்தான். அவனால் இயற்றப்படும் எந்தச் சட்டமும் எல்லோரையும் கட்டுப்படுத்துவதாக இருந்தது; அந்தப் பேரரசிலோ அல்லது இராச்சியத்திலோ இத்தகைய சட்டத்தை ரத்து செய்யக்

கூடியவர்கள் எவருமே இல்லை. ஆனால் இதைவைத்து எப்படிப்பட்ட முழு சர்வாதிகாரம் படைத்த ஆட்சியாள னும் தன்விருப்பம்போல் உண்மையில் ஒவ்வொரு சட்டத் தையும் இயற்றமுடியும் என்றோ, மாற்ற முடியும் என்றோ எண்ணுவது தவறாகும்....''

''ஒரு சர்வாதிகாரியின் அதிகாரம்கூட அவனுடைய குடிமக்கள் அல்லது அவர்களில் ஒருபகுதியினர் அவனது ஆணைகளுக்குக் கீழ்ப்படிய தயாராக இருப்பதையே பொறுத் திருக்கிறது; கீழ்ப்படிய தயாராக இருக்கும் இந்த நிலை உண்மையில் எப்போதுமே ஒரு வரையறைக்குட்பட்ட தாகும். மிகவும் அபகீர்த்தி வாய்ந்த வரலாற்று உண்மைகள் இதனை மெய்ப்பிக்கின்றன. ஆரம்ப கால சீசர்களில் எவ ராலும் பண்டைய ரோமாபுரியினர் தங்களது பழக்கவழக்க மரபுகளைப் பின்பற்றுவதைச் சீர்குலைக்கமுடியவில்லை. சுல்தானால் முகமதியத்தை ஒழித்துக்கட்டமுடியவில்லை. பதினான்காம் லூயி அதிகாரத்தின் உச்சக்கட்டத்திலிருந்த போது நான்டெசின் ஆணையை ரத்து செய்ய முடிந்தது; ஆனால் அவனால் புராட்டஸ்டென்டிசத்தின் மேலாண்மையை நிலைநாட்ட இயலவில்லை; இதே காரணத்தால்தான் இரண்டாம் ஜேம்ஸால் ரோமன் கத்தோலிசத்தின் மேலாண் மையை நிலைநாட்டமுடியவில்லை... ஒரு சர்வாதிகாரியின் அதிகாரத்திற்கு அல்லது அரசியல் நிர்ணயசபையின் ஆணை யுரிமைக்குப் பொருந்தும் உண்மை நாடாளுமன்றத்தின் அரசுரிமைக்கும் விசேடமாகப் பொருந்தும்; மக்களின் எதிர்ப்பு காரணமாக அது பலவகையிலும் வரம்புக்குட்பட்ட தாகும். நாடாளுமன்றம் சட்டரீதியாக காலனி நாடுகள் மீது வரி விதிக்க முடிந்தது; நாடாளுமன்றம் சட்டத்திற்கு புறம்பாக இல்லாதமுறையில், அரியாசனம் ஏறுவதற்குள்ள வாரிசுரிமையை மாற்ற முடிந்தது அல்லது மன்னராட்சி யையே மாற்ற முடிந்தது அல்லது மன்னராட்சியையே ஒழித்துக்கட்ட முடிந்தது; ஆனால் இன்றைய உலக நிலைமை யில் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தால் இவற்றில் எதையும் செய்ய இயலாது என்பதை அனைவரும் அறிவர். ஒரு குறிப் பிட்ட சட்டம் சட்டரீதியாக செல்லுபடியாகத் தக்கதாக இருந்தாலும் மிகப் பரவலாக எதிர்ப்பு காரணமாக உண்மை

*யில் மிகப்பல சந்தர்ப்பங்களில் அது நாடாளுமன்றத்தின் அதிகாரவரம்புக்கு அப்பாற்பட்டதாகி விடுகிறது.*

★ ★

*''அரசு அதிகாரத்தைப் பயன்படுத்தும் அகவய வரம்பு அந்த அரசு அதிகாரத்தின் இயல்பையே பொறுத்திருக்கிறது. ஒரு சர்வாதிகாரிகூட தனது அதிகாரங்களை தன் இயல்புக்கு ஏற்பவே பயன்படுத்துகிறான்; அந்த இயல்பு அவன் வாழும் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் உருவாக்கப்படுகிறது; அவன் சார்ந்த சமுதாயம் மற்றும் காலத்தின் தார்மீக உணர்வுகளும் இதில் முக்கியபங்கு வகிக்கின்றன. சுல்தானால் முகமதிய உலகின் சமயத்தை மாற்றமுடியாது; முகமதியிசத்தின் தலைவன் முகமதின் சமயத்தைக் கவிழ்க்க விரும்புவது என்பது பெரிதும் நம்புதற்கரியதாகவே இருக்கும்; சுல்தானின் அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கான அகவயவரம்பு குறைந்தபட்சம் புற வயவரம்பு போன்றே வலுவானதாக இருக்கும். போப்பாண்டவர் ஏன் இந்தச் சீர்திருத்தத்தைச் செய்யவில்லை, அந்த சீர்திருத்தத்தைச் செய்யவில்லை என்று மக்கள் சில சமயங்களில் வீண்கேள்வி கேட்பது உண்டு. இந்தக் கேள்விக்கான உண்மையான பதில் ஒரு புரட்சிக்காரன் போப்பாண்டவர் ஆவதில்லை. அதேபோல் போப்பாண்டவராக மாறிய ஒரு மனிதன் புரட்சிக்காரனாக இருக்க விரும்புவதில்லை என்பதுதான்......''*

நான் ஏற்கனவே சுட்டிக்காட்டியதுபோல், தங்கள் நாடு ஒரு சுதந்திரநாடாக, முழு அரசுரிமைபடைத்த நாடாகிவிட்டது என்பதைக் கொண்டு அடிமட்ட வகுப்பினர்கள் திருப்தியடைந்துவிடக்கூடாது. அவர்கள் மேலும் ஒருபடிமேலே சென்று நாட்டை யார் ஆளப்போகிறார்கள் அதாவது வேறுவிதமாகச் சொன்னால் யார் ஆதிக்க வகுப்பினர்களாக இருக்கப்போகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்வது அவசியம். டிசேயின் கருத்துக்களையும் அவற்றிற்கு ஆதார அடிப்படையாகக் கொண்ட உண்மையையும் யாரும் மறுப்பதற்கில்லை. ஆனால் அதேசமயம் மற்றொரு விஷயத்தையும் இதனுடன் சேர்த்துக் கொள்ளவேண்டும்; அதாவது நல்லாட்சிக்கு ஆதிக்க வகுப்பாரின் ஆற்றலும் திறமையும் மட்டும் போதாது என்பதைக் கவனத்திற் கொள்ளவேண்டும். இங்கு அவசியமானது நல்லது செய்யவேண்டும் என்ற ஆர்வம், விருப்பம் ஆதிக்கவகுப்பினருக்கு இருக்கவேண்டும் என்பதேயாகும்; டிசேயின் சொற்களிலேயே கூறுவதானால் சுயநல

வர்க்கநலன்களிலிருந்து எழும் அகவய வரம்புகளிலிருந்து விடுதலை கிட்டவேண்டும். சுயநலமிக்க வகுப்பு நலன்களுடன் இணைந்த திறமை நல்லாட்சியைத் தோற்றுவிப்பதற்குப் பதிலாக அடிமட்ட வகுப்பினர்களை அடக்கி ஒடுக்கக்கூடிய ஓர் எந்திரத்தைத்தான் உருவாக்கும்.

அரசை நடத்துவதற்கான சாதனங்களைத் தேர்ந்தெடுப்பதில் அந்த சாதனங்களில் குறிப்பிட்ட வகுப்புக்கு ஆதரவான ஒரு சார்பான அம்சங்கள் இடம் பெறுவதற்கு அனுமதிக்கக்கூடாது. உண்மையில் இது ஒரு நல்லாட்சிக்கு வலுவான அஸ்திவாரமாகும். ஆனால் இதன் முக்கியத்துவத்தை ஜனநாயகத்தின் தீவிர ஆதரவாளர்கள் என்று தங்களைக் கூறிக்கொள்வோர்கூட பொதுவாக உணராதது துரதிருஷ்ட வசமானதாகும். காரல் மார்க்ஸ்தான் இதனை முதலில் உணர்ந்தவர்; பாரிஸ்கம்யூனின் நிர்வாகத்தில் இதனைக் கணக்கிலெடுத்துக் கொண டார். இதுதான் இன்று சோவியத் ரஷ்யாவில் அரசாங்கத்தின் ஆதார அடிப்படையாக இருந்து வருகிறது என்பதைச் சொல்ல வேண்டிய தில்லை. அடிமட்ட வகுப்பினர்கள் முன்வைத்துள்ள இடஒதுக்கீட்டுக் கோரிக்கை டிசே சுட்டிக்காட்டிய, காரல் மார்க்ஸ் பரிந்துரைத்த, ரஷ்யாவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அம்சங்களையே அடிப்படை யாகக் கொண்டிருக்கிறது. அடிமட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள்தான் அந்த வகுப்பின் நலன்களைப் பாதுகாக்க முடியும். இந்த விஷயம் மிக முக்கியமானது; திறமைக் கோட்பாடு இதனை ஒதுக்கித்தள்ள அனு மதிக்கக்கூடாது. இந்தியாவிலுள்ள ஆதிக்க வகுப்பினர் திறமைக் கோட்பாட்டை மட்டுமே திரும்பத் திரும்ப வலியுறுத்துகிறார்கள் என்றால் அரசாங்க சாதனங்களை தங்களது ஏகபோகமாக்கிக் கொள்ள விரும்பும் அவர்களது சுயநல நோக்கமே இதற்குக் காரணம்.

## IX

இதுவரை நாம் மேற்கொண்ட பரிசீலனை மிக நீண்டு விட்டது; இதனால் நாம் என்ன விஷயங்களைச் சுட்டிக்காட்ட விரும்பினோமோ அவற்றை அயல்நாட்டவர்கள் தெரிந்து கொள்ளா மல் போயிருக்கக் கூடும். எனவே, அவற்றை மீண்டும் இரத்தினச் சுருக்கமாகத் தொகுத்துக் கூறுவது உசிதமாக இருக்கும்.

இந்தியாவில் ஜனநாயகத்தை நிலைநாட்ட விரும்புவோரை மூன்று பிரதான பிரச்சினைகள் எதிர்நோக்குகின்றன. அவை

வருமாறு: 1. இந்திய ஆதிக்க வகுப்பினரின் நிலை 2. அடிமட்ட வகுப்பினர்கள் சம்பந்தமாக ஆதிக்கவகுப்பினர்கள் கடைப்பிடிக்கும் கொள்கையின் நோக்கங்களும் குறிக்கோள்களும் 3. அரசியலமைப்புச் சட்டப் பாதுகாப்புகள் கோரிக்கைளுக்கான தோற்றமூலம்.

முதல் விஷயத்தைப் பொறுத்தவரையில் இந்தியாவில் உள்ள ஆதிக்க வகுப்பினரின் நிலை உலகின் இதர நாடுகளிலுள்ள ஆதிக்க வர்க்கங்களின் நிலையிலிருந்து முற்றிலும் வேறுபட்டது என்று வாதிக்கப்படுகிறது. இந்த வேறுபாட்டை புரிந்துகொள்வது சுலபமல்ல; அதனை திட்டவட்டமான முறையில் விளக்கிக் கூறுவதும் எளிதல்ல. எனினும் ஒரு தடுப்பு, 'ஹைபன்' உதாரணம் அநேகமாக இந்த வேறுபாட்டைப் புரிந்துகொள்ள உதவக்கூடும். தடுப்புக்கும் ஹைபனுக்குமுள்ள வேறுபாடு குறித்து எவருக்கும் ஐயம் இருக்க முடியாது. ஒரு தடுப்பு பிரிக்கிறது, இணைப்பதில்லை. ஓர் ஹைபனும் பிரிக்கிறது. ஆனால் அது பிரித்தாலும் இணைக்கவும் செய்கிறது. இந்தியாவில் ஆதிக்க வகுப்பினர்களும் அடிமட்ட வகுப்பினர்களும் ஒரு தடுப்பால் பிரிக்கப்பட்டிருக்கின்றனர். ஏனைய நாடுகளில் அவர்களிடையே ஓர் ஹைபன்தான் இருக்கிறது. இந்த வேறுபாடு மிக முக்கியமான விளைவுகளை ஏற்படுத்துகிறது. இதர நாடுகளில் ஆதிக்க வர்க்கம் தொடர்ந்து பெருகிவருகிறது; அதனுடன் சம்பந்தப்படாதவர்களாக இருந்தாலும் ஆதிக்கவர்க்கத்தின் நிலைக்கு உயர்ந்திருப்பவர்கள் அதில் சேர்க்கப்பட்டுவருகின்றனர். இந்தியாவில் ஆதிக்கவகுப்பு கதவுகள் மூடப்பட்ட ஒரு கூட்டுரிமைக் கழகமாக இருக்கிறது; ஆதிக்க வகுப்பில் பிறக்காதவர்கள் அதில் சேர்க்கப்படுவதில்லை. இதர நாடுகளில் ஆதிக்க வர்க்கம் மூடப்பட்ட ஒரு காப்பிடமாக இல்லாது, ஆதிக்க வர்க்கத்துக்கும் அடிமட்ட வர்க்கத்துக்குமிடையே சமூக உறவு நிலவுகின்ற, அவற்றிடையே பரஸ்பரம் அனுசரித்துப்போகும் மனோபாவம் நிலவுகின்ற நிலை இருப்பதால் அதன் இயைபில் பகைமை அம்சம் குறைவாகவே இருந்து வருகிறது; தனது சமூக சித்தாந்தத்தில் அடிமட்ட வர்க்கத்தினர்பால் அதிக பகைமை உணர்வைக் காட்டுவதில்லை. வேறுவிதமாகச் சொன்னால், இந்தியாவுக்கு வெளியே உள்ள நாடுகளின் ஆதிக்க வர்க்கங்கள் சமூக விரோதமானவை அல்ல; மாறாக சமூக சார்பற்றவை. ஆனால் இந்தியாவிலோ நிலைமை வேறுவிதமாக இருக்கிறது. இங்கு ஆதிக்க வகுப்பு மூடப்பட்ட ஒரு காப்பிடமாக இருக்கிறது; அதன் மரபும், சமூக சித்தாந்தமும், சமூகக் கண்ணோட்டமும் அடிமட்ட வகுப்பினருக்கு விரோதமானவையாக இருக்கின்றன; அவை ஆழமாக வேரோடிப் போயிருக்கின்றன; அடிமைகளுக்கும் எசமானர்

களுக்கும், சலுகைபெற்ற வகுப்பினர்களுக்கும் எத்தகைய சலுகை களும் பெறாத வகுப்பினர்களுக்கும் இடையேயான வேறுபாடு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. வேறுவிதமாகச் சொன்னால் இந்தியா விலுள்ள ஆதிக்க வகுப்பினர் கடைந்தெடுத்த சமூகவிரோதிகளாக இருந்து வருகின்றனர்

அடிமட்ட வகுப்பினர் கோரும் பாதுகாப்புகள் சம்பந்தப் பட்ட கொள்கையைப் பொறுத்தவரையில் அரசாங்க சாதனங்கள் மீது ஆதிக்க வகுப்பினர்களுக்குள்ள செல்வாக்குக்கு, அதிகாரத்துக்கு ஒரு வரையறை கட்டுவதே அதன் நோக்கமாகும். இந்தியாவிலுள்ள ஆதிக்க வகுப்பினர் இத்தகைய பாதுகாப்புகளை இழித்துப் பழித்துக் கூறுகின்றனர்; இந்தக் கோரிக்கையை முன்வைப்பவர்களைச் சோர் வுறச் செய்வதே அவர்களது நோக்கம். ஆனால் உண்மையில் பாது காப்புகள் என்பவை என்ன? ஜனநாயகத்தின் பகைவர்கள் ஜனநாய கத்தைக் குழிதோண்டிப் புதைத்துவிடாதபடி தடுக்க ஒவ்வொரு அர சியலமைப்புச் சட்டத்திலும் சில கட்டப்பாடுகளும் சமநிலைப் பாடுகளும் இருக்கவேண்டும் என்று அமெரிக்கர்கள் வலியுறுத்தி வருகின்றனர்; இந்தக் கட்டுப்பாடுகள், சமநிலைப்பாடுகள் என்ப வற்றின் மறுபெயரே சட்டப்பாதுகாப்புள் என்பவை. இந்தியாவி லுள்ள அடிமட்ட வகுப்பினர்கள் கோரிவரும் பாதுகாப்புகள் அவற் றின் வடிவத்தில் அமெரிக்கர்கள் கூறும் கட்டுப்பாடுகளிலிருந்தும் சமநிலைப்பாடுகளிலிருந்தும் மாறுபட்டவைகளாகும்; எனினும் இது அவற்றின் இயல்பை மாற்றிவிடவில்லை. கட்டுப்பாடுகள், சமநிலைப்பாடுகளின் வடிவங்கள் இரண்டு அம்சங்களைக் கொண்டு நிர்ணயிக்கப்படவேண்டும். முதலாவதாக ஜனநாயகம் மெய்யான தாக இருக்கவேண்டுமென்றால், நாட்டின் அரசியல் அமைப்புக் கும் சமூக அமைப்புகளுக்கும் இடையே பரஸ்பர பிணைப்பு இருக்க வேண்டும். நாடுகளின் சமூக அமைப்புகளில் இடம்பெறும் கட்டுப்பாடுகளும் சமநிலைப்பாடுகளும் மாறுபட்டவையாக இருக்க வேண்டும். உதாரணமாக, சாதி அமைப்புமுறை மேலோங்கியிருக் கும் ஒருநாட்டில் கட்டுப்பாடுகளும் சமநிலைப்பாடுகளும் சமூக ஜனநாயக உணர்வு மேலோங்கியிருக்கும் ஒரு நாட்டின் கட்டுப் பாடுகள், சமநிலைப்பாடுகளிலிருந்து வேறுபட் டவையாக இருக்க வேண்டும். இரண்டாவதாக, ஆதிக்க வகுப்பினர் தங்களுக்குள்ள அபரிதமான அதிகார வலிமையைக் கொண்டு அடிமட்ட வகுப் பினர்களை நசுக்கிவிடாதபடி அவர்களுக்கு வலுவான பாதுகாப்பு அளிக்கப்படவேண்டும். சில நாடுகளில் அடிமட்ட வகுப்பினர்கள் ஆதிக்க வகுப்பினர்களை எதிர்த்து நிற்பதற்கு வயது வந்தோர்

வாக்குரிமையே போதுமானது. ஆனால் மற்றநாடுகளைப் போலன்றி இந்தியாவில் ஆதிக்க வகுப்பினர் சர்வவல்லமை படைத்தவர் களாக, சர்வவியாபகமானவர்களாக இருக்கின்றனர்; எனவே ஆதிக்க வகுப்புகளின் அடக்குமுறையிலிருந்து, ஒடுக்குமுறைகளிலிருந்து, சுரண்டலிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கு அடிமட்ட வகுப்பினர்களுக்கு வயது வந்தோர் வாக்குரிமை தவிர வேறு பரிகாரங் களும் பாதுகாப்புகளும் அளிக்கப்பட வேண்டும். இந்தக் கண்ணோட் டத்திலிருந்து பார்க்கும்போது, அடிமட்ட வகுப்புகள் கோரும் பாது காப்புகள் என்பவை அமெரிக்க அரசியலமைப்புச் சட்டத்தில் இடம் பெற்றுள்ள கட்டுப்பாடுகள் மற்றும் சமநிலைப் பாடுகளிலிருந்து வடிவத்தில் மாறுபட்டவையாக இருப்பினும் அடிப் படையில் அவை இதே கட்டுப்பாடுகளும் சமநிலைப்பாடுகளுமேயாகும். எனவே அயல்நாட்டவர் இந்தப் பாதுகாப்புகள் பற்றி ஒரு பாதகமான அபிப்பிராயத்தை உருவாக்கிக் கொள்வதற்கு முன்னர் இவற்றை எல்லாம் கருத்தில் கொள்வது அவசியம்.

இறுதியாக, காங்கிரசுக்கும் ஆதிக்க வகுப்பினர்களுக்குமுள்ள உறவுகுறித்த முழு விவரங்களும் அயல்நாட்டவர்கள் முன்னே இருக்கின்றன. இவற்றிலிருந்து காங்கிரசுக்கும் ஆதிக்க வகுப்பினருக் கும் இடையே எவ்வளவு நெருங்கிய ஒட்டும் உறவும் உள்ளது என்பதை அவர் தெள்ளத்தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியும். இதேபோல், இந்தியாவிலுள்ள ஆதிக்க வகுப்பினர் தங்களை காங்கிரசின் முன் னணிப் படையினராக ஏன் கருதுகின்றனர் என்பதற்கும், எல்லோரை யும் காங்கிரசின் அரவணைப்பிற்குள் கொண்டு வருவதற்கு அவர் கள் ஏன் அயராது சோராது பாடுபடுகின்றனர் என்பதற்கும் இதில் விளக்கம் காணமுடியும். இரத்தினச் சுருக்கமாகக் கூறினால், வகுப்பு சித்தாந்தம், வகுப்பு நலன்கள், வகுப்புப் பிரச்சினைகள், வகுப்பு மோதல் கள் இவற்றை அடிப்படையாகக் கொண்ட ஓர் அரசியல் இயக்கம் தனக்கு சாவுமணி அடிக்கும் என்பதை ஓர் ஆதிக்க வகுப்பு நன்கு உணர்ந்துள்ளது. கீழ்வகுப்புகளைத் திசைதிருப்புவதற்கும் அவற்றை ஏமாற்றுவதற்கும் மிகச்சிறந்த வழி தேசிய உணர்வையும், தேச ஒற்றுமையையும் நன்கு பயன்படுத்திக்கொள்வதுதான் என்பதை அது நன்கு அறியும். ஆதிக்க வகுப்பினரின் நலன்களைப் பெரிதும் பய னுள்ள முறையில் பாதுகாப்பதற்கு ஒரே மேடை காங்கிரஸ்மேடை தான் என்பதையும் அது தெரிந்து வைத்துள்ளது. பணக்காரனுக்கும் ஏழைக்கும் நிலப்பிரபுவுக்கும் குத்தகைக்குப் பயிர் செய்பவனுக்கும், லேவாதேவிக் காரனுக்கும் கடன்பட்டவனுக்கும் இடையே உள்ள மோதல்களைப் பற்றிப் பேசுவது ஆதிக்க வகுப்புக்குப் பிடிக்காத விஷயம். இவற்றைப் பற்றி எல்லாம் பேச முடியாத ஒரு மேடை

இருக்க முடியுமானால் அது காங்கிரஸ் மேடையாகத்தான் இருக்க முடியும். இத்தகைய மேடையில் தேசியத்தையும் தேச ஒற்றுமையை யும் பற்றித் தான் பிரசாரம் செய்யமுடியும். இதன் மேடையிலிருந்து தேசியத்துக்கு முரண்பாடான வேறு எதையும் பிரசாரம் செய்ய முடியாது. இதைத்தான் ஆதிக்கவகுப்பு விரும்புகிறது. இதில்தான் அதன் பாதுகாப்பு முழுவதுமே அடங்கியுள்ளது.

இந்த விவரங்களை எல்லாம் அயல்நாட்டவர் மனதில் கொண் டால் இந்தியாவிலுள்ள அடிமட்ட வகுப்பினர்கள் ஏன் காங் கிரஸ் 'பிராண்ட்' சுயராஜ்யத்தால் கவரப்படவில்லை என்பதை உணர்ந்துகொள்வார். காங்கிரஸ் பாணி சுயராஜ்யம் அவர்களுக்கு என்ன நன்மை செய்யமுடியும்? காங்கிரஸ் பாணி சுயராஜ்யத்தில் தங்களது எதிர்காலம் மிகவும் இருள்மயமானதாக இருக்கும் என்பதை அவர்கள் அறிவார்கள். காங்கிரஸ் பாணி சுயராஜ்யம் காந்தியம் கண்ட கனவை நனவாக்குவதாகவும் இருக்காது; ஆதிக்க வகுப்பின ரின் எதிர்பார்ப்பை ஈடேற்றுவதாகவும் இருக்காது. முதலாவதாக குறிப்பிடப்பட்ட காந்திய சுயராஜ்யம் ராட்டை சுற்றுதல், கிராமத் தொழில்கள், சாதி அமைப்புமுறையைப் பின்பற்றுதல், பிரமச்சரி யத்தைக் கடைப்பிடித்தல், பசுவை வணங்குதல் போன்வற்றையே குறிக்கும். ஆதிக்க வகுப்பினர்கள் கண்ணோட்டத்திலோ சுயராஜ்யம் என்பது அடிமட்ட வகுப்புகளை ஒடுக்குவதையும், கல்வி சம்பந்த மாக பிரிட்டிஷ் அரசாங்கம் அளித்துள்ள வசதிகளைத் திரும்பப் பெறு வதையும், அடிமட்ட வர்க்கத்தினர் அரசாங்கப்பணிகளில் இடம் பெறாதபடிப் பார்த்துக் கொள்வதையுமே குறிக்கும்.

சுயராஜ்யம் வந்தால் குத்தகை உரிமையாளர்கள் சட்டங்கள் திருத்தப்படும், தொழிற்சாலை சட்டங்கள் இயற்றப்படும், கட்டாய ஆரம்பக் கல்வி நடைமுறைக்குக் கொண்டுவரப்படும், சாலைகளும் கால்வாய்களும் அமைக்கப்படும், நாணய சீர்திருத்தங்கள் செய்யப் படும், நிறுத்தலளைவகளும் முகத்தலளவைகளும் ஒழுங்குபடுத்தப் படும், மருத்துவமனைகள் அமைக்கப்படும் மற்றும் அடிமட்ட வகுப் பினர்களுக்கு அவசியமான இதர பல வசதிகள் செய்துதரப்படும் என்று சிலர் நம்பிக்கை கொண்டுள்ளனர். இந்த நம்பிக்கைக்கு போதிய ஆதாரங்கள் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. பிரிட்டிஷ் அதி கார வர்க்கத்தைவிட காங்கிரஸ் மிகவும் சிறப்புவாய்ந்தது என்ப தனைக் காட்டுவதற்காகத்தான் காங்கிரஸ் இத்தகைய திட்டத்தை ஆடம்பர, ஆர்ப்பாட்டமாகப் பிரகடனம் செய்கிறது. ஆனால் பிரிட் டிஷ் அதிகார வர்க்கம் ஒழிந்ததும் மக்களுக்கு நன்மை செய்யும் அதே

ஆர்வம் காட்டப்படுமா? இதுதான் இங்குள்ள கேள்வி. முதலாவதாக, இது எந்த அளவுக்கு நடைமுறைப்படுத்தப்படும் என்பது குறித்து எனக்கு மிகுந்த ஐயப்பாடு இருக்கிறது. இரண்டாவதாக, அவர்கள் அறிவித்திருக்கும் திட்டங்கள் அப்படி ஒன்றும் பிரமாதமானவை அல்ல. இன்றைய உலகில், சமுதாயத்தை நாகரிக நிலையில் பராமரிப்பதற்குத் தேவையான சீர்திருத்தங்களை எந்த ஆதிக்க வர்க்கமும் மேற்கொள்ளாமல் இருக்கமுடியாது. இது ஒருபுறமிருக்க, சமூக நலம் ஒன்றுதான் சுயராஜ்யத்தின் சகலமுமா, முதலும் முடிவுமா? அடிமட்ட வகுப்புகளைப் பற்றி நான் நன்கு அறிவேன். இதில் அவர்களுடைய தவறு ஏதும் இல்லை. ''அடக்கவொடுக்கமானவர்கள் சாப்பிட வேண்டும், அதோடு திருப்தியடையவேண்டும்'' என்ற கோட்பாட்டை நிச்சயமாக அவர்கள் பின்பற்றமாட்டார்கள். வறுமையும் வெறுமையும் காலகாலமாக, பல நூற்றாண்டுகளாக அவர்களது கதிப்போக்காக இருந்து வருகிறது. வஞ்சங்கொண்ட கொடிய சமூக அமைப்பில் அவர்கள் ஆட்படவேண்டியுள்ள, அனுபவிக்க வேண்டியுள்ள அவமதிப்பு, ஏளனம், நிந்தை, பழி முதலியவற்றுடன் ஒப்பிடும்போது இது ஒரு பெரிய விஷயமல்ல. அவர்களுக்கு வேண்டியது மானமே தவிர சோறல்ல. ஆதிக்கவகுப்புகள் மறைந்து, அவர்களது கொட்டம் அடங்கி, அடிமட்டவகுப்பினரின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் அதிகாரம் அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டால்தான் இது நிகழும். இந்த சீர்திருத்தத்தை மேற்கொள்வதா அல்லது அந்த சீர்திருத்தத்தை மேற்கொள்வதா என்பதல்ல அடிமட்ட வகுப்பினர்களை எதிர்நோக்கும் பிரச்சினை. இங்குள்ள கேள்வி இதுதான்: இந்தியாவிலுள்ள ஆதிக்க வகுப்பினர்கள் அரசு எந்திரத்தைக் கைப்பற்றியபிறகு சமூக அமைப்பை சீர்திருத்தும் திட்டத்தை மேற்கொள்வார்களா? இதன் மூலம் ஆதிக்கவகுப்பினர் ஒழிவார்களா? இந்தியாவின் வருங்கால அரசியலமைப்புச்சட்டம் அடிமட்ட வகுப்பினர்களுக்கு பாதுகாப்புகளைக் கொண்டதாக இருக்குமா அல்லது எத்தகைய பாதுகாப்புகளையும் அவர்களுக்கு வழங்காததாக இருக்குமா என்பதைப் பொறுத்தே இந்தக் கேள்விக்கு விடை அமையும். இந்தப் பாதுகாப்புகள் வழங்கப்படுமானால் ஆதிக்க வகுப்புகளை நாளடைவில் ஒழித்துக்கட்டுவது அடிமட்ட வகுப்பினர்களுக்குச் சாத்தியமாகும். அரசியலமைப்புச்சட்டத்தில் இந்தப் பாதுகாப்புகள் இடம் பெறவில்லை என்றால் ஆதிக்கவகுப்பினர் அடிமட்ட வகுப்பினர் மீது தொடர்ந்து தங்கள் மேலாதிக்கத்தைச் செலுத்திவருவர். பிரச்சினை இதுவாக இருக்கும்போது பெரிதாக டமாரம் அடிக்கப்படும் காங்கிரசின் பிரதிநிதித்துவத்தன்மை இங்கு சற்றும் எடுபடாது என்பதை அயல்நாட்டவர் உணரவேண்டும். காங்கிரஸ் ஒரு பிரதிநிதித்

துவ அமைப்பாக இருக்கலாம்; காங்கிரஸ் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் அமைப்பாக இருக்கலாம்; ஆனால் பிரச்சினையின் தீர்வுக்கு இதற்கும் எந்த சம்பந்தமுமில்லை. காங்கிரசின் நண்பரான அயல்நாட்டவர் ஜனநாயகத்தை உண்மையிலேயே நேசிப்பவரானால் அவர் என்ன செய்யவேண்டும்? அரசியலமைப்புச் சட்ட நகலை காங்கிரஸ் முன்வைக்கவேண்டுமெனக் கோரவேண்டும்; அடிமட்ட வகுப்பினரின் பாதுகாப்புக்கும், சுபிட்ச வாழ்வுக்கும் உத்தரவாதம் அளிக்கும் ஐயத்துக்கிடமற்ற, அசைக்கமுடியாத, உறுதியான வழிவகைகள் அதில் இடம்பெற்றுள்ளனவா என்பதைப் பரிசீலித்துப் பார்க்க வேண்டும்.

## X

இந்திய அரசியலில் ஆர்வமும் அக்கறையும் கொண்டிருக்கும் அயல்நாட்டினரை இரண்டு பகுதியினராகப் பிரிக்கலாம். முதல் பிரிவைச் சேர்ந்தவர்கள் சுற்றுப்பயணிகள்; சிறிது காலம் இந்த நாட்டைச் சுற்றிப்பார்க்க வந்தவர்கள்; இந்திய அரசியல் பிரச்சினைகளின் சிக்கல்களை, புதிர்களை அறியாதவர்கள்; சித்தாந்தப் பக்குவமில்லாதவர்கள்; இதனால் இந்தப் பிரச்சினைகள் பற்றி, பல்வேறு கட்சிகளின் போக்கு குறித்து ஒரு சரியான கருத்தை வெளியிட இயலாதவர்கள். இரண்டாவது பிரிவில் பொதுமக்களின் ஜனநாயகக் கருத்துகளைப் பிரதிபலிக்கும் லூயிபிஷர், கிங்க்ஸ்லே மார்ட்டின், பிரெய்ல்ஸ்போர்டு, லாஸ்கி போன்றவர்கள் இடம்பெறுகிறார்கள். இவர்களுக்குள்ள அறிவுத்திறனையும், பழுத்த அனுபவத்தையும் பற்றி எவரும் ஐயப்படமுடியாது. முதல் பிரிசைச் சேர்ந்த அயல் நாட்டு யாத்ரிகர்களும், சுற்றுப் பயணிகளும் முன்பின் யோசிக்காமல் ஒருதலைபட்சமாக காங்கிரசுக்கு ஆதரவளித்து வருவது எவ்வளவு தவறானது என்பதை எடுத்துக்காட்டவே முன்கூறியவாறு பல்வேறு தர்க்கரீதியான, ஆதாரப்பூர்வமான வாதங்களை முன்வைத்தேன். துரதிருஷ்டவசமாக இப்போது இரண்டாவது பிரிவைச் சேர்ந்த அயல்நாட்டினரிடம் இதேபோன்று பாரபட்சப்போக்கு காணப்படுகிறது.

வழிப்போக்கர்கள் போன்ற அயல்நாட்டினரால் இந்திய அரசியலின் நுட்பங்களைப் புரிந்து கொள்ள முடியாது, எனவே சாம்வெல்லருக்கு திரு.பிக்விக் அறிவுரை கூறியதுபோல் மிகப் பெரும் கும்பலோடு சேர்ந்து கூச்சல் போடும் வகையில் அவர்கள் காங்கிரசை ஆதரிக்கிறார்கள்; இது முற்றிலும் புரிந்து கொள்ளக் கூடியதே. ஆனால்

அடக்கப்பட்டவர்களின் ஒடுக்கப்பட்டவர்களின் நலனுக்காகப் பாடுபடுவதாகக் கூறிக் கொள்ளும் லாஸ்கி, கிங்ஸ்லே மார்ட்டின், பிரெய்ல்ஸ்போர்டு போன்ற பிரிட்டிஷ் தொழிற்கட்சித் தலைவர் களும், ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலுமுள்ள இடதுசாரிக் குழுக் களின் தலைவர்களும், அமெரிக்காவில் நேஷன், இங்கிலாந்தில் நியூ ஸ்டேட்ஸ்மேன் போன்ற பத்திரிகைகளின் ஆசிரியர்களும் கடைப் பிடிக்கும் போக்குதான் மிகுந்த கவலை தருவதாகவும், அதிர்ச்சி அளிக்கக் கூடியதாகவும் இருக்கிறது. இவர்கள் எவ்வாறு காங்கிரசை ஆதரிக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. காங் கிரஸ் என்றால் ஆதிக்க வகுப்பினர், ஆதிக்க வகுப்பினர் என்றால் காங்கிரஸ் என்பது அவர்களுக்குத் தெரியாதா? இந்தியாவில் ஆதிக்க வகுப்பினராக இருப்பது பிராமணன் - பனியா கூட்டுதான் என்பது அவர்களுக்குத் தெரியாதா? காங்கிரசில் ஈர்க்கப்படும் மக்கள் 'காந்திக் கும் காங்கிரசுக்கும் ஜே' போடும் வெறும் தொண்டர் திருக்கூட்டத் தினரே தவிர காங்கிரஸ் கொள்கையை வகுப்பதில் அவர்களுக்கு எந்தப் பங்கும் இல்லை என்பது அவர்களுக்குத் தெரியாதா? எந்தக் காரணங்களால் சுல்தானால் இஸ்லாமை ஒழித்துக் கட்ட முடியாதோ, எந்தக் காரணங்களால் போப்பாண்டவரால் ரோமன் கத்தோலிக்க சமயக் கோட்பாடுகளை மறுதலிக்க முடியாதோ அதே காரணங்களால் இந்தியாவிலுள்ள ஆதிக்க வகுப்பினர்கள் பிராமணீயத்தை ஒழித்துக் கட்ட முன்வர மாட்டார்கள் என்பது அவர்களுக்குத் தெரியாதா? இந்தியாவின் ஆதிக்க வகுப்பினர்கள் இப்போதிருப்பதுபோல் தொடர்ந்து இருந்தால், பிராமணர்களின் மற்றும் அவர்களை ஒத்த வர்களின் மேலாதிக்கத்தைப் பறைசாற்றும் பிராமணீயம், சூத்திரர் களையும் தீண்டப்படாதவர்களையும் அடக்கி ஒடுக்குவதையும் அவர்களை இழிவு படுத்துவதையும் அரசின் புனிதமான கடமை யாக அங்கீகரிக்கும் பிராமணீயம் இந்தியா சுதந்திரமடைந்த பிறகும் அரசின் சித்தாந்தமாகத் தொடர்ந்து இருந்துவரும் என்பது அவர் களுக்குத் தெரியாதா? இந்தியாவின் இந்த ஆதிக்க வகுப்பினர் இந்திய மக்களின் ஒரு பகுதியினர் அல்லவென்பதும், அவர்களிடமிருந்து அறவே தனித்தொதுங்கி இருப்பதோடு, அவர்களால் தங்களுக்குத் தூய்மைக் கேடு ஏற்பட்டு விடாதபடித் தனித்தொதுங்கி இருக்கவே அவர்கள் விரும்புகிறார்கள் என்பதும், அவர்களது அரவணைப்புக்கு வெளியே உள்ளவர்களுக்கு எதிரான நோக்கங்களையும் கருத்துகளை யும் பிராமணீய சித்தாந்தத்தின் துணை கொண்டு மக்கள் மனத்தில் திணித்து வருகிறார்கள் என்பதும், தாங்கள் மிதித்துத் துவைத்த அடி மட்ட வகுப்பினர்களிடையே செயல்பட்டு வரும் ஜீவ சக்திகளிடம் எத்தகைய பரிவையும் காட்டுவதில்லை என்பதும், தங்களது ஆர்வ

விருப்பங்களுக்கு விரோதமான அவர்களது தேவைகளிலும், கஷ்ட நஷ்டங்களிலும், ஏக்கங்களிலும், விருப்பங்களிலும் ஆதிக்க வகுப்பினர் எத்தகைய அக்கறையும் எடுத்துக் கொள்வதில்லை என்பதும் இந்த அயல்நாட்டுத் தலைவர்களுக்குத் தெரியாதா? அது மட்டுமல்ல, கீழ்த்தட்டு வகுப்பினர் கல்வித் துறையில் முன்னேறுவதையும், பதவி உயர்வுகள் பெறுவதையும் ஆதிக்க வகுப்பினர் விரும்பவில்லை என்பதும், தங்களது கௌரவத்தையும் சுயமரியாதையையும் உயர்த்திக் கொள்ளும் நோக்கங்கள் கொண்ட அவர்களது எந்த இயக்கத்தையும் ஆதிக்க வகுப்பினர் எதிர்க்கின்றனர் என்பதும் இந்த அயல்நாட்டினருக்குத் தெரியாதா? இந்தியாவின் சுயராஜ்யத்தில் 6 கோடி தீண்டப்படாதவர்களின் கதிப்போக்கும், எதிர்காலமும் அடங்கியுள்ளது என்பது அவர்களுக்குத் தெரியாதா? சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் பற்றி உள்ளம் உருக, உணர்ச்சி பொங்க, ஆவேசமிக்க முறையில் எழுதி, அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் ஊக்கமும் உத்வேகமுமளித்த பிரிட்டிஷ் தொழிற்கட்சித் தலைவர்களுக்கும், கிங்ஸ்லே மார்ட்டினுக்கும், பிரெய்ல்ஸ்போர்டுக்கும் இந்த உண்மைகள் எல்லாம் தெரியாது என்று எவரும் கூற முடியாது. அப்படியிருக்கும்போது அவர்கள் இந்தியாவைப் பற்றிக் குறிப்பிடும் போதெல்லாம் காங்கிரசுக்கு ஆதரவு அளிப்பதைப் பற்றியே எப்போதும் பேசுகிறார்கள். தீண்டப்படாதவர்களின் பிரச்சினை பற்றி அவர்கள் விவாதிப்பது மிக மிக அரிது; இத்தனைக்கும் அனைத்து முற்போக்காளர்களும் ஜனநாயகவாதிகளும் தீவிர அக்கறை காட்ட வேண்டிய பிரச்சினை இது. காங்கிரஸ் நடவடிக்கைகளில் அவர்கள் முழுமுதல் அக்கறை காட்டி வருவதும், இந்தியாவின் தேசிய வாழ்வில் இடம் பெற்றுள்ள ஏனைய சக்திகளை அலட்சியம் செய்து வருவதும் அவர்கள் எந்த அளவுக்கு தவறான வழியில் சென்று வருகிறார்கள் என்பதையே காட்டுகிறது. அரசியல் ஜனநாயகத்துக்காக காங்கிரஸ் போராடி வருகிறது என்றால் அவர்கள் காங்கிரசை ஆதரிப்பதை எவரும் புரிந்து கொள்ள முடியும். இவ்வாறுதான் உண்மையில் நடைபெறுகிறதா? காங்கிரஸ் தேசவிடுதலைக்காகப் போராடி வருகிறதே தவிர அரசியல் ஜனநாயகத்தில் அதற்கு அக்கறை இல்லை என்பதை அனைவருமே அறிவர். இந்தியாவில் அரசியல் ஜனநாயகத்துக்காகப் பாடுபட்டு வரும் கட்சி தீண்டப்படாதவர்களின் கட்சியேயாகும். பலவீனமானவர்களும் அடக்கி ஒடுக்கப்பட்டவர்களும் மிதித்துத் துவைக்கப்பட்டவர்களும் அரசியல் சட்டப் பாதுகாப்புகள் அளித்துப் பாதுகாக்கப்பட வேண்டும், அவ்வாறு இல்லாத பட்சத்தில் காங்கிரசின் இந்த சுதந்திரப் போராட்டம் வெற்றிபெறுமானால், இந்தப் பரிதாபத்துக்குரிய, நிராதரவான மக்களை மேலும் நசுக்கு

வதற்கு வலிமையும் அதிகாரமும் கொண்டவர்களுக்கு சுதந்திரமளிப்ப தாகவே முடியும் என்று தீண்டப்படாதோர் அஞ்சுகின்றனர். அவர் கள்தான் இந்த முற்போக்கான தலைவர்களின் ஆதரவைப் பெற உரிமை பெற்றிருப்பவர்கள். அவர்களிடமிருந்து ஒரு சிறு நல்லெண்ண சமிக்கை வராதா, ஆதரவு கிட்டாதா என்று இவர்கள் இத்தனை ஆண்டு களாக வீணே காத்துக்கொண்டிருந்திருக்கிறார்கள். காங்கிரசுக்குப் பின்னாலுள்ள சக்திகள் யாவை என்று தெரிந்து கொள்வதற்குக் கூட ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலுமுள்ள இந்த முற்போக்காளர் களும் இடதுசாரிகளும் அக்கறை எடுத்துக் கொண்டதில்லை. இதற்குக் காரணம் அறியாமையா அல்லது அக்கறையின்மையா என்று தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் ஒரு விஷயம் தெளிவாகத் தெரி கிறது: முதலாளிகள், நிலப்பிரபுக்கள், லேவாதேவிக்காரர்கள், பிற் போக்காளர்கள் போன்றோரால் நடத்தப்படும் ஸ்தாபனம் காங்கிரஸ்; இத்தகையதோர் அமைப்புக்கு இவர்கள் கண்ணை மூடிக்கொண்டு, எதிர்ப்போ மறுப்போ இன்றி ஆதரவளித்து வருகின்றனர். இதற்கு ஒரே காரணம் காங்கிரஸ் தனது செயல்பாடுகளை ''சுதந்திரப் போராட் டம்'' என்னும் ஆடம்பர ஆர்ப்பாட்டமான பெயரால் அழைப்பதே ஆகும். சுதந்திரத்திற்கான எல்லாப் போராட்டங்களுமே தார்மீக அடிப் படையில் அமைந்தவை என்று கூறமுடியாது; ஏனென்றால் இந்தப் போராட்டங்களுக்கான குறிக்கோள்களும் நோக்கங்களும் எப்போதும் ஒரே மாதிரியானவையாக இருப்பதில்லை, பிரிட்டிஷ் வரலாற்றி லிருந்து இதற்கு ஒரு சில உதாரணங்களை மட்டும் இங்கு கூறு வோம். பிரிட்டனில் ஜான் மன்னனை எதிர்த்து பரோன்கள் நடத்திய கிளர்ச்சியை சுதந்திரப் போராட்டம் எனக் கூறுவது தகும்; இந்தக் கிளர்ச்சியின் விளைவாகத்தான் மாக்னகார்ட்டா என்னும் அர சியல் உரிமை சாசனம் உதயமாயிற்று. ஆனால், அதே சமயம் இங்கி லாந்தின் வரலாற்றில் இடம் பெற்ற லெவல்லர்களின் கலகத்துக்கோ அல்லது குடியானவர்கள் கலகத்துக்கோ இன்றைய ஜனநாயகவாதி எவரும் இதே போன்ற ஆதரவை அளிக்க முடியுமா? இவற்றைச் சுதந் திரப் போராட்டம் என்று வருணிக்க முடியுமா? இவ்வாறு செய்வது ஒரு போலி சுதந்திரக் கோஷத்துக்கு ஆதரவளிப்பதாகவே இருக்கும். வாழுவதற்கான சுதந்திரத்திற்கும் ஒடுக்குவதற்கான சுதந்திரத்துக்கு முள்ள வேறுபாட்டைத் தெரிந்து கொள்ளும் அறிவுக்கூர்மை இல் லாதவர்கள் இவ்விதம் பண்பற்ற முறையில் நடந்து கொண்டால் அதனை மன்னித்துவிடலாம். ஆனால் லாஸ்கி, கிங்ஸ்லே மார்ட் டின், பிரெய்ல்ஸ்போர்டு, லூயி பிஷர் போன்ற புகழ்பெற்ற ஜனநாயக வாதிகளைக் கொண்ட முற்போக்கான, இடதுசாரிக் குழுக்கள் விஷ யத்தில் இது எவ்வகையிலும் மன்னிக்க முடியாததாகும்.

உண்மையான ஜனநாயகத்துக்காகப் பாடுபடும் இந்தியக் கட்சிகளை நீங்கள் ஏன் ஆதரிக்கவில்லை என்று அவர்களிடம் கேட்டால் அவர்கள் ஓர் எதிர்க்கேள்வியைத் தொடுக்கிறார்கள்: இத்தகைய கட்சிகள் எவையும் இந்தியாவில் இருக்கின்றனவா? இப்படிப் பட்ட கட்சிகள் இருந்துவரவே செய்கின்றன என்று வலியுறுத்திக் கூறினால், அக்கட்சிகளின் செயற்பாடுகளைப் பற்றி பத்திரிகைகள் ஏன் வெளியிடவில்லை என்று கேட்கிறார்கள். பத்திரிகைகள் எல்லாம் காங்கிரசுக்குத் துதிபாடும் காங்கிரஸ் பத்திரிகைகள் என்று கூறினால் அதற்குப் பின்வருமாறு எதிர்வாதம் செய்கிறார்கள்: சரி, அவைதான் காங்கிரஸ் பத்திரிகைகள் என்றால் அயல்நாட்டுப் பத்திரிகைகளின் நிருபர்களாவது வெளியிடலாம் அல்லவா, அதை அவர்கள் ஏன் செய்யவில்லை? இந்த அயல்நாட்டு நிருபர்களிடமிருந்து நல்லது எதையும் எதிர்பார்க்க முடியாது என்பதை நான் எடுத்துக்காட்டினேன். இது விஷயத்தில் அயல்நாட்டுச் செய்தி நிறுவனம் இந்தியப் பத்திரிகைகளைவிட எவ்வகையிலும் மேம்பட்டதல்ல; உண்மையில் அவ்வாறு மேம்பட்டதாகவும் இருக்க முடியாது. அயல்நாட்டு நிருபர்கள் எனப்படுவோர் பலர் இந்தியாவில் இருக்கின்றனர். இவர்களில் பெரும்பாலோர் இந்தியர்களே; ஒரு சிலர்தான் அயல் நாட்டினர். அயல் நாட்டு நிருபர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவோரில் அநேகர் கிட்டத்தட்ட எப்போதுமே காங்கிரஸ் முகாமைச் சேர்ந்தவர்களாகவே இருக்கின்றனர். அயல்நாட்டு நிருபர்களாக உள்ள அயல்நாட்டவர்களை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவர்கள் அமெரிக்கர்களாக இருந்தால் பிரிட்டிஷ் எதிர்ப்பாளர்களாக இருக்கின்றனர், இந்தக் காரணத்தால் அவர்கள் காங்கிரஸ் ஆதரவாளர்களாக உள்ளனர். வெறித்தனமான பிரிட்டிஷ் எதிர்ப்பைக் காட்டாத இந்தியாவிலுள்ள எந்த அரசியல் கட்சியும் அவர்களது கவனத்தை ஈர்ப்பதில்லை. 1941-42ல் அமெரிக்க யுத்த நிருபர்கள் ஏராளமானோர் இந்த நாட்டில் குவிந்திருந்தனர்; காங்கிரஸ் ஒன்று மட்டுமே இந்தியாவிலுள்ள ஒரே அரசியல் கட்சி அல்ல என்று அவர்களை நம்ப வைப்பதற்கும் இன்னும் சொல்லப்போனால் இதர அரசியல் கட்சிகள் பால் அவர்களது கவனத்தைத் திருப்புவதற்கும் எவ்வளவு மிகுந்த பிரயாசை எடுத்துக்கொள்ள வேண்டியிருந்தது என்பதை அச்சமயம் காங்கிரசில் இல்லாதவர்கள் நன்கு அறிவார்கள். இந்த நிருபர்களுக்கு நல்லறிவு திரும்புவதற்கு நீண்டகாலம் ஆயிற்று. அவ்வாறு அவர்களுக்கு விவேகம் திரும்பியபோது ஒன்று எதார்த்த நிலையைப் புரிந்து கொள்ளாதவர்களால் தலைதாங்கி நடத்தப்படும் கட்சி என்று அவர்கள் காங்கிரசை சாடினர் அல்லது இந்திய அரசியலிலேயே அக்கறை காட்டுவதை அடியோடு விட்டு விட்டனர். இதேபோன்று

இந்தியாவிலுள்ள இதர கட்சிகள் பாலும் அவர்கள் ஒருபோதும் ஆர்வம் காட்டியதில்லை; அவர்களது கண்ணோட்டம்தான் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள சிரத்தை எடுத்துக்கொள்ளவும் இல்லை. பிரிட்டிஷ் நிருபர்களது நிலையும் அப்படி ஒன்றும் சிலாகிக்கத்தக்க தாக இல்லை. பிரிட்டிஷ் எதிர்ப்பு வகையைச் சேர்ந்த அரசியலில் மட்டுமே அவர்களும் ஆர்வம் காட்டினர். சுதந்திர இந்தியாவை ஜன நாயகத்துக்குப் பாதுகாப்பானதாக்குவதில் பிரதான கவனம் செலுத் தும் இந்தியாவிலுள்ள ஏனைய அரசியல் கட்சிகளிடம் அவர்கள் எத்தகைய அக்கறையும் காட்டவில்லை. இதன் விளைவாக இந்திய அரசியலைப்பற்றி இந்தியப் பத்திரிகைகள் எத்தகைய செய்திகளை வெளியிடுகின்றனவோ அதே போன்ற செய்திகளையே அயல்நாட்டுப் பத்திரிகைகளும் வெளியிடுகின்றன. இதற்கான காரணங்கள் இந்த முற்போக்காளர்களுக்குத் தெரியாமல் இருக்க முடியாது. நிருபர் களோ, நிருபர்கள் இல்லையோ இந்த முற்போக்காளர்கள் உலகின் ஏனைய பகுதிகளிலுள்ள தம்மையொத்த மனேபாவமுடையவர் களுடன் தொடர்பு கொண்டு எங்கெங்கும் உண்மை ஜனநாயகம் தழைத்தோங்க அவர்களுக்கு உதவுவதும் அவர்களை ஊக்குவிப் பதும் கடமை அல்லவா? இங்கிலாந்தையும் அமெரிக்காவையும் சேர்ந்த முற்போக்காளர்கள் எந்த வர்க்கத்துக்கு உத்வி செய்யத் தாம் கடமைப்பட்டிருக்கிறார்களோ அவர்களை மறந்து, உலகை ஏமாற் றவும் அதன் கண்களில் மண்ணைத் தூவவும் சுதந்திரக் கோஷத்தைத் தவறான முறையில் பயன்படுத்தி வரும் இந்திய டோரிகளின், பிற் போக்காளர்களின் விளம்பரத் தரகர்களாக, ஏஜண்டுகளாக மாறி யிருப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும், பெரிதும் துரதிர்ஷ்டவசமான தாகும்.

காங்கிரஸ் விரித்துள்ள மாய வலையிலிருந்து இவர்கள் விரை விலேயே விடுபடுவதும், சுதந்திரம் அனைவருக்கும் நடைமுறை யில், செயலளவில் உரித்தானதாகும் வரை, இந்திய மக்களுக்கு மேம் பட்டதாக, உகந்ததாக ஆகும் வரை இந்தியாவில் ஜனநாயகமும் தன்னாட்சியும் உண்மையானதாக இருக்க முடியாது என்று இவர்கள் உணர்ந்து கொள்வதும் மிக அவசியம். ஆனால் அதற்கு மாறாக, எதார்த்த உண்மைகளுடனும் நோக்கங்களுடனும் சிறிதும் சம்பந்த மில்லாத வெற்று ஆரவாரக் கோஷத்தின் அடிப்டையில் காங்கிரசுக்கு கண்மூடித்தனமாக ஆதரவளிக்கத்தான் செய்வோம் என்று அவர்கள் பிடிவாதம் பிடிப்பார்களேயானால், இவர்களை இந்தியாவின் நண்பர் கள் என்று கூறுவதைவிட இந்திய மக்களது சுதந்திரத்தின் விரோதிகள் என்று கூறுவதற்கு எவ்வகையிலும் தயங்க மாட்டேன். மற்றவர்களை

ஒடுக்குவதற்கு தனக்குள்ள அதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்வதற்காக சுதந்திரக் கோஷத்தை முன்வைக்கும் ஒரு கொடுங்கோலனுக்கும் அந்தக் கொடுங்கோலனின் அடக்கு முறையிலிருந்து விடுபடுவதற்குப் பாடுபடும் ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கும் உள்ள வேறுபாட்டை அவர்கள் கண்டறிய இயலாது போனது உண்மையிலேயே பரிதாபத்திலும் பரிதாபமானதாகும். இந்தியாவுக்குச் சுதந்திரம் கிட்ட வேண்டுமென்ற அவசரத்தில் காங்கிரசை ஆதரிப்பது இந்தியாவை ஜனநாயகத்துக்குப் பாதுகாப்பானதாக்காது, மாறாக கொடுங்கோலன் தனது கொடுமைகளை, அட்டூழியங்களை, அக்கிரமங்களை தட்டுத் தடையின்றிச் செய்வதற்கான சுதந்திரத்தைத்தான் அவனுக்கு வழங்கும் என்பதை அவர்கள் உணரத் தவறி விட்டார்கள். காங்கிரசை ஆதரிப்பது என்பதற்கு மற்றவர்களை அடிமைப்படுத்த கொடுங்கோன்மைக்கு சுதந்திரமளிப்பதையே குறிக்கும் என்பதை அவர்களுக்குச் சொல்லவும் வேண்டுமா? அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் ஆதரவாளர்கள் என்ற தங்களது புகழைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவாவது காங்கிரஸ் குறித்த தங்களது மனப்பான்மையை அவர்கள் மாற்றிக் கொள்ள வேண்டும்.

# சிறப்புப் பெயரகராதி


அ

அமெரிக்கர், 9

இ

இத்தாலி, 74
இந்துக்கள், 17, 49

கா

காந்தி, 53, 54, 57, 97, 99
கார்சன், 51

ச

சர்ச்சில், 53

சீ

சீக்கியர், 49

செ

சென்னை மாகாணம், 27

தி

திலகர், 94, 97

நா

நாகபுரி, 13

நீ

நீக்ரோக்கள், 9

ப

பட்டாபி சீதாராமையா, 96
பட்டேல் வல்லபாய், 95
பனியா, 87

பி

பிராமணர்கள், 80
பிரஞ்ச்பே, சர், 112, 117
பிரெஞ்சுப் புரட்சி, 109

ம

மனு, 119

மு

முஸ்லீம்கள், 49

யூ

யூதர், 9

ர

ரஷ்யா, 74

ரா

ராஜகோபாலாச்சாரியர், 50

ரே

ரே, பி.சி., 80

ரோ

ரோமானியர், 9

லூ

லூயி பிஷர், 83

ஜ

ஜப்பான், 109, 111
ஜவஹர்லால் நேரு, 58, 96

ஜெ

ஜெபர்சன், 56
ஜெர்மானியர், 31


★ ★ ★

